சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்
1971 டிசம்பர் 20, 21, 22.

ஒன்பதாம் திருமுறை

# திருவிசைப்பா

## திருப்பல்லாண்டு

## (பாவும் பயின்ற நிலையும்)

ஆசிரியர் :

மு. அருணாசலம்

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு

1974

முதற் பதிப்பு—1974.

© சென்னைப் பல்கலைக் கழகம்

விலை ரூ. 6/-

அச்சிட்டோர் :

இரத்தினம் அச்சகம்,

சென்னை-1.

THE SORNAMMAL ENDOWMENT
LECTURES 1971
20, 21, and 22nd December 1971

THE NINTH BOOK OF THE

# SAIVA CANON
# TIRUVISAIPPA-TIRUPPLLANDU

*[A Critical Study]*

M. ARUNACHALAM

UNIVERSITY OF MADRAS

1974

# முன்னுரை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரிய ராயிருந்த டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தமது தாயார் திருமதி சொர்ணம்மாள் பெயரில் நிறுவிய உதவி நிதி ஆதரவில் இந்தப் பிரசங்கங்களைச் செய்யும்படி என்னை அழைத்த சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடக்கத்தில் இந்தச் சொற் பொழிவுகள் திருக்குறளின் பகுதிகள் பற்றி ஆங்கிலத்தில் செய்யப்பெற்று வந்தன ; இப்போது வேறு பொருள்கள் பற்றியும், தமிழிலும், இச் சொற்பொழிவுகளைச் செய்யலாம் என்றமையால், இந்த ஆண்டு சைவத் திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பா திருப்பல்லாண்டு பற்றிய இச்சொற் பொழிவுகளைச் செய்யத் துணிகிறேன்

திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்கள் தொடங்கி, சேக்கிழார் பாடிய திருத் தொண்டர்புராணம் என்னும் பெரியபுராணம் வரையில் உள்ள சைவ அருள் நூல்கள் சைவத் திருமுறைகள் எனப்படும். இவை பன்னிரண்டு என்பது ஆன்றோர் வழக்கு. இவற்றுள் பதினொரு திருமுறைகள் முதலாம் இராசராச மன்னன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியாலும், பன்னிரண்டாம் திருமுறை மட்டும் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் அப்போதிருந்த் பெரியோராலும் தொகுக்கப்பட்டன. இப்பன்னிரன்டில், பலர் பாடிய இசைப்பாடல்களின் தொகுப்பான திருவிசைப்பா—திருப்பல்லாண்டு, **ஒன்பதாம் திருமுறை** எனப்படுகிறது.

திருமுறைகளின் வரிசையில் ஒன்பதாம் திருமுறை மிகவும் சிறப்பான இடம் பெறுகிறது. அளவால் மிகவும் குறைந்த பாடல்களை இது கொண்டிருக்கிறது ; ஒவ்வொரு திருமுறையும் ஆயிரம் பாடல்கள் பெற்றிருக்க—சில மூவாயிரம் நாலாயிரம் பாடல்களும் பெற்றிருக்க— இது மிகவும் குறைந்த அளவான 301 பாடல்களே கொண்டது. இந்நூல் முழுமையும் இசைப்பாட்டு. சைவத்தில் உள்ள ஒரே திருப்பல்லாண்டு இத் திருமுறையில் உள்ளது. சிவாலயங்களில் திருப்பதிகம் விண்ணப்பம் செய்கின்ற மரபு ஏற்பட்டு நெடுங்காலம் ஆன பின்னர், பஞ்ச புராணம் என்ற பெயரால் ஐந்து பாடல்கள் பாடும் மரபு ஏற்பட்டபின்னர், இச் சிறிய திருமுறையிலிருந்து இரண்டு பாடல்—ஐந்தில் இரண்டு—பாடுகின்ற மரபு தமிழ்நாடெங்கும் பரவி யிருக்கிறது. இவை இத் திருமுறையின் சிறப்புக்களில் சில.

இந்த நூலானது இங்கு ஐந்து தலைப்புக்களாகப் பாகுபாடு செய்யப் பட்டுள்ளது. சொற்பொழிவாக இவை பேசப்பட்ட காலத்தில் நூல் வரலாறும் ஆசிரியர் வரலாறும் முதல் நாளிலும், கவிதையும் சமய

தத்துவமும் இரண்டாம் நாளிலும், இந் நூலின் காலம் மூன்றும் நாளிலும் பேசப்பட்டன. இந் நூல் பேசிய முறையிலேயே இங்கு அமைந்திருந்த போதிலுங் கூட, பொருட் பாகுபாடு இங்கு ஐந்தாகவே செய்யப்பட்டுள்ளது.

இச் சொற்பொழிவுகள் ஆராய்ச்சிக் கட்டுரைகளாகவே பேசப்பட்டன. இரண்டு பொருள்கள் சிறப்பானவை என்று எடுத்துக் கூறுதல் தகும். ஒன்று ஆசிரியர்களின் வரலாறு. திருமாளிகைத்தேவர், கருவூர்த் தேவர் என்ற ஆசிரியர் இருவர் சித்தர்கள் என்ற கருத்தும், திருவிசைப் பாப்பாடிய சேந்தனர், பட்டினத்தாரிடம் அமைச்சராயிருந்த சேந்தனரே என்ற கருத்தும் சம்பிரதாயமாக வரலாற்றில் வழங்குகின்றன. தக்க ஆதாரம் கொண்டு இவ்வரலாறு ஆராய்ந்து உண்மை நிறுவப் பெறுகிறது. மற்றது, ஆசிரியர்களின் கால முறை கல்வெட்டுச் சான்று களையும் இலக்கியச் சான்றுகளையும் கொண்டு, திருவிசைப்பா ஆசிரியர் அனைவரும் ஒரே சூழ்நிலையில் வாழ்ந்தவர்களாவர் என்ற செய்தி இங்கு முதன்முதலாக நிறுவப்பெறுகிறது. இவை இரண்டு மன்றி, நூலின் கவிதையையும், நூல் கூறும் சமய உண்மைகளையும் சொற்பொழிவுகள் எடுத்துப் பேசுகின்றன. திருவிசைப்பாப் பதிகங்களைத் தனிப் பதிகங்களாய் மட்டும் கருதாமல் அவற்றுக்குத் திரண்ட வடிவம் கொடுத்து முழுமையாகக் காண்பது இந் நூலின் மற்றொரு சிறப்பு.

—ஆசிரியர்.

# பொருள் அடக்கம்


பதிப்புரை — பக்கம்

**1. நூல் வரலாறு** — *1—29*

தொகை நூல்கள்—திருமுறை வகுப்பு—வகுத்த காலம்—இசையும் இயலும்—அட்டவணை—ஆசிரியரும் பாடல் தொகையும்—பலர்கள்—தலங்கள் — திருவிசைப்பா அட்டவணை — சிறப்பு—பஞ்சபுராணம்—திருப்பல்லாண்டு—பிற சிறப்புக்கள்—பட்டினத்துப் பிள்ளையார் திருவிசைப்பா.

**2. ஆசிரியர் வரலாறு** — *30—58*

திருமாளிகைத் தேவர் — கதைகள் — மாளிகை மடம்—சேந்தனார்—சேந்தன் என்ற பெயர்—நாங்கூர்ச் சேந்தர்—திருவிசைப்பாச் சேந்தர்—கண்டராதித்தர்—வேணாட்டடிகள்—திருவாலியமுதனார்-பூந்துருத்தி நம்பிகாட நம்பி—புருடோத்தம நம்பி—சேதிராயர்—கருவூர்த்தேவர்—தேவரும் சித்தரும்—அகச் சான்றுகள்.

**3. கவிதை** — *59—96*

திருமாளிகைத்தேவர் பாடல் — சேந்தனார் பாடல் — திருப் பல்லாண்டு—கண்டராதித்தர் பாடல்—வேணாட்டடிகள் பாடல்—திருவாலியமுதனார் பாடல்—பூந்துருத்தி நம்பிகாட நம்பி பாடல்—புருடோத்தம நம்பி பாடல்—சேதிராயர் பாடல்—கருவூர்த்தேவர் பாடல்—பாடிய தலங்கள்.

**4. சமய தத்துவம்** — *97—107*

**5. திருவிசைப்பா பாடப்பெற்ற காலம்** — *108—127*

சேந்தனாரும் கண்டராதித்தரும்—திருமாளிகைத் தேவர்—வேணாட்டடிகள்—திருவாலியமுதனார்—பூந்துருத்தி நம்பிகாட நம்பி—புருடோத்தம நம்பி—சேதிராயர்—கருவூர்த்தேவர்.

திருவிசைப்பாப் பதிப்புக்கள் — *128—129*

ஆதார நூல்கள் — *130*

மேற்கோள் செய்யுள் அகராதி — *131—132*

பொருள் அகராதி — *133—140*

# 1. நூல் வரலாறு

சைவ சமய ஆசாரியர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் என்போர். முதல் மூவரும், தமிழ் நாட்டில் உள்ள தலங்கள்தோறும் சென்று, சிவபெருமானுடைய புகழை அருள் கனிந்த அழகிய இசைப் பாடல்களால் பாடினர். அவர்கள் பாடிய பாடல்கள் அக்காலத்தில் திருக்கடைக் காப்பு, திருப்பாட்டு, திருப்பதிகம் என்று முறையே வழங்கப் பெற்றன ; காலத்தில் மிகவும் பிற்பட்டுத்தான் இவற்றுக்குத் தேவாரம் என்ற பொதுப் பெயர் எழலாயிற்று. மாணிக்க வாசகர் பாடியது திருவாசகம்; அவர் மற்ற மூவரைப் போலத் தமிழ்நாடு முழுமையும் சுற்றவில்லை ; சில தலங்களை மட்டுமே வழிபட்டார் என்று தெரிகிறது.

முதலாம் இராசராச மன்னன் காலத்தேதான் தேவாரப் பாசுரங்களுக்குப் புதிய உயிர் உண்டாயிற்று. எப்படியோ, தொகுப்பான பதிகங்கள் ஆட்சியில் இல்லை. ஆங்காங்கு சில தலங்களில் அவற்றுக்குரிய பதிகங்கள் மட்டும் பாடப்பெற்று வந்திருக்கின்றன. அம் மன்னன் தஞ்சைப் பெருங் கோயிலைக் கட்டிய செய்தி தமிழ் நாட்டில் சைவ மக்கள் அனைவர் உள்ளத்திலும் இத்தகைய கோயில்களில் அமர்ந்த இறைவன் திருமுன்னர் சமய ஆசாரியர் பாடிய அருட் பாசுரங்களை எல்லோரும் பெற்றுப் பாடி இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாக வேண்டும் என்ற பேராவலை உண்டாக்கிற்று.

வைணவ சமயத்தில் ஏற்பட்டிருந்த ஒரு நிகழ்ச்சி இவ் ஆவல் பெருகுவதற்கு ஒரு துணைக் காரணமாக அமைந்தது. வீர நாராயணபுரம் என்ற காட்டுமன்னார் கோயிலில் வாழ்ந்த நாதமுனிகள், அங்கு வழிபாட்டுக்கு வந்த பாகவதர் அந்தச் சந்நிதியில், குடந்தை ஆராவமுதனுக்குரிய ‘ஆரா அமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே’ என்று தொடங்கும் பத்துப் பாடல்களையும் பாடுவதைக் கேட்டு, அப் பத்தும் ‘குருகூர்ச் சடகோபன் சொன்ன ஓராயிரத்துள்’ ஒரு பகுதி என்பதை அப் பதிகத்தின் இறுதிப் பாடலால் உணர்ந்து, அவ்

ஆயிரத்தையும் பெற வேண்டி, தம் ஊரிலிருந்து திருக்குருகூர் வரையில் சென்று, அங்கே நம்மாழ்வார் சந்நிதியில் பராங்குச தாசரின் துணைகொண்டு, மதுரகவி ஆழ்வாரின் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற நம்மாழ்வார் துதிப்பதிகத்தை ஒருலட்சம் உருச்செபித்து, அதன்மேல் நம்மாழ்வார் அருளுக்குப் பாத்திர மாகி, அவரிடமிருந்து திருவாய்மொழி மட்டுமன்றி, நாலாயிரப் பிரபந்தங்கள் முழுமையுமே பெற்றுக் கொண்டார் என்பது வைணவ சம்பிரதாய வரலாறு. நாதமுனிகள் கி.பி. 918 வரையில் இருந்தார் என்பது சரித்திரம். ஒன்பதாம் நூற்றுண்டில் இந்த வரலாறு மிக்க பிரசித்தமாய்ப் பரவிற்று. இதன் பயனுகத் திருமால் ஆலயங்கள்தோறும் தமிழ் மொழியின் ஒலி, திவ்வியப் பிரபந்த ஒலி, எழலாயிற்று. வைணவ சமயம் பேருக்கம் பெற்றுப் புதிய கால்கொண்டு வளர்வதற்கு இதுவே ஆரம்ப காலம் என்று சொல்லலாம். பின்னுல் பதினொராம் நூற்றுண்டில் வாழ்ந்த இராமானுசர் புதிய வைணவ சித்தாந்த நெறி வளர்ப்பதற்கும் இதுவே வித்தாக இருந்தது. இது சரித்திரம் கூறும் உண்மை.

இராசராச மன்னன் ஆண்ட காலம் கி.பி. 985—1014. இக் காலத்தே வைணவப் பாசுரங்கள் நாட்டில் உள்ள திருமால் பதிகளெங்கும் ஒலித்தன. சிவபாத சேகரன் என்ற பட்டமுடைய இராசராசன் இவற்றைக் கேட்டபோது சைவ சமயத்திலும் இவ்வாறு அருட்பாசுரங்களின் முழக்கம் கேட்க வேண்டும் என்ற ஆர்வம் அவனுக்குப் பெருகி எழுந்தது. அதன் பயனுக அவன் நம்பியாண்டார் நம்பி என்ற இளம்பிள்ளை திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரின் அருள் பெற்று விளங்கினுர் என்றறிந்து, அவரை அழைத்து வந்து அவருடைய துணைகொண்டு தில்லையில் நடராசருக்கு அயலில் மூவர் திருப்பதிகங்கள் இருந்தமை அறிந்து, மூவருக்கும் விழாச் செய்து அவர்களைக் கொண்டு வந்து அங்கே நிறுத்தி, திருக்காப்பு நீக்கி, பாசுரங்கள் எழுதப் பெற்ற ஏடுகளைக் கண்டான். இந்த வரலாற்றையே உமாபதி சிவாசாரியர் பாடிய திருமுறை கண்ட புராணம் என்பது 45 பாடல்களால் விரிவாகச் சொல்லுகிறது. பின்னர் அவன் நம்பியை அப் பதிகங்களை முறைப்படுத்தித் தருமாறு வேண்ட அவர் அவ்வாறே பதிகங்களை யெடுத்து முறைப்படுத்திக் கொடுத்தார் :

> பண்புற்ற திருஞானசம்பந்தர் பதிகம் முந்நூற்று
> எண்பத்து நான்கிஞல், இலங்குதிருமுறை மூன்று ;
> நண்புற்ற நாவரசர், முந்நூற்றேழ் மூன்றிஞல் ;
> வண்பெற்ற முறைஒன்று, நூற்றிஞல் வன்றெண்டர்.[1]

---

1. திருத்தொண்டர் புராணம், சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பு 1950, திருமுறை கண்ட புராணம், பாடல் 25.

இப் பாடல் தேவாரப் பதிகங்கள் வகுக்கப்பெற்ற முறை கூறுகிறது. சம்பந்தர் பதிகங்கள் 384—திருமுறைகள் முதல் மூன்று; அப்பர் பதிகங்கள் 307—திருமுறைகள் அடுத்த மூன்று; சுந்தரர் பதிகங்கள் 100—திருமுறை ஒன்று; ஆகத் திருமுறைகள் ஏழு.

மன்னன் மூவர் பதிகங்கள் அன்றி, ஏனைய அருட்பாசுரங்களைத் தேடித் தொகுத்துத் தரும்படி நம்பியைக் கேட்டானு என்பது தெரியவில்லை. ஆனால் வைணவத்தில் விரிவாக எல்லாப் பாடல்களையும் தொகுத்திருந்த செய்தி அனைவருக்கும் அக்காலத்தில் தெரிந்திருந்தது என்று சரித்திரக் கண்கொண்டு நோக்குகின்ற நாம் கருத முடியும். ஆகவே, நம்பியும் தம் காலத்தில் கிடைத்த சைவப் பாசுரங்கள் அனைத்தையும் தொகுத்து முறைப்படுத்தினார். அடுத்த பாடல் எட்டு, ஒன்பது, பத்து ஆகிய மூன்று திருமுறைகளும் வகுக்கப்பெற்ற அடைவைக் கூறுகிறது :

> ஆகவளர் திருமுறைஏழ் ; அருள்திருவாசகம் ஒன்று ;
> மோகமெறி திருவிசைப்பா மாலைமுறை ஒன்று;சிவ
> போகமிகு மந்திரமாம் முறைஒன்று ; புகழ்பெறவே
> பாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள்[1].

ஆக, முன் சொல்லியபடி தேவாரத் திருமுறைகள் ஏழு; திருவாசகம் ஒரு திருமுறை ; திருவிசைப்பா மாலை முறையொன்று ; திருமந்திர மொன்று ; ஆகத் திருமுறைகள் பத்து என இப் பாடல் கூறுகிறது. இவ்வாறு வகுத்த பின்னர், ‘திருமுகப் பாசுரம் முதலான பதிகங்களையும் ஒரு திருமுறையாகச் செய்க’ என அரசன் வேண்ட, நம்பி அவற்றைப் பதினோராந் திருமுறையாகப் பண்ணினார் என்று அடுத்த பாடல் சொல்லுகிறது. இவ்வாறு பதினொரு திருமுறைகள் நம்பியால் வகுக்கப் பெற்றன. நம்பிக்குப் பின் 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் பெரிய புராணம் பாடிய பிறகு, அக்காலத்திலிருந்த பெரியோர் அப் புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாக வகுத்தனர் என்று சேக்கிழார் புராணம் (96ஆம் பாடல்) கூறுகிறது :

> மூவ ரோது திருமுறைக ளேழு, திரு
> வாத வூரர் முறையொன்று, இசைப்
> பாவ ரைந்த முறையொன்று, மூலர்முறை
> யொன்று, பாசுரம தாதியாக்

---

1. திருத்தொண்டர் புராணம், சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பு 1950, திருமுறை கண்ட புராணம், பாடல் 26.

> கோவை செய்த முறையொன்று, சேவையர்
> குலாதிநீதிமுறை யொன்றுடன்
> பாவை பாகர்திரு வருள் சிறந்தமுறை
> பன்னிரண்டென வகுத்தபின்.[1]

இதுவே பன்னிரு திருமுறைகள் வகுத்த வரலாறு. இவ் வரலாறு களைக் கூறுகின்ற திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம் ஆகிய இரண்டையும் உமாபதி சிவாசாரியரே பாடினர் என்பது வரலாறு. இவர் காலம் கி.பி. 1300—1330 ஆகும். இவர் சேக்கிழார் காலத்துக்குச் சுமார் இருநூறு ஆண்டுகள் பின் வந்தவர்; ஆகவே காலத்தில் எவரையும் பார்க்க இவரே மிக்க அண்மையில் வாழ்ந்தவர் என்பது தெளிவு. தேவாரத் திருமுறை கண்டெடுத்து வகுக்கப்பெற்ற தில்லைத் தலத்துக்கு இவர் உரியவர். ஆகவே இரு வகையாலும் இவர் செய்திகளை நன்கு அறிந்து தம் நூல்களைச் செய்தார் என்பதில் ஐயமில்லை.

உமாபதியார் ஆகமம் அறிந்த சிவாசாரியர் ஆனமையால், தேவாரப் பதிகங்களை நம்பி ஏழாக வகுத்ததற்கும் பின் திருமுறைகள் பதினொன்று ஆக்கியதற்கும், ஓர் அமைதி காட்டுகிறார். நம முதலான மந்திரங்கள் ஏழு கோடி (ஏழு வகை முடிவுகளையுடையன)[2] ஆதலினால் தேவாரத் திருமுறைகள் ஏழு ஆயின எனவும், பின்னும் மந்திரங்கள் பதினொன்று (ஷடங்க மந்திரம் ஆறு, பஞ்சப் பிரம மந்திரம் ஐந்து ஆகப் பதினொன்று)[3] ஆதலினால், நான்கு திருமுறைகள் கூட்டிப் பதினொன்றாக ஆக்கினார் என்பது அவர் கூற்று:

> மந்திரங்கள் எழுகோடி ஆதலினால், மன்னுமவர்
> இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்து;
> பந்தமுறு மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால்
> அந்தமுறை நான்கினொடு முறைபதினொன் றாக்கினார்.[4]

ஏடுகளிலிருந்து தொகுத்து முறைப்படுத்தப் பட்டமையால் இது திருமுறை என்று பெயர் பெற்றது.

---

1. திருத்தொண்டர் புராணம் ஷ சேக்கிழார் புராணம், பாடல் 96.

2. எழுகோடி மந்திரங்கள்: நம, சுவாகா, சுவதா, வௌஷட், வஷட், பட், உம்பட் என்பன ஒவ்வொன்றும் ஒருகோடி.

3. ஷடங்க மந்திரம்: இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அஸ்திரம் என ஆறு. பஞ்சப்பிரம மந்திரம்: ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என ஐந்து. ஆகப் பதினொன்று.

4. சேக்கிழார் புராணம் ஷ பாடல் 28.

இனி, நம்பியாண்டார் தொகுத்த பதினொரு திருமுறைகளிலும் அமைந்துள்ள ஒரு பொது இயல்பை இங்குக் குறிப்பிடலாம். அவர் தொகுத்த முதல் எட்டுத் திருமுறைகள் ஒவ்வொன்றும் ஒரே ஆசிரியர் பாடிய முழு நூலாகும். பின்னும் கிடைத்த திருமந்திர மாகிய தனி நூலை ஒரு தனி முழுத் திருமுறையாக அமைத்தார். ஏனைய ஒன்பது பதினொன்று ஆகிய இரண்டும் பலர் பாடிய தனிப் பதிகங்களின் தொகுப்பாகும். இவ்வாறு நூல்களையோ பாடல் களையோ தொகுத்து வழங்குவது தமிழ் இலக்கிய வரலாற்றில் பண்டைக் காலம் முதல் இருந்த மரபாகும்.

## தொகை நூல்கள்

பல ஆசிரியர் எழுதிய பாடல்களைத் தொகுத்த நூல்களுக்குத் தொகை நூல்கள்[1] என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இலக்கணம், இலக்கியம், சமயம் ஆகிய எல்லாத் துறைகளிலும் தொகை நூல்கள் உள்ளன. இன்று கிடைக்காத புறப் பொருள் இலக்கண மாகிய பன்னிரு படலம் என்பது அகத்திய முனிவருடைய சீடர் பன்னிருவர் செய்த பன்னிரு படலங்களின் தொகுதி என்று பழம் பாடல் தெரிவிக்கும். பன்னிரு பாட்டியல் என்பது இப்போது கிடைக்கின்ற ஒரு பாட்டியல் நூல். இதில் 15 புலவர்களுடைய பாடல்கள் காணப்படுகின்றன. இவை இரண்டும் இலக்கணத்தில் எழுந்த தொகை நூல் ஆகும்.

இலக்கியத்தில் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகிய இரண்டும் தொகை நூல்களே. மேலும் இவற்றுள் நூல்களின் தொகுப்பான தொகை நூலும், தனிப் பாடல்களின் தொகுப்பான தொகை நூலும் உள்ளன. எட்டுத் தொகை, எட்டு நூல்களின் தொகுப்பு ஆகும். இவ்வெட்டினுள் ஒவ்வொன்றும் தனியான பாடல்களின் தொகுப்பு ஆகும். பத்துப் பாட்டு, பத்து நீண்ட தனிப் பாடல்களான நூல்களின் தொகுப்பு. இவை இரண்டும் சங்க காலத்துத் தொகை நூல்கள். பதினெண்கீழ்க் கணக்கிலுள்ள நாலடியார் என்பது வையை ஆற்றில் இட்டுக் கிடைத்த பாடல் களின் தொகுப்பு என்பதே மரபு. ஆதலால் இதுவும் ஒரு தொகை நூல் என்றே கருதத்தக்கது. புறத்திரட்டு என்பது ஒரு பண்டை யிலக்கியத் தொகை நூல். பிற்காலத்தில் தொகுக்கப்பெற்ற பல தனிப்பாடல் திரட்டுக்கள், தனிச் செய்யுள் சிந்தாமணி, பன்னூற் றிரட்டு, பெருந்தொகைபோன்ற நூல்கள் யாவும் இலக்கியத் துறையில் எழுந்த தனிப்பாடல்களின் தொகை நூல்கள் ஆகும்.

---

1. தொகைநூல் என்ற தொடரையும் கருத்தையும் முதன்முதல் வையாபுரிப் பிள்ளை வழங்கத் தலைப்பட்டார். புறத்திரட்டு முகவுரை பார்க்க.

சமயத் துறையில், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் என்பதை ஒரு தொகுப்பாகக் கருதினேமானுல், இதுவும் வைணவ சமயத்தில் எழுந்த பல தனி நூல்களைக் கொண்ட ஒரு சமயத் தொகை நூல் ஆகும். 15ஆம் நூற்றுண்டில் தத்துவராயர் தொகுத்த பெருந் திரட்டு, குறுந் திரட்டு என்ற இரண்டும், பின்னர் எழுந்த சங்கர நாராயணத் திரட்டு என்பதும், வேதாந்த சமயத் தொகை நூல்கள். 20ஆம் நூற்றுண்டில் தொகுக்கப்பட்ட சைவ மஞ்சரி என்பதும், சிவபுராணுதி தோத்திர மஞ்சரி முதலிய பலவும் சைவ சமயத் தொகை நூல்கள், பத்தாயிரம் பாடல் கொண்ட வேதாந்த மனன சிந்தாமணியும் இந்த நூற்றுண்டில் எழுந்த ஒரு பெரிய (வேதாந்தத்) தொகைநூல் (திரட்டு). இங்குக் காட்டிய எல்லாச் சமயத் தொகை நூல்களும், வேறு நூல்களிலிருந்தெடுத்த பாடல்களின் தொகையாகும். புறத்திரட்டும் அப்படியே. எட்டுத் தொகை முதலியனவும், தனிப்பாடல் திரட்டு முதலியனவும் தனிப்பாடல்களின் தொகுப்பாகும். ஆனுல் நாலாயிரப்பிரபந்தமும் ஒன்பது பதினெுன்று திருமுறைகளும் இவ்விரு வகையும் அன்றி, நூல்களின் தொகுப்பு ஆகும். (இந்நூல்களின் பெரும்பகுதி பதிகங்கள்.)

சைவத் திருமுறைகளான ஒன்பது பதினெுன்று இரண்டும் தொகை நூல்களாகும். தேவாரங்களும் திருவாசகமும் திருமந்திரமும் தனித்தனித் திருமுறைகளாக வகுக்கப் பட்டன; ஆனுல் இந்த இரண்டு திருமுறைகளும் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பாகும். ஒன்பதாம் திருமுறையானது, ஒன்பது ஆசிரியர் பாடிய பதிகங்களின் தொகுப்பு. இது தொகுப்பு ஆனமையினுல் தான் மேலே காட்டிய பாடலில் திருவிசைப்பா மாலை யென்று சொல்லப் பட்டது; மாலை என்பது தொகுப்பு. இப்படியே பதினெராம் திருமுறையும் பன்னிருவர் பாடிய பல நூல்கள் அல்லது பிரபந்தங்களின் தொகுப்பு ஆகும்; இது பிரபந்த மாலை யெனவே வழங்கப் பெற்றது.

## திருமுறை வகுப்பு

திருமுறை வகுப்பு நம்பியாண்டார் நம்பி செய்தது என்றே நாம் கருதிவருகிருேம். இதற்கு அடிப்படை திருமுறை கண்ட புராணம். அதனுள் மன்னன் ஏழு திருமுறைகளைத் தொகுத்தமையால் மன்னனே செய்தான் என்பது போல புராணப் பாடல் அமைந்துள்ளது. நம்பி செய்ததாக அது நேரே சொல்லவில்லை.

மன்னுதமிழ் விரகரெங்கள் காழி வேந்தர்
வகுத்தருளால் அமைந்ததிரு முறையோர் மூன்றும்,
அன்னவகை வாகீசர் முறையோர் மூன்றும்,
ஆரூரர் உரைத்ததிரு முறைய தொன்றும்,

துன்னவகை ஏழாகத் தொகுத்துச் செய்தான் ;
தூயமனு எழுகோடி என்ப துன்னித்
தன்னிகரில் திருவருளால் மன்னன் தானும்
தாரணியோர் வீடுபெறுந் தன்மை சூழ்ந்தே[1].

இந்தப் பாடலின் பொருளை நேரே பார்த்தால் திருவருளால் மன்னன் தேவாரப் பாடல்களைத் தானே ஏழாகத் தொகுத்துச் செய்தான் என்றுதான் தெரிகிறது. ஆனால் மன்னன் நம்பி யாண்டார் நம்பியின் துணைகொண்டே பதினொரு திருமுறைகள் முழுமையும் தொகுத்தமைத்தான் என்பது புராணத்தின் தொகுப் பான பொருள். ஆதலால் இங்கு செய்தான் என்ற சொல்லைச் செய்வித்தான் என்றுதான் நாம் பொருள் கொள்ள வேண்டும்; 'நம்பி அடைவே வகுத்தார்'[2] என்று பின்வரும் பாடல் கூறுகிறது.

## திருமுறை வகுத்த காலம்

ஒரு கருத்தை வலியுறுத்திவிட்டு மேற்செல்வோம். நம்பி யாண்டார் நம்பியின் காலம் இராசராச சோழ மன்னன் காலமே. இதை ஐயப்படுவதற்கு இல்லை. திருமுறை கண்ட புராணமானது இராசராச அபயகுல சேகரன் என்று தெளிவாகக் குறிப்பிடுகிறது. இவ்வளவு தெளிவாகச் சொல்லி யிருக்கிற பெயரைத் தெளிவின்றி அமைந்த பெயர் என்று ஆராய்ச்சியாளர் கூறி நம்பியின் காலம் இராசராசனுக்கு மிகவும் முற்பட்டவனாகிய ஆதித்த சோழன் காலம் என்று நிறுவ முயலுவது சிறிதும் பொருந்தாத கூற்று.[3] முன்னமே வைணவத்தைப் பற்றிக் குறிப்பிட்ட இடத்தில் குடந்தையிலிருந்து வந்த வைணவர் குடந்தை ஆரா அமுதன் சந்நிதிப் பாசுரங்களை மட்டும் தெரிந்திருந்து அவற்றை மட்டும் வீரநாராயணபுரத்தில் வந்து சேவித்தார் என்று குறிப்பிட்டோம். அதுபோல, சைவத்திலும் பாடல்பெற்ற தலங்களில் வாழ்ந்த பெருமக்கள் தங்கள் தங்கள் தலத்துக்குரிய பதிகங்களைப் பல தலைமுறைகளாக அறிந்து பாடிக்கொண்டு வந்திருக்கிறார்கள். சோழர் ஆதிக்கம் பெற்றவுடனே இவ்வாறு திருப்பதிகம் பாடு வதற்குப் பல இடங்களில் நிபந்தம் அமைத்தார்கள். இவ்வாறு முதல் ஆதித்த சோழன் ஆட்சியில் கி.பி. 873இல் திரு எறும்பி யூரிலும், கி.பி. 876-இல் பழுவூரிலும், முதற் பராந்தக சோழன்

1. திருமுறைகண்ட புராணம் ஷெ பதிப்பு, பாடல் 24.

2. ஷெ பாடல் 29.

3. பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனர், பன்னிரு திருமுறை வரலாறு, முதற் பகுதி 1962, பக்கம் 19.

ஆட்சியில் கி.பி. 910-இல் திருவாவடுதுறையிலும், கி.பி. 911-இல் அல்லூரிலும், கி.பி. 944-இல் திருத்தவத்துறையிலும், உத்தம சோழன் ஆட்சியில் கி.பி. 977-இல் கோனேரிராசபுரம் என்னும் திருநல்லத்திலும், கி.பி. 984-இல் அந்துவ நல்லூரிலும் திருப் பதிகங்கள் பாடுவதற்கு நிபந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன[1] என்று இதுவரை வெளியான சாசன அறிக்கைகளால் அறிகிறோம். இதனால் இராசராசனுக்கு முன்பாகவே பல தலங்களில் பதிகங்கள் பாடப்பட்டு வந்தன என்பது தெளிவு. இராசராசன் செய்த தெல்லாம், அன்று வரை கிடைத்த தேவாரப் பதிகங்களையும், திருவாசகம் போன்ற பிறவற்றையும் ஒருங்கு திரட்டி முறைப் படுத்திக் கொடுத்த பெருந் தொண்டாகும். இராசராசனுக்கு முற்பட்ட சோழர் மேற்சுட்டியவாறு நிபந்தம் ஏற்படுத்திக் கொடுத்ததெல்லாம் தேவாரப் பதிகங்களை விண்ணப்பம் செய் வதற்கே ஆகும். ஆதித்தன் காலத்தில் நம்பி திருமுறைகளைத் தொகுத்தார் என்றும் சிலர் சொல்லுவர்; அங்ஙனமானால், ஆதித்தனுக்குப் பின் வந்த எவராவது ஓர் அரசர் திருவாசகம் விண்ணப்பித்தற்கோ, திருவிசைப்பா விண்ணப்பித்தற்கோ நிபந்தம் செய்திருப்பார். அவ்வாறு இல்லாமையாலும், தனது முன்னோர் திருப்பதிகங்களுக்குக் கொடுத்த பெருஞ்சிறப்பை நன்குணர்ந்தமையினாலும் இராசராசன் அரிதில் முயன்று தேவாரப் பாசுரங்களை ஒருங்கு திரட்டினன் என்று நாம் கருதவேண்டும். இதுபற்றி வேறிடத்தில் நன்கு விளக்கி யிருக்கிறோம்[2]. பின்னால் காலம் என்ற தலைப்பில் திருவிசைப்பாவுக்குரிய காலத்தைத் தெளி வாக வரையறை செய்திருக்கிறோம்.

மற்றும் ஒரு கருத்தைமட்டும் வலியுறுத்திவிட்டு மேற் செல் வோம். நம்பி பாடிய திருமுறை கண்ட புராணம் முழுமையும் ஏற்றுக் கொண்டால், நம்பியே திருவிசைப்பா மாலையையும், பிரபந்த மாலையையும் தொகுத்து வைத்தார் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். புராணத்தை ஒப்புக்கொண்டு அதில் ஒரு பகுதியை ஒப்புக்கொள்ளாமல் போவது பொருந்தாது; ‘திரு விசைப்பாப் பதிகங்களிற் பல, நம்பி காலத்தின் பின் தோன்றிய ஆசிரியர் பாடியன; கங்கை கொண்ட சோழேச்சுரப் பதிகம் முதலியன இதைக் காட்டும்; கருவூர்த் தேவர் பாடலை நம்பி ஒன்பதாம் திருமுறையில் வைத்துத் திருமந்திரத்தைப் பத்தாக

1. பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் எழுதிய பன்னிரு திருமுறை வரலாறு முதற் பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1962, பக்கம் 19-20,

2. நம்பியாண்டார் நம்பி காலத்தை எமது தமிழ் இலக்கிய வரலாறு, 11ஆம் நூற்றாண்டு ஏழாம் அத்தியாயத்தில் வரையறை செய்திருக்கக் காணலாம்.

வைத்தற்கு இயைபில்லை; தம் நூலைத் தாமே பதினோராந் திருமுறையில் தொகுக்க மாட்டார்; எனவே, ஒன்பது முதல் பதினொன்று வரையுள்ள திருமுறை வகுப்பு நம்பி செய்ததன்று; இவ் வகுப்பு நம்பி காலத்தின் பின்னும் சேக்கிழார் காலத்தின் முன்னும் வாழ்ந்த சிவநெறிச் செல்வர் செய்ததாகும்' என்றும் சொல்லப்பட்டு வருகிறது.[1] இது திருமுறை கண்ட புராணத்தின் ஒரு பகுதியை ஏற்காது மறுத்துப் பேசும் கூற்றாகும். நம்பியே முறை பதினொன்று ஆக்கினார், அந்தாதி அடைவே வகுத்தார் என்று புராணம் சொல்ல, வேறு சிவநெறிச் செல்வர் வகுத்துத் தந்தனர் என்பது புராணத்துக்கு மாறு.

திருவிசைப்பாக்காலத்தைப் பின்னால் உணர்வதற்கு நம்பியின் வரலாறு தெளிவுபட வேண்டுவது அவசியமாதலால், இக்கூற்றை யொட்டி இரு கருத்துக்களைக் காட்டிவிட்டு மேற்செல்வோம்.

ஒன்று, சம்பந்தர் போன்றார், காரைக்காலம்மையாருங் கூட, பலசுருதி பாடுகிறார்கள்; வைணவத்தில் திருமங்கை, நம்மாழ் வார், குலசேகரர் போன்றார் பாடியிருக்கக் காண்கிறோம். இப்படிப் பாடும் மரபு வழங்கும் இடத்தில், நம்பி தம் பாடலையும் (மன்னன் விருப்பத்திற்கும் சிவநெறிச் செல்வர் விருப்பத்திற்கும் இணங்கி) திருமுறையில் சேர்த்தார் என்று கருதுவது பிழையாகாது. நம்பியின் பெருமை கண்டல்லவா மன்னன் அவரைக்கொண்டு தேவாரப் பாடல்களைக் காண முற்படுகிறான்? ஆதலால் அவர் பாடல்களுக்கும் அவன் பெருமை தருகின்றான்; அவன் விருப்பப் படி அவர் தொகுக்குகிறார்.

திருவரங்கத்து அமுதனார் இராமானுசர்மீது அவர் காலத்தி லேயே நூற்றந்தாதி பாடினார். இவர் இராமானுசரின் சீடரான கூரத்தாழ்வாரின் சீடர். இந்த நூலின் அருமையை யுணர்ந்தும், சீபாதத்து முதலிகள் விருப்பத்தை ஏற்றும், இராமானுசர், ஆழ்வார் பிரபந்தங்களோடு இதையும் சேர்த்துக் கற்கும்படி தம் மாணாக்கருக்குக் கொடுத்தார். இதையும் சேர்த்தே பிரபந்தங்கள் நாலாயிரம் என்பது ஒரு சம்பிரதாயம்.[2] இதை உணர்ந்தால் நம்பியின் பாடல்களைப் பதினோராந் திருமுறையில் சேர்த்தது பொருத்தம் என்று நன்குணரலாம்.

இரண்டாவது, கருவூர்த்தேவராதியோர் கங்கைகொண்ட சோழபுரம் ஆகியவற்றுக்குப் பாடல் பாடிய காரணத்தால் பிற்

---

1. பன்னிரு திருமுறை வரலாறு, முதல் பகுதி 1962, பக்கம் 24–25.
2. குருபரம்பரா ப்ரபாவம், ஆறாயிரப்படி, பின்பழகிய பெருமாள் ஜீயர்.

காலத்தோர் என்பது. இது நம்பி காலம் முற்பட்டது என்ற முடிவை முன்னதாகச் செய்துகொண்டு அதற்கு ஒவ்வாதவற்றை விலக்கும் முயற்சி. இது சரியாகாது. இராசராசன் காலம் 985—1014; இராசேந்திரன் (கங்கை கொண்ட சோழன்) காலம் 1012—1044. திரைலோக்கிய சுந்தரம் கட்டப்பட்டது இராச ராசேச்சுரத்துக்கு முன். கருவூர்த் தேவர் சுமார் 1040 வரை வாழ்ந்து திரைலோக்கிய சுந்தரம், இராசராசேச்சுரம், கங்கை கொண்ட சோழேச்சுரம் மூன்றும் எழுப்பப்பட்ட காலத்தில் உடன் இருந்து பாடினார். இராசராசனுக்குத் திருமுறைகளைக் காட்டிய நம்பியாண்டார் நம்பி, 1040 வரை வாழ்ந்து, கருவூர்த் தேவர் திருவிசைப்பா உள்பட அனைத்தையும் தொகுத்தார் என்றே கொள்ளவேண்டும். ஒன்பதாம் திருமுறையில் மிகவும் அதிகமான பாடல்களைப் பாடியவர் கருவூர்த் தேவர். இவர் பாடல்கள் அல்லாமல் பிற பாடல்கள் ஒரு திருமுறையாக அப் போது தொகுக்கப்பெற்றன என்று சொல்வதில் பொருள் இல்லை; ஏனெனில் அவை அளவில் அவ்வளவு குறைவானவை.

அன்றியும், வகுத்து ஒழுங்கு செய்யப்பட்ட திருமுறைகளில் பிற்காலத்தில் பாடல்கள் சேர்க்கப்பட்டன என்று சொல்வது மரபுக்கு முரண். அப்படிச் சொல்வது சம்பிரதாயமன்று. பாசுரங் களின் பக்திச்சுவைக்கும் சுவைநலத்துக்கும் ஏற்ப, முன் வந்தோர் பாடல்களை அருட்பாடல்கள் என்று பின் வந்தோர் சொல்வது இயல்பு. அது காரணமாக அவ்வகைப் பாடல்களையும் யாரும் திருமுறையில் சேர்க்கலாம் என்று சேர்த்ததுமில்லை, சேர்க்க எண்ணியதுமில்லை. எடுத்துக் காட்டாக வேண்டுமானால் அருணகிரிநாதர் திருப்புகழையும் தாயுமானவர் பாடல்களையும் குறிப்பிட முடியும். இப் பாடல்கள் எவ்வளவோ சிறப்பானவை என்பதை நாம் நன்கு அறிவோம். இவற்றை யாரும் திருமுறை யோடு சேர்க்க முனைந்ததில்லை. சாத்திரத் துறையிலும் பார்க்க லாம். சித்தாந்த சாத்திரம் பதினான்கு என்ற வரையறை ஒரு காலத்தில் தோன்றியது. அதை யாரும் பெருக்க முயன்றதில்லை. தத்துவப் பிரகாசம் என்பது மிகவும் சிறப்பான ஒரு சாத்திர நூல். இதைப் பதினைந்தாகச் சேர்த்துக் கொள்வோம் என்று ஒருவரும் ஒரு காலத்திலும் சொன்னதில்லை.

திருமுறை பற்றிய நிலைமை இது. முன் வந்த தொகுப்பில் யாரும் கூட்டவோ குறைக்கவோ நினைத்ததில்லை. ஆகவே பிற்காலத்தில் சிவநெறிச் செல்வர் பாடல்களைச் சேர்த்துத் திரு முறைகளை வகுத்துத் தந்தார்கள் என்று சொல்வது ஏற்க முடியாத வாதம்.

நாலாயிரத்தினுடைய தொகுப்பு, பின்னுல் பெருக்கப்பட்ட தில்லை என்ற வைணவ சம்பிரதாயமும் எம் கூற்றுக்கு அரண் செய்யும். அருளாளப் பெருமாள் எம்பெருமானுர் செய்த விஞ்ஞானசாரம், பிரமேயசாரம், விளாஞ்சோலைப் பிள்ளையின் சப்தகாதை ஆகியவற்றைத் தென்கலையார் எவ்வளவுதான் அநுசந்தித்த போதிலும் கூட (இவை தென்கலையார் நித்தியானு சந்தானம்), தேசிகருடைய பிரபந்தங்களை வடகலையார் எவ்வளவு தான் போற்றிய போதிலும் கூட, அவர்கள் யாரும் நாலாயிரப் பிரபந்தத்தோடு இவற்றைச் சேர்த்துப் பெருக்க எண்ணியதில்லை.

மேலும், திருமுறையானது கால முறையாகத் தொகுக்கப் பெறவில்லை. அரசன் தேவாரங்களைத் தொகுப்பித்தான். அவற்ருேடு மற்றவற்றையும் சேர்த்துக் கொள்ளச் செய்தான். திருவாசகமே அவ்வாறு சேர்ந்ததுதான். திருமந்திரத்தைப் பத்தாவதாகச் சேர்த்ததற்கும், இசைப்பா மாலையை ஒன்பதாகவும் பிரபந்த மாலையைப் பதினென்ருகவும் சேர்த்ததற்கும் உள்ள இயைபை அடுத்துள்ள ‘இசையும் இயலும்’ என்ற தலைப்பில் விளக்கியிருக்கிருேம். ஒன்பது திருமுறை வரையில் இசை; பத்தும் பதினென்றும் இயல். இயல் தமிழாலான திருத்தொண்டர் புராணம், பிற்காலத்தில் பன்னிரண்டாவதாக ஆயிற்று. இதுவே திருமுறைகளின் வரிசை அமைப்புக்குரிய இயைபு.

பிற்காலத்தில் அனபாய சோழனுடைய பேரார்வம் காரணமாக திருத்தொண்டர் புராணம் 12ஆம் திருமுறையாக அமைக்கப் பட்டது. அதன் அருமையை உணர்ந்த யாரும் இதன் பொருத் தத்தை நன்கு உணர்வார்கள். இதற்கும் பின்னர், வேறெந்த நூலுமே தோன்றித் திருமுறை வகுப்பினுள் சேர்க்கப் பெறவில்லை என்பது சேக்கிழாருக்குள்ள சிறப்பு. சேக்கிழார் நூல் சேர்ந்த மையினுல், திருமுறைக்குப் பின்னுல் பெருக்கமில்லை என்று நாம் கூறிய கருத்து பழுதுபடாது.

## இசையும் இயலும்

இவ்வகையான பன்னிரு திருமுறை தொகுத்த வரலாற்றுள் ஒன்பதாம் திருமுறைத் தொகுப்பை மட்டும் இனி இங்கு ஆராய் வோம். இத் திருமுறை திருவிசைப்பா—திருப்பல்லாண்டு என்றே பெயர் பெறும். இது 28 திருவிசைப்பாப் பதிகங்களும் ஒரு திருப் பல்லாண்டுப் பதிகமும் கொண்டது. இசைப்பா என்றமையினுலே

இது தேவாரங்கள் போல இசைக்குரியது என்பது தெளிவு. இங்கு தோத்திர அருட்பாசுரங்களை இயல் என்றும், இசை என்றும் பிரித்த பாகுபாடு நன்கு உணர்தற்பாலது. வைணவ நாலாயிரப் பிரபந்தங்களில் முதலாயிரம் இசைப்பா, மற்ற இரண்டு—பெரிய திருமொழியும் திருவாய்மொழியும் – இசைப்பாக்கள்; மற்ற ஓராயிரம் மட்டும் இயற்பா (இயற்றமிழ்). சைவத்திலும் அதுபோலவே முத்தமிழில் இயல் இசை என்ற இரு தமிழ்ப் பிரிவுகளைக் கருதுவோமானால், முதல் ஒன்பது திருமுறைகள் இசைப்பாவாகவும் பின் மூன்று திருமுறைகள் இயற்பாவாகவும் அமைந்திருப்பதைக் காணலாம்; இதை ஒரு பட்டியலாக எதிர்ப்பக்கத்திலே (பக். 13) காட்டியுள்ளோம்.

இங்கு நம்பியாண்டார் நம்பி தமக்குக் கிடைத்த இசைப் பாடல்கள் அனைத்தையும் ஒரு தொகுப்பாக முதலில் தொகுத்துக் கொண்டார். அதற்கு 'இசைப்பா மாலை' யென்றே பெயர் வைத்தார். பிறகு அரசன் வேண்டிக் கொண்டதன்மேல் 'இறை மொழிந்த திருமுகப் பாசுரம் முதலாம் பதிகங்களையும்' ஒரு திருமுறையாகச் செய்து அதற்குப் பிரபந்தமாலை என்று பெயரிட்டார். இது நன்றாகச் சிந்திக்க வேண்டிய செய்தி. அரசன் கேட்டுக் கொண்டவாறு தேவாரத் திருப்பதிகங்களை ஏட்டிலிருந்து தொகுத்துப் பிற அருள் நூல்களையும் சேர்த்து, பத்துத் திருமுறைகள் ஆக்கினார். இங்கே ஒன்பது வரையில் இசைப்பா. பத்தாவது திருமந்திரம், இசைப்பா அன்று. இதையும் அவர் திருமுறையாக அமைத்தற்குச் சிறப்பான காரணங்கள் உள்ளன. திருமந்திரம் பாடிய திருமூல தேவர் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகையுள் சிறப்பிக்கப் பெற்றுள்ளார். அவர் பாடிய நூலும் மிகவும் சிறப்பான சாத்திரப் பொருளுடையது. ஆகவே அவர் திருமந்திரத்தைத் தாமாகவே ஒரு திருமுறையாக ஆக்கினார்போலும்.

நம்பியாண்டார் நம்பி தேவாரம் தொகுத்தபோது, சமயாசாரியர் பாடல்களான தேவார திருவாசகங்கள் அன்றி, தம் காலத்திலும் தம் காலத்திற்கு முன்பும் வேறு இசைப் பாடல்கள் இருந்தமை கண்டு, அவை இசைப்பாடல்களாய் இருந்தமையால் தேவாரத்தோடு ஒத்துப் போற்றத் தக்கன என்று கருதியும், ஆதரிப்பார் இன்றி அவை கைந்நெகிழுமாறு விடக்கூடாது என்று முடிவு செய்தும், தம் காலத்திலிருந்த அரசன் போன்ற மெய்யன்பர்களுடைய விருப்பத்திற்கிணங்கியும், திருவிசைப்பா மாலையைத் தொகுத்தார் என்று கருதுகிறோம்.

## திருமுறைகள் பன்னிரண்டு—இசையும் இயலும்

| திருமுறை எண் | வழங்கும் பெயர் | பண்டைப் பெயர் | ஆசிரியர் | பாடல் தொகை | இசை–இயல் |
|---|---|---|---|---|---|
| 1, 2, 3 | தேவாரம் | திருக்கடைக்காப்பு | திருஞானசம்பந்தர் | 4147 | இசை |
| 4 | தேவாரம் | தேவாரம் | திருநாவுக்கரசர் | 1070 | இசை |
| 5 | தேவாரம்—திருக்குறுந்தொகை | தேவாரம் | திருநாவுக்கரசர் | 1015 | இசை |
| 6 | தேவாரம்—திருத்தாண்டகம் | தேவாரம் | திருநாவுக்கரசர் | 981 | இசை |
| 7 | தேவாரம் | திருப்பாட்டு | சுந்தரமூர்த்தி | 1024 | இசை |
| 8 | திருவாசகம் | திருவாசகம் | மாணிக்கவாசகர் | 656 | இசை |
| 9 | திருவிசைப்பா-திருப்பல்லாண்டு | திருவிசைப்பாமாலை | ஒன்பதின்மர் | 301 | இசை |
| 10 | திருமந்திரம் | திருமந்திரமாலை | திருமூலர் | 3045 | இயல் |
| 11 | பதினொராந் திருமுறை | பிரபந்தமாலை | பன்னிருவர் | 1391 | இயல்[1] |
| 12 | பெரிய புராணம் | திருத்தொண்டர்புராணம் | சேக்கிழார் | 4286 | இயல் |
| | | | மொத்தப் பாடல்கள் | 17918 | |

1. இவ்வியல் நூலுள் காரைக்காலம்மையின் திருவாலங்காட்டுப் பதிகம் இரண்டு மட்டும் இசை. திருமுறைகள் 1 முதல் 7 முடியத் தேவார அடங்கன் முறை என்று பெயர் பெறும். மாணிக்கவாசகர் பாடியதாகக் கருதப்பெறும் திருக்கோவையார் (எட்டாம் திருமுறை என்பது வழக்கு) இங்குச் சொல்லப் பெறவில்லை; அது இயற்றமிழ் நூலாகும்.

இதில் மற்ருெரு கருத்து, திருவிசைப்பாக் கொண்ட தலங்கள் பதினுன்கு ; அவற்றுள் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் ஆறு போக ஏனைய எட்டும் தேவாரப் பாடல் பெருத தலங்கள்.

## திருவிசைப்பாத் தலங்கள்

1. தேவாரப் பாடல் பெற்றவை :

கோயில் (சிதம்பரம்)
திருவீழிமிழலை
திரு ஆவடுதுறை
திருப்பூவணம்
திரு இடைமருது
திரு ஆரூர்

2. தேவாரப் பாடல் பெருதவை :

திருவிடைக்கழி
களந்தை ஆதித்தேச்சுரம்
கீழ்க்கோட்டூர் மணியம்பலம்
திருமுகத்தலை
திரைலோக்கியசுந்தரம்
கங்கைகொண்ட சோழேச்சுரம்
திருச்சாட்டியக்குடி
தஞ்சை இராசராசேச்சுரம்

தேவாரப் பாடல் பெருத இவ்வெட்டுத் தலங்களும் வேறெந்தத் திருமுறையிலும் குறிப்பிடப் பெறவில்லை. இவற்றுள் நான்கு சோழர் பரம்பரையினுல் கட்டப்பெற்ற கோயில்கள். களந்தை ஆதித்தேச்சுரம் ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்த ஆதித்த சோழனுலும், திரைலோக்கிய சுந்தரம் முதல் இராசராச சோழ மன்னனது மூன்ரும் மனைவியாகிய திரைலோக்கிய மாதேவியாலும் (சுமார் கி.பி. 1000), தஞ்சைப் பெருங்கோயில் இராசராச மன்னனுலும் (1008), கங்கைகொண்ட சோழேச்சுரம் இவனது மகன் முதல் இராசேந்திரனுலும் (1035), கட்டப் பெற்றவை ஆகும். அன்றியும் இந் நான்கு தலங்களும், நம்பியின் காலத்தில் வாழ்ந்து இராசராச மன்னனுலேயே பெரிதும் அபிமானிக்கப் பெற்றிருந்த கருவூர்த் தேவர் பதிகம் பாடிய சிறப்புடையவை. ஆகவே நம்பியாண்டார் நம்பி இசைப் பாக்களை ஒரு திருமுறையாகத் தொகுப்பதற்கு உடன் காலத்தனவாகிய இப் பொருத்தங்களும் இருந்தன.

மேலும் மிக்க எழுச்சியோடு வளர்ந்து வந்த சோழ மன்னர் காலத்தில் புதிதாக எழுந்துவந்த தலங்களுக்கும் அருட் பாசுரங்கள் என்ற பெயரில் சுவாமி திருமுன் பாடுவதற்கான பாசுரங்கள் இருக்குமானுல் அந்தப் பிரதேச மக்களுடைய சமய உணர்வு நிறைவு பெறுவதோடு, எழுச்சியும் பெறும். இவைகள், நம்பி இவ் விசைப் பாக்களை ஒரு தனித் திருமுறையாகத் தொகுத்தற்குரிய காரணங்களாகத் தெரிகின்றன. இல்லையானுல் முதல் எட்டுத் திருமுறைகளைச் சுமார் 1000 பாடல்கள் வீதமும், பத்தாம் திருமுறையை 3000 பாடல்களாகவும், (பின்னர் பதினெராந் திருமுறையை 1400 பாடல்களாகவும்) தொகுத்த இவர், ஒன்பதாம் திருமுறையை மட்டும் மிகச் சுருங்கிய அளவில் இயன்ற 300 பாடல்களே கொண்டதாகத் தனியே முறைப்படுத்தியதற்கு ஓர் அமைதி காண்பதற்கில்லை. எனவே இத் தலைப்பில் கூறியவற்ருல், திருவிசைப்பா மாலையானது அக்கால அரசியல் நிலைமைக்கும் தன்னகத்தேயுள்ள இசைத் தன்மைக்கும் பொருந்த ஒரு தனித் திருமுறையாயிற்று என்பது நன்கு விளங்கும். இதற்கு மேல் இசைப் பாடல்கள் கிடைக்காமையால், இத் திருமுறை இந்த அளவோடு நின்றது.

ஆனுல் பதினெராம் திருமுறையை அவர் அரசன் வேண்டுகோளுக்கிணங்கி, 'பிரபந்த மாலை' என்று பெயர்கொடுத்து அடுத்த திருமுறையாக ஆக்கினுர் போலும். இத் திருமுறை தொகுக்க அரசன் கேட்டுக் கொண்டபோது ஒரு தூண்டுகோலையும் தன் சொல்லோடு சேர்த்துக் கொள்கிருன். இறை மொழிந்த திருமுகப் பாசுரம் என்கிருன். பின்னர் நம்பி இதை எப்படி விலக்குவார் ? அரசனுடைய பக்குவத்தை நாம் மிகவும் பாராட்ட வேண்டும். 'திருமுகப் பாசுரங்கள்' என்று அரசன் சொன்னபோதிலும் கூட, பிரபந்த மாலையில் அடங்கிய நூல்களில், பதிகங்களாய் உள்ளவை மூன்றே. அரசன் பதிகம் என்ற சொல்லை உபயோகித்ததும் கூட, நம்பி மனத்தை இசைவிக்கச் செய்யவேண்டும் என்ற கருத்தால், அப்படியே நம்பியும் இசைந்து அனைத்தையும் தொகுத்தார் என்பது வரலாறு. அவ்வாறு தொகுத்த போது திருத்தொண்டத் தொகையுள் போற்றப் பெற்ற நாயன்மாராகிய காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனுர், சேரமான்பெருமாள் நாயனுர் ஆகிய மூவருடைய பிரபந்தங்களைத் தொடக்கத்தில் திருமுகப் பாசுரத்தை அடுத்து வைத்து, இவற்றின் பின் எழுவர் பிரபந்தங்களை அமைத்து, இறுதியில் தம்முடைய பாடல்களை வைத்தார் என்று பதினெராம் திருமுறைப் பிரபந்தங்களின் இன்றுள்ள அடைவினுல் நாம் உணரலாம். இந்த நூல்களின் தொகுப்புக்கும் அடைவுக்கும் எந்த ஆதாரமும் காணப்படவில்லை,

பதினொராந் திருமுறையில், யாவும் இயற்பாக்களாயிருக்க, காரைக்காலம்மையாருடைய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டு மட்டும் இசைப் பாடல்களாக உள்ளன; இவை நட்டபாடை, இந்தளம் என்ற இரு பண்களுக்கும் உரியன. இவை பிரபந்த மாலையுள் சேர்க்கப் பெற்றமைக்கு ஒரே காரணந் தான் சொல்ல முடியும். அம்மையார் பாடல் தொகை 143; அவற்றுள் பெரும் பகுதி இயல்; சிறு பகுதி 22 பாடல்களே இசை; எனவே, மிகுதிபற்றி இவையும் மற்றவற்றோடு சேர்த்துப் பதினொராந் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளன. வைணவ மரபில் இப்படியில்லை. நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழி தனி ஆயிரம்; இசை; அவரே பாடிய திருவாசிரியம், திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்ற மூன்றும் திருவாய்மொழியினின்றும் வேறு படுத்தி, இயற்பாவுடன் சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கக் காண லாம். அப்படியே திருமங்கையாழ்வார் பரசுரங்களும்.

பதினொராம் திருமுறையில் சேர்க்கப் பெற்றுள்ள காரைக்கா லம்மையார் பாடல்களுள் திருவாலங்காட்டுத் திருப்பதிகங்கள் இரண்டு மட்டுமே இசைக்குரியவை என்று குறிப்பிட்டோம். அவற்றின் தலைப்பில் மூத்த திருப்பதிகங்கள் எனக் குறிக்கப் பெற் றிருக்கும். முற்காலத்தில் ஏடு எழுதிய சான்றோர் இவ்விரு பதிகங்கள் மட்டும் இசைக்குரியவையா யிருந்தமையினாலும், அம்மையார் சம்பந்தராதியோருக்குக் காலத்தால் முற்பட்டவர் என்று கருதியமையினாலும், அடங்கன் முறை ஏடு எழுதியபோது முதலில் இவ்விரு பதிகங்களையும் எழுதி, பின்னரே 'தோடுடைய செவியன்' என்று சம்பந்தர் பதிகம் எழுதத் தொடங்கினர்கள். இதைப் பழைய அடங்கன் முறை ஏடுகள் அனைத்திலும் காண லாம். இந்த இயல்பினால் முன் காட்டிய திருமுறை இசை இயல் அமைதி பூரணமாய்ப் பொருந்துவது தெளிவாகும்.

திருவாரூரில் பெருமான் சுந்தரமூர்த்திக்குத் திருத்தொண்டத் தொகை பாடக் கட்டளையிட்டு அடியெடுத்துக் கொடுத்தபோது, 'இசைப்பா மொழி என்றான்' என்று சேக்கிழார் பாடுவதும் இங்குக் கருதத் தக்கது (345):

> தொல்லைமால் வரைபயந்த தூயாள்தன் திருப்பாகன்
> அல்லல்தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
> 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று
> எல்லையில்வண் புகழாரை எடுத்துஇசைப்பா மொழி' என்றான்.

முதற் காட்டிய திருமுறை கண்ட புராணப் பாடலில் 'மோக மெறி திருவிசைப்பா மாலை' என்று இத் திருமுறை கூறப் பெற் றுள்ளமை இதன் இசைத் தன்மையையும் இதனிடத்துச் சைவ மக்கள் கொண்டிருந்த ஈடுபாட்டையும் நன்கு புலப்படுத்தும்,

திருவிசைப்பா என்ற பெயருக்கு அதிக விளக்கம் தேவையில்லை. இசையில் அமைந்த பதிகங்களையுடைய நூல் என்றும், பரம் பொருளின் புகழை (இசையை) இசைக்கின்ற பா என்றுமே பொருள் கொள்ளத் தகுந்தது.

## திருவிசைப்பா ஆசிரியரும் பாடல் தொகையும்

இது ஒன்பதாம் திருமுறை என்பது போல இதன் பதிகங்களைப் பாடிய அடியவரும் ஒன்பதின்மர் ஆகின்றனர். இவர்களுடைய பெயர்களையும் இவர்கள் அருளிச்செய்த பதிகங்களின் தொகையையும் பழம் பாடல்கள் முறையாகச் சொல்லுகின்றன.

செம்பொன்மணி அம்பலத்து நிருத்த னர்க்குத்
திருவிசைப்பா உரைத்தவர்தம் திருப்பேர் சொல்லில்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனர் கருவூர்த் தேவர்
நம்பிகா டவர்கோன்நற் கண்டரா தித்தர்
நன்குயர்வே ணட்டடிகள் திருவாலி யமுதனர்
அம்புவியோர் புகழ்புருடோத் தமர்சேதி ராயர்
ஆகஇவர் ஒன்பதின்மர் தாமுறைகண் டடைவே.[1]

திருவிசைப்பா பாடினோர் திருமாளிகைத் தேவர், சேந்தனர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணட்டடிகள், திருவாலி அமுதனர், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்பர். இவர்கள் பாடிய பதிகத் தொகை:

அடைவுறுமா ளிகைத்தேவர் நான்கு; சேந்தர்
அன்புறுபல் லாண்டொன்ருேடு இசைப்பா மூன்று;
திடமுடைய கருவூரர் பத்து; வீறின்
சிறந்தகா டவர்இரண்டு; கண்டர்வே ணடர்
படிபுகழ்ஒவ் வொன்று; திரு வாலிநான்கு;
பன்னுபுரு டோத்தமனர் இரண்டு; சேதிராயர்
உடையதிருக் கடைக்காப்பு ஒன்ருக இருபத்தொன்பான்;
ஓது செய்யுள்முந்நூற் றறுபதிறே டைந்தே.[2]

இவர்களுள் அதிகமான பதிகங்கள் பாடியவர் கருவூர்த் தேவர்—10; நான்கு பதிகங்கள் பாடியவர் திருமாளிகைத் தேவரும், திருவாலி அமுதனரும்; சேந்தனர் திருவிசைப்பா

1, 2. ஒன்பதாம் திருமுறை, சமாஜப் பதிப்பு, தனிப் பாடல்கள்,

மூன்றும் திருப்பால்லாண்டும் ஆக நான்கு பதிகம் பாடியவர்; இரண்டு பதிகம் பாடியோர் பூந்துருந்தி நம்பியும் புருடோத்தம நம்பியும்; ஏனையோர் ஒவ்வொரு பதிகமே பாடியுள்ளனர்.

திருமுறை பன்னிரண்டிலும் இதுவே அளவால் மிகவும் சிறியது. பாடல்தொகை கூறுகின்ற முன் காட்டிய பழம் பாடல், இதன் பாடல்கள் 365 என்று கூறும். ஆனால் கிடைக்கின்ற பாடல்களின் தொகை 301 தான். கருவூர்த் தேவருடைய திருப் பூவணப் பதிகம் எட்டே பாடல் கொண்டது. பூந்துருத்தி நம்பி காட நம்பியின் திருவாரூர்ப் பதிகம் இரண்டே பாடல் கொண்டது. இவ்விரண்டிலும் முறையே இரண்டு எட்டுப் பாடல்கள் இறந்து போயின எனக் கருதக்கூடும். கிடைக்காத ஏனைய பாடல்கள் எப்பதிகங்களுக் குரியன, எவ்வாறு இறந்து போயின, என்ப தொன்றும் விளங்கவில்லை. பின்னும் பதிகங்கள் இருந்திருத்தல் கூடும். பதிகம் அதிகம் இருந்தால் 11 பாடல்களே இருக்கும். 29 பதிகங்களிலும் 320 பாடல்களே இருக்க முடியும். எப்படி 365 என்பது தெரியவில்லை. பாடலிலேயே, 365 என்றதில், பிழை இருக்கக் கூடும்.

## திருவிசைப்பாப் பண்கள்

திருவிசைப்பா இசையில் அமைந்தது என்று தொடக்கத்தில் குறிப்பிட்டோம். இதனுள் பதிகம் ஒவ்வொன்றுக்கும் பண் குறிப் பிடப்பட்டுள்ளது. பண் வகுத்தார் யார், எப்போது என்பது விளங்கவில்லை. ஆயினும் ஒரு கருத்தைக் குறிப்பிடலாம். திருமுறைப் பதிகங்களுக்கு இசையடைவு தெரியவேண்டி நம்பியார் சம்பந்தருக்கு யாழில் இட்டு வாசித்துச் சிறப்புப் பெற்றவரான திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவதாரத் தலமாகிய எருக்கத்தம் புலியூர் அடைந்து, 'அரனே இன்னிசை தந்தருள்' என இரக்க முடன் குறை இரந்தார். இறைவன், 'அப்பாணனூர் மரபில் வந்த ஒரு பெண்ணுக்கு இசை வகுக்கும் ஆற்றல் அளித்தோம்' என்று சொல்லக் கேட்டு, அவளைத் தில்லையம்பலத் திருமுன்பு அழைத்து வந்து, இசை வகுத்துக் கொடுக்கப் பெற்றார். மூவர் அருட் பதிகங்களுக்கு அப்பெண் தந்த இசை எவ்வாறு வகுக்கப் பெற்றது என்பதைப் புராணம் விரிவாகப் பேசுகிறது.[1] ஆனால் திருவிசைப்

1. திருமுறைகண்ட புராணம் ஷ பதிப்பு, பாடல் 31—48.

பாவை ஒன்பதாம் திருமுறையாக வகுத்த செய்தியைக் கூறிய போதிலும் கூட, அதற்கு இசை அமைத்த விவரம் கூறவில்லை. திருமுறை கண்ட புராணம் எழுந்ததே மூவர் தேவாரப் பதிகங்கள் கிடைத்த வரலாற்றைக் கூறும் பொருட்டு; ஏனைய திருமுறைகளைப் பொருள் நிறைவுக்காகக் கூறியதே யன்றி, இவை கூறுவது அதன் நோக்கமல்ல. ஆகவே திருவிசைப்பாவுக்கு இசை வகுத்தார் யார் என்பது அப் புராணம் சொல்லவில்லை; அப் பெண்ணே இசை வகுத்துத் தந்திருக்கலாம்.

இங்குப் பயிலும் பண்கள் ஆறு. அவற்றுக்குரிய பாடல்களைப் பின் வரும் பாடல் கூறுகிறது :

ஐந்துடன்நால் வரும்உரைத்த திருக்கடைக்காப் பிற்பண்
அறையின்,மா ளிகைத்தேவர் நான்கிலொன்று காந்தாரம்;
முந்துகரு வூரர்பத்தின் இரண்டுபுற நீர்மை;
மொழிந்திடுகாந் தாரமொன்று; காடவர்கோன் இரண்டின்
நந்தலில்சா ளரபாணி யொன்று;வே ணாட்டடிகள்
நவின்றதொன்று புறநீர்மை; திருவாலி அமுதனார்
பந்தமறச் சொல்நான்கி னென்றுநட்ட ராகம்;
பகர்ந்திடின்ஒன் றிந்தளம்;மற் றெவையும்பஞ். சமமே.[1]

இப்பண்களில் பஞ்சமம் 21, காந்தாரம் 2, புறநீர்மை 3, நட்டராகம் 1, இந்தளம் 1, சாளரபாணி 1. இவற்றுள் முதல் ஐந்தும் தேவாரத்துள் காணப்படுவன. சாளரபாணிப் பண் தேவாரத்துள் காணப்படாதது.[2] இதனால் நாம் அறிவது, தேவாரப் பண்களே யன்றி வேறு பலவான பண்கள் சாளரபாணிப் பண் பாடிய பூந்துருத்தி நம்பியின் காலம் வரையில் இருந்தன, இன்னும் ஒரு

---

1. இங்கே காட்டிய செம்பொன்மணி, அடைவுறு மாளிகை, ஐந்துடன் நால்வரும் என்ற மூன்று பாடல்களும் திருவிசைப்பாவுக்குரிய தனிப் பாடல்கள்; மூன்றும் அந்தாதி.

2. 1978 இறுதியில் வெளியான பஞ்சமரபு முதற் பாகம் சாளரபாணிப் பண்ணைக் குறிப்பிடுகிறது. இப் பஞ்சமரபின் காலம் 9ஆம் நூற்றுண்டின் இறுதி; இந்நூல் அடியார்க்குநல்லார் தாம் சிலப்பதிகார உரை எழுத மேற்கொண்ட ஆதார நூல்களுள் ஒன்று என்பது இங்கு அறியத்தக்கது. திருவிசைப்பாவில் இப் பண் பாடப்பெற்ற காலம் 10ஆம் நூற்றுண்டின் தொடக்கம் என்று பின்னே குறிப்பிட்டிருக்கிறோம். பஞ்சமரபு, வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் பதிப்பு, 1978.

நூறு ஆண்டு கழித்து அடியார்க்கு நல்லார் காலத்திலும் இருந்தன, பின்னர் வழக்கு வீழ்ந்தன என்பதாகும்.

பண் அமைத்தார் யார் என்று தெரியாவிட்டாலும் கூட, திருவிசைப்பா ஆசிரியர் இருவர் தங்கள் பாடலிலேயே பண்ணின் பெயரை அமைத்துப் பாடியிருப்பதை இங்குக் குறிப்பிடலாம். கருவூர்த் தேவர் தாம் பாடிய திரைலோக்கிய சுந்தரப் பதிகம் இறுதிப் பாடலில் அதற்குரிய காந்தாரப் பண்ணையும், புருடோத்தம நம்பி தமது கோயில் திருப்பதிகத்தின் முதற் பாடலில் அதற்குரிய பஞ்சமப் பண்ணையும் பெயர் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார்கள். தேவாரத்துள் பஞ்சமத்தை அப்பர் குறிப்பிடுகிறார். "பஞ்சமம் பாடியாடும் தெள்ளியார் கள்ளந் தீர்ப்பார் திருச் செம்பொன் பள்ளியாரே" என்பது அவருடைய திருநேரிசை.[1] சம்பந்தர் திருவீழிமிழலை மேகராகக் குறிஞ்சியில் "சேறுடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு வேறாய உருவாகிச் செவ்வழி நற்பண் பாடும் மிழலையாமே"[2] என்று பாடுகிறார். பின்னும் உதாரணங்கள் பல.

இப் பதிகங்களில் பாதாதிகேசமாகத் திருமாளிகைத் தேவரும் திருவாலியமுதனாரும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர். கருவூர்த் தேவருடைய கீழ்க் கோட்டூர் மணியம்பலம் திரைலோக்கிய சுந்தரப் பதிகங்களும், திருமாளிகைத் தேவர் 'உறவாகிய யோகம்' என்ற கோயிற் பதிகமும் அகத்துறைப் பதிகங்கள். ஏனையவற்றுள் ஏழு பதிகங்கள் அகத்துறையாகவும் அந்தாதியாகவும் உள்ளன; இவற்றை அட்டவணையில் காணலாம்[3]—சேந்தனார் திருவாவடுதுறை, திருவீழிமிழலை; திருவாலியமுதனார்—பவளமால்வரை, கோலமலர்; புருடோத்தம நம்பி கோயில் பதிகங்கள் இரண்டும்; சேதிராயர் பதிகம்.

## திருவிசைப்பாத் தலங்கள்

இத் திருமுறையுள் சொல்லப்பட்ட தலங்கள் 14. இவற்றுள் தில்லையாகிய கோயிலுக்கு மட்டும் உள்ள பதிகங்கள் 16. ஏனைய 13 பதிகங்களும் 13 தலங்களுக்கு உரியன. சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி என்ற மூவரும், தங்கள் பதிகங்களில்

---

1. அப்பர் தேவாரம், 4, 29, 3.
2. சம்பந்தர், 1, 132, 7.
3. அட்டவணை, பக். 22–23ல் காண்க.

ஒரு பதிகத்தைத் தில்லைக்கும், மற்றவற்றைத் தலத்துக்கு ஒரு பதிகமாகவும் பாடியிருக்கிறார்கள். பிற ஆசிரியர் அறுவரும் தில்லை ஒன்றையே பாடியிருக்கின்றனர். இவ்வாறு பாதிக்கு மேற்பட்ட பதிகங்கள் தில்லை ஒன்றுக்கே உரியன. ஆதலால் இத் திருமுறையே தில்லைத் திருமுறை என்றாலும் பொருந்தும். ஏனைய தலங்கள் பின் வருவன : வீழிமிழலை, ஆவடுதுறை, திருவிடைக்கழி (சேந்தனார்), களந்தை ஆதித்தேச்சுரம், கீழ்க்கோட்டூர் மணியம்பலம், முகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோழேச்சுரம், பூவணம், சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சுரம், இடைமருதூர் (கருவூர்த் தேவர்) ; ஆரூர் (பூந்துருத்தி நம்பி காட நம்பி).

திருவிசைப்பாப் பெற்ற தலங்கள் பதினான்கு. இவற்றுள் திருப்பூவணம் ஒன்றே சோழநாட்டுக்கப்பால் பாண்டிநாட்டில் உள்ளது. இது தேவாரப் பதிகம் பெற்றது. ஏனைய பதின்மூன்றும் சோழநாட்டில் உள்ளவை. ஆறு தலங்கள் தேவாரப் பதிகம் பெற்றவை ; பூவணம், வீழிமிழலை, ஆவடுதுறை, இடைமருது, ஆரூர், தில்லை என்பன. ஏனையவற்றுள், திருவிடைக்கழி என்பது சிறப்பான ஒரு பழைய தலம். ஆசிரியர் இங்கு 'திருக்குரா நீழற் கீழ் நின்ற முருகன்' என்று பாடுவதால், இதுவே குராப்பள்ளி என்றும், குராப்பள்ளியில் துஞ்சிய திருமாவளவன் என்று சங்க நூலில் வரும் குராப்பள்ளி இதுவே என்றும் ஆன்றோர் கருதுவர். சோழர் எழுப்பிய சிறப்புக் கோயில்கள் திருவிசைப்பாவினுள் சொல்லப்பட்டவை நான்கு. அவை களந்தை ஆதித்தேச்சுரம், திரைலோக்கிய சுந்தரம், தஞ்சை இராசராசேச்சுரம், கங்கை கொண்ட சோழேச்சுரம் என்பன. இந்த நான்கில் களந்தை மட்டும் பழைய கோயில். மற்ற மூன்றும் அவற்றுக்குத் திருவிசைப்பாப் பாடிய கருவூர்த் தேவர் காலத்தில் புதிதாய்க் கட்டப்பட்டவையாகும். கருவூர்த் தேவர் இந் நான்கினோடு, வேறு வகையில் விளக்கமில்லாத கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திருச்சாட்டியக்குடி என்ற மூன்றுக்கும் திருவிசைப்பாப் பாடியது குறிப்பிடத் தக்கது. இந்த மூன்று தலங்களுமே களந்தையோடு சேர்த்து சோழ நாட்டின் தென்கிழக்கு மூலையில் உள்ளன. கோயில்கள் இன்று நல்ல நிலைமையில் இருந்தும் அவை பற்றித் தமிழ் நாட்டில் அதிக விளக்கமில்லை. கருவூர்த் தேவர் பாடலால் அவர் இங்கு நெடுநாள் தங்கியிருந்தார் என்று நினைக்க வேண்டியுள்ளது.

# திருவிசைப்பா அட்டவணை

| எண் | பதிக எண் | ஆசிரியர் பெயர் | பதிகம் | தலம் | பாடலின் பெயர் | பாடல் தொகை | பண் | சிறப்பு | காலம் நூற்றாண்டு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | திருமாளிகைத்தேவர் | 1 | கோயில் | ஒளிவளர் விளக்கு | 11 | பஞ்சமம் | தன்னைத் தானே அனுபவிக்குமாறு | 10 |
| | 2 | | 2 | கோயில் | உயர்கொடியாடை | 11 | பஞ்சமம் | பாதாதி கேசம் | |
| | 3 | | 3 | கோயில்[1] | உறவாகிய யோகம் | 12 | பஞ்சமம் | அகத்துறை | |
| | 4 | | 4 | கோயில் | இணங்கிலா ஈசன் | 11 | காந்தாரம் | பழிப்பு | |
| 2 | 5 | சேந்தனார் | 1 | வீழிமிழலை | ஏக நாயகனை | 12 | பஞ்சமம் | அனுபவ முதிர்வு | 10 |
| | 6 | | 2 | ஆவடுதுறை | பொய்யாத வேதியர் | 11 | பஞ்சமம் | அகத்துறை, அந்தாதி | |
| | 7 | | 3 | திருவிடைக்கழி | மாலுலாமனம் | 11 | பஞ்சமம் | அகத்துறை, அந்தாதி | |
| 3 | 8 | கருவூர்த்தேவர் | 1 | கோயில் | கனம்விரிகுடுமி | 11 | புறநீர்மை | | 11 |
| | 9 | | 2 | களந்தை ஆதித்தேச்சுரம் | கலைகள்தம் பொருளும் | 10 | புறநீர்மை | | |
| | 10 | | 3 | கீழ்க்கோட்டூர் மணியம்பலம் | தளிரொளிமணி | 11 | பஞ்சமம் | அகத்துறை | |
| | 11 | | 4 | முகத்தலை | புவன நாயகனை | 10 | பஞ்சமம் | | |
| | 12 | | 5 | திரைலோக்கிய சுந்தரம் | நீரோங்கி | 11 | காந்தாரம் | அகத்துறை | |
| | 13 | | 6 | கங்கைகொண்ட சோழபுரம் | அன்னமாய் | 11 | பஞ்சமம் | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 14 | | 7 | பூவணம் | திருவருள்புரிந்து | 8 | பஞ்சமம் | | |
| | 15 | | 8 | சாட்டியக்குடி | பெரியவாகருணை | 10 | பஞ்சமம் | | |
| | 16 | | 9 | தஞ்சை இராச ராசேச்சுரம் | உலகெலாம்தொழ | 11 | பஞ்சமம் | | |
| | 17 | | 10 | இடைமருதூர் | வெய்யசெஞ்சோதி | 10 | பஞ்சமம் | அருளியதிறம் | |
| 4 | 18 | பூந்துருத்திநம்பி காடநம்பி | 1 | ஆரூர் | கைக்குவான் | 2 | பஞ்சமம் | விடங்கர் நடனம் | 11 |
| | 19 | | 2 | கோயில் | முத்து வயிர | 10 | சாளரபாணி | ஆடல் அதிசயம் | |
| 5 | 20 | கண்டராதித்தர் | 1 | கோயில் | மின்னுருருவம் | 10 | பஞ்சமம் | அருள்வேட்கை | 10 |
| 6 | 21 | வேணாட்டடிகள் | 1 | கோயில் | துச்சானசெய் | 10 | புறநீர்மை | பழமொழி | 10 |
| 7 | 22 | திருவாலி அமுதனர் | 1 | கோயில் | மையல்மாது | 11 | பஞ்சமம் | பாதாதிகேசம் | 10 |
| | 23 | | 2 | கோயில் | பவளமால்வரை | 10 | நட்டராகம் | அகத்துறை, அந்தாதி | |
| | 24 | | 3 | கோயில் | அல்லாய்ப்பகலாய் | 11 | இந்தளம் | நடனக்காட்சி | |
| | 25 | | 4 | கோயில் | கோலமலர் | 10 | பஞ்சமம் | அகத்துறை, அந்தாதி | |
| 8 | 26 | புருடோத்தம நம்பி | 1 | கோயில் | வாரணி நறு | 11 | பஞ்சமம் | அகத்துறை, அந்தாதி | 11 |
| | 27 | | 2 | கோயில் | வானவர்கள் | 11 | பஞ்சமம் | அகத்துறை, அந்தாதி | |
| 9 | 28 | சேதிராயர் | 1 | கோயில் | சேலுலாம்வயல் | 10 | பஞ்சமம் | அகத்துறை, அந்தாதி | 11 |

## திருப்பல்லாண்டு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 29 | சேந்தனர் | 1 | கோயில் | மன்னுக தில்லை | 13 | பஞ்சமம் | | 11 |

1. கோயிலும், மகேந்திரமும்.

## திருவிசைப்பாவின் சிறப்பு

இவ் வொன்பதாந் திருமுறை அளவில் மிகச் சிறியதாயினும், பல சிறப்புக்கள் இதனிடத்தில் பொருந்தியுள்ளன. முதல் ஒன்பது திருமுறைகள் இசைப் பாக்களாயிருப்பினும், இது ஒன்றுக்கே இசைப்பா என்ற பெயர் அமைந்திருக்கிறது. அன்றியும், அடங்கன்முறை முழுவதிலும் காணப்படாத சாளர பாணி என்ற பண் இதில் மட்டுமே காணப்படுவது மற்ருெரு சிறப்பு.

### பஞ்சபுராணம்

சிவாலயங்களில் நெடு நாளாக வழங்கி வருகின்ற ஒரு மரபு, பஞ்சபுராணம் பாடுதல்[1] என்ற மரபு. சிவாலயங்களில் பூசை முடிந்து நிவேதனம் ஆனபின், தேவாரம் பாடுவது மரபு. இதைப் பஞ்சபுராணம் பாடுதல் என்று இன்று சொல்லுகிருேம். திருப்பதிகம் விண்ணப்பித்தல் என்று சாசனங்களில் சொல்லப் பட்டதன் விரிவே இது. தலத்துக்குத் தேவாரப் பதிகம் இருந் தாலும் இல்லாவிட்டாலும் பஞ்சபுராணம் பாடுவது உண்டு. சிறப்பாக, திருமுறைக்கு ஒரு பாட்டு வீதம் ஓதுவதே முறை. அது இயலாதபோது சுருக்கி ஐந்து பாடல் பாடுவதுண்டு; ஐந்தானமையால் பஞ்சபுராணம். இதனுள் புராணம் எதுவும் இல்லே; எல்லாம் ஒரு முறைப்பாடலே. பஞ்சபுராணம் என்பது ஐந்து பாடல்: அவையாவன தேவாரப் பாடல் ஒன்று, திருவாசகப் பாடல் ஒன்று, திருவிசைப்பா ஒன்று, திருப்பல்லாண்டு ஒன்று, பெரியபுராணம் ஒன்று. 8250 பாடல் அடங்கிய மூவர் தேவாரத்துள் ஒரு பாடல், 656 பாடலுடைய திருவாசகத்துக்கு ஒரு பாடல், 288 பாடல் உள்ள திருவிசைப்பாவுக்கு ஒரு பாடல், 13 பாடல்கொண்ட திருப்பல்லாண்டுக்கு ஒரு பாடல், 4286 பாடல்கொண்ட பெரியபுராணத்துக்கு ஒரு பாடல், ஆக 5. இவற்றுள் ஒன்பதாம் திருமுறைக்கு இரண்டு பாடல் பாடிவருவது இதற்கு அளித்துள்ள பெருஞ்சிறப்பு.

### திருப்பல்லாண்டு

சேந்தனுர் பாடிய திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையின் இறுதிப் பகுதி. சிவபெருமானுக்கு வேறு எவரும் திருப் பல்லாண்டு பாடவில்லே. சேந்தனுர் இத் திருப்பல்லாண்டு பாடி, நிலேயைவிட்டு அசையாதிருந்த தேர் ஓடுமாறு செய்தார் என்றும், அன்று இவர் சிவபெருமானுக்கு அளித்த களியமுதே (அவிழ்) அதுமுதல் இன்றுவரை மார்கழித் திருவாதிரையில் சிவபெருமா

---

1. சைவ சித்தாந்த மகாசமாஜம் பொன்விழா மலர் 1965, 'பஞ்ச புராணம்' என்ற எமது கட்டுரை பார்க்க.

னுக்கு உவப்பான நிவேதனமாயிற்று என்றும், இதை நினைவு கூர்ந்தே இந்தத் தினத்தில் தமிழ் நாடெங்குமுள்ள சைவர் தங்கள் இல்லங்களில் களி நிவேதனம் செய்கிறுர்கள் என்றும் வரலாறுகள் கூறும். இச் சேந்தனுர் நந்தன் குலத்தைச் சேர்ந்தவர் என்று நம்பியாண்டார் நம்பி நமக்கு உணர்த்துகிறுர். வைணவத்தில் 'அமலனுதிபிரான்' என்று பத்துப் பாடல் பாடி, அவர்களுடைய நித்தியானுசந்தானத்தில் இடம்பெற்ற திருப்பாணுழ்வார் தீண்டாத வகுப்பினர். சைவத்தில் நாயன்மாருள் மிகவும் புகழ்படைத்த ஒருவரான நந்தனுரும் இந்த வகுப்பினர்; ஆனுல் அவர் பாடல் எதுவும் பாடவில்லை. அதே வகுப்பில் பிறந்த சேந்தனுர் பாடல் பாடி, அதுவும் திருப்பல்லாண்டு பாடி, திருமுறையாசிரியருள் ஒருவரானுர். இவர் அளித்த களி மிகச் சிறப்படைந்துவிட்டது. இப் பல்லாண்டு பதின்மூன்றே பாடல். வைணவத்தில் திருப் பல்லாண்டு பாடிய ஆழ்வார் பெரியாழ்வார் ஆனுர் என்பதையும், வைணவ நாலாயிரப் பிரபந்தம் பல்லாண்டை வைத்தே தொடங்குகிறது என்பதையும் நாம் நினைவுகூரவேண்டும். 'பல்லாண்டெனும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே' என்பது சேந்தனுர் பல்லாண்டிலுள்ள ஒரு தொடர்.

இருப்பினும் ஒரு கருத்து இங்குச் சொல்லத்தக்கது. உமா பதியார் திருமுறை கண்ட புராணத்துள் எந்த இடத்திலும் திருப் பல்லாண்டைச் சொல்லவில்லை. ஆகவே, நம்பியாண்டார் நம்பி திருப்பல்லாண்டைக் கோத்தார் என்பதற்கு வரலாற்று ஆதார மில்லை. ஆயினும், 'திருவிசைப்பா மாலை' என்ற தொடருக்குத் திருவிசைப் பாக்கள் திருப்பல்லாண்டு ஆகியவை கோத்த மாலை யென்று பொருள் பண்ணிக்கொண்டு, திருப்பல்லாண்டும் மூன்று திருவிசைப்பாப் பதிகம் பாடிய சேந்தனுரால் பாடப்பெற்றது என்ற காரணத்தைக் கொண்டும், திருப்பல்லாண்டு பாடித் தேர் ஓடச் செய்தார் என்ற நிகழ்ச்சியின் சிறப்பைக் கொண்டும், திருப் பல்லாண்டையும் ஒன்பதாம் திருமுறையுள் சேர்த்துக் கூறுகின்ற மரபு ஏற்பட்டிருக்கிறது.

## பிற சிறப்புக்கள்

அரசனும் ஆண்டியும் இங்குப் பதிகம் பாடியுள்ளனர். சோழ சக்கரவர்த்தியான கண்டராதித்த தேவரும், தீண்டாத வகுப்பின ரான சேந்தனுரும் பதிகம் பாடிய சிறப்பு இத் திருமுறைக்கு உரியது. தமிழ் மன்னராய் இருந்தோர் திருமுறைப் பாசுரம் பாடிய நிலைமை மிகவும் அருமை. வேணுட்டு அடிகள் என்ற குறுநில மன்னரும் இங்கு ஒரு பதிகம் பாடியிருக்கிறுர். திருமுறைப் பாசுரம் பாடிய வேந்தர் பற்றிய அட்டவணையை இங்கே தருகிறேம்.

## திருமுறை பாடிய வேந்தர்

| எண் | வேந்தர் | மரபு | காலம் நூற். | திரு முறை | நூல் | பாடல் |
|---|---|---|---|---|---|---|
| | சைவம் | | | | | |
| 1. | ஐயடிகள் காடவர்கோன் | பல்லவர் | 7 | 11 | க்ஷேத்திரத் திருவெண்பா | 22 |
| 2. | சேரமான்பெருமாள் | சேரர் | 8 | 11 | 1. பொன்வண்ணத்தந்தாதி | 101 |
| | | | | | 2. திருவாரூர் மும்மணிக்கோவை | 30 |
| | | | | | 3. திருக்கயிலாய ஞானஉலா (197 கண்ணி) | 2 |
| 3. | கண்டராதித்தர் | சோழர் | 10 | 9 | தில்லைத் திருவிசைப்பா | 10 |
| 4. | வேணாட்டடிகள் | குறுநில மன்னர் | 10 | 9 | தில்லைத் திருவிசைப்பா | 10 |
| | வைணவம் | | | | | |
| 5. | குலசேகரர் | சேரர் | 8 | முதலாயிரம் | பெருமாள் திருமொழி (நாலாயிரப் பிரபந்தத்தில்) | 105 |

பாண்டியர் யாரும் திருமுறைகளில் பாடல் பாடவில்லை என்பது வரலாற்றுப் பொருளுடையது.

மேலும் இங்குப் பிற்காலத்தார் சித்தர் என்று கருதிய இருவர் திருமாளிகைத் தேவரும், கருவூர்த் தேவரும் பதிகம் பாடியிருக்கி ருர்கள். அன்றி வைணவப் பெயர் என்று கருதத்தக்க பெயருடை யவர் இருவர், திருவாலி அமுதனுரும், புருடோத்தம நம்பியும் பதிகம் பாடியிருக்கிருர்கள்.

திருமுறைப் பதிகங்கள் யாவும் சிவபிரானையே துதிப்பன. முருகன், விநாயகன், அடியவர் பற்றிய துதிப் பாசுரங்கள் பதினெராந் திருமுறையில்தான் காணப்படுகின்றன. ஆனுல் இத் திருமுறையில் முருகன்மீது சேந்தனுர் பாடிய திருவிசைப்பா ஒன்று இருப்பது சிறப்புடையது.

இங்குள்ள 29 பதிகங்களுள் 16 பதிகங்கள் தில்லைக்கு உரியன. இந்த இயல்பு, பெருமை பற்றி, 'தில்லைத் திருமுறை' என்றே இத் திருமுறையைக் கூறவும் இடங்கொடுக்கிறது.

## பட்டினத்துப் பிள்ளையார் திருவிசைப்பா

திருவிசைப்பா ஆசிரியர் ஒன்பதின்பர் என்று முன்னமே குறிப்பிட்டோம். பட்டினத்தாரும் திருவிசைப்பாப் பாடினுர் என்று ஒரு பாடல் சொல்கிறது; அத் திருவிசைப்பாவிலிருந்து இரண்டு பாடல்களும் தரப்பட்டுள்ளன. அவைபற்றி இங்குச் சிறிது கூறுவோம்:

திருவெண்காட்டுப் புராணத்தைப் பதிப்பித்த துரைசாமிப் பிள்ளை என்பவர், 'பட்டினத்துப் பிள்ளையார் திருவிசைப்பா' என்று பெயர் கொடுத்து, பின்வரும் இரு பாடல்களையும் தந்திருக்கிருர். அவர் அதே புராணத்தின் முகப்பில் பதிப்பித்துள்ள திருவெண் காட்டுத் தேவாரப் பதிகங்களில் 1, 11 என்று எண் கொடுத்து முதலும் கடையும் அச்சிட்டிருக்க, இவ்விரண்டை மட்டும் 1—2 என்ற எண் கொடுத்து அச்சிட்டிருக்கக் காணலாம்:

உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்,
அடுத்தடுத் துரைத்ததே உரைத்தும்,
கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்,
கழிந்தன கடவநா ளெல்லாம்;
விண்டதா மரைமேல் அன்னம்வீற் றிருக்கும்
விழாவரு வீதிவெண் காடா,
அண்டரே காண அம்பலத் தாடும்
ஐயனே, உய்யுமா றருளே.

கோடிய மனத்தால் வாக்கினுல் செயலால்
கொடியஐம் புலன்களால் அடியேன்,
தேடிய பாவம் நரகமுங் கொள்ளா,
செய்தவம் புரியினுந் தீரா,

விடிய பிரமர் சிரமேலாங் கவர்ந்த
விழாவரு வீதிவெண் காடா,
ஆடிய பாதா, அம்பலத் தாடும்
ஐயனே, உய்யுமா றருளே.[1]

இதனால், உள்ளவை பத்துப் பாடல்களல்ல, இரண்டு பாடல்களே என்பது தெளிவு. பட்டினத்தடிகள் புராணமுடையவர் பட்டினத் தார் பாடல்கள் யாவும் திருவிசைப்பா என்றே வழங்கினர் (பட்டினத்தடிகள் அடங்கன் முறை என்றொரு தொகுதி ஏடுகளில் காணப்படுகிறது.) திருவெண்காட்டடிகள் சரித்திரமுடையார் திருவெண்காட்டுத் திருவிசைப்பா என்று, பூதமும் கரணம், யாவரே இருந்தும், உண்டதே உண்டும் என மூன்று பாடல்கள் காட்டினர்.[2] மூன்றும் பாடல் மேலே காட்டப்பட்ட முதற் பாடல். இப் பட்டினத்தார் திருவிசைப்பா என்பது திருமுறை கண்ட புரா ணத்துள்ளோ, திருவிசைப்பா ஆசிரியரின் தலம், பதிகம், பண் அடைவு கூறும் பாடல்களிலோ, சொல்லப்படவில்லை. எனினும், இதற்கு ஒரு தோற்றுவாய் குறிப்பிட முடியும் :

சீரார்மா ளிகைத்தேவர், கருவூர்த் தேவர்,
திகழ்நம்பி கண்டரா தித்த தேவர்,
பாரார்வே ணாட்டுத்திரு வடிகள்,முது வாலி,
பரமபுரு டோத்தமர் பண்பயில் சேதிராயர்,
எராரும் இளம்பெருமா னடிகள், சேந்தர்,
எனும்புகழ திராவடிகள், இவரோ டின்னம்
பேராருங் கல்லாடர், பட்டினத்துப் பிள்ளை,
பெருகுதிரு விசைப்பாவைப் பண்ணி னரே

என்ற ஒரு பாடல் சில ஏடுகளில் காணப்படுகிறது. (இது ஒரு பொய்க் கதை கூட்டும் பாடல்; இதை எப்படியோ ஆறுமுக நாவலரும் மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்.)[3] இப் பாடலில் திருவிசைப்பா ஆசிரியர் ஒன்பதின்மரும் சொல்லப்பட்

---

1. திருவெண்காட்டுப் புராணம்—சைவ எல்லப்ப நாவலர், துரைசாமிப் பிள்ளை பதிப்பு, 1905.

2. பழைய பட்டினத்தார் பாடல் பதிப்புக்களில் இம் மூன்று பாடல் களும் திருவெண்காட்டுத் திருவிசைப்பா என்று தலைப்புக் கொடுத்து அச்சிட் டிருக்கக் காணலாம். பிற்காலப் பட்டினத்தார் (14ஆம் நூற்றாண்டு) இவற் றைப் பாடியிருக்கலாம். இவற்றுக்கும் ஒன்பதாம் திருமுறைக்கும் சம்பந்த மில்லை.

3. சைவசமய நெறி, ஆறுமுக நாவலர் பதிப்பு, பாயிரம் 13. நாவலர் பதிப்பித்த ஒன்பதாம் திருமுறை, பதினொராந் திருமு றைகளைப் பார்த்தாலும் கூட, இப்பாடல் சொல்லும் ஆசிரியர் அடைவு பிழை என்பது புலப்படும்.

டுள்ளனர். ஆனால் இவர்களோடு இளம்பெருமானடிகள், அதிரா வடிகள், கல்லாடர், பட்டினத்துப் பிள்ளை என்ற நால்வரும் திருவிசைப்பா செய்தவராகச் சொல்லப்பட்டுள்ளனர். இது பிழையே. திருவிசைப்பாவைப் பொறுத்தவரையில் குழப்பமில்லை; பதினொராந் திருமுறைக்குத்தான் இன்றுவரை எந்த வரையறையும் கிடைக்கவில்லை. பிற்காலத்து ஏடெழுதினவரொருவர் தாம் அறிந்த நூல்களனைத்தையும் திருவிசைப்பா என்று தொகுத்து எழுதி வைத்துக்கொண்டார் என்று மட்டுமே இப் பாடலைக் கருதலாம். இங்கு, 'பட்டினத்துப் பிள்ளை திருவிசைப்பாப் பண்ணினார்' என்று வருந்தொடர், 'திருவெண்காட்டுத் திரு விசைப்பா' தோன்ற இடம் கொடுத்தது போலும். உண்மையில் அப்படியொரு திருவிசைப்பா இல்லை. பட்டினத்தார் பெயர் திருவெண்காடர். ஆதலால் அவர் பெயரில் திருவெண்காட்டுத் திருவிசைப்பா தோற்றுவிக்கப்பட்டது போலும். அப்படியொரு பதிகம் இன்று இல்லை.

இவ்விடத்து ஒரு செய்தி குறிப்பிடத் தகும். முன் குறிப்பிட்ட திருவெண்காட்டுப் புராணப் பதிப்பில் பட்டினத்துப் பிள்ளை துதி என்று ஒரு பாடல் பாயிரப் பகுதியில் 14ஆம் பாடலாக அச்சிடப் பட்டுள்ளது:

தம்மகத்திற் செல்வமெலாம் பொய்யென் றெண்ணிச்
　　சத்தியமெய்ப் பொருளுணர்ந்து தவத்தோர் போற்றச்
செம்மலுக்குத் திருவிசைப்பா இசைத்துத் தெய்வ
　　சிகாமணியாம் திருவாரூர்ச் செல்வ னூர்க்கு
மும்மணிக்கோ வையும்பகர்ந்து திருவெண் காட்டின்
　　முதலிருவருக்கு மகபூசை முடித்தோர் நாகப்
பைம்மணித்தோர் காவிரிப்பூம் பட்டினத்துப்
　　பட்டினத்துப் பிள்ளைபதம் பரவு வோமே.

திருவிசைப்பா இசைத்தது இங்குச் சொல்லப்பட்டுள்ளது. இதுவும் பிழை. திருவாரூர் மும்மணிக் கோவை இவர் பாடினார் என்று சொல்லியிருப்பதும் பிழை. இவர் திருவிடைமருதூருக்கும், திருக்கழுமலத்துக்கும் மும்மணிக் கோவை பாடினாரேயன்றி, ஆரூருக்குப் பாடவில்லை. மேலும் இப் பட்டினத்தடிகள் துதி, அச்சுப் புத்தகத்தில் உள்ளதே தவிர ஏடுகளில் காணப்படவில்லை. (திருவாரூர் மும்மணிக் கோவை பாடியவர் சேரமான் பெருமாள்—பதினொராந் திருமுறை.)

கிடைத்த திருவெண்காட்டுத் திருவிசைப்பாவின் நடையைப் பார்க்கும்போது இது திருமுறைப் பட்டினத்தாரும் செய்திருக்க முடியாது. பின்னர் 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சித்தரான இரண்டாம் பட்டினத்தாரும் செய்திருக்க முடியாது என்பது தெளிவு. இது பிற்காலத்தெழுந்த போலிப் பாடலோ என்று ஐயுற வேண்டியுள்ளது.

# 2. ஆசிரியர் வரலாறு

திருவிசைப்பாப் பாடிய ஆசிரியர் ஒன்பதின்மர் என்றும், அவர் களுள் திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், கண்டராதித்தர் ஆகியோர் வரலாறுகளே சிறிதளவு அறியப் பட்டவை என்றும் குறிப்பிட்டோம். அறியப்பட்ட வரலாறுகள் யாவும் உண்மை வரலாறுகள் என்பது பொருளாகாது. உண்மை யும் புனைந்துரையும் ஐதிகச் சம்பவங்களும் இவற்றுள் கலந் துள்ளன. முதல் மூவர் வரலாறுகளும் இப்படியுள்ளவை; கண்ட ராதித்தர் வரலாறு இதுவரை சிறிதும் தெரியாமலிருந்து, கல் வெட்டாராய்ச்சியின் பயனாக இப்போது ஓரளவு தெரியவந் துள்ளது. ஏனைய ஐவரையும் பற்றி எதுவும் தெரியாது. இனி இவ்வனைவர் வரலாறுகளையும் சிறிது ஆராய்ந்து கூறுவோம்.

## திருமாளிகைத் தேவர்

திருவிசைப்பாப் பாடிய ஆசிரியர்களுள் முதல் ஆசிரியர் திருமாளிகைத் தேவர். இவர் பாடிய பதிகங்கள் ஒன்பதாந் திருமுறையின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளன. பொது வாக இத் திருமுறை ஆசிரியர் வரலாறு முதலியன எங்கும் சொல்லப்பெறவில்லை. இவர் வரலாறு என்ற பெயரால் பலவகை யான கதைகள் புனையப் பெற்றுள்ளன. அவை யாவும் உண்மை வரலாற்றை அறிவதற்கோ, ஆராய்ச்சிக்கோ, உதவுவனவாக இல்லை. இவர் தில்லையிலே வழிபட்டிருந்து அங்கே தமக்குத் திருமடம் கட்டிக்கொண்டு வாழ்ந்து உரிய காலத்தில் முத்தி பெற்றார் என்று மட்டுமே கருதமுடியும்.[1] இவர் தாம் வாழ்வதற்குத் தில்லையில் அமைத்த இல்லம் பெரு மாளிகையாக இருந்தமையால் மாளிகை மடம் எனப்பட்டது போலும். இவர் தம் இயற்பெயர் தெரியவில்லை. மாளிகை அமைத்தமையால் திருமாளிகைத் தேவர். தேவர் என்ற பெயரின் இறுதிச்சொல் இவர் பிராமணரல்லர்

---

1. திருப்புலியூர்த் திருமாளிகைத் தேவர் என்று வேதாரணிய புராணத் தில் அகோர முனிவர் இவரைக் கூறுகிறார். புலியூராகிய சிதம்பரத்தில் இவர் வாழ்ந்தார் என்ற வரலாற்றுக் குறிப்புக்கு இது பொருந்துவதே.

என்பதைக் காட்டும். இவருக்குப் பின் பரம்பரையாக அங்கு ஆசிரியர் இருந்துவந்தனர். அந்தப் பரம்பரையில் வந்த ஒரு வெண்காட முனியின் மாணுக்கரான விநாயக முனிவர் தம்மை யாட்கொண்டார் என்று பெரும்பற்றப் புலியூர் நம்பி தாம் பாடிய திருவிளையாடற் புராணத்தில் கூறுகின்ருர் (13ஆம் நூற்ருண்டு):

வரந்தருந் தொல்லைத் தில்லைமாளிகை மடத்து மன்னும்
அருந்தவ முனிவெண் காடன் அருள்விநா யகன்மனத்தாற்
பரிந்தெனை யாண்டுகொண்ட படர்சடைக் கடவுள் நீதி
திருந்திய பரம ஞான சிவனடிசென்னி சேர்ப்பாம்.

திருவிடை மருதூரில் சிவாலயத்தில் பணி செய்யும் ஆதி சைவர் பரியேறும் பெரியோர், தெய்வப் படிமப் பாதம் வைத்தோர், மாணிக்கக் கூத்தர், குருராயர், சைலராயர் என ஐந்து பிரிவினர் என்றும், இவர்களுள் சைலராயர் என்ற பிரிவில் உதித்தவர் திருமாளிகைத் தேவர் என்றும் இவ்வகையார் வசித்த இல்லத்துக்குத் திருமாளிகை என்று பெயர் என்றும் அறிஞர்[1] கூறியுள்ள இக் கூற்றுகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. மேலும் இவ்வகையான பிரிவு தமிழ்ச் சைவ மரபிலோ இலக்கிய மரபிலோ எங்கும் கண்டதில்லை.

திருமூலர் காவிரிக் கரையை அடைந்து அங்கு ஓர் இடையன் உடலுள் புகுந்து திருவாவடுதுறையில் யோக சமாதியில் அமர்ந்து மூவாயிரம் திருமந்திரப் பாடல் பாடினுர் என்பது பெரியபுராணம் கூறும் வரலாறு. வாழ்க்கைச் சம்பவங்கள் காரணமாகத் திருமூலரை ஒரு சித்தர் என்று பின்வந்தோர் கருதினர். இவ்வூருக்கு அமைந்த ஒரு பெயராகிய நவகோடி சித்தபுரம் என்பதும் காணத் தக்கது. இவற்ருல் திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர் முதலியோர் வரலாறுகளும் இவ்வூருடன் பொருத்திச் சொல்லப்பட்டன. திருமாளிகைத் தேவருக்கு இவ்வூரில் ஒரு கோயிலும் ஏற்பட்டது. அதையொட்டி இவரைப்பற்றிய அற்புதக் கதைகளும் பெருகி விட்டன. பெருகிய காலத்தின் பின்னர், தொட்டிக்கலை—சுப்பிரமணிய முனிவர் வாழ்ந்து அவற்றையெல்லாம் தொகுத்து ஒரு பாடலில் பாடினுர் (கி.பி. 1800). இம் முனிவர் திருவாவடுதுறை ஆதீன பரம்பரையில் சீடராக வந்தவர் ஆதலாலும், அங்குக் கோயில் அமைக்கப் பெற்றிருந்த காரணத்தாலும், அவர் திருமாளிகைத் தேவரைக் குறித்து தோத்திர பஞ்சகம் என்ற ஐந்து பாடல்களும், மூன்று தனிப்பாடல்களும் பாடினுர். திருவாவடுதுறை

1. சோமசுந்தர தேசிகர்; அவரைப் பின்பற்றித் துடிசைக் கிழார் சிதம்பரனுர்.

மடத்தில் தங்கிய தம்பிரான்களில் யாருக்கேனும் குறையிருந்தால், அக்குறையைத் திருமாளிகைத் தேவர் சந்நிதியில் சொல்லி முறையிட்டால் அக்குறை நீங்கும் என்ற ஒரு நம்பிக்கையும் இருந்தது. அதை முனிவர் நாலாம் பாடலில் குறிப்பிட்டுப் பாடுகிறார்.

கதைகள்

இனி, இம் முனிவர் கூறியபடி தேவர் செய்த அற்புதச்செயல்களை இங்கே குறிப்பிடுவோம். இவருக்கு அட்டமாசித்திகள் கைவந்திருந்தன. அவற்றின் பயனாய் இவரால் எல்லா அற்புதச் செயல்களும் செய்ய முடிந்தது:

குடங்கர்விசும் பிடைநிறுவி, குணபம்நடந் திடவியக்கி,
    கொடிஞ்சிப் பொற்றேர்
வடங்கழற்றி யோட்டி,மதில் நந்திகளை வரவழைத்து,
    வரைநன் காட்டின்
உடம்பினெழு புகைமாற்றி, கொங்கணர்பாத் திரஞ்சுவற்றி,
    உணவ தாய்வெந்
திடும்பயறு முளைசெய்து,எமக் கருள்திருமா ளிகைத்தேவர்
    இணைத்தாள் போற்றி.[1]

இப் பாடலில் குறிப்பிடப்பட்ட வரலாறுகள் பின் வருவன: ஒரு சமயம் இவர் சிவபூசை செய்யும்பொருட்டு கையில் பூக் குடலையும் நீரும் ஏந்தி வரும் வழியில் எதிரே சிலர் மயானத்தை நோக்கி ஒரு பிணத்தைச் சுமந்துகொண்டு வந்தனர். கண்ட இவர் பூசைப் பொருள்கள் தூய்மை குன்றாமல் இருக்கும்பொருட்டு, பூக் குடலையை ஆகாயத்தில் வீசி எறிந்து தமது தவ வலிமையால் அப்படியே நிற்கும்படி செய்தார்; அவ்விடத்திலேயே அப் பிணம் உயிர் பெற்றெழுந்து, மயானம் வரையில் நடந்து சென்று, அங்கே மீண்டும் பிணமாகி விடுமாறும் செய்தார். மற்றொரு சமயம் திருவீழிமிழலையில் தேர் ஓடவில்லை; ஊரார் இவரிடம் விண்ணப்பித்தபோது இவர் சென்று தேர் வடத்தைக் கழற்றிவிட்டுத் தேர் தானே ஓடி நிலையை அடையும்படி செய்தார். தவ வலிமையால் அழகிய ஒளிமிக்க உடம்பு இவருக்கு வாய்த்திருந்தது. அதுபற்றி இவரைக் கண்ட மாதர் அனைவரும் இவர் அழகில் ஈடுபட்டு இவரையே காமுற்றிருந்தனர். இவர் எண்ணமே அவர்கள் மனத்தில் எப்போதும் நிலவி இருந்தமையால், அவர்கள் பெற்ற பிள்ளைகள் அனைவரும் இவரைப் போன்ற உருவம் பெற்றிருந்தனர். கண்ட அப் பெண்களுடைய நாயகர் தங்கள் மனைவியாரையும் குறை கூறி, இவரையும் கூடா ஒழுக்கம் உடையவர் என்று பழித்-

1. சுப்பிரமணிய முனிவர் பிரபந்தங்கள், 1953, பக்கம் 82.

தனர். உண்மையில் இவர் ஒரு பாவமும் அறிந்தவரல்லர். இச் செய்தி அரசன் காதில் விழ அவன் இவரை அழைத்தான். அவ் வரசன் நரசிங்கன் என்ற பெயருடையவன். இவர் வர மறுத்தமை யால் கட்டிக்கொண்டு வருமாறு சேவகரை அனுப்பினன். சென்ற சேவகர் இவரைக் கண்டபோது அறிவு மயங்கித் தங்களையே ஒருவரையொருவர் கயிற்றுல் கட்டிக்கொண்டு அரசனிடம் வந்தனர். பார்த்த அரசன் கோபமடைந்து இவரை வெட்டிக் கொணருமாறு பின்னும் சில சேவகரை அனுப்பினன். அவர்கள் சென்று இவரைக் கண்டபோது, முன்போல் அறிவு மயங்கி ஒருவரை யொருவர் வெட்டிக்கொண்டு வந்து நின்றனர். அரசன் பெருங் கோபமடைந்து இவரை அடக்குவதற்காகத் தன் சேனை யோடு புறப்பட்டான். இதையறிந்த இவர் திருவருளை வேண்டி, தமது தவ வலிமையால் கோயில் மதில் மேலுள்ள இடபங்களை உயிர் பெற்றெழச் செய்து, அவற்றுல் நரசிங்கனுடைய படை தோற்றேடுமாறு செய்தார். நரசிங்கன் படைகளோடு வந்து தங்கிய இடமே இன்றைய நாரசிங்கன் பேட்டை என்று இக் கதைக்கு ஓர் ஆதாரமும் காட்டுவர்.

கொங்கண சித்தர் வரலாறு தமிழ் நாட்டில் பலவாறுகச் சொல் லப்படுகிறது. அவர் தம் தவவலிமையால் கொக்கை எரித்ததும், வள்ளுவர் மனைவி வாசுகியாரிடம் பங்கப்பட்டதும் எல்லோரும் அறிந்த செய்திகள். அவருடைய கமண்டலத்தில் இருந்த நீர் ஒரு காலத்திலும் வற்றுது. இதுபற்றி அவருக்கிருந்த இறுமாப்பை அகற்ற வேண்டி, திருமாளிகைத் தேவர் அந் நீர் வற்றும்படி செய்தார். மற்றெருரு சமயம் இவர் சுடுகாட்டோரம் உள்ள சாலையில் சென்று கொண்டிருந்தபோது அங்கு எரிந்துகொண் டிருந்த பிணத்திலிருந்து வந்த புகையின் துர்நாற்றத்தால் தமக்கு அருவருப்பு நேராவண்ணம், அப்புகையை நறும் புகையாக மாற்றினர். பின்னெருரு சமயம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டபோது, தமக்குச் சிவநிவேதனப் பிரசாதமாக வந்த பயிற்றம் பருப்புச் சுண்டலை வயலில் விதைத்து முளைக்கச் செய்து, விளைந்த விளை வைக் கொண்டு பஞ்சத்தை ஓரளவு போக்க உதவினர்.

இவ்வாறு இவர் செய்ததாக வழங்கும் அற்புதங்கள் பல. இவையாவும் நவகோடி சித்தபுரம் என்ற பெயருக்குப் பொருத்த மாக, அப் பிரதேசத்தில் வழங்கிய பல்வேறு கதைகளை ஒரு சித்த ருக்குப் பொருத்திக் காட்டும் முயற்சி என்று கருதவேண்டும். பலரைக் குறித்துப் பல இடங்களில் பல காலங்களில் எழுந்த அற்புதக் கதைகள் இவர்மேலேற்றப் பெற்றன. இவ்வாறு செவி வழியாக வந்த கதைகளுக்குச் சுப்பிரமணிய முனிவர் தம் பாடல் மூலம் நிலைத்த உருவம் கொடுத்துவிட்டார். இவற்றுள் எப்

பகுதியும் உண்மை என்று கொள்வதற்கு இல்லை. மேலும், முற் காட்டிய இரண்டாம் பாடலில் இவரைப் 'போக நாத சித்தர் பதம் பூசிக்கும் புனிதர்' என்று முனிவர் கூறுகிறார்:

பொருவிலதாம் போகநாத சித்தர்பதம்
பூசிக்கும் புனிதர் நாளும்
மருவுபதி யதிசயங்கள் வாக்காலும்
மனத்தாலும் மதிக்கொ ணாதாய்
இருளகன்ற பானுவென எண்திசையும்
பணிந்துய்ய இன்பா யோங்கி
அருளுருவாய்த் துறைசைவரு மொருதிருமா
ளிகைத்தேவை அகத்துள் வைப்பாம்.[1]

பிற்காலத்தார் இவர் சித்தர், போகருடைய மாணாக்கர் என்பதற்கு இப் பாடல் ஆதாரமாயிற்றுப் போலும். போகர் முதலான சித்தர் பலர் வைத்தியம் முதலான வேறு துறைகளில் புகழ்பெற்று விளங்கி வந்திருக்கின்றனர். அவர்களில் யாரும் தமிழ் இலக்கியத்துறைக்கு வந்ததில்லை[2]. அந்த மரபில் ஒரு திருமாளிகைத் தேவர் சித்தராய் வாழ்ந்தார், முன் காட்டியபடி பல அற்புத நிகழ்ச்சிகளை நிகழ்த் தினார் என்று கருதினாலும் பிழையில்லை. அப்படியொருவர் இருந் திருந்தால் அவர் வேறு, திருவிசைப்பாப் பாடிய பக்தர் ஆசிரியர் வேறு.

திருமூலர் திருமந்திரத்தில் ஒரு பாடலில் திருமாளிகைத் தேவர் பெயர் வருவதை எடுத்துக் காட்டி, அப் பாடல் பிற்காலத்தா ருடைய இடைச் செருகலாயிருத்தல் கூடும் என்று வெள்ளை வாரணனார் குறிப்பிட்டிருக்கிறார்:[3]

கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
புலங்கொள் பரமானந்தர் போகதேவர்
நிலந்திகழ் மூவர் நிராமயத் தோரே. (102)

இப்பாடல் குருமட வரலாறு என்ற திருமந்திரப் பகுதியில் இரண் டாம் பாடல். சேக்கிழார் பாடிய பெரியபுராணமே திருமூலர் வரலாற்றுக்கு ஆதாரம். அங்கு குருமடமோ, இவருடைய

1. சுப்பிரமணிய முனிவர் பிரபந்தங்கள், 1958, பக்கம் 82.
2. இலக்கியத் துறையில் புகழ்பெற்ற சித்தர் வரலாறுகளை எமது 14, 15 நூற்றாண்டுகளின் தமிழ் இலக்கிய வரலாறுகளில் காணலாம்.
3. பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பகுதி, பக்கம் 854.

பரம்பரையோ பற்றிய எந்த வரலாறும் கூறப்படவில்லை. ஆதலால் இவை யாவும் பிற்காலத்தில் பாடிச் சேர்த்தவை என்றே கொள்ளத்தக்கன. அன்றியும் திருமூலர் தம்மை 'மூவர் நிராமயத் தோரே' என்று குறிப்பிட்டுக் கொள்ளார். ஆதலால் இக் கூற்றுப் பிற்சேர்க்கை என்பது தெளிவு.

இனி முடிவாக நாம் பார்க்கும்போது, திருமாளிகைத் தேவர் என்பவர் ஒரு சித்தராகக் கருதப்பட்டார், மேற்கூறிய சித்தர் கதைகள் அவர்மேல் ஏற்றப்பட்டன, அவர் பெயரைக் குறிப்பிடும் பாடல் திருமந்திரத்தில் பிற்காலத்தில் நுழைக்கப்பட்டது, திருமூலர் சமாதி கொண்ட தலத்தில் அவருக்கும் ஒரு சமாதி படைக்கப் பட்டது என்று அறிகிறோம்.

சித்தரான திருமாளிகைத் தேவருக்குக் கோயில் முதலியன ஏற்பட்ட பிறகு, பூசாக்கிரமங்களும் ஏற்பட்டன. இச் சித்தர் தம் தவ வலிமையால், தமது பூசைக் காரியங்களுக்கு இரண்டு கைகள் போதவில்லை என்று எண்ணிப் பின்னும் இரு கைகளும் படைத்துக் கொண்டார்; நான்கு கைகளோடு கூடிய சிலை இவருக்கு அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. திருவாவடுதுறை மடம் 16ஆம் நூற் றூண்டில் நிறுவப்பெற்றது. அதன் பின்னரே திருமாளிகைத் தேவ சித்தர் கதைகள் பெருகின, சம்பிரதாயங்கள் எழுந்தன. திருவா வடுதுறைக் கோயிலில் எழுந்தருளிய சிவபெருமானுக்கு ஆராதனை முடிந்தபின், திருமாளிகைத் தேவர் கோயிலுக்குப் பூசை நடக்கும்; அதன் பின்னரே மடத்தில் பகல் உணவும் மகேசுவர பூசையும் நடப்பது ஒரு சம்பிரதாயம் என்று மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை ஒரு பாடலில் எடுத்துக் காட்டுகிறுர்:

பேசு புகழ்ச்சுப் பிரமணிய தேசிகபொன்
வீசு கழற்கடியேன் விண்ணப்பம்—நேசம்
வருதிரு மாளிகைத்தே வன்பூசை யாயே
கருதுபந்தி யாதல்வழக் கம்.

இவர் வேறு, திருவிசைப்பாப் பாடிய ஆசிரியர் வேறு; நம் ஆசிரியர் தில்லையை விட்டுத் திருவீழிமிழலைக்கோ திருவாவடு துறைக்கோ சென்றவரல்லர்.

ஐயந்தன் செய்தி

திருவிசைப்பாப் பாடிய முதலிரு ஆசிரியர்களான திருமாளி கைத் தேவரும் சேந்தனாரும் ஒரே ஆசிரியராக இருக்கலாம் என்ற ஓர் ஐயத்தை மு. இராகவையங்கார் தெரிவித்தார்.[1] அவர் கூறிய

1. சாசன தமிழ்க் கவி சரிதம், பக்கம் 35-36.

கருத்துக்கள் பின் வருவன : இராசராச சோழனது திருவீழிமிழலைக் கல்வெட்டு ஒன்று சிவஞானியும் திருமாளிகைத் தேவர் என்று வழங்கப்பட்டவருமாகிய செயந்தன் என்பவர் அக் கோயிலுக்கு நந்தா விளக்கொன்று வைத்தார் என்று சொல்லுகிறது. ஜயந்தன் என்ற வடசொல் தமிழில் சேந்தன் என்று திரியக்கூடும். ஆகவே அக் கல்வெட்டில் கண்ட ஜயந்தன் சேந்தனுராகலாம்; இவர் சிவஞானி என்று சிறப்பிக்கப் பெறுதலாலும் இவ்வாறு கொள்ளத் தக்கது. திருமாளிகைத் தேவருடைய தில்லைத் திருவிசைப்பாப் பதிகங்கள் நான்கின் இறுதிப் பாடல்களிலும் அவர் பெயர் குறிப்பிடவில்லை. ஆனுல் அடுத்து அமைந்துள்ள சேந்தனுர் திருவிசைப்பாப் பதிகங்கள் மூன்றில் மூன்ரும் பதிகத்தின் இறுதிப் பாடலில் அவர் தம் பெயரைக் குறிப்பிடுகிருர். இருவர் பதிகங்களையும் சேர்த்துப் பார்த்தால் மொத்தம் ஏழு பதிகங்கள். ஏழாம் பதிகத்தின் இறுதியில்தான் சேந்தன் என்னும் பெயர் வருகிறது. ஆகவே ஏழு பதிகங்களும் திருமாளிகைத் தேவராகிய சேந்தனுரால் பாடப்பெற்றன என்று நாம் கருதலாம்—என்பது அவர் கருத்து. இதைக் கொள்ளாமைக்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவது ஜயந்தன் சேந்தன் என்று திரியலாம். ஆயினும் சேந்தன் என்பது வேறு தனித் தமிழ்ச் சொல். சிவப்பு, செம்மை என்ற சொற்களிலிருந்து சேந்தன் என்ற தமிழ்ச்சொல் பிறந்தது. முருகனைச் செவ்வேள், சேந்தன் என்பது மரபு. கண் சிவந்தன என்ற கருத்து கண் சேந்தன என்று பண்டை நூல்களில் வருவதால், சேந்தவன் சேந்தன் என்று இச்சொல் உருவம் பெற்றிருக்கலாம். அடுத்து, திருவிசைப்பா ஆசிரியர் ஒன்பதின்மர் என்று கொண்டால், அவ் வழக்குக்கு இது முரணுகிறது. இது பொருந்தாது. அன்றியும், எல்லா ஆசிரியர்களும் திருக்கடைக்காப்புப் பாடுவதில்லை. திருமாளிகைத் தேவர் தம்மை மிக்க பணிவோடு ‘மூர்க்கனேன்’ என்றும், ‘சிவப்பெருந் தொண்டர் தொண்டனேன்’ என்றும் குறிப்பிடுகிருரேயன்றித் தம் பெயரைக் குறிப்பிட விரும்புபவராகத் தெரியவில்லை. தம் சொற்களைப் புன் மொழிகள் என்றும் புன் சொல் என்றுமே குறிப்பிடுகிருர். முதற் பதிகத்தில் எல்லாப் பாடல்களின் முடிவிலும் தம்மைத் தொண்டனேன் என்று குறிப்பிடுகிருர். சேந்தனுர், ‘தம்முடைய சொல்லைக்கொண்டு திருக்குரா நிழற்கீழ் நின்ற ஒளியை ஏத்துவார் கேட்பார் இடர் கெடும்’ என்கிருர். இச் சொற்கள் ஒருநாளும் திருமாளிகைத் தேவருக்கு உரியன ஆகா. கல்வெட்டினுல் நாம் அறிவது அக் கோயிலில் இராசராச சோழன் காலத்தில் விளக்கு வைத்தவர் செயந்தன் என்ற இயற்பெயர் உடையவர் ஒருவர், திருமாளிகைத் தேவர் பரம்பரையில் வந்தவர் என்பது மட்டுமே ஆகும்.

திருமாளிகைத் தேவர் என்ற பெயரைத் தாங்கினோர் பலர் இருந்திருக்கின்றனர். மூன்றாம் குலோத்துங்கனுடைய ஆட்சியில் (கி.பி. 1181) மற்றொருவர் திருமாளிகைத் தேவர் பெயரைத் தாங்கி அரசியல் தலைவராக வாழ்ந்தார் என்பதை அறிகிறோம்.

மாளிகை மடம்

மற்றொரு வரலாற்றையும் இங்குச் சொல்வது பொருந்தும். தொட்டிக்கலை—சுப்பிரமணிய முனிவர் என்பவர், 18, 19 நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர். பழைய கதைகளுக்கு அவர் தம் பாடலில் ஓர் உருவம் கொடுத்தார் என்று குறிப்பிட்டோம். மறைஞான சம்பந்தர் என்ற சைவ நூலாசிரியர் 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிதம்பரத்தில் பிரசித்தமாய் வாழ்ந்தவர். இவர் காலத்தில் பெரும்பற்றப் புலியூர் நம்பி குறிப்பிடுகின்ற மாளிகை மடம் சிறப்பாய் இருந்தது போலும். மறைஞான சம்பந்தர் திருமாளிகைத் தேவருக்குத் தம் சிறு நூல்கள் பலவற்றில் வணக்கம் சொல்கிறார். இதனால் அவர் காலத்தில் மாளிகை மடம் சிறப்புடையதாய் இருந்தது, அதன் தலைவர் ஒருவர் இருந்து, அவரிடமும் மறைஞான சம்பந்தர் பயின்றிருக்க வேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறது. பிற்காலத்து ஆசிரியர் குரு வணக்கம் சொல்லும் போது, தமக்கு உபதேசித்த ஆசிரியர் பரம்பரையின் குரு முதல்வருக்கு வணக்கம் சொல்லுவது ஒரு மரபு. சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை திருவாவடுதுறை ஆதீனக் குரு முதல்வராய் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நமச்சிவாய மூர்த்திக்குத் தம் நூல்கள் பலவற்றில் வணக்கம் சொல்கிறார். இந்த மரபின்படி மறைஞான சம்பந்தர் திருமாளிகைத் தேவருக்குச் சொல்லும் குரு வணக்கப் பாடல்களில் சில இங்கே தருகிறோம் :

> மாளிகைத் தேவன் முதல்மதுர வாக்கினர்தம்
> தாளிணையைப் பாமஎம் தலை.[1]
>
> சிந்தித்து மாளிகைத் தேவனெழு வாயரடி
> வந்தித்தேம் காணேம்உள் மாசு.[2]
>
> மதுரகவி மாளிகைத்தே வன்முதலோர் பாதப்
> புதுமலர்எம் சென்னியில்வைப் போம்.[3]
>
> மதுரகவி மாளிகைத்தே வன்முதலோர் செய்ய
> பதமலர்கள் தம்மைப் பணிந்தே.[4]

---

1. மறைஞான சம்பந்தர் நூல்கள்—சைவசமயநெறி 13.
2. சங்கற்பநிராகரணம் 14.
3. பதிபசுபாசப் பனுவல் 12.
4. உருத்திராக்க விசிட்டம் 13.

இந்நான்கில் இரண்டு பாடல்களிலே ஆசிரியர், திருமாளிகைத் தேவரை மதுரகவி என்று பாடுகிருர். இவருக்குத் திருமாளிகைத் தேவர் பாடலில் இருந்த ஈடுபாட்டை இது புலப்படுத்துகிறது. இவரும் சிறந்த சைவப் புலவர் ஆனமையால், கவிதையில் உள்ள ஈடுபாடு திருமாளிகைத் தேவரை மதுரகவி என்று சொல்லச் செய்கிறது. திருமாளிகைத் தேவருடைய திருவிசைப்பாவைப் பயின்றவர் இவ்வடைமொழி பொருந்துவதே என்று ஒப்புக்கொள்வர். மறைஞான சம்பந்தர் இவ்வாறு கவிதையின் சிறப்பைக் கூறுகிருரே யன்றி, திருமாளிகைத் தேவர் செய்ததாக ஓர் அற்புதச் செயலைக் கூடக் குறிப்பிடவில்லை. இதன் பொருள், அவர் காலத்தில் அவ்வற்புதங்களைப் பற்றிய கதைகள் தோன்றவில்லை என்பதாகும். திருமாளிகைத் தேவருக்கு 900 ஆண்டுகள் பிற்பட்டு வாழ்ந்த தொட்டிக்கலை—சுப்பிரமணிய முனிவர் கூற்றைவிட, 600 ஆண்டுகளே பிற்பட்டு வாழ்ந்த மறைஞான சம்பந்தர் காலத்தில் பொய்க் கதைகள் குறைவாகவே இருக்கும் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். திருமாளிகைத் தேவர் கதைகள் பலவும் மறைஞான சம்பந்தர் காலத்துக்குப் பிற்பட்டே எழுந்தனவாகும்.

## சேந்தனுர்

சைவ அடியவர் வரலாற்றில் சேந்தனுர்பற்றிய வரலாறுகள் மிகப்பல. பொதுவாக, சேந்தனுர் ஒருவர் சைவமரபில் வாழ்ந்தார் என்றுமட்டும் கருதி, எல்லா வரலாறுகளையும் இவ்வொருவருக்கே ஏற்றிச் சொல்லுகின்ற நிலையை ஆராய்ச்சி நூல்களிலும் காண்கின்ருேம். இங்கு இவ் வரலாறுகளில் உள்ள சிக்கலை விளக்கிச் சேந்தனுர் யார் என்பதை ஒருவாறு வரையறை செய்ய முயல்வோம்.

### சேந்தன் என்ற பெயர்

சேந்தன் என்ற பெயர் தமிழில் அதிகம் பயில்கின்ற பெயர். மதுரையில் அரசாண்ட ஒரு பாண்டிய மன்னன் பெயர் சடையவர்மன் செழியன் சேந்தன் (625—40); இவன் சம்பந்தரால் திருத்திப் பணி கொள்ளப் பெற்ற நின்றசீர் நெடுமாறனுடைய தந்தை; வேள்விக்குடிச் செப்பேட்டில்,[1] 'சிலைத்தடக்கைக் கொலைக் களிற்றுச் செழியன் வானவன் செங்கோற் சேந்தன்' எனச் சிறப்பிக்கப் பெற்றவன். மற்ருெரு சேந்தன் திவாகரம் செய்த திவாகரரை ஆதரித்தவன். இவன் 'அம்பர்கிழான் அருவந்தைச் சேந்தன்' எனப்படுவன்; யாப்பருங்கலவிருத்தி மேற்கோளாய் வரும் 'இன்னமிழ்தம் ஊட்டி எழில்வளைசேர் முன்கைக்

1. பெருந்தொகை, 889.

கொண்டு' என்ற செய்யுள் குறிப்பிடும் வேந்தன் சேந்தனும் இவனேபோலும்.[1] மற்ருெரு சேந்தன், வீரசோழியம் பாடிய புலவருடைய ஊரான பொன்பற்றி என்ற ஊரில் தொண்டைமா னுடைய சேனுதிபதியாகி சிங்களத்தரையனையும், சேரனையும் வென்று விளங்கிய பொன்பற்றி காவலன் சேந்தன் என்பவன்.[2] இவன் ஓங்க வேண்டும் என்பதற்காகப் புத்ததேவரைப் போற்று கின்ற சிறப்பான பாடல் ஒன்று வீரசோழிய உரையில் மேற் கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இம் மூவரும் திருவிசைப்பாப் பாடினேர் அல்லர். அடுத்துக் கருதத்தக்கவர் வேறு இரு சேந் தனர். இவர்கள் நாங்கூர்ச் சேந்தனர், செப்புறைச் சேந்தனர் என்போர்.

**நாங்கூர்ச் சேந்தர்**

இவர் திருவிசைப்பாப் பாடவில்லையாயினும், பொதுவாகச் சேந்தனர் பற்றிய வரலாறுகளில் காணும் குழப்பங்களைத் தெளிவு படுத்தும்பொருட்டு, இவர் வரலாற்றை இங்குத் தனியே சொல்வது அவசியமாகிறது. இவர் பட்டினத்தடிகள் துறவு பூணுமுன் பெருஞ் செல்வராய் வாழ்ந்த நிலையில் அவரிடம் அமைச்சராய் இருந்தவர். பட்டினத்தார் துறவு பூண்டு செல்வம் அனைத்தையும் தருமம் செய்துவிடுமாறு இவருக்குக் கட்டளையிட்டுப் போய் விட்டார். அவ்வாறே இவர் செய்தார். இதை ஒப்புக்கொள்ளாத அரசன் சேந்தனரைச் சிறையிட்டான். இவருடைய மனைவி மக்கள் வருந்திப் பட்டினத்தடிகளிடம் சென்று அரசன் செயலைக் கூறி முறையிட்டனர். அடிகள்,

மத்தளை தயிருண் டானும் மலர்மிசை மன்னி னானும்
நித்தமும் தேடிக் காணு நிமலனே, அமல மூர்த்தி,
செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்த னிட்ட
கைத்தளை நீக்கி என்முன் காட்டுவெண் காட்டு ளானே.[3]

என்ற பாடலைப் பாடினேர். சிவபெருமானுடைய ஆணைப்படி விநாயகர் சேந்தனருடைய விலங்கை நீக்கி அவரைச் சிறையி லிருந்து விடுதலை செய்தார். அதன்மேல் சேந்தனர் அடிகளைக் கண்டு பணிய, அவர் நாள்தோறும் சிவனடியாருக்கு உணவளித்து அதன்பின் தாம் உண்டு வாழும்படி உபதேசித்து, வேறிடம் சென்றுவிட்டார். சேந்தனரும் அவ்விதமே செய்துகொண்டு சிவபக்தி மிக்கவராய் நீண்டநாள் வாழ்ந்து பின்னர் உரிய

1. யாப்பருங்கல விருத்தியுரை, 94.
2. வீரசோழியம் யாப்பதிகாரம், 11 உரை மேற்கோள்.
3. பெருந்தொகை, 1022.

காலத்தில் முத்தி அடைந்தார். இதுவே நாங்கூர்ச் சேந்தர் வரலாறு. இவரது ஊர் நாங்கூர் என்பதை அடிகள் பாடல் உணர்த்துகிறது. இவருடைய காலம் இரண்டாம் பட்டினத்தா ருடைய காலமாகிய 14ஆம் நூற்றுண்டு ஆகும். ஆனுல், வரலாறுகள் தெளிவாக விளக்கம்பெருத காரணத்தால், பிற் காலத்தார் திருவிசைப்பாப் பாடிய சேந்தனுரும் இவரே என்று கருதி, அவர் வரலாற்றையும் தெரிந்த அளவு இவர் வரலாற்ருேடு ஒன்ருக்கிவிட்டார்கள். இதற்குக் காரணம் பட்டினத்தார் வெவ் வேருன இருவர் என்ற தெளிவு இல்லாமற் போனமை. இனி, திருவிசைப்பாச் சேந்தனுரைக் கூறலாம்.

## திருவிசைப்பாச் சேந்தர்

இவரைக்குறித்த செய்திகள் சில கிடைக்கின்றன. இவர் திருவிசைப்பா ஆசிரியர்களுள் இரண்டாமவர். திருவீழிமிழலே, திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகிய தலங்களுக்குத் திரு விசைப்பாவும் தில்லேக்குத் திருப்பல்லாண்டும் பாடியிருக்கிருர். திருவிடைக்கழிப் பதிகம் பதினெராம் பாடலில், 'செழுந்திரட் சோதி செப்புறைச் சேந்தன்' என்றும், திருப்பல்லாண்டு இறுதிப் பாடலில் 'சிவன் சீரடியார் அடிநாய் செப்புறை அந்தமில் ஆனந்தச் சேந்தன்' என்றும் தம்மைக் கூறுகிருர்.[1] இவர் ஊராகிய செப்புறை என்பது எங்குள்ளது என்பது இக்காலத்தில் விளங்கவில்லே; செப்புறை குடிப்பெயர் என்றும் சிலர் சொல்வர்.

இந்த அடியவர் நந்தனுர் குலத்தில் பிறந்தவர். இவர் பரம ஏழையாக வாழ்ந்து நாள்தோறும் தம் கையில் கிடைத்த அன்னத்தை எதிர்ப்பட்ட ஒரு சிவனடியாருக்குப் பிச்சையாக இட்டு, எஞ்சியதைக் குடும்பத்தோடு உண்டுவந்தார். சோறு சமைக்க இவரிடம் அரிசி கிடைப்பதில்லே. நாள்தோறும் விறகு வெட்டி விற்று அதன் விலேயைக்கொண்டு வாழ்க்கை நடத்தியமை யால், இவருக்கு அரிசி வாங்குவதற்குப் போதிய காசு கிடைத்த தில்லே. ஆகவே, மலிந்த பண்டமாகிய பிற தானியங்களேப் பெற்று அவற்றை மாவாக்கிக் கூழ் சமைத்துக் களியாக்கி உண்டு வந்தார். பலநாள் இவ்வாறு நடந்தபோது, இவருடைய அன்பின் திறத்தை உலகத்தாருக்கு அறிவுறுத்த எண்ணிய நடராசப் பெரு மான், ஒருநாள் தாமே சிவனடியார் வேடந்தாங்கி இவர் இல்லத் துக்குச் சென்ருர். அது மழைக்காலம்; விறகு வெட்டிச் சுமந்து விற்கமுடியாத பருவம் ஆதலால், சேந்தர் அன்று பெற்ற காசும்

---

1. வேறு இரு பாடல்களில் (56, 69) முருகன் பெயராகச் சேந்தன் என்ற பெயரைக் குறிப்பிடுகிருர்.

குறைவு, வாங்கிய மாவும் சமைத்த கூழும் மிகவும் குறைவு. எனி னும் முகமலர்ச்சியோடு, வந்த அடியவரை நன்கு உபசரித்துத் தமக்குக் கிடைத்த களியமுதை ஊட்டினர். சிவனடியார் களியை உண்டு, எஞ்சிய பகுதியைச் சேந்தனுடைய கந்தை ஒன்றில் முடிந்து, 'இந்த மழையில் அடுத்த வேளைக்கு இது வேண்டும், வேறிடத்தில் எனக்கு உணவு இம் மழையில் கிடைப்பது அரிது' என்று சொல்லி எடுத்துக்கொண்டு போய்விட்டார்.

அக்காலத்தில் சோழ நாட்டில் ஆட்சிபுரிந்த சோழ மன்னன், தான் நாள்தோறும் செய்துவந்த சிவபூசையில் நடராசப் பெருமா னுடைய திருவருளால் பூசை நிறைவைப் பெருமான் ஏற்றதற்கு அறிகுறியாக அவருடைய பாதச் சிலம்போசை கேட்பதை நியம மாகக் கொண்டிருந்தான். ஒருநாள் அவன் இரவு முழுவதும் காத்திருந்தும் சிலம்பொலி கேட்கவில்லை. வருத்தத்தோடு துயின்ற மன்னனது கனவில் பெருமான் தோன்றி, 'அரசே, கவலற்க. சேந்தனது களியமுதை உண்ண நாம் சென்றமையால் உனது வழிபாட்டிற்கு வரவில்லை' எனச் சொல்லியதாக அவன் கனவில் கேட்டான். பொழுது புலர்ந்தபின் அரசன் தான் கண்ட கனவைத் தில்லைவாழந்தணர் முதலானோருக்கும் சொல்லி, வழிபடும்பொருட்டு நடராசப் பெருமான் திருமுன்பு செல்லுதலும், அங்கு பெருமான் உரைத்தபடி அவர் உண்ட களியமுது சிந்திக் கிடக்க அனைவரும் கண்டனர். மிக்க அதிசயமுற்று எல்லோரும் சேந்தனுரைக் காண விருப்புற்றனர். ஆனல் அவர் யார் என்பது தெரியவில்லை. தெரியப்படுத்தவும் பெருமான் திருவுள்ளங் கொண்டார்.

அச்சமயம் மார்கழித் திருவாதிரை விழா. அன்று தேர் நிலையை விட்டுக் கிளம்பவில்லை. அரசனும் பரிவாரங்களும் எவ்வளவு முயன்றும் பயனில்லை. அப்போது ஓர் அசரீரி, 'சேந்தா, நீ பல்லாண்டு பாடினல் தேர் ஓடும்' என்று எழுந்தது. கூட்டத்துள் வடம்பிடித்திருந்த சேந்தர் திருவருளின் திறத்தை எண்ணி வியந்து, 'மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்' என்று தொடங்கித் திருப் பல்லாண்டு பாடினர். தேர் அசைந்து உரிய நேரத்தில் வீதி யெல்லாம் ஓடி நிலைக்கு வந்தது. அப்போதுதான் சேந்தனர் யார் என்பதை அரசனும் மக்களும் உணர்ந்து, அவருடைய அன்பின் சிறப்பை எண்ணிப் போற்றினர்கள்.

பின்னர், சேந்தனர் தம்முடைய பத்தியில் திளைத்து அடியாரைப் பேணிவந்து, திருவீழிமிழலை, திருவாவடுதுறை ஆகிய தலங்களில் சென்று வணங்கியபோது சிவபெருமான் மீது திருவிசைப்பாவும், பின்னர் திருவிடைக்கழி சென்று அங்குக் குராநிழல் அமர்ந்த

முருகப்பெருமானுக்குச் சிறப்பாக ஒரு திருவிசைப்பாத் திருப்பதிகமும் பாடினூர். இதுவே திருவிசைப்பா ஆசிரியரான சேந்தனூரின் வரலாறு. தில்லையில் இவர் தேர் நடக்கச்செய்த நிகழ்ச்சி நிகழ்ந்தமையால், இவர் ஊராகிய செப்புறை என்பது தில்லைக்கு அருகே இருந்திருத்தல் கூடும்.

இவர் வரலாற்று உண்மைக்கு, அடுத்த காலத்தில் இரு சான்றுகள் கிடைக்கின்றன. 11ஆம் நூற்றூண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த நம்பியாண்டார்நம்பி, நந்தன் குலத்துதித்த சேந்தனூர் சிவபக்தியில் மிகுந்தவராய், பழைய அவிழைத் துணியில் கட்டிச் சிவபெருமானுக்கு அளித்தார் என்றும், அது பெருமானுக்கு அமிழ்தம் போன்று உவப்பாயிற்று என்றும் பாடுகிறூர் :

பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப் பொலிசெம்பொன் அம்பலத்து
வேந்தன் தனக்கன்றி ஆட்செய்வ தென்னே, விரிதுணிமேல்
ஆந்தண் பழைய அவிழைஅன் பாகிய பண்டைப்பறைச்
சேந்தன் கொடுக்க, அதுவும் திருவமிர் தாகியதே

என்பது நம்பி பாடல்.[1] அடுத்த 12ஆம் நூற்றூண்டின் பிற்பகுதியில் வாழ்ந்து திருக்களிற்றுப்படியார் பாடிய திருக்கடவூர் உய்யவந்த நாயனூர்,

அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க—அவிழ்ந்தசடை
வேந்தனூர்க் கின்னமுத மாயிற்றே, மெய்யன்பிற்
சேந்தனூர் செய்த செயல்[2]

என்ற பாடலில், சேந்தனூர் களி அவிழை[3] ஊட்டிய வரலாற்றை மிகவும் அவிழ்ந்த சொற்களால் கூறுகிறூர். அவிழ் என்ற சொல்லை ஆறுமுறை இப் பாடலில் இவர் உபயோகித்திருப்பது நெகிழ்ந்து அவிழ்ந்த இவருடைய மனப் பண்பைக் காட்டுகிறது.

இன்னும் பிற்காலத்தில் 18ஆம் நூற்றூண்டில், திருப்பாதிரிப் புலியூரில் சிவஞான சுவாமிகளுக்குச் சமுத்தி கொடுத்தபோது

1. கோயில் திருப்பண்ணியர் விருத்தம், 26.

2. திருக்களிற்றுப்படியார், 53.

3. இப்பாடலின் பழைய பொழிப்புரை 'நைந்து குழிந்த சீலையிலே நமுவக்கட்டி அருவருக்கத் தக்க சோற்றை' என்று கூறி முடிவில் "இக் கதையை ஐதிகத்தால் கேட்டறிக" என்று எழுதுகிறது. உரையின்காலம் 16ஆம் நூற்றூண்டாயிருக்கலாம். அப்போதே சேந்தனின் கதை ஐதிகமாகி விட்டது—சைவசித்தாந்த சமாஜ மெய்கண்ட சாத்திர உரைப் பதிப்பு, இரண்டாம் பதிப்பு, 1940.

அவர் பாடிய பாடலில் சேந்தன் இட்ட தவிட்டமுதத்தைப் பெருமான் உண்ட செய்தியை நயம்படக் கூறுகிருர் ; தவிட்டமுதம் என்பது, உமி நீக்க வேண்டியிராத கம்பு போன்ற (நெல் அல்லாத பிற) தானியத்தால் ஆன களியாகும் :

வரையேல் தவிட்டமுதம் சேந்தனிட உண்டனை,வல் லினமென்ருலும்
உரையேற விட்டமுத லாகுமோ, எனைச்சித்தென் றுரைக்கிலென்னும்
நரையேற விட்டமுத னளவனகக் கொண்டுநறும் புலிசைமேவும்
கரையேற விட்டமுதல்வா, உன்னையன்றியுமோர் கதியுண்டாமோ ?[1]

இவற்ருல் சேந்தனருடைய அன்பின் விளைந்த அருஞ்செயல் நன்கு உணரப்படும்.

ஓர் இயல்பை இங்குச் சொல்லத் தோன்றுகிறது. சேந்தனர் முருகனுக்குத் திருவிசைப்பாப் பாடினர். ஆனல் ஒன்பது திரு முறைகளாகிய இசைப்பாடல் தொகுப்பில் சிவபெருமானையன்றி வேறு எந்த தெய்வத்துக்கும் தோத்திரப் பாடல் இல்லை. ஆனல் இவர்மட்டும் ஏன் பாடுகிருர் என்பது கேள்வி. அன்றியும் திருவிடைக்கழிப் பதிகத்தில் இவர் சுப்பிரமணியன் என்றும் சுவாமி என்றும் சொல்லுகிருர். இந்த இயல்புகளை மனத்தில் சிந்திக்கும் போது மற்றைச் சைவர்கள் பாடாதவரை இவர் பாடுவதாலும், அவர்கள் சொல்லாத சொற்களைச் சொல்லுவதாலும், இவர் அச் சைவத்துக்குப் புறம்பானவர் என்று கருதத் தோன்றுகிறது. இது நம்பியாண்டார் நம்பியின் கூற்றுக்கு ஆதரவு அளிக்கிறது. சேந்தனர் அன்னிய குலத்தினராயிருந்தமையால், இவருடைய பக்தியை நடராசப்பெருமான் வெளிப்படுத்தின காரணத்தால் இவரைக் கோயிலுக்கு உள்ளே அழைத்துச் சிறப்புச் செய்வித்த போது முருகனிடம் ஈடுபட்டார். முருகனுக்கு இவர் ஓர் இசைப் பாப்பாடினர் என்றும், சுப்பிரமணியன், சுவாமி என்ற சொற் களையும் அமைத்துப் பாடினர் என்றும் கருதலாம்.

'பழைய அவிழை அன்பாகிய பண்டைப் பறைச் சேந்தன் கொடுக்க அதுவும் திருவமிர்து ஆகியது' என்பது பாட்டு.[2] இவர் குலத்தால் இழிந்தவர். பெருமானுடைய திருவருள் இவரை ஆட் கொண்டது. ஆட்கொண்டமையால் இவர் பாடினர். குல இயல்பு காரணமாக இவருக்குச் சிறப்பான கல்வி கேள்வி இல்லை. ஆகவே பாடத் தொடங்கியபோது அத் தலத்துக்குச் சிறப்பான முருகனையும், அவனுக்குத் தாமறிந்த சொற்களையும் வைத்துப்

---

1. பெருந்தொகை, 1967.

2. பதினேராந்திருமுறை, கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம், 26.

பாடினர். அருளால் பாட்டு வந்தது. பாட்டின் பொருள் இவருடைய மொழியனுபவமும், சிவானுபவமும்.

இவருடைய குலத்தைக் குறிப்பிட்டு நம்பி கூறியிருப்பதனுல் இவர் பட்டினத்தடிகளிடம் நிதி நிர்வாகமுடைய அமைச்சராய் இருந்தவர் அல்லர் என்பதும் நன்கு தெளியப்படும். பட்டினத்தார் சிவஞானியான பின், சாதியுணர்வு கடந்த பெரியவராஞர் என்பது தெளிவு. ஆனுல் அவர் பெருஞ் செல்வராய் வாழ்ந்தபோது, சாதியுணர்வு இல்லாதிருந்தவரல்லர். அவர் காலச்சூழல் அத் தகையது. அவரிடம் அச்சமயம் பறைச் சேந்தர் அமைச்சராய் இருந்திருத்தல் இயலாததொன்று. விறகுவெட்டி அமைச்சராக முடியாதல்லவா? அன்றியும் பதினெராந் திருமுறைப் பட்டினத்தார் வேறு, பாடற்றிரட்டுப் பாடிய பட்டினத்தார் வேறு (14ஆம் நூற்ருண்டு) என்று வேறிடங்களில் தெளிவாக்கியிருக்கிருேம்.[1]

## கண்டராதித்தர்

திருவிசைப்பா பாடிய அடியவருள் இவர் ஐந்தாமவர். இவர் பாடியது 'மின்னுருருவம்' என்று தொடங்குகின்ற தில்லைத் திருப் பதிகம் ஒன்றே.

கண்டராதித்தர் வரலாறு தமிழ் நாட்டின் சரித்திரத்தில் நன்கு அறியப்பட்ட வரலாருகும். இவர் 950—57 ஆகிய காலத்தில் முடிமன்னராய்த் தஞ்சையிலிருந்து சோழ நாட்டை ஆண்டவர். இவருடைய தந்தை மிகவும் பிரசித்தியோடு வாழ்ந்து, பல போர்களை வென்று சிவபக்தராகவும் விளங்கிய முதற் பராந்தக சோழ மன்னர். இவர் 46 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். இவர் காலத்தில் சோழ அரசு எல்லாத் துறைகளிலும் விரிவடைந்தது. பாண்டி நாட்டிலும் இவர்செய்த போர்கள் மிக்க பிரசித்திபெற்றன. இவருடைய மூத்த முதல்வன் இராசாதித்தன். இவன் தன் தந்தை காலத்தில் வடக்கிலிருந்து வந்து சோழ நாட்டுப் படைகளைத் தாக்கிய சாளுக்கியரைத் தடைசெய்யும் பொருட்டுப் பெரும் சேனையோடு திருக்கோவலூர்ப் பகுதியை ஆட்சிசெய்து வருமாறு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தான். பராந்தகருடைய மூன்ரும் புதல்வனை அரிஞ்சயனும் தன் படையோடு இராசாதித் தனுக்கு உதவியாகத் திருக்கோவலூரில் இருந்ததுண்டு. ஒரு சமயம் இராசாதித்தன், சாளுக்கியர்தம் பெருஞ்சேனையை எதிர்த்துப் போர்புரிந்த இடத்து யானை மேலிருந்து பகைவர் அம்பு தைத்து இறந்தான். (இது நடந்தது 949இல்.) இது காரணம்

---

1. எமது தமிழ் இலக்கிய வரலாறு 10ஆம் நூற்ருண்டு, 14ஆம் நூற்ருண்டு பார்க்க.

பற்றி இராசாதித்தனுக்கு 'யானைமேல் துஞ்சின தேவர்' என்று பிற்காலத்தில் பெயர் வழங்கலாயிற்று. இளவரசனுன இவன் இறந்தபின், அடுத்த ஆண்டில் (950) பராந்தகசோழர் தமது அடுத்த புதல்வராகிய கண்டராதித்தரை இளவரசாக்கினுர். சில நாளில் பராந்தகர் இறக்கவே, 953இல் கண்டராதித்தர் முடிசூடி அரசரானுர்.

கண்டர் என்பது சோழருக்குரிய பொதுப் பெயர்; பிற்காலத்தில் இது இரண்டாம் இராசராசனுக்குரிய சிறப்புப் பெயராயிற்று. அப்படியே ஆதித்தன் என்பதும் சூரியன் என்று பொருள்படுமாதலால், சூரிய குலத்தாராகிய சோழருக்குப் பொதுப் பெயராக இருந்து, பின்னர் தனியாகவும், பிற சொற்களோடு சேர்த்தும் சிறப்புப் பெயராக ஆயிற்று. ஆதித்தன், இராசாதித்தன், கண்டராதித்தன், ஆதித்த கரிகாலன் என்பன இவ்வாறு எழுந்த சோழர் பெயர்கள்.

கண்டராதித்தர் இளமையிலிருந்தே சிவபக்திச் செல்வம் மிகுந்திருந்தார். ஒருகால் தில்லையம்பலத்தைத் தன் தந்தை பொன் வேய்ந்தபோது, அதை மேற்பார்வையிடும் வேலை ஒப்புவிக்கப்பட்டு அதன் விளைவாக இவருடைய பக்தி பின்னும் பெருகியது எனலாம். முதலில் தாம் அரியணை ஏறும் வாய்ப்பே இல்லாமல் வாழ்ந்து, பின்னர் தமையன் இறந்தமையால், இவர் இளவரசாகும் நிலையும், பின் அரசராகும் நிலையும் வந்தன. இவர் காலத்தில் பராந்தகர் ஆட்சியில் பரந்திருந்த நாட்டின் விரிவும் சிறப்பும் குன்றியிருந்தன. சோழநாடு மட்டுமே இவருக்கு உட்பட்டிருந்தது. அதன் நாற்புற எல்லைகளில் இவர் தந்தைக்கு உட்பட்டிருந்த பல பகுதிகள் இவருக்கு உட்படவில்லை. பாண்டிநாட்டை மீண்டும் வசப்படுத்த இவர் எண்ணியும், அவ்வெண்ணம் கைகூடவில்லை. இவை கல்வெட்டு மூலம் விளங்கும் வரலாறுகள்.

இவருடைய சிவபக்தியில் விளைந்தது 'மின்னுர் உருவம் மேல் விளங்க' என்ற கோயில் திருவிசைப்பாப் பதிகம். சிவபிரான் திருவடியே தமக்குப் புகல் என்ற நினைவை ஒவ்வொரு பாடலிலும் புலப்படுத்துகிறுர். இவர் சிவபக்திச் செல்வராய் இருந்ததோடு பொதுமக்கள் வாழ்வுக்கு நன்மையும் பிற சமய வளர்ச்சிக்கு உதவியும் செய்தார் என்று கல்வெட்டுகளால் அறிகிறேம். திருமழபாடிக்கு அருகே பிராமணர்களைக் குடியேற்றிக் கண்டராதித்த சதுர்வேதிமங்கலம் என்ற ஒரு புதிய ஊரை அமைத்தார். நீர்வளம் இல்லாத பகுதியில் ஒரு பேரேரி கட்டி, கண்டராதித்தப் பேரேரி எனப் பெயரிட்டார். இவை இவர் செய்த பொது நன்மைக்கான சேவைகள்,[1]

1. சதாசிவ பண்டாரத்தார் சோழர் வரலாறு, பகுதி 1.

முற்கூறிய கண்டராதித்த சதுர்வேதி மங்கலத்தில் கண்டராதித்த விண்ணகரம் என்ற ஒரு திருமால் கோட்டம் எடுப்பித்தார். தென்னார்க்காடு மாவட்டத்தில் 'பள்ளிச்சந்தல்' என்ற ஊரில் கண்டராதித்தப் பெரும்பள்ளி என்ற சமணர் கோயில் ஒன்றும் இவரால் அமைக்கப்பட்டது. இவை இவருடைய சமயப் பொறையைக் காட்டும். இந்த விரிந்த மனப்பான்மை சோழமன்னர் அனைவரிடமுமே காணப்பட்ட ஒரு பொது இயல்பாகும்.

கண்டராதித்தருடைய முதல் மனைவி வீரநாராயணி என்பாள். அவள் இளமையிலேயே இறந்துபோக, பின்னர் இவர் மழவரையர் மகளார் செம்பியன் மாதேவியாரை மணந்தார். 935-க்கு முன் இம் மணம் நடைபெற்றிருக்கலாம். கண்டராதித்தராலும் செம்பியன் மாதேவியாராலுமே திருவிசைப்பா வளமாகிய ஒன்பதாம் திருமுறைப் பதிகங்கள் எழுந்தன என்பதை விளக்கியிருக்கிறோம். கண்டராதித்தர் இறந்தபின், இவர் மனைவியார் நீண்ட காலம் வாழ்ந்து சோழமன்னர் பலரைப் பல தலைமுறைகள் சிவபெருமான் திருப்பணியிலேயே செலுத்தினார் என்பது வரலாறு அறிந்த செய்தி.

இவருக்கு மும்முடிச் சோழர் என்ற ஒரு பெயரும் உண்டு. இவருடைய முடிவு திட்டமாகத் தெரியவில்லை. சிதம்பரம் தாலுக்கா உடையார்குடிக் கல்வெட்டு ஒன்று இவரை 'மேற்கு எழுந்தருளின தேவர்' என்று குறிப்பிடுகிறது. இத் தொடரின் பொருள் விளங்கவில்லை. சிலர் இவர் மேற்கே நடந்த போரில் இறந்தார் என்றும், ஆனால் சிவஞானச் செல்வராகிய இவரைப் போரில் மடிந்தார் என்று சொல்ல மனமில்லாமல் மேற்கு எழுந்தருளினார் என்று கல்வெட்டு கூறிற்று என்றும் கூறுகின்றனர். இவர் மேற்கு நோக்கிச் சென்று துறவு மேற்கொண்டு மறைந்துவிட்டார் என்பது சிலர் கூற்று. அதற்கேற்ப, பங்களூர் ஜில்லாவில் ஒரு கல்வெட்டு சிவஞான கண்டராதித்தர் என்று கூறுகின்றது. அங்கேயே ஒரு படைத்தலைவன் பழவூர்க் கோயிலில் கண்டராதித்த விடங்கரையும் உமாபரமேசுவரியாரையும் எழுந்தருளுவித்து இவர்கள் வழிபாட்டுக்கு நிபந்தமளித்தான் என்றும் தெரிகிறது. மேலும், மைசூர் நாட்டில் நந்தி என்ற ஊரிலுள்ள கோயிலில் வைக்கப்பட்டுள்ள ஒரு சோழ அரசர் படிமமும், திருநல்லத்தில் செம்பியன்மாதேவியார் அமைத்துள்ள கண்டராதித்தர் உருவமும் ஒத்திருக்கின்றன என்று சொல்லுவர். ஒத்திருக்கும் காரணத்தால் அப்படிமமும் கண்டராதித்தர் மேற்கு நாட்டுக்கு எழுந்தருளினமை

உண்மையே[1] என்று சான்று பகருகின்றன. உண்மை எதுவாயினும், 957-க்குப் பிறகு கண்டராதித்தர் பற்றிய செய்தி எதுவுமில்லை. அவ் வாண்டில் சிறு பிள்ளையாயிருந்த இவருடைய மகன் மதுராந்தகன், 13 ஆண்டுகள் கழித்து 970-இல் உத்தம சோழன் என்ற பெயரோடு பட்டம் எய்தினான் என்பது வரலாறு. 15 ஆண்டுகள் அரசுபுரிந்த இச் சோழன் புதல்வனாகிய மதுராந்தகக் கண்டராதித்தன் பின்னால் இராசராசன் காலத்தில் கோயில்களை மேற்பார்க்கும் அரண்மனை அதிகாரியாக இருந்து வந்தான். மதுராந்தக கண்டராதித்தனை இரண்டாம் கண்டராதித்தன் என்றும், இவனே திருவிசைப்பாப் பாடிய கண்டராதித்தர் என்றும் சிலர் கருதுவர்.[1] திருவிசைப்பாப் பாடியவர் தம்மைச் சோழ வேந்தன், தஞ்சையர்கோன் என்று குறிப்பிடுகிறார். இவர் முடி மன்னராயிருந்தார் என்பதில் கருத்துவேற்றுமை இல்லை. ஆனால் இரண்டாம் கண்டராதித்தன் முடி புனையவில்லை, அரசனாகவில்லை என்பது வரலாற்று உண்மை. ஆகவே இவன் திருவிசைப்பா பாடியிருக்கலாம் என்பது பிழையான கூற்று.

## வேணாட்டடிகள்

ஒன்பதாம் திருமுறை ஆசிரியரில் இவர் ஆறுமவர். இவர் பாடிய பாடல் பத்துப் பாடல்கொண்ட தில்லைப்பதிகம் ஒன்றே. வேணாடு (வேள் நாடு) என்பது இன்றைய தென் திருவாங்கூர்ப் பகுதியாகும்; சேர நாட்டிற்கும் தென் பாண்டிநாட்டிற்கும் இடையில் உள்ளது. இப் பகுதி செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நாடுகளில் ஒன்று. பிற்காலத்தில் (12ஆம் நூற்றாண்டு) இந் நாட்டை ஆண்ட மன்னர் வேணாட்டடிகள் என்று சாசனங்களில் சொல்லப் பெறுகின்றனர். அடிகள் என்ற சொல் துறவிகளையும் பின்னர் அரசரையும் குறிப்பிட வழங்கிய ஒரு சொல்லாகும். இளங்கோவடிகள் என்ற பெயரும், பெருமானடிகள் முதலான சாசனப்

---

1. மற்றொரு கருத்தும் கூறக் கேட்டிருக்கிறோம். அக்காலத்தில் அராபிய நாட்டிற்கும் தமிழ் நாட்டிற்கும் நெருங்கிய நீண்ட தொடர்பிருந்தது; அங்கு மக்காவில் மக்கீச்சுரம் என்ற கோயிலைக் கட்டிக்கொண்டு ஏராளமான தமிழ் மக்கள் வாழ்ந்தனர்; கண்டராதித்தர் துறவியாகி அங்கே சென்றுவிட்டார். இதுவே மேற்கு எழுந்தருளினார் என்பதன் பொருளும் என்று சிலர் சொல்வர். சேரமான் பெருமாள், மாணிக்கவாசகர் காலம் முதல் தமிழ் நாட்டிற்கும் அரபு நாட்டிற்கும் சமயத் தொடர்பு இருந்தது என்றும் அங்குள்ள மெக்காவே மக்கீச்சுரம் என்றும் அந்த நெறியிலேயே பக்தி மிக்கவராகிய கண்டராதித்தர் அங்கே சென்றார் என்றும் சான்றோர் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

பெயர்களும், இவ்விரு வகைக்கும் எடுத்துக்காட்டாகும்.[1] நம் ஆசிரியர் இந்த வேணாட்டு அரச குடும்பத்தில் பிறந்து நடராசப் பெருமானை இசைப் பாக்களால் துதித்த சிறப்புடையவர். இவர் போலச் சிவபெருமானைப் பாடிய அரசர் பல்லவரான ஐயடிகள் காடவர் கோனும், சேரரான சேரமான் பெருமாளும், சோழ சக்கரவர்த்தியாக இருந்த கண்டராதித்தரும் ஆவர். பாண்டி மன்னர் யாரும் திருமுறைப் பாடல் பாடியதாக வரலாறு இல்லை.

இவரைக் குறித்த வரலாறு எதுவும் விளங்கவில்லை. நான்காம் பாடலில் 'என்னை நோயோடு பிணி நலிய இருக்கின்ற அதனாலே' என்று இவர் கூறுவதனால் உண்மையிலேயே இவர் உடலில் ஒரு பிணி இருந்து அது தீர்க்கவேண்டி இங்குவந்து இறைவனை வேண்டினாரோ என்றும் எண்ண இடந்தருகிறது.

பிற ஆசிரியர் பலர் கூறுகின்றதுபோல இவர் இறுதிப் பாடலில் தம் பெயரைச் சொல்லவில்லை. 'பத்தரடித் தொண்டன்' என்றே தம்மைக் குறிப்பிடுகிறார். இதனால் இவருடைய உள்ளப் பண்பு நன்கு விளங்குகின்றது. எல்லாப் பாடல்களிலுமே இவர் மிக்க உருக்கத்தோடு இறைவனை வேண்டுகின்றார். இவருக்கு முன்னிருந்த சேரநாட்டு மன்னரான சேரமான் பெருமாள் போல இவரும் இறைவனிடத்து அன்பும், அடியாரிடத்துப் பணிவும் நிரம்ப உடையவர் என்று கருதுவோம்.

## திருவாலி அமுதனார்

திருவிசைப்பா பாடியவர்களுள் இவர் ஏழாமவர். இவர் தில்லைத் திருப்பதிகங்களாக நான்கு பாடியுள்ளார். வேறு இவர் பாடியனவாக எதுவும் கிடைக்கவில்லை.

இவர் மயிலாடுதுறை (மயிலை) என்னும் மாயூரத்தில் ஒரு வைணவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் என்று கருதலாம். தம்முடைய பதிகங்களின் இறுதிப் பாடல்களில், இவர் 'மயிலையர் மன்னவன்' என்றும், 'அறை செந்நெல் வான் கரும்பின் அணி ஆலைகள் சூழ் மயிலை மறைவல ஆலி' என்றும் தம்மைக் குறிப்பிடுவதனாலும், இவருடைய பெயரினாலும், இவ்வாறு கருதுகிறோம். ஆலி நாடு என்பது திருமங்கையாழ்வார் வரலாற்றால் சிறப்புப் பெற்றது. சம்பந்தர் தலமாகிய சீர்காழியிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. இந் நாட்டின் தலைநகர் திருவாலி என்பது. இது இன்று திருவாலி திருநகரி என்று வழங்குகின்றது. அமுதன்

1. பதினொராந்திருமுறையில் சிவபெருமான் திருமும்மணிக்கோவை பாடிய இளம்பெருமானடிகளும் சேரமரபினராவர்.

என்பது திருமாலின் பெயர் என்று சொல்வர்.[1] திருவாலி அமுதனுருக்கு வைணவப் பெயர் அமைந்திருப்பது போலவே மற்ெருரு திருவிசைப்பா ஆசிரியரான புருடோத்தம நம்பிக்கும் அமைந்திருக்கிறது. திருவாலி அமுதன் பெயரைத் தாங்கிய இவர் பிற்காலத்தில் சைவராக வாழ்ந்து நடராசப் பெருமான்மேல் பதிகம் பாடினுர் போலும்! இவர் தம்மை 'மறைவல திருவாலி' என்றும், 'தூ நான் மறையான் அமுதவாலி' என்றும் சொல்வதால், வேதியர் மரபில் வந்தவர் என்றும், நான்மறைகளும் வல்லவர் என்றும் அறிகிருேம்.

## பூந்துருத்தி நம்பிகாட நம்பி

இவர் திருவிசைப்பா ஆசிரியருள் நான்காமவர். 18, 19 ஆகிய இரு பதிகங்களை இவர் பாடியுள்ளார். இவை முறையே திருவாரூரையும், தில்லையையும் பற்றிப் பஞ்சமப் பண்ணிலும் சாளரபாணிப் பண்ணிலும் அமைந்த 2, 10 பாடல்களைக் கொண்டவை. ஆரூர்ப் பதிகத்தில் ஏனைய பாடல்கள் இறந்தனபோலும்! தில்லைப் பதிகத்தின் இறுதிப் பாடலில் இவர் தம்மைப் பூந்துருத்திக் காடன் என்று கூறிக் கொள்கிருர். பூந்துருத்தி சோழ நாட்டில் திருவையாற்றின் அருகுள்ள சிறப்பான பாடல்பெற்ற ஒரு சிவஸ்தலம்; ஐயாறு சப்தஸ்தானங்களுள் ஒன்று. கண்ணப்பருடன் வேட்டைக்குச் சென்ற தோழருள் ஒருவன் பெயர் காடன் என்பது இங்குக் கருதத்தக்கது. ஒருகால் இப் பெயர் காடவன் என்பதன் மருஉ என்று கருதி இவரைப் பல்லவ வம்சம் என்றும் சிலர் கூறினர். இது பொருந்தாது. இவர் தில்லையம்பலத்தையும், அங்குப் பணி புரியும் முத்தீ வேள்வி மூவாயிரவரையும் குறிப்பிடும் வகையால் இவரும் சிவாசாரியர் என்று சொல்லத் தோன்றுகிறது. நல்லூர்ப் பெருமணத்தில் சம்பந்தர் கைப்பிடித்த மணமகளின் தந்தை நம்பாண்டார் நம்பி; பதிெருராம் நூற்ருண்டில் திருமுறை தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி; பின்னுல் பதின்மூன்ரும் நூற்ருண்டில் திருவிளையாடற் புராணம் பாடியவர் பெரும்பற்றப் புலியூர் நம்பி. பின்னே காலம் என்ற பகுதியில் காட்டப்படும்

---

1. நம்மாழ்வார் பாசுரம் 'ஆரா அமுதே' என்று தொடங்குகிறது. ஆராவமுதன் பொதுவாகத் திருமால் பெயராகும். எனினும், திருவேதிகுடியில் அப்பர், 'ஆரா அமுதினைக் குடைந்தாடுதுமே' என்று பதிகம் முழுமையும் பாடுகிருர். 'ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே,' 'அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்' என்ற இடங்களில் மாணிக்கவாசகர் அமுதன் என்ற பெயரைச் சிவபிரான் பெயராகவே குறிப்பிடுகிருர். இருப்பினும், திருவாலி என்ற ஊர்த்தொடர்பை ஒட்டியும், இன்று வரை நிலவும் பெருவாரி வழக்குப் பற்றியும் அமுதன் என்பது திருமாலின் பெயர் என்று குறிப்பிட்டோம்.

கல்வெட்டுத் தொடரினுல், இவர் ஆத்திரேய கோத்திரம் உடையவர் என்று அறியுமாறு உள்ளது. நம்பி என்பது பொதுவாக ஆடவருள் சிறந்தவனைக் குறிப்பிடும் ஒரு பொதுச்சொல். எனினும், இந் நம்பி ஓர் சிவாசாரியர் என்றே கருதுகிறோம்.[1] இவர் சிவ பக்தி மிகுந்தவர். தம் பாடல்களில் நாயன்மார்களையும் அவர்கள் பாடல்களையும் சுவைபடக் கூறுகிறுர். வேறு இவர் வரலாறு அறிவதற்கில்லை. இவருடைய சிறப்பு தேவாரங்களில் காணப் படாத சாளரபாணி என்ற பண்ணைக் குறிப்பிடுவதாகும். தில்லையம்பலத்தில் மிக்க ஈடுபாடுடையவர்.

## புருடோத்தம நம்பி

திருவிசைப்பாப் பாடிய ஆசிரியர்களுள் இவர் எட்டாமவர். நம்பி என்பது ஒரு சிறப்புப் பெயர்; சிவபிரானுக்கும் திருமாலுக்கும் வழங்குவது; இருவர் அடியார்களுக்கும் வழங்குவது. அங்ஙனமே புருடோத்தமன் என்ற சொல் மனிதருள் சிறந்தவன் என்று மட்டுமே பொருள் படுவது; சிறப்பாகத் திருமாலுக்கு வழங்கப் பெறும். இவர் பெயரைத் தாங்கிய சிவனடியார், வைணவரா யிருந்தாரா அல்லது வைணவ மரபா என்பது விளங்கவில்லை.

இவர் ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பாவில் 26, 27 ஆகிய இரு பதிகங்களைப் பாடியிருக்கிறுர். இரண்டும் தில்லையைக் குறித்தவை; பஞ்சமப் பண்ணில் உள்ளவை; தனித்தனி 11 பாடல்கள் உடையவை. இரண்டின் இறுதிப் பாடலிலும் இவர் தம் பெயரைக் குறிப்பிடுகிறுர். முதல் பதிக இறுதிப் பாடலில் 'மாசிலா மறைபல ஓதும் நாவன்வண் புருடோத்தமன் கண்டுரைத்த வாசக மலர்கள்' என்று கூறுகிறுர். இதனுல் இவர் அந்தண மரபினர் என்பது தெளிவு. இவர் தில்லையிலே வாழ்ந்திருந்தவர் போலும்! இரண்டாம் பதிக இறுதிப் பாடலில் புருடோத்தமன் என்று மட்டுமே கூறுகிறுர்.

## சேதிராயர்[2]

திருவிசைப்பாப் பாடிய ஆசிரியருள் இவர் பாடல்கள் இறுதியில் வைக்கப்பட்டுள்ளன. திருவிசைப்பாவுக்குப் பதிக அடைவு கூறும் தனிப்பாடல் இதுபற்றியே சேதிராயருடைய திருக் கடைக்காப்பு ஒன்று என்று இவர் பதிகத்தைக் குறிப்பிடுகின்றது. இவர் பாடியது தில்லைக்குரிய பதிகம் ஒன்றே. இது, சிவபெருமா

1. இவர் பெயர் திருப்பூந்துருத்திக் காடர் என்றும் காடநம்பி என்றும் ஏடுகளில் காணப்படுகிறது.

2. இப் பெயர் சேதிராயத் தேவர் என்றும் ஏடுகளில் காணப்படுகிறது.

னிடத்து மால் கொண்ட பெண்ணைக் குறித்து நற்றாய் இரங்கலாக, கலித்துறையில் அந்தாதித் தொடை அமைந்த 10 பாடல்கள் கொண்டது. இறுதிப் பாடலில் தம்மை 'எழிற்சேதிபர்கோன்' என்று புலப்படுத்துகிறார். சேதிபர்கோன், சேதிநாட்டாருக்கு அரசன். சேதி நாடென்பது, மலையமான் நாடு, மலாடு என்றும் சொல்லப்பெறும்; இது திருக்கோவலூரைத் தலைநகராக உடைய தென் ஆர்க்காடு ஜில்லாவின் வடமேற்குப் பகுதியாகும். மெய்ப் பொருள் நாயனாரும், நரசிங்கமுனையரையரும், இங்கு ஆட்சிபுரிந் தார்கள். இவரும் அவர்கள் வழிவந்தவர் போலும்! கோன் என்றமையால் குறுநில மன்னராவார்.

## கருவூர்த் தேவர்

கருவூர்த் தேவருடைய உண்மை வரலாறு எதுவும் நாட்டில் பிரசித்தமாக வழங்கவில்லை. இவருடைய இயற்பெயரும் தெரிய வில்லை. கருவூர் என்ற அடையாலே இவர், இப்போது கரூர் என வழங்கும் கருவூரினர் என்று கருதுவர்; இவ்வூர்க் கோயில் கருவூர்-ஆனிலை என்ற பெயருடையது; சம்பந்தர் பதிகம் பெற்றது. 1129 பாடல்கள் கொண்ட இவ்வூர்த் தலபுராணம், எறிபத்தர், புகழ்ச் சோழர் ஆகிய நாயன்மார் வரலாறுகளை இரு சருக்கங்களாற் சொல்லிய பிறகு, கருவூர்த் தேவர் கதிபெறு சருக்கம் என்ற இறுதிச் சருக்கத்தில் 157 பாடல்களால் கருவூர்த் தேவர் சரித்திரத்தைக் கூறுகிறது. இப் புராண ஆசிரியர் பெயர் தெரியவில்லை; எனினும், அவர் மெய்கண்ட பரம்பரையில் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சத்தியஞான பண்டாரம் என்று சொல்லப் படும் கமலை ஞானப்பிரகாசரின் மாணாக்கரென்றும் கி.பி. 1618இல் புராணம் பாடினாரென்றும் பாயிரத்தால் அறிகிறோம். இதிற் கூறப் பட்ட வரலாறு பின் வருவதாகும்.

இவர் கருவூரில் அந்தணர் மரபில் பிறந்த சிவனடி மறவாத சித்தர்; காயசித்தி கைவந்தவர். இவருடைய சித்தமார்க்கச் செயல்கள் பிற அந்தணருக்குப் பிடிக்காமலிருக்க, இவர் அவர்களை நல்வழிப்படுத்த எண்ணி, அவர்கள் கண்டு அதிசயிக்கும்படியாக அகாலத்திலே மழை பெய்யச்செய்து, நதி பெருகிவரப் பண்ணி, கோயில் கதவம் தாள் திறக்கச் செய்து, பூதங்கள் குடை பிடித்து வரச்செய்து, பின்னும் பல அற்புதங்களும் செய்து காட்டினார். கொங்கு, குடநாடு முதலான பல நாடுகளிலும் சென்று தல வழி பாடு செய்து, காசி, காஞ்சி, காளத்தி, அருணை, மதுரை வழி பட்டுத் திருக்குருகூர் என்ற நம்மாழ்வார் தலம் அடைந்தார். திருமால் கட்டளையின்படி பாகவதர்கள் இவரை வணங்கிப் போற் றினர். செந்தில், கன்னியாகுமரி, சுசீந்திரம், நெல்வேலி அடைந்து

பெருமானை அழைத்தும் வாராமையால், ஊரையே சபித்தார். பெருமான் திருவிளையாட்டால் ஓர் அடியவர் பின்னர் இவரை வழிபட, தம்மை வழிபட்டதற்கு மகிழ்ந்து இவர் சாப நீக்கம் செய் தார். அடுத்து இவர் ஒரு சிவலிங்கத்தைத் தழுவ அது குழைந்தது.

திருப்புடை மருதூரில்[1] திருவிசைப்பாப்பாடி, மற்றொரு திருமால் பதி பணிந்து, முன்றீசரை வணங்கி, காளியால் மதுக்கொணர் வித்தார். பின் அங்கு வன்னிமரத்தை மீன் மழை பொழியச்செய்து, மதுவும் மாமிசமும் அற்பக்காரியம் என்று கருமயோகியருக்குக் காட்டி, நல்லறிவு ஊட்டிக் குற்றாலம் சென்று திருவிசைப்பாப் பாடி, பொதிகை அகத்தியரைத் தரிசித்து, அங்குத் தங்கி இருந்தார்.

அக்காலத்து, தஞ்சையில் இராசராச மன்னன், தான் பிரதிட்டை செய்த பெருவுடையார் எவ்வாறு மருந்து சாத்தியும் மருந்து இளகி, இறுகிப் பிடிக்காமல் இருந்தது கண்டு, மிகவும் மனம் வருந்தினான். 'கருவூர்த் தேவரால்தான் இது முடியும்' என்னும் அசரீரி எழுந்தது. அப்போது, அங்கு தம் உருக்கரந் திருந்த போகநாதர் என்ற சித்தர், கருவூர்த் தேவரை அங்கு வருமாறு அழைக்க ஒரு காக்கையின் காலில் ஓலை கட்டி அனுப் பினார். ஓலை பெற்ற கருவூர்த் தேவரும் வந்து செய்தி அறிந்து, சிவலிங்கத்தை நேரே நிறுத்தி மருந்து இறுகிப் பொன்போல் ஆகிப் பிடித்துக் கொள்ளுமாறு செய்தார். பின்னர் இவர் திருவானைக்கா வணங்கி, திருவரங்கம் சென்று, தம்மை விரும்பிய ஒரு பொது மகளுக்குத் திரு அரங்கநாதன் திருமார்பில் உள்ள மாணிக்கமாலை யைத் தந்து, பின்னர் அவள் மாலையைத் திருடினாள் என்று குற்றம் சாட்டப்பட்டபோது, நாதனே தோன்றி 'யாமே தந்தோம்' என்று அசரீரியாகக் கூறுமாறு செய்தார். பொறாமை கொண்ட அந்தணர் தூண்டுதலால், இவர் இருக்கையில் மதுவும் ஊனும் இருக்குமென்று அரசன் சோதனை செய்வித்தபோது, அங்கு வைதீக பூசைக்கேற்ற உபகரணங்கள் நிரம்பி இருக்கவும், இவரைப் பழித்த அந்தணர் இல்லங்களில் மதுக் குடங்களும் ஊனும் நிறைந் திருக்கவும் அரசன் கண்டு, இவருடைய பெருமையை உணர்ந் தான். அந்தணர் ஊரைவிட்டு ஓடிவிட்டனர். உரிய காலத்தில் இவர் கருவூர் ஆனிலை அடைந்து, அங்குக் கோயில் கொண்ட பசுபதீசுவரரோடு இரண்டறக் கலந்தார்.

---

1. இவ்வூரில் பெருமான் கருவூர்த் தேவருக்காக முடிசாய்த்தார் என்ற வரலாறு ஒன்று உண்டு.

இப் புராணக் கதை நாம் இங்குக் கருதும் வரலாற்று ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது. மற்று இவருடைய அற்புதம் பற்றிய கதைகள் யாவும் அற்புதங்களையே நம்பியிருந்த அக்காலத்திற்குப் பொருந்துவனவாகலாம். அன்றியும், வரலாறு உலகினுக்கு எவ்வளவு அப்பாற்படுகிறதோ அவ்வளவுக்குச் சித்தருக்குச் சிறப்பு என்று அக்காலத்தோர் நினைத்தார்கள். பலரால் சொல்லப் பட்டுள்ள (இங்குச் சொல்லப்படாத) கதைகள் அக்காலத்திற்குக் கூடப் பொருந்தாதன என்றே யாம் எண்ணுகிறோம். இவருடைய சித்த மார்க்கத்துக்கு ஏற்றம்தரப் பிற்காலத்தில் புனைந்த கதைகள் என்றே அவை கொள்ளத்தக்கன.

திருவிசைப்பா பற்றிய செய்திகள், ஆசிரியர் பற்றிய செய்திகள் விளக்கமில்லாமல் இருந்து கதைகள் பலவிதமாகப் புனையப் பட்டன என்பதற்குப் பின்வரும் செய்தியை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். சுமார் 1800-இல் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழ் பாடிய காஞ்சி சிதம்பர முனிவர் என்பவர் ஒரு பிழையான செய்தியைக் கூறுகிறார். திருவிடைக்கழி முருகன் 'மதுரகவி பாடுகின்ற கருவூர்ச் சித்தரைக்கண்டு தன் வடிவத்தைக் காட்டி நம்மைப் பாடு என்று சொல்லி, அவர் பாடிய திருவிசைப்பா மாலையைச் சூடினான்' என்று சொல்லுகிறார் :

குருசரண ரொருநால்வர் போய்ப்போய்க் குழக்கன்று
    கோவினைக் கூப்பிடுதல் போல்,
  கோயில்தொறு மூர்பெரிய விண்ணினை யளாவிடும்
    கோடிதரு கயிலாயனைக்
கருணையுடனே கண்டு கண்டுசர்க் கரைநறை
    கலந்தமுக் கனியின் மதுர
  கவிபாடு கின்றகரு வூர்ச்சித் தரைக்கண்டு
    கன்றின்முன் தாய்வருதல் போல்,
ஒருவடிவு காட்டியே 'திருவிடைக் கழியினில்
    உகந்தநம் மைப்பாடு' என
  உல்லாச ஆனந்த வெள்ளத்துள் மூழ்கியவர்
    உள்ளன்பு டன்பாடிய
திருவிசைப் பாமாலை சூடுமோர் ஈராறு
    திண்புயா சலன் வருகவே!
  திருக்குரா நீழலில் சிவஞான யோகமருள்
    சித்தகுரு வே வருகவே![1]

---

1. க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ், 58ஆம் பாடல்.

திருவிடைக்கழி முருகன் திருவிசைப்பா மாலை பெற்றது உண்மை. ஆனால் பாடியவர் கருவூர்ச் சித்தர் அல்லர்; சேந்தனார். இப் பிள்ளைத் தமிழ் பாடிய ஆசிரியர் திருவாவடுதுறை அடியவரான சிவஞான சுவாமிகளின் சீடர். வரலாறுகள் எப்படி அக்காலத்தில் விளக்கமில்லாமல் பிழைபட வழங்கின என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

### தேவரும் சித்தரும்

மேலும் இங்கு, இரண்டு நிலைமைகளை ஒன்று சேர்த்துப் புராணக் கதையாக ஆக்கிய தன்மையைப் பார்க்கிறோம். திரு விசைப் பாக்களைப் பாடிய ஆசிரியர் ஒருவர். அவர் சோழ நாட்டில் பல இடங்களிலும் வாழ்ந்திருந்து பல கோயில்களுக்குத் திருவிசைப்பாப் பாடினார். அவர் பாடிய தலங்களை இப் புராண வரலாறு குறிப்பிடவில்லை. அவர் பாடியவற்றுள் திருப்பூவணம் ஒன்றே சோழ நாட்டுக்கு வெளியே இருந்தது. மற்ற யாவும் சோழ நாட்டில் உள்ள தலங்கள். மேலும் அவர், இராசராசன் தஞ்சைப் பெருங்கோயில் அமைத்த காலத்தில் மட்டுமன்றி, அவனுடைய மகன் இராசேந்திர சோழன் கங்கைகொண்ட சோழ புரம் கட்டிய காலத்திலும் அக் கோயிலுக்குப் பதிகம் பாடினார். இச் செய்தியைப் புராண வரலாறு குறிப்பிடவில்லை. மற்றப்படி, கருவூர்ச் சித்தர் என்ற ஒருவர் சித்தர்களுள் ஒருவர் என்று கருவூ ரார் பூசாவிதி, கருவூரார் ஞானம் என்ற நூல்களால் அறிகிறோம். சித்தர் என்று நூல்கள் சொல்லும் பெயருக்கேற்ப, இவர் அற்புதம் பல செய்து காட்டியது பொருந்தக் கூடியதே. புராணம் எழுதிய (17ஆம் நூற்றாண்டு) பிற்காலத்தில் அதற்கு 600 ஆண்டுகளுக்கு முற்பட்டு இருந்த பெரும் பத்தராகிய கருவூர்த் தேவர் என்ற திருவிசைப்பா ஆசிரியர் வரலாறு மக்கள் மனத்தில் மறைந்து போயிருக்கலாம். ஆனால், அற்புதக் கதைகள் ஒன்று பத்தாய்க் கிளைத்து நிலைத்திருப்பதை இன்றும் காண்கிறோம். ஆகவே புராண காரர் தாம் கருவூருக்குப் புராணம் பாடிய காலத்தில், கருவூர்ச் சித்தர் வேறு, கருவூர்த் தேவராகிய திருவிசைப்பா ஆசிரியர் வேறு என்ற தெளிவில்லாமல், இருவர் கதைகளையும் ஒரே வரலாறாகப் புனைந்து விட்டார் போலும்!

காலத்தால் இன்னும் சற்றுப் பின்வந்த சாமிநாத முனிவர் என்பவர் தாம் பாடிய திருவாவடுதுறைப் புராணத்தில் 58-ஆவது அத்தியாயம் திருமாளிகைத் தேவர் பெருமையை உரைக்கு மிடத்தில், கருவூர்ச் சித்தர் வரலாற்றையும், திருவிசைப்பாப்பாடிய கருவூர்த்தேவர் வரலாற்றையும் சிறிது குறிப்பிட்டிருக்கிறார். சிவ லிங்கத்தை நிலைபெறுவித்த செய்தி இங்கு கங்கைகொண்ட

சோழேச்சுரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. இங்கு கருவூர்த் தேவர் திருமாளிகைத் தேவருக்கு அடியவராக வாழ்ந்தார் என்றும், இவர் திருவீழிமிழலைத் திருவிசைப்பாப் பாடினர் என்றும் சொல்லப் படுகிறது. சில திருவிசைப்பாப் பாடல்களும் இங்குக் குறிப்பிடப் பட்டுள்ளன. இவ்வரலாற்றிலும், கருவூரின் சித்தரையும் பத்தரை யும் ஒன்ருக எண்ணியதால் விளைந்த ஒரு குழப்பத்தையே காண் கிருேம். இவர் திருமாளிகைத் தேவரின் அடியவராய்த் திருவாவடு துறையில் வாழ்ந்தவராஞல், இவர் அவ்வூருக்கு ஒரு திருவிசைப் பாப் பாடாத காரணம் விளங்கவில்லை. பாடாமையால் புராணக் கதை குறிப்பிடும் கருவூர்ச்சித்தர் கருவூர்த் தேவர் அல்லர் என்பது தெளிவாகின்றது. அன்றியும், திருவாவடுதுறைக்கு வேறு ஆசிரியர் (சேந்தனர்) திருவிசைப்பாப் பாடியிருக்கும் நிலைமையும் காண் கிருேம். தில்லையொன்றுக்கே நான்கு பதிகம் பாடிய திருமாளிகைத் தேவர், தாம் தங்கியதாக இன்று சொல்லும் திருவாவடுதுறைக்குப் பதிகம் பாடவில்லை. ஆனல் பத்துத் தலங்களுக்குப் பதிகம் பாடிய கருவூர்த் தேவர், தாம் தங்கிய திருவாவடுதுறைக்கு ஏன் பதிகம் பாடவில்லை என்பது நியாயமான கேள்வி. கருவூர்ச் சித்தர் காளத்தியில் சமாதி கொண்டார் என்றும்கூடச் சொல்வர்.

கருவூர்த் தேவருடைய திருஉருவம் கருவூர் ஆனிலைக் கோயிலி லும் தஞ்சை இராசராசேச்சுரத்திலும் தனிச் சந்நிதியாக எழுந் தருளுவிக்கப் பெற்றிருக்கிறது.

தேவாரத்துப் பத்தர் சித்தர் என்று சேர்த்துக் கூறப்பெறு கின்றனர். ‘பத்தரொடு சித்தர் பயில்கின்ற பழுவூரே’ (சம்பந்தர்), ‘பத்தர் சித்தர் பலரேத்தும் பரமா’ (சுந்தரர்) என்பன காண்க. கருவூர்த் தேவர் பத்தர்; கருவூர்ச் சித்தர் என்பவர் சித்தர். ஒரே பெயராயிருப்பதனல் இருவரையும் ஒருவராக மயங்கலாகாது. பத்தர் (தேவர்) காலம் 11-ஆம் நூற்ருண்டு; சித்தர் காலம் 17-ஆம் நூற்ருண்டு. புராணம் கூறிய அற்புதங்களைச் செய்த வரும், பூசாவிதி முதலான பிற்காலச் சித்தர் பாடல்களைப் பாடியவருமான கருவூர்ச் சித்தர் (இவர் ஒருவரேயாயினும் இருவ ராயினும்) நாம் ஆராயும் திருவிசைப்பா ஆசிரியரல்லர். அப்படி ஒருவர் உண்மையில் இருந்திருந்தால் அவர் காலம் 17ஆம் நூற்ருண்டு ஆக இருக்கலாம்.

இதுகாறும் கூறியவற்ருல் இவர் வரலாற்றில் நாம் அறிவது, கருவூரில் அந்தணர் குலத்தில் பிறந்த இவ்வடியவர் பெரும்பான் மையும் சோழ நாட்டில் தங்கி, சோழர் கட்டிய கோயில்களில் சிறப் பானவைகளான (ஆதித்தேச்சுரம்) திரைலோக்கிய சுந்தரம், இராசராசேச்சுரம், கங்கைகொண்ட சோழேச்சுரம் என்றவற்றுக்கு திருப்பதிகங்கள் கோயில் கட்டிய காலத்தில் உடனிருந்து பாடினர்

என்பதாகும். இவர் இராசராசனுலும் அவன் மகன் இராசேந்திர னுலும் பெரும் சிறப்புப் பெற்று வாழ்ந்தார் என்பதில் தடையில்லை.

அகச்சான்றுகள்

கருவூர்த் தேவர் ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப் பாடலிலும் மிகவும் பொருள் பொதிந்த சொற்களால் தம்மைக் குறிப்பிடு கின்ருர். அறிவுறு கருவூர்த் துறைவளர் தீந்தமிழ் மாலை, கலைபயில் கருவூர் ஆரணம் மொழிந்த பவளவாய் சுரந்த அமுதமூறிய தமிழ் மாலை, ஆரணம் பிதற்றும் பித்தனேன் மொழிந்த மணி நெடுமாலை, ஆலையம் பாகின் அனைய சொற் கருவூர் அமுதுறழ் தீந்தமிழ் மாலை, ஆரணத் தேன்பருகி அருந்தமிழ் மாலை கமழ வரும் கருவூரன் தமிழ் மாலை, அங்கையொடு ஏந்திப் பலிதிரி கருவூர் அணிந்த சொல் மாலை, செழுமறை தெரியும் கருவூரன் உரைத்த பாவணத் தமிழ்கள், கலைபயில் கருவூரன் கழறு சொல் மாலை, செழுஞ்சுடர் விளக்கம் கலந்தெனக் கலந்து உணர் கருவூர்தரும் கரும்பனைய தீந்தமிழ் மாலை—என்ற தொடர்கள் முறையே பத்துப் பதிகங் களுக்கும் உரியனவாகும். இத் தொடர்களால் நமக்கு மூன்று கருத்துக்கள் எழுகின்றன.

முதலாவது, இவர் அந்தணர் என்ற கருத்து. ஆரணம் பிதற்றும், ஆரணத்தேன் பருகி, ஆரணம் மொழிந்த பவளவாய், செழுமறை தெரியும் என்ற தொடர்கள் வேதத்தைக் குறிப்பிடு கின்றமையால், இவர் வேதம் ஓதும் அந்தணர் என்ற கருத்து நிலவுகின்றது. இது பொது வகையில் பொருத்தமே. திருஞான சம்பந்தர் சிவவேதியர் அல்லவா ? ஆயினும், இவ்விடம் சிறிது சிந்தித்து ஆராய்தற்குரியது. சைவத்தில் ஆசாரியப் பதவிக்கு வந்தவர்களுக்கு அவர்களுடைய வருணம் பற்றிப் பெயர் சொல்லப் படும் என்ற ஒரு வழக்கு வடமொழி நூல்களில் பார்க்கிருேம். பிராமணராய் இருந்தால் சிவம் எனப்படுவார். அரசராய் இருந் தால் தேவர் எனப்படுவார். வடமொழியில் இதற்கு உதாரணங்கள் மிகப்பல. சைவ நூல்கள் பல, சிவாசாரியரால் செய்யப்பட்டவை. தத்துவப்பிரகாசிகை என்ற ஒன்றுமட்டும் ஓர் அரசரால் செய்யப் பெற்றது ; அவர் பெயர் போஜ தேவர் என்று நூல்கள் சொல்லும். அதே கண்ணேடு இங்கு நாம் பார்த்தால், திருமாளிகைத் தேவரும், கருவூர்த் தேவரும் அந்தணர் அல்லர் என்று கருத இடம் உண்டு. கருவூர்த் தேவர் சிவஞானம் கைவரப் பெற்ற பெருஞானி ஆனமை யால், அவர் தம்மைச் 'செழுமறை தெரியும் கருவூரன்' என்று சொல்லுவதில் வியப்பில்லை.

இனி, இரண்டாவது கருத்தும் இதை ஒட்டியதே. ஆருவது தொடர் கங்கைகொண்ட சோழேச்சுரத்தைக் குறித்தது. இங்கு அவர், 'அங்கையோடேந்திப் பலிதிரி கருவூர்' என்று தம்மைக்

குறிப்பிடுகின்றார். கருவூரன் என்று சொல்லாமல் கருவூர் என்று ஊரைமட்டும் சொல்லித் தம்மைக் குறிப்பிட்டுக் கொள்வது இவருக்கு ஓர் இயல்பு. இங்கு இவர் ஓடே கலனாய் ஊரிடு பிச்சை ஏற்று உண்பதைக் கூறுகிறார். இவருடைய காலம் இராசராசன் காலம். சோழ மன்னர் அந்தணரைக் குடியேற்றி எண்ணில்லாத சதுர்வேதி மங்கலங்கள் அமைத்த போதிலும் கூட, பிராமணரைத் தங்கள் குருவாகக் கொண்டதில்லை; சிவாசாரியரையே கொண்டனர் என்று சாசனங்கள் கூறுகின்றன. அன்றியும், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த சங்கராசாரியருக்குப் பின் அவர்கள் 'நானே பிரமம்' என்று சொன்னவர்கள். அவர்கள் துறவிகளாய் இருக்கலாம்; அவர்கள் பிச்சை ஏற்றிருக்கலாம். ஆனால் அங்கையில் ஓடேந்தினர்கள் என்பது அவர்களுக்குப் பொருந்தாது; ஓடேந்தினார் சைவர் மட்டுமே ஆதலால், இவ்வாறு தம்மைக் கூறும் கருவூர்த் தேவர் அந்தணர் அல்லர் என்றே கருத வேண்டும்.

மூன்றாவது கருத்து, 'அருமருந்து அருந்தி அல்லல் தீர் கருவூர் அறைந்த சொல்மாலை' என்பது. மருந்து காயகற்ப மருந்து; அதை அருந்தி அதனால் ஆயுள் நீடிக்கப்பெற்று இவர் சித்தராகிப் பல அற்புதங்கள் செய்தார் என்று நினைக்கிறார்கள். இது பொருந்தாத கருத்து. இறைவனை 'அடியார்தம் அல்லல் தீர்க்கும் அருமருந்து' என்கிறார் அப்பர் சுவாமிகள் (6, 1, 5.). அருமருந்தாவது கிடைத்தற்கரிய அமுதம்; இறைவனே அமுதம்; 'கன்னலே தேனே அமுதமே' என்று இவரும் பல சமயம் பாடுகிறார். ஆதலால் இங்கே குறிப்பிடுவது, இறைவன் அருளே அன்றிக் காய கற்ப மருந்தன்று. களந்தைத் திருவிசைப்பாவில், 'பாவியேன் செய்யும் பிழையெலாம் பொறுத்து என்பிணி பொறுத்து அருளாப் பிச்சரே' என்பது இவர் உடலிலிருந்த ஒரு நோயைக் குறிக்கும் என்றும், 'அருமருந்து அருந்தி அல்லல்தீர் கருவூர்' என்பது இப்பிணி நீக்கத்தையே குறிக்கும் என்றும் எழுதியிருக்கிறார்கள். இதுவும் பொருந்தாது. பிணி என்பது பிறவிப் பிணியே; பிறவிப் பிணிக்கு மருந்தாகிய திருவருளைப் பெற்று அத் துன்பத்தினின்றும் நிலைத்த விடுதலை பெற்ற கருவூர் என்பதே பொருள். அதே பாடலில், தொடர்ந்து, 'அல்லல்தீர் கருவூர் அறைந்த சொல்மாலை ஈரைந்தின் பொருள் மருந்து உடையோர்' என்று இவர் சொல்வதில், பாடலின் கருத்தான திருவருளாகிய மருந்து உடையோர் என்பதே பொருளாதல் தெளிவு. இதனால் இங்குக் கூறியது உடற்பிணியுமன்று, அதற்கு மருந்து மன்று என்பது விளங்கும். மேலும், கருவூர்த் தேவர் போன்ற பெருஞானிகள் தங்களையோ தங்கள் வாழ்க்கையையோ குறிப்பிட்டுக் கொள்வதில்லை என்பதையும் கருத

வேண்டும். இவர் இராசராசனுக்குக் குருவாயிருந்தார் என்று சொல்வர்.

மற்ருெரு முக்கியமான பொருளையும் இங்குத் தெளிவு செய்வது அவசியம். கருவூர்த் தேவர் பாடிய கங்கைகொண்ட சோழேச்சுரப் பதிகத்தின் இறுதிப் பாடல் பின் வருவது:

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளர்இளந் திங்களை முடிமேல்
கங்கையோ டணியும் கடவுளைக் கங்கை
கொண்டசோ ழேச்சுரத் தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்த சொல் மாலையால் ஆழிச்
செங்கையோ டுலகில் அரசுவீற் றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட் கடலே.

இது பல சுருதி கூறுவது. இப்படிக் கூறுவது தேவருடைய தவருத இயல்பு; திருஞானசம்பந்தர் சொல்வது போல, தம்முடைய பாடல் வல்லவர் இருள் கிழித்தெழுந்த சிந்தையர், திரு அவரை முகமலர்ந்து எதிர் கொள்ளும், அவர் பரமனது உருவமாகுவர். அவருக்கு அன்றே வானுலகு, சிவபதம் என்னும் பொன்நெடுங் குன்றுடையோர் என்று கூறுகிருர். இந்த இடத்தில் கருவூர்த் தேவர் அறைந்த சொல்மாலை பாடல் (அந்நூல் பாடுதலால்) திளைப்பது சிவனருட் கடல் என்பதே பொருள். கங்கைகொண்ட சோழன் கருவூர்த் தேவரைப் பார்த்து அவருடைய திருவிசைப்பாப் பதிகங்களை ஓதி வழிபடும் வாயிலாக இறைவனது திருவருளை நிரம்பப் பெற்று வேந்தரெலாம் தனக்கு அடங்கி ஒழுகச்செய்தான். இதைத் தேவரே இப்பாடலில் தெளிவாக எடுத்துரைத்துள்ளார் என்று ஓர் அறிஞர் இப் பாடல்பற்றி எழுதியிருக்கும் கருத்து[1] சிறிதும் பொருந்துவதன்று. தேவர் இங்கு பொதுவாகச் சொன்ஞரேயன்றி, கங்கைகொண்ட சோழனைக் குறிப்பிடவில்லை.

பிற்காலத்தில், பல தல புராணங்களில் ஆங்காங்கு பொருத்தத்தையொட்டி, திருவிசைப்பா ஆசிரியருக்கும் வணக்கம் சொல்வது ஒரு மரபாகியிருக்கிறது. முத்துத் தாண்டவராயபிள்ளை 'திருவிசைப்பாவுடையார் துவாதச மாலை' என்று ஒரு தனித் துதிநூல் பாடியிருக்கிருர்.

---

1. பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பகுதி, 1969, க. வெள்ளைவாரணஞர், பக்கம், 275—276.

# 3. கவிதை

நூல் வரலாற்றைக் கூறியபோது திருவிசைப்பா எந்த முறையில் தொகுக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டோம். நம்பி யாண்டார் நம்பி தமக்குத் தெரியவந்தனவும் அரசனால் தேடித் தரப்பெற்றனவுமாகிய இசைப்பாடல்களை ஒரு திருமுறையாகத் தொகுத்தார். திருப்பல்லாண்டும் இசையில் அமைந்தது; தனி யான சிறப்புடையது; திருவிசைப்பாப் பாடிய ஆசிரியர் ஒருவரால் பாடப்பெற்றது. ஆதலினால், அதையும் இதனோடு சேர்த்துக் கொண்டார். திருமுறைகளுள் அளவால் இத்திருமுறையே சிறியது என்றும் குறிப்பிட்டோம். நம்பிக்குக் கிடைத்த பாடல்கள் இவ் வளவே என்று தெரிகிறது. இனி, பொதுவான சில கருத்துக்களை இங்குக் கூறுவோம்.

திருவிசைப்பாக்களைப் பார்க்கும் போது, இவை யாவும் தேவாரப் பதிகங்களைத் தழுவிச் செய்யப்பட்டவை என்று தெரி கின்றது. பதிக அமைப்பும் மகுடங்களும், சில சமயம் அகத்துறை அமைப்பும், இந்த எண்ணத்தைத் தருகின்றன. பதிகங்களில் பலர் சிவபெருமானுடைய பராக்கிரமச் செயல்களைக் குறிப்பிட்டுப் பாடுகிறார்கள். இறுதியில் தங்களைச் சொல்லி, தங்கள் பாடலைப் பயின்றால் இன்ன பலன் கிடைக்கும் என்று பாடியிருப்பதும் தேவாரப்பதிக அமைப்பைக் கொண்டதே. இதை நோக்கும் போது, கால வரையறைக்கும் ஓர் அமைதி புலப்படுகிறது. தேவார காலம் 7ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி தொடங்கி 8ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலம் வரையில் (சம்பந்தர், அப்பர், சுந்தரர் காலம்). பின்னாலே திருவிசைப்பாவின் காலம் 940 தொடங்கி 1040 வரை என்று வரையறை செய்கிறோம். இவற்றின் இடையீடாக உள்ள கால அளவு (700—940) சுமார் 200 ஆண்டுக் காலம். இக்காலத்தில், தேவாரங்கள் மக்கள் மனத்தைக் கவர்ந்ததன் விளைவாக எழுந்தவை இந்த இசைப்பாக்கள்.

28 இசைப்பாப் பதிகங்களில், ஏழு பதிகங்கள் அந்தாதியாக அமைந்தவை. அந்தாதியமைப்பு தேவாரங்களில் இல்லை. (சம்பந்தர் பதிகம் ஒன்றில் மட்டும் உண்டு.) திருவாசகத்தில்

மட்டுமே அதிகமாக உண்டு. காலத்தில் முன் சென்று பார்த்தால் காரைக்கால் அம்மையார் பாடிய பிரபந்தங்களில் அந்தாதி அமைப்பு உண்டு. அவற்றைத் தழுவி இவ்வாசிரியர் அந்தாதி அமைப்பைக் கொண்டனர் போலும்!

பாதாதிகேசமாகப் பாடிய பதிகங்கள் இரண்டு. முன்னமே அப்பர் சுவாமிகள் கேசாதிபாதமாக ஒரு பதிகம் பாடினுர் என்று குறிப்பிட்டோம். ஆனுல் அவர் இறைவனுக்குக் கேசாதிபாதம் சொல்லவில்லை. தெய்வத்திற்குப் பாதாதிகேசமும், மக்களுக்குக் கேசாதிபாதமும் பாடுவது மரபு. இந்த மரபை இலக்கியங்களில் காணலாம். அப்பர் தமது தலை முதற் கால் வரை உள்ள உறுப் புக்களை விளித்து, 'நீ இறைவனுக்காக இன்னது செய்வாக' என்று அறிவுறுத்துகிருர். நாலாயிரப் பிரபந்தத்துள் பாதாதிகேசம் உள்ளது. பெரியாழ்வார் திருமொழியில் யசோதை முன் ஆய்ச்சியர் வந்து குழந்தைக் கண்ணனைப் பார்த்து, 'பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும் பாதக்கமலங்கள்' தொடங்கி, அவன் நெற்றிவரை உள்ள உறுப்புக்களின் அழகை எடுத்துக் காட்டி மகிழ்வதாக 21 பாடல்கள் இரண்டாம்பத்தில் உள்ளன. ஆழ்வார் அங்குப் பலசுருதிப் பாடலில் 'திருப்பாதகேசம்' என்றே சொல்லுகிருர்.

பொதுவாக அகப் பாட்டுக்களில் சைவ வைணவ மக்களுக்கு ஈடுபாடு மிகவும் அதிகம். இதைத் தேவார திருவாசகங்களிலும், நாலாயிரப் பிரபந்தங்களிலும் விளங்கக் காணலாம். திருவிசைப் பாவும் இப் பண்புக்கு விலக்கன்று. இங்கு 10 பதிகங்கள் அகத் துறையில் அமைந்துள்ளன. அகத்துறை பாடாதோர் பூந்துருத்தி நம்பியும் கண்டராதித்தரும் வேணுட்டடிகளுமே; ஏனைய அறுவரும் அகத்துறைப் பதிகம் பாடியிருக்கிருர்கள். புருடோத்தம நம்பி பாடிய இரண்டு பதிகங்களுமே அகத்துறை. இனி, சித்தர் என்ருல் வைராக்கியம் நிறைந்த வாழ்வுடையவர் என்ற கருத்து உண்டு; ஆனுல் சித்தர் என்று பலரும் கருதுகின்ற திருமாளிகைத் தேவரும், கருவூர்த் தேவரும், இங்கு அகத்துறைப் பதிகம் பாடி யிருக்கிருர்கள் என்ருல், அகப்பாட்டிலுள்ள கவர்ச்சிக்கு வேறு சிறப்புச் சொல்ல வேண்டியதில்லை. இறைவனிடத்தில் உள்ளத் தைச் செலுத்துவதற்குக் காதல் அமைப்பு அவ்வளவு கசிவோடு இடங்கொடுக்கிறது. இங்குள்ள அகத்துறைப் பதிகங்களில் தலைவியின் நிலைகண்டு இரங்கும் தலைவியின் கூற்ருக மூன்று பதிகங்களும், நற்ருய் கூற்ருக ஒன்றும், தோழி தலைவனுக்கு உரைத்தலாக ஒன்றும், ஏனைய ஐந்தும் தலைவி இரங்கிக் கூறுவன வாகவும் அமைந்துள்ளன.

இத் திருமுறையில் அகத்துறைப் பாடலின் கசிவிற்கு எத்தனையோ பாடல்களை எடுத்துக்காட்டாகத் தரமுடியும். ஒரு பாடல் மட்டும் குறிப்பிட்டு மேலே செல்வோம். வீதியில் திருவுலா வந்த பெருமானைக் கண்டு காதல் வயப்பட்ட தலைவியின் தளர்ந்த நிலைக்கு இரங்கவேண்டும் என்று தலைவனுகிய பெருமானை வேண்டுகின்ற பாடலின் ஓசையே, நெடிலோசை இன்றி நெகிழ்ந்து ஒலிப்பது, பெரிதும் சுவைத்து இன்புறத் தக்கது **(131)** :

சரிந்ததுகில், தளர்ந்தஇடை, அவிழ்ந்தகுழல் இளந்தெரிவை
இருந்தபரி சொருநாள் கண்டிரங்காய், எம்பெருமானே!
முரிந்தநடை மடந்தையர்தம் முழங்கொலியும் வழங்கொலியும்
திருந்துவிழ வணிகோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

வண்டுவிடு தூது முதலான அகத்துறைப் பாட்டுக்களும் உள்ளன. கருவூர்த் தேவருடைய மற்ருேர் அகத்துறைப் பாடலும் இங்குக் குறிப்பிடத் தக்கது :

தெள்ளுநீ றவன்நீ றென்னுடல் விரும்பும்
செவியவன் அறிவுநூல் கேட்கும்,
மெள்ளவே அவன்பேர் விளம்பும்வாய், கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்,
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய் கீழ்க்கோட்டூர்
வள்ளலே, மணியம் பலத்துள்நின் ருடும்
மைந்தனே என்னும் என்மனனே.[1]

திருவாலியமுதனுர் தம்முடைய அகத்துறைப் பாடல்கள் இரண்டிலும் இறுதிப் பாடலில் ‘இறையவனை ஏத்துகின்ற இளையாள் மொழி இன் தமிழ்’ என்று குறிப்பிடுவது காணத்தக்கது.

தேவாரங்களில் போற்றி என்று பதிகம் வருவதுபோல இங்கு கருவூர்த் தேவர் திருச்சாட்டியக்குடிப் பதிகத்தில் ஒரு பாடலும் அருளாய் என்று ஒரு பாடலும் அமைத்திருக்கிருர்.

செங்கணு போற்றி, திசைமுகா போற்றி,
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணு போற்றி, அமரனே போற்றி,
அமரர்கள் தலைவனே போற்றி,

1. திருக்கோட்டூர் மணியம்பலம், 4.

தங்கள் நான்மறைநூல் சகலமும் கற்றோர்
சாட்டியக்குடி இருந்தருளும்
எங்கள் நாயகனே போற்றி, ஏழ்இருக்கை
இறைவனே போற்றியே போற்றி.[1]

சித்தனே அருளாய் செங்கணு அருளாய்
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்தனே அருளாய் அமரனே அருளாய்
அமரர்கள் அதிபனே அருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள்ஏழ் இருக்கை
முத்தனே அருளாய் முதல்வனே அருளாய்
முன்னவா துயர்கெடுத் தெனக்கே.[2]

பொதுவாக, திருவிசைப்பாவினுள் இயற்கை வருணனை காணப்படவில்லை. இந்த நினைவில் பார்த்தால் திருவிசைப்பா ஆசிரியர்களுக்குத் தங்கள் பக்திப் பெருக்கை வெளிப்படுத்தப் பாடலின் நான்கு அடிகள் போதவில்லை என்றே தெரிகிறது. பெரும் பான்மையும் அவர்கள் தங்களுடைய நிலையையும், பக்குவத்தையும் இரண்டடிகளால் முறையிட்டு, இரண்டடிகளால் இறைவனுடைய பெருமையைச் சொல்லி அருள்புரிய வேண்டிப் பாடுகிறார்கள். இந்த அமைப்பில் பார்க்கும்போது, இவர்கள் தேவார ஆசிரியர் களுக்கு எந்த விதத்திலும் பின்வாங்கியவர்கள் அல்ல என்று தெரி கிறது. ஒரு தலத்தைக் குறிப்பிட்டுப் புகழும்போது அத் தலத்தின் இயற்கையமைப்பைப் பெரிதும் விரித்துச் சொல்கிறார்கள். பெருமா னுடைய உருவ வருணனை அதிகமாயிருக்கிறது. தாம் உருகாமலும் பணி செய்யாமலும் இருந்த நிலையில் அவன் எளிவந்த திறத்தை எல்லோருமே வியந்து போற்றுகிறார்கள். இந்த நிலைமையில் வருணனைக்கே இடம் இருப்பதில்லை. வருணனை என்று சொல்லத் தக்க அளவில் சில சொற்களையாவது சொன்னவர்கள் கருவூர்த் தேவரும், திருவாலி யமுதனாருமே. ஏனையோர் ஓரடியில் பாதி கூட வருணனைக்கு இடம் கொடுக்கவில்லை.

அமுதனார் தில்லைக்கு நான்கு பதிகம் பாடினார். ஆதலால் இரண்டொரு பாடல்களில் சில சொற்கள் சொல்ல அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. தில்லையுள் குதிரை மாவொடு தேர்

---

1. திருச்சாட்டியக்குடி, 8.

2. திருச்சாட்டியக்குடி, 9.

பல குவிந்து ஈண்டுகின்றன. 'தொறுக்கள் வான் கமல மலர் உழக்கக் கரும்பு நற்சாறு பாய்தர மறுக்கமாய்க் கயல்கள் மடையில் பாய்கின்றன' என்று கூறுகின்றார்.[1] கூறுகின்ற இடத்து, பெருமான் அகத்தி மொட்டும் மத்தமும் சென்னியில் அணிந்திருக் கின்றான் என்கிறார். இது ஒரு அபூர்வமான குறிப்பு. சிவபெருமான் ஆத்தி சூடி அமர்ந்த தேவன். ஆத்தி வேறு; அகத்தி வேறு. அகத்தி மொட்டு அணிந்ததாகச் சொல்லுவது புதுமையாக இருக் கிறது.[2] மற்றோர் இடத்தில் தில்லை, நிவாவின் கரைமேல் உள்ளது, அந்த ஆறு சந்தும் அகிலும் தழைப்பீலிகளும் சாதிப் பலவும் கொண்டு உந்தி எழுகின்றது, அங்கு 'குரவம், கோங்கம், குளிர் புன்னை, கைதை குவிந்த கரைகள்மேல் திரைவந்து உலவுகின்றது' என்கின்றார்; நிவா நதி (வெள்ளாறு) இன்று தில்லைக்கு வடக்கே இரண்டு மைல் தூரத்தில் செல்லுகிறது.

கருவூர்த் தேவர், தில்லைப் பதிகத்தில் வருணனை அதிகமாகவும் திருப்பூவணம் தஞ்சைப் பதிகங்களில் குறைவாகவும் மற்றப் பதிகங்களில் இல்லாமலும் பாடுகிறார். இளம் பருவத்தில் அதிக வருணனை அமைத்தும் வயது முதிரமுதிர வருணனைகளை விலக் கியும் இருக்கிறார் என்று தோன்றுகிறது. 'கோயில் பதிகத்தில்[3] சில அடிகளைக் காண்க.

மணம்விரி தருதே மாம்பொழில் மொழுப்பின்
 மழைதவழ் வளரிளங்கமுகந்
திணர்நிரை அரும்பும் பெரும்பற்றப்புலியூர்.

கைவரும் பழனம் குழைத்த செஞ்சாலிக்
 கடைசியர் களைதரு நீலம்
செய்வரம்பு அரும்பும் பெரும்பற்றப்புலியூர்.

வாயினேர் அரும்பும் மணிமுருக் கலர
 வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயின்நேர் அரும்பும் பெரும்பற்றப்புலியூர்.

---

1. திருவாலியமுதனார், 1. கோயில், 10.

2. சம்பந்தர் தேவாரத்தில் 'கடுத்தடுத்து அகத்தியோடு வன்னி கொன்றை கூவிளம் தொடுத்துடன் சடைப்பெய்தாய் துருத்தியாய்' என்பது காண்க (2, 98, 2). சிவபெருமான் அகத்திமொட்டு அணிதலைத் தக்கயாகப் பரணி யுரையில் காணும் ஒரு குறிப்பாலும் அறியலாம்: 'மகாதேவர் கிராத வேடங்கொண்டு அப் பன்றியை எய்து கொன்றருளி அதன் கொம்பைச் செவ் வகத்திப் பூவாகச் சாத்தியருளின கதை.' (630)

3. கோயில், 1, 2, 3, 9.

புன்னை தேன்சொரியும் பொழிலகம் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடும்
தென்னதேன் அரும்பும் பெரும்பற்றப்புலியூர்.

கோயில் பதிகத்தில் ஏழு பாடல்களில் இயற்கை வளமே கூறுகின்றார். பின்னர், திருப்பூவணப் பதிகத்தில் நான்கு பாடல்கள், இராசராசேச்சுரப் பதிகத்தில் ஆறு பாடல்கள். இவற்றைப் பார்க்கும்போது, இவர் முதலில் கோயில் பதிகமும், இரண்டாவதாக இராசராசேச்சுரப் பதிகமும், அடுத்துப் பூவணப் பதிகமும் பாடி, பின்னர் ஏனைய பதிகங்களைப் பாடி, இறுதியில் கங்கை கொண்ட சோழேச்சுரப் பதிகம் பாடினார் என்று சொல்லத் தோன்றுகிறது. தஞ்சை இராசராசேச்சுரம் பாடிய பிறகு சில ஆண்டுகளில் (9 ஆண்டுகளில்) இராசராசமன்னன் காலமானான். அவன் மகன் இராசேந்திரன் 1012-இல் மகுடம் புனைந்து கங்கை கொண்ட சோழேச்சுரம் கட்டி 1035-இல் குடமுழுக்குச் செய்வித்தான். இராசராசன் இறந்த ஆண்டான 1014-க்கும், கங்கை கொண்ட சோழேச்சுரம் குடமுழுக்கு நிகழ்ந்த 1035-க்கும் இடையில் இவர் தஞ்சையை நீங்கிப் பாண்டி நாடு சென்று அங்குப் பூவணத்தில் பதிகம் பாடி, ஒருகால் வேறு பல தலங்களும் தரிசித்து, பின்னர் திரும்பி, திருக்களந்தை ஆதித்தேச்சுரம் சென்று, அங்கு ஆதித்தேச்சுரம், மணியம்பலம், முகத்தலை, சாட்டியக்குடி ஆகிய நான்கு தலங்களுக்கும் பதிகம் பாடி, அங்கிருந்து கங்கைகொண்ட சோழேச்சுரக் குடமுழுக்குக்கு வரவேண்டும் என்று வரும் வழியில் திருவிடைமருதூருக்குப் பதிகம்பாடி, கங்கைகொண்ட சோழேச்சுரம் சென்றிருக்கக் கூடும். பாடல்களின் பொருள் அமைதி இவ்வாறு எண்ண இடம் தருகிறது.

அன்றியும், இவர் இளமையில் இராசராசேச்சுரப் பதிகம் (1005) பாடினார் என்றும், 30 ஆண்டுகள் கழித்துக் கங்கை கொண்ட சோழேச்சுரப் பதிகம் (1035) பாடினார் என்றும், வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. இவர் இளமையில் பாடிய அப் பதிகத்தில், இராசராச மன்னனிடம் உள்ள ஈடுபாடு காரணமாக, மறைமுகமாகவேனும் தம்மை அறியாமலே அரசனுடைய பெருமையை உணர்த்தவல்ல குறிப்புக்களைத் தருகிறார். முதுமையில் பாடிய கங்கைகொண்ட சோழேச்சுரப் பதிகம், பக்குவத்தால் பக்தி நெறியில் மிகவும் உயர்ந்த நிலையில் போய் நிற்கிறது ; முழுமையும் சமய தத்துவப் பொருளே நிறைந்துள்ளது.

இராசராசேச்சுரப் பதிகத்தில் மன்னனுடைய பெருமையைப் பிரதிபலிக்கின்ற சில வரிகளை இங்கு எடுத்துக் காட்டுவோம். தஞ்சை மாடங்களில் குடை கவித்த முடிமன்னர்கள் வந்து

நெருக்குவதால் முடியோடு முடி தேய்ந்து மாணிக்கங்கள் உதிர்ந்து குவையாகக் கிடக்கின்றன.

கோங்கிணர் அனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்து
உக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்கு
இடைகெழு மாடத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சுரத் திவர்க்கே.[1]

கோங்கிணர் என்பது கோங்குமலர்ப் பூங்கொத்து. அது நல்ல பொன்னிறம் உடையது. வெண் கொற்றக் குடை என்பதுதான் மரபு எனினும், கருவூர்த் தேவருடைய குறிப்பினால் கோங்கிணர் ஒத்த பொன்னிறக் குடைகளும் வழங்கின என்று அறியலாம். மற்றோர் இடத்தில் இவர் மலைபோன்ற மதில்கள்சூழ்ந்த தஞ்சையில் களிற்றரசுகள் உலாவுகின்றன என்கிறார் :

உவரிமா கடலின் ஒலிசெய்மா மறுகில்
உறுகளிற் றரசின நீட்டம்
இவருமால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சுரத் திவர்க்கே.[2]

இவ்விரண்டு குறிப்புக்களும் இராசராசன் ஆட்சியினுடைய சிறப்பைப் புலப்படுத்துவன. இது சரித்திரத்துக்கும் பொருந்தி வருவது.

மிகவும் குறைவான பாடல்கள் கொண்ட இத் திருமுறையில் பயிலும் அழகான தொடர்களும் புதுச்சொற்களும் மிகவும் அதிகம்; இவை இந்த அளவில் பெரு நூல்களிலும் காணப்படவில்லை. இறைவனைக் குறிப்பிடும் தொடர்களிற் சில : அருள்புரி வள்ளல், அரும்புனல் அலமரும் சடையினன், அம்பலத்தாடி, ஆலநிழற் பட்டன், கனக நற்றூண், கற்றவர் விழுங்கும் கற்பக்கனி, குலாத் தில்லையம்பலக் கூத்தன், கொண்டலங் கண்டத்தெம் குருமணி, சிவலோகநாயகச் செல்வன், தருணேந்து சேகரன், சசிகுலாம் மவுலி, அம்பலத்தாடும் சொக்கன், கருணை நிலயம், கருணாலயன், தான்தோன்றி நம்பி, தில்லை நாயனர், நீறணி பவளக்குன்றம், நெற்றிக்கண்ணுடையதோர் கரும்பு, புராண சிந்தாமணி, மலைமகள் மணவாள நம்பி, வளர் முக்கட் செம்பளிங்கு. தலங்களைக் குறிப்பிடும் தொடர்கள் : திக்கெலாம் நிறைந்த புகழ்த் திருவீழிமிழலை, திருவளர் திருச்சிற்றம்பலம், வைதிகர்வாழ் திருவிடைக்கழி, திருவீழி

1. தஞ்சை இராசராசேச்சுரம், 3.
2. தஞ்சை இராசராசேச்சுரம், 5.

9

மிழலை, விண்ணிழி செழுங்கோயில். வேறு தொடர்கள்: இறப்பொடு பிறப்பினுக்கே இனியர், சைவம் விட்டிட்ட சடைகள், செம் மனக் கிழவோர், தென்னதேன் அரும்பும். எடுத்த பாதம், மழலைச் சிலம்பு, நீறணிபவளக்குன்றம், தருணேந்து சேகரன் போன்ற தொடர்கள் மக்கட் பெயர்களாக அமைக்கப்பட்டுள்ள செய்தி பின்னர்க் குறிப்பிட்டிருக்கிறோம்.

சில தலப்பெயரும் கோயிற்பெயரும்: பெரும்பற்றப்புலியூர்—திருச்சிற்றம்பலம்; சாந்தையூர்—ஆவடுதுறை; சாட்டியக்குடி—ஏழிருக்கை; கீழ்க்கோட்டூர்—மணியம்பலம்; களந்தை—ஆதித்தேச்சுரம்; தஞ்சை—இராசராசேச்சுரம்; கோடை—திரைலோக்கிய சுந்தரம்; திருவிடைக்கழியில் திருக்குராநீழல்.

இத் திருமுறையுள் பயிலும் அருஞ்சொற்களுள் சில: அமரித்து (பொருந்தி), அலச (வருந்த), காந்தர்ப்பர், கவந்திகை (போர்வை), குலக (குழாமாகிய), கிழை (ஒளி), கித்துதல் (விளையாட்டு), கிடையனுர் (தக்கை போன்ருர்), கெந்துதல், திணமணி, தொண்டு (கற்றை), நீவி (சோர்வு), பயலைமை, பிட்டர் (பிரஷ்டர்), பிது (பெருமை), பிழம்பு (தவறு), பிரட்டர், மூச்சறவு (மயக்கம்), மொழுப்பு (முடி, செறிவு), வீரை (கடல்), சீயர் (சீர்), சிணுக்கர், சிதம்பர், பிணுக்கர், பிசுக்கர், சாட்கை (நிந்தனை) ஏம்பலித்தல் (விரும்புதல்), துகுக்கும் (கட்டும்), மேய்தல் (வேய்தல்), பேழ்கணித்தல், என்பித்தாய் (என்று சொல்வித்தாய்), எல்லே (விளி).

மேலே சொல்லப்பட்ட தொடர்கள், சொற்கள்போன்ற இயல்புகளை ஒரு தொகுப்பாய்க்கருதும்போது, ஓர் எண்ணம் எழாமலிராது. சிறப்பான சொற்களும் தொடர்களும், இச் சிறுநூலில் உள்ள அளவு வேறெங்கும் காண இயலவில்லை என்றேம். இதற்குக் காரணமென்ன என்று சிந்தித்தால், இவ்வாசிரியர் அனைவரும் ஒரே சூழலில் வாழ்ந்தமையே என்பது விளங்கும். முன்னமே ஆசிரியர் வரலாற்றிலும், பின்னே காலம் என்ற பகுதியிலும், இந்த ஆசிரியர் அனைவரும் கண்டராதித்தரால் ஆதரிக்கப்பெற்றும் அவர் காலமானபின் அவருடைய மனைவி செம்பியன் மாதேவியாரால் ஆதரிக்கப்பெற்றும் வாழ்ந்தனர், தலங்களுக்குப் பதிகம் பாடினர் என்று தெளிவாகக் காட்டியிருக்கிறேம். அதன்படி கண்டராதித்தர் அன்றி, சேந்தனுர், திருமாளிகைத் தேவர், வேணுட்டடிகள், திருவாலி அமுதனுர் ஆகிய நால்வரும் கண்டராதித்தரால் ஆதரிக்கப் பெற்று அல்லது அவரால் ஆற்றுப்படுத்தப்பட்டு, தில்லை நடராசப்பெருமானுக்கு இசைப்பாப் பதிகம் பாடினுர்கள். இவர்களுள் சேந்தனுர் மட்டும் திருப்பல்லாண்டு பாடினுர்; சிலநாள் சென்றபின் பிற தலங்களுக்கும் சென்ருர். மற்ற மூவரும் தில்லை

ஒன்றுக்கே பாடியவர்கள். இந் நால்வரும் பாடிய கால எல்லை 940—950. கண்டராதித்தர் பாடிய கால எல்லை 953—7. (இவை காலம் என்ற பகுதியில் தெளிவாக்கப்பட்டுள்ளன.) கண்ட ராதித்தர் காலமானபின் செம்பியன் மாதேவியாருடைய ஆதரவில் பூந்துருத்தி நம்பி, புருடோத்தம நம்பி, சேதிராயர், கருவூர்த் தேவர் ஆகிய நால்வரும் வாழ்ந்தார்கள். அம்மையார் காலத்தின் இறுதியில் இவர்களுக்கு இராசராச சோழனுடைய ஆதரவும் இருந்தது. அம்மையார் காலமான பிறகு, இராசராசன் காலத்தில் நால்வரும் தில்லைக்குப் பதிகம் பாடினார்கள். பூந்துருத்தி நம்பி மட்டும் மேலும் திருவாரூருக்கு ஒரு பதிகம் பாடினார். கருவூர்த் தேவர் இராசராசன் காலத்தில் சில தலங்களுக்கும், பின் அவன் மகன் இராசேந்திரன் காலத்தில் புதிதாக எழுப்பப்பெற்ற கங்கை கொண்ட சோழேச்சுரத்துக்கும் பதிகம் பாடினார்.

இவ்வாறு பார்க்கும்போது இவர்கள் அனைருவமே சோழர் அரண்மனைச் சூழலில் வாழ்ந்தார்கள்போல் தோன்றுகிறது. ஆத லால், இவர்களுடைய மொழி பிற இடங்களில் காணப்படாத ஒரு தனி வளமுள்ளதா யிருக்கிறது.

## திருமாளிகைத் தேவர் பாடல்

திருமாளிகைத் தேவர் பாடிய பதிகங்கள் நான்கு. இவை நான்கும் தில்லைக்குரியன. முதல் மூன்று பதிகங்களும் பஞ்சமப் பண் என்றும், நான்காம் பதிகம் காந்தாரப் பண் என்றும் பழம் பாடல் கூறும்.[1] இவற்றின் மொத்தப் பாடல் 45. இப்பதிகங்களை, தொடக்கத் தொடரை வைத்து வழங்குவது மரபு—ஒளிவளர் விளக்கு, உயர்கொடியாடை, உறவாகிய யோகம், இணங்கிலா வீசன் என.

திருமாளிகைத் தேவர் காலத்தில் சைவ சமயத்தில் வடமொழிப் பயிற்சி அதிகமாய் இருந்தது. அதன் விளைவாய், தமிழில் நூல் செய்தோர் எல்லோருமே, செய்த நூலின் தன்மைக்கு ஏற்ப, வட சொற்களை வேறுபாடு கருதாது நிரம்பப் பெய்திருந்தார்கள். இவருடைய பாடல்களிலும் அப்படியே வட சொற்களும் தொடர் களும் மிகப் பல காணலாம். சசிகண்ட சிகண்டா சாம கண்டா, கால காலா காம நாசா, புவன போகமே, குமர விநாயக சனக, மகேந்திரநாத, நாதாந்தத்து அரையா என்ற தொடர்களைக் குறிப் பிடலாம்.

---

1. நான்குமே பஞ்சமப் பண் என்ற குறிப்பு ஓர் ஏட்டில் இருக்கிறது.

எல்லாப் பதிகங்களிலும் சமணம் முதலிய பிற சமயங்களைக் குறிப்பிடுகிறார். சமண் புத்தர் பொய்கள், கண்டாயை, புத்த ராதிப் பொக்கரை, செது மதிச் சமணும் தேரரும் சேராச் செல்வச் சிற்றம்பலக் கூத்தா என்பன காண்க. அக்காலத்தில் சமணரும் புத்தரும் ஆதிக்கம் பெற்றிருந்தனர் என்பது இதன் பொருளன்று; முந்தைய சிவனடியார் பழித்த காரணத்தினால் இவரும் பழித்தார் என்றே கருதவேண்டும். பௌத்தம் எந்தக் காலத்திலுமே வலிமையுடையதாய் இருந்ததில்லை. இவர் காலத்தில் சமணம் வலி அழிந்து நீண்ட நாளாயிற்று.

வடமொழியைப் பற்றி இவர் கூறும் ஒரு கருத்து இங்குக் குறிப்பிடத் தக்கது. "அசிக்க ஆரியங்கள் ஓதும் ஆதரை" (39) என்று கூறுகின்றார். ஆரியம் வடசொல், வடநூல் வழி. இவர் வட சொற்களை அதிகம் பெய்திருந்தபோதிலும்கூட, வடநூலே கதி என்று இருப்பவர்களைக் கண்டு இவ்வாறு பழிக்கிறார் என்றே நாம் சொல்லவேண்டும். ஆதர் என்ற சொல்லுக்கு இங்கு இரு வகையாலும் பொருள் சொல்லலாம்: எளிதாகச் சொல்லத்தக்கது அறிவில்லாதவர் என்பது; ஆதன் என்பது அருகனைக் குறிப்பிடும் ஒரு சொல்; ஆகவே வட சொல்லே அதிகம் பயின்று வந்த சமண சமயத்தாரைப் பழித்து இவ்வாறு குறிப்பிட்டார் என்றும் கருதலாம்.

ஓர் ஒப்புமையை இங்கு எடுத்துக் காட்டத் தோன்றுகிறது. பதின்மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆசிரியர் சிலர், வடமொழியே கதி என்று இருந்தவரைப் பழித்து, 'சமஸ்கிருத முரணர்'[1] என்று கூறுவதை வைணவ சமய நூல்களில் பார்க்கிறோம். அவர்கள் வடமொழியில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்த போதிலும் கூட, இது அளவுகடந்து போகும்போது, அவர்களே அந்த நிலையைக் குறை கூறுகின்றார்கள்.

இனி இவர் பதிகங்களை ஆராயலாம். முதற் பதிகம், 'ஒளி வளர் விளக்கே' என்று தொடங்குவது. இப் பதிகம் சிறந்த சமயப் பொருளை உள்ளடக்கியது, சரப உருவாய் வந்து இரணியன் மார்பு கீண்ட நரசிங்க மூர்த்திக்கு அருள் புரிந்த வள்ளலே என்று போற்றுகின்றார்; சரபமூர்த்தி உயிர்வதை செய்யாதவர் என்பது ஐதிகம்; ஆகவேதான் அருள்புரி வள்ளல் என்ற குறிப்பு. தம் பாடலை 'மூர்க்கனேன் மொழிந்த புன்மொழிகள்' என்கிறார். வேறு சிலர் போல இவர் ஓரிடத்தும் தம் பெயரைக் குறிப்பிடவில்லை.

---

1. இதன் விளக்கத்தை எமது தமிழிலக்கிய வரலாறு 13ஆம் நூற்றாண்டு, பக்கம் 307-இல் காண்க.

இரண்டாம் பதிகம் ‘உயர் கொடி ஆடை’ என்று தொடங்குவது. பாடல்கள் பாதாதிகேச முறையில் துதிப்பனவாக உள்ளன. சேவடி, சிலம்பு, கணைக்கால், குறங்கு, நிதம்பம், திருவயிற்றுந்தி, உதரம், பவளவாய், மலர்முகம், செஞ்சடை என்ற உறுப்புக்களைத் துதிக்கிறது. ஒவ்வொரு பாடலும் பெரும்பற்றப்புலியூர்ச் சிற்றம்பலக் கூத்தா என்று சொல்வது. இறைவனுக்குச் சஹஸ்ரநாம அர்ச்சனை, லட்சார்ச்சனை செய்வதை, ‘பேர்கள் ஆயிரம் நூருயிரம் பிதற்றும் பெற்றி’ என்ற சொற்களால் இவர் குறிப்பிடுகிருர் என்று கருதலாம். இறைவன் சென்னியில் கொக்கிறகும், கொன்றையும் துன்றுகின்றன என்கிருர். இறுதிப் பாடலில், ‘தவப்பெருந் தொண்டர் தொண்டனேன்’ என்றுமட்டும் தம்மைக் குறிப்பிடுகின்ருர்.

‘மூன்ரும் பதிகம், ‘உறவாகிய யோகம்’ என்பது. இது அகத்துறையில் அமைந்து, தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கலைத் தாய் கூறும் கூற்ருக அமைந்துள்ளது. பாடல்கள், ‘குலாத் தில்லை யம்பலக் கூத்தனையே’ என்ற முடிவை யுடையன. அம்பலக் கூத்தனை, மகேந்திர மாமலைபோல் இருந்தவனே என்று தலைவி கூறுவதாக எல்லாப் பாடல்களும் கூறும். மகேந்திர மலையில் சிவபெருமான் வேடுருவாகி அருச்சுனனுக்காக எழுந்தருளி வந்து பன்றி யெய்து அருள்புரிந்த பெருங்கருணைத் திறத்தை முதல் ஏழு பாடல்களும் குறிப்பிடும். இவற்ருேடு திருவாசகத்துள் குலாப் பத்தும் திருவார்த்தையும் ஒப்பிடத் தக்கன. குலாப் பத்துப் பாடல்கள் யாவும் ‘குலாத் தில்லையாண்டானைக் கொண்டன்றே’ என்ற முடிவையுடையன. குலா என்பது குலாவுதல் மகிழ்தல் என்னும் பொருளுடையது. திருவார்த்தையில் இரு பாடல்களில் மகேந்திர மலையையும் அங்குப் பெருமான் வேடுருவாகி வந்த செய்தியையும் மாணிக்கவாசகர் குறிப்பிடுகிருர். மகேந்திரமலை என்றதற்கேற்ப, குறவா, வேடா, மருந்தே, தேனே என்று பாடுவது நயமுடையது. மகேந்திரமலை யாது என்ற விளக்கம் இன்றும் கிடைக்கவில்லை. இப் பதிகம் பாடல்தோறும் மகேந்திரத்தையும் குறிப்பிடுகிறது. ஆதலின் இதன் தலைப்பு மகேந்திரமும் தில்லையும் என்று அமைக்கலாம் போலும். தேவாரத்தில் இவ்வாறு இரு தலங்களைச் சொல்வனவாய்ச் சில பதிகங்கள் உள்ளன. ‘திருநீறிடாவுருத் தீண்டேன்’ என்று தலைவி கூற்ருக ஒரு பாடல் கூறுகிறது; ஒரு பாடல் திருநீற்றையும் ஐந்தெழுத்தையும் கூறுகிறது. அம்பலக் கூத்தனை ‘நீதி வேதாந்தக் குறியே’ என்றும், ‘நாதாந்தத்தரையா என்பார்க்கு நாதாந்த பதம் கொடுப்பாய்’ என்றும் கூறுகிருர்.

நான்காம் பதிகம், ‘இணங்கிலா ஈசன்’ என்ற தொடக்கமுடையது. மற்றவை எழுசீர் விருத்தங்களாயுள்ளன; இது

மட்டும் அறுசீர் விருத்தம். இப் பதிகப் பாடல்களின் முதல் ஈரடிகளில் தில்லைவாணனைக் கூறி, அவனுடன் இணங்காதவரைக் 'காணு கண்வாய் பேசாது அப்பேய்களோடே' என்று கூறுகிறார். பின் இரண்டு அடிகளும் பழிப்பாகவே உள்ளன. பழிப்பதற்காகத் தமிழில் உள்ள வசவுச் சொற்கள் அனைத்தையுமே ஆசிரியர் இங்குப் பயன்படுத்தி விட்டார் என்று சொல்லலாம். இறுதிப் பாட்டில் 'இறப்பொடு பிறப்பினுக்கே இனியராய் மீண்டும் மீண்டும் பிறப்பர்' என்று கூறுவது சுவையாய் உள்ளது. (பொதுவாக இந்த அடிகளில் உள்ள வசவைப் பார்க்கும்போது, முதல் மூன்று பதிகங்களையும், பாடிய திருமாளிகைத் தேவர் இவற்றைப் பாடியிருக்க முடியுமா என்ற ஐயம் கூட நமக்கு எழலாம்.)

திருமாளிகைத் தேவர் பாடல்களுக்கு எடுத்துக் காட்டாகப் பின்வரும் பாடல்களைக் காட்டலாம்: [1]

ஒளிவளர் விளக்கே, உலப்பிலா ஒன்றே,
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே,
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே,
சித்தத்துள் தித்திக்கும் தேனே,
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே,
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

உற்றாய் என்னும், உன்னையன்றி மற்றொன்று
உணரேன் என்னும், உணர்வுகள் கலக்கப்
பெற்றாய ஐந்தெ ழுத்தும் பிதற்றிப்
பிணிதீர்வெண் ணீறிடப் பெற்றேன் என்னும்,
சுற்றாய சோதி மகேந்தி ரம்சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாத நெஞ்சிற்
குற்றாய் என்னும், குணக்குன்றே என்னும்
குலாத் தில்லை அம்பலக் கூத்தனையே.

## சேந்தனார் பாடல்

சேந்தனார் திருவிசைப்பாப் பதிகங்கள் மூன்றும் தில்லைக்குத் திருப்பல்லாண்டு ஒன்றும் பாடியிருக்கிறார். இவற்றில் மொத்தப் பாடல்கள் 47. திருவிசைப்பாவில் இவருடைய மூன்றும் பதிகத்தின் இறுதியிலும், திருப்பல்லாண்டின் இறுதிப் பாடலிலும்

---

1. திருவிசைப்பா, 1. 1, 3, 11

'செப்புறைச் சேந்தன்' என்று தம்முடைய பெயரைக் குறிப்பிட்டுள்ளார். எல்லாப் பதிகங்களும் பஞ்சமப் பண்ணில் அமைந்துள்ளன. இவருக்குத் தமிழும் வடமொழியும் மிக்க எளிதாகப் பணி செய்கின்றன. ஆதி அமரர் புராணன், ஏகநாயகன், கருணாலயன், கனக கற்பகம், சசிகுலா மவுலி, தருணேந்து சேகரன், புரகாலகாம புராந்தகன், புராண சிந்தாமணி முதலான தொடர்களைக் காண்க. பாடல்கள் யாவும் மிக்க இனிமையாயும் சொல் நயமும் நெகிழ்ச்சியும் பொருந்தியனவாயும் உள்ளன. அகத்துறையாகப் பாடுவதிலும், பல செய்திகளை உள்ளமைத்துப் பாடுவதிலும், இவருக்கு விருப்பம் அதிகம். முந்தை வரலாற்றையும் ஆங்காங்கு நன்கு அமைத்துப் பாடுகிறார்.

திருவீழிமிழலை

இதனுள் கோயில் 'விண்ணிழி செழுங் கோயில்' என்ற வரலாற்றைக் குறிப்பிடுகின்றார். அப்பருக்கும் சம்பந்தருக்கும் படிக்காசு அருளிய செய்தியை, "பாடலங்காரப் பரிசில்காசருளிப் பழுத்த செந்தமிழ் மலர்சூடி நீடலங்காரத் தெம்பெருமக்கள் நெஞ்சினுள் நிறைந்து நின்றான்' என்று இறுதிப் பாடலில் சொல்கிறார். இந் நகர் அரிசிலின் கரையில் அமைந்தது என்பர். இங்கு ஐந்நூற்றுவர் அந்தணர் ஏத்துகின்றனர் என்று வரலாற்றை உட்கொண்டு சொல்கிறார். தில்லை மூவாயிரவர், சீகாழி நானூற்றுவர், பெருந்துறை முந்நூற்றுவர் என்பது போல, இத் தலத்தில் ஐந்நூற்றுவர் என்பது மரபு. திருஞானசம்பந்தர் 'திக்கெலாம் புகழும் திருநெல்வேலி' என்றும், அப்பர் 'திக்கெலாம் புகழ்த் திருவாரூர்' என்றும், குறிப்பிட்டதை இவர் மனத்தில் கொண்டு, இங்கு 'திக்கெலாம் நிறைந்த புகழ்த்திரு வீழிமிழலையான்' என்று இரண்டு முறை கூறுகிறார். பெருமானைத் தான்தோன்றி நம்பி (சுயம்பு) என்பார். தல வரலாற்றில் திருமண வரலாறு சொல்லப் படும்; அதை உட்கொண்டு உமை மணவாளன் என்கிறார். இறைவனை 'வீழிமிழலையுள் விளங்கு வெண்பளிங்கு' என்பார். இறைவனுடைய அடியார் திருவடிப் பொடியை அணிந்தேன் என்று பலமுறை சொல்கின்றார் (51, 55). பவளமால்வரை (48) என்று எடுத்துக் கொடுத்த தொடரைத் திருவாலியமுதனார் தமது இரண்டாம் பதிகத்தின் தொடக்கமாக வைத்துப் பாடுகிறார். 'ஆயிரம் தாமரையானும் ஆயிரம் சேவடியானும்' என்று அப்பர் சுவாமிகள் ஆயிரம் என்று கூறிய கருத்தை உட்கொண்டு, 'ஆயிரம் கமலம், ஞாயிறு ஆயிரம் முக்கண்முக கரசரணத்தோன்' என்று ஒரு பாடல் பாடியதன்றி, 'எண்ணில்பல் கோடி' என்றே ஒரு பாடல் பாடியிருக்கிறார்: தக்கயாக சங்காரத்தைக் கூறிய ஒரு பாடலில் கருடனுடைய செருக்கை யடக்கிய மற்றோர் அரிய செய்தியையும் குறிப்பிடுகிறார்.

திருஆவடுதுறை

இது அகத்துறையாக மண்டலித்துவரும் ஓர் அந்தாதிப்பதிகம். ஊரின் பெயர் சாந்தை (சாத்தனூர்) என்றும் கோயிலின் பெயர் ஆவடுதுறை என்றும் பாடுகிருர். ஆவடுதுறை நம்பி, மணவாள நம்பி என்று சொல்வார். பதிகம் தலைவி நிலை கண்டு தாய் இரங்கு வதாக உள்ளது. 'முனி கோடி கோடியாம் மூர்த்தியும்' என்ற தொடர் நவகோடி சித்தபுரம் என்ற இத்தலப் பெயரைக் குறிப்பது போலும். இதன் இறுதிப் பாடலில் உள்ள 'பாலும் அமுதமும், சேலும் கயலும் திளைக்கும்' என்னும் தொடர்களை இவரே தமது திருப்பல்லாண்டின் எட்டாம் பாடலில் அமைத்துப் பாடியிருக்கிருர். இங்கு வரும் தருணேந்து சேகரன் என்ற தொடர்பற்றிப் பின்பு குறிப்பிடுவோம்.

திருவிடைக்கழி

இப் பதிகம் தனிச்சிறப்புடையது. இது, இத் தலத்தில் தல விருட்சமான குராமரத்தினடியில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான்மீது பாடப்பெற்றது ஆகும். இதுவும் அகத்துறையில் மண்டலித்து வரும் அந்தாதியாக உள்ளது. தலைவி நிலை கண்டு தாய் இரங்குவது. இங்கு முருகனுடைய பல பெயர்களையும் குறிப் பிடுகிருர். மலைமகள் மகன், குமரவேள், வள்ளி மணாளன், சேந்தன், அழகன், யானைக்கும் குழகன், கோழிக் கொடியோன், சேனைக்காப்பவன், சுப்பிரமண்ணியன், சூர்தடிந்தோன், கணபதி இளங்கிளை, கங்கை சிறுவன், வேலன், மால் மருகன், முருகவேள், அறுமுகத்தமுது என்று சொல்லி, 'தொகைமிகு நாமத்தவன்' என்று முடிக்கிருர். 'துடியிடை மடல் தொடங்கினள் ஆயினும் தன் அடிமுணித் தொங்கல் புற இதழ் ஆகிலும் அருளான்' என்று தாய் கூறுவது மிக்க நயமாக உள்ளது. முதற்பதிகத்தில் கூட, சேந்தன் தாதை என்று குறிப்பிடுவது, முருகனிடத்தில் இவருக் குள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்துகிறது. பதினொராந் திருமுறையில் தான் முருகனைக் குறித்த பிரபந்தம் உள்ளதே தவிர, பத்துத் திருமுறைகள் வரையில் இவ்வொரு பிரபந்தமே சிவபிரானையன்றி வேறு தெய்வத்தைக் குறிப்பிட்டுப் புகழ்வது.

இப் பதிகம் பத்தாம் பாடலில் திருப்பிடவூர் என்ற தலத்தைக் குறிப்பிடுகிருர். இவ்வூர் திருவிடைக்கழிக்கருகில் இருந்து ஆற்று வெள்ளத்தால் அழிந்தது என்றும் அங்கிருந்த மூர்த்தி வடிவங்களை இவ்வூர் ஆலயத்தில் கொண்டுவந்து வைத்துவிட்டனர் என்றும் சொல்வர். 'கோயில் மல்கு நன்குன்றப் பொழில் வளர் மகிழ்திருப் பிடவூர் மருண்டமான் விழியாருக்கு அருள்செயா விடுமே' என்று பிடவூரில் வாழ்ந்து முருகனிடத்துக் காதல் கொண்ட மங்கை யருக்கு அவன் அருள் செய்வான் என்ற ஓர் உறுதிப்பாட்டைத்

தாய் குறிப்பிடுகிருள். திருவிடைக் கழியைப் பாடியவிடத்துப் பிடவூரையும் குறிப்பிடுவதால், சேந்தனுருக்குப் பிடவூரோடு வாழ்க்கைத் தொடர்பு உண்டென்று கருதத் தோன்றுகிறது. தில்லைத் தொடர்பினுல் இவர் ஊராகிய செப்புறை[1] தில்லைக் கருகில் இருக்கலாமென்று குறிப்பிட்டோம்; இது தில்லை, பிடவூர் ஆகிய இரண்டில் ஒன்றுக்கு அருகில் இருக்கலாம் போலும். பிடவூரானது பிடையூர் (பொடையூர்) என்று இப்போது வழங்கு கிறது. பிடவூர், பெரியபுராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. கயிலையில் சிவசந்நிதியில் சேரமான் பெருமாள் விண்ணப்பம் செய்த திருக்கைலாய ஞான உலாவை மாசாத்தனுர் கேட்டு நிலவுலகில் பிடவூரில் வெளிப்படுத்தினுர் என்பது அங்குச் சொல் லப்பட்ட செய்தி; அப் பிடவூர் வேறு; திரிச்சிராப்பள்ளியருகில் உள்ளது.

புறநானூற்றில் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன், குராப்பள்ளித் துஞ்சிய பெருமாவளவன் என இருவர்[2] குறிப்பிடப்பட்டுள்ளனர். அக் குராப்பள்ளி (குரா தல விருட்சமாக வுள்ள) இத் தலமே என்பது அறிஞர் கருத்து.

## திருப்பல்லாண்டு

காலத்துக்கு அப்பாற்பட்டவனுய், ஆதியும் அந்தமுமில்லாத வனுயுள்ள முழுமுதற் பொருளை ஓர் ஆலயத்தில் திருவுருக் கொண் டெழுந்தருளிய பெருமானுகே வழிபடுங்காலத்து, உலகத்து மக்கள் தாம் விரும்பியனவெல்லாம் அவனுக்குக் கொடுத்து மகிழ்வது போல, தாங்கள் நீடு வாழ வேண்டும் என்ற விருப்பத்தால் அவனையே 'நீடு வாழ்க' என்று வாழ்த்திவந்திருக்கிருர்கள். 'வாழ்த்துவதும் தாம் வாழ்வான்' என்ற மாணிக்கவாசகர் பாடல் இங்கு ஒருபுடை கருதத்தக்கது. நீடு வாழ்க என்று வாழ்த்துவது, பல்லாண்டு பாடுவதென்று பெயர் பெற்றிருக்கிறது. அகப் பொருளில், பிரிந்து சென்ற தோழியர் தலைவியை மீண்டும் வந்து கூடும்போது, 'போற்றும் பல்லாண்டும் கூறுவர்' என்று இறை

---

1. 11-ஆம் பாடல் செப்புறையைக் குறிப்பிடுகிறது. செப்புறை என்ற சொல்லுக்குப் பதில் சிலர் செப்புதல் என்றும் அச்சிட்டிருக்கிருர்கள்; செழும் புனல் என்றும் ஒரு பாடபேதம் ஏடுகளில் காணப்படுகிறது. எனினும், திருப் பல்லாண்டின் இறுதிப் பாடலையும் நோக்க, செப்புறை என்பதே பாடமாதல் வேண்டும்.

2. புறநானூறு, 58, 60, 197, 373.

யனர் களவியல் கூறுகிறது. பல்லாண்டு பாடுவதைத் திருவாரூர்ப் பதிகத்தில் அப்பர் சுவாமிகள் குறிப்பிடுகிருர்.[1]

……… தழலாய நம்பானைப்
பாடுவார் பணிவார் பல்லாண்டிசை
கூறுபத்தர்கள் சித்தத்துள்புக்குத்
தேடிக் கண்டுகொண்டேன் திருவாரூர் அம்மானே

என்பது காணத்தக்கது. இங்கு பத்தர்கள் பல்லாண்டிசை கூறுவர் என்று குறிப்பிட்ட போதிலும், தனியான பல்லாண்டுப் பாடல் இருந்ததாகத் தெரியவில்லை.

அடுத்த காலத்தில் வைணவ சமயத்தில் வந்த பெரியாழ்வார் பல்லாண்டு பாடிய செய்தி நன்கறிந்ததொன்று. உலாவந்த திருமாலைப் பார்த்து, உலகத்தார் கண்ணேறுபடக் கூடாதென்ற கருத்தோடு அவர் திருப்பல்லாண்டு பாடினர். இது 12 பாடல்கள் உடையது. பெரியாழ்வார் பாடிய இப் பிரபந்தம் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் முதற் பகுதியாக அமைக்கப் பெற்றுள்ளமை அதன் பெருஞ் சிறப்பை நன்கு புலப்படுத்தும். இது வைணவ நித்தியானுசந்தானத்திலும் ஒரு பகுதியாகும். இதன் பாடல்களின், முடிவு பல்லாண்டே, பல்லாண்டு கூறுமினே என்று பலவகையாக அமைந்துள்ளது. இதனுள் ஆழ்வார் சரித நிகழ்ச்சி பெற்ற மதுரையும், ஆசியர் ஊராகிய வில்லிபுத்தூரும் குறிப்பிட்டுள்ளனவே அன்றி, வேறு தலக் குறிப்பு இல்லை.

அடுத்துத் தோன்றியது சிவபரமாகச் சேந்தனர் பாடிய திருப் பல்லாண்டு. இது தில்லைக்கென்றே பாடப்பெற்றது. வரலாற்றை முன்னே கூறினேம். பாடல் தொகை 13. ‘மன்னுக தில்லை என்று தலப்பெயரோடு இது தொடங்குகிறது.

பிற்காலத்தில் தத்துவராயர் தமது ஆசிரியர் மீது இரு பல்லாண்டுகள்[2] பாடினர். இவை அவருடைய பாடுதுறையில் அடங்கியுள்ளன. பாடல்கள் முறையே 5, 15. முதல் பகுதி பல்லாண்டோத வாரீர் என்பதை ஒவ்வோர் அடியிலும் மகுடமாக உடையது. இரண்டாம் பகுதி ஐந்தடியாய் ஈற்றடியின் மிக்கு வந்த கலித்தாழிசையாய் அமைந்துள்ளது.

இனி, சேந்தனர் பல்லாண்டை ஆராயுமிடத்து, பல செய்திகளை அங்குக் காண்கிரேம். ‘சிவன் சீரடியரர் அடிநாய்

1. அப்பர், 4, 20, 10.
2. தத்துவராயர் பாடுதுறை, பிரபந்தம் 20.

செப்புறை ஆனந்தச் சேந்தன்' என்று இவர் கூறுவது இவருடைய பணிவையும் பக்குவ முதிர்வையும் நன்கு புலப்படுத்தும். 'அந்தமில் ஆனந்தச் சேந்தன்' என்பது அளவில்லாத ஆனந்தம் பெற்ற சேந்தன் என்று பொருள் பெற்றாலுங்கூட, ஆனந்தன் மகன் சேந்தன் என்ற ஒரு தொடர்பையும் புலப்படுத்தக் கூடியது போல் தோன்றுகிறது.

காலங்கடந்த இறைவனுக்குத் தாம் பல்லாண்டு கூறுதல் எவ்வாறு பொருந்தும் என்ற கேள்விக்குச் சேந்தனார்,

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்ததூமனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதம்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.[1]

என்று தாமே விடை கூறுகின்றார். 'பொன்னின் செய் மண்டபம்' என்று இவர் பாடியிருப்பது பராந்தக சோழன் பொன் வேய்ந்த வரலாற்றுச் செய்தியை நினைந்து பாடியதாகும். பதினோராம் பாடலில், 'திருவாரூரின் மழவிடையாருக்கு வழிவழியாளாய் மணம் செய் குடிப் பிறந்த பழ அடியார்' என்பது இறைவனால் அடிமை ஓலை காட்டி ஒரு மணத்தை நிறுத்தித் தடுத்தாட்கொள்ளப்பட்டு, மீண்டும் இருமணம் கொண்டருளிய நம்பியாரூரரைக் குறிக்கும் என்பர். ஆரூரரைக் குறிப்பிட்டமை போலவே, மாணிக்கவாசகரை நினைக்குமாறு அவர் பாடலை எடுத்து அமைத்திருக்கவும் காண்கிறோம். திருவாசகத் திருப்பூவல்லியில்,

எந்தை யெந்தாய் சுற்றம் முற்றுமெல்லாம் என்னுடைய
பந்தமறுத் தென்னை யாண்டுகொண்ட பாண்டிப் பிரான்[2]

என்றுள்ள அடிகளை இவர் நன்குணர்ந்து,

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர் அடியார்.[3]

என்று அமைத்துப் பாடியிருப்பது குறிப்பிடத் தகும். இங்கு 'சீர் அடியார்' என்பது மாணிக்கவாசகரை மனத்துட் கொண்டது என்று ஆன்றோர் சொல்லியுள்ளனர். இங்ஙனமாக, திருவீழிமிழலைத்

---

1. திருப்பல்லாண்டு, 4.
2. திருவாசகம், 13, 2.
3. திருப்பல்லாண்டு, 13.

திருவிசைப்பாவில் அப்பரையும் சம்பந்தரையும் பெருமக்கள் என்று குறிப்பிட்டவர், இங்கு நம்பியாரூரரையும், திருவாதவூரரையும் குறிப்பிட்டதை நோக்கும்போது, இவர் நால்வர் என்ற சமயாசாரியர் மரபைத் தமது காலத்திலேயே நன்கு விளக்கம்பெற உணர்ந்திருக்கிருர் என்று தெரிகிறது.

இப்பாடல் திருவாதிரை விழாவில் பாடப்பட்டது என்பதற்கும், எல்லோரும் கூடியிருந்த சமயத்தில் இவர் பாடினூர் என்ற வரலாறுகளுக்கும், இப் பாடலே சான்ருகும்:

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்,
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு, நான்முகன், அங்கி,
இரவியும், இந்திரனும்,
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.[1]

உபமன்னியுவுக்குப் பாற்கடல் ஈந்தது, மாலுக்குச் சக்கரம் ஈந்தது, சண்டிக்கு அருளியது ஆகிய செய்திகளைக் குறிப்பிடுகிருர். சண்டேசுரருக்கு அருள்செய்த திறத்தைப் ‘பாதகத்துக்குப் பொற்கோயில், போனகம், மணிமுடி, தாமம், தொண்டர்க்கு நாயகம் என ஐந்து வகைப் பரிசு வைத்தான்’ என்று இவர் நயம்படக் கூறுகின்ருர்.

தாதையைத் தாளறவீசிய சண்டிக்கிவ்
அண்டத் தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பிற்காலத்தில் இராசராசன், இராசேந்திரன் முதலியோர் ஆட்சியில் சோழர் கப்பற்படை கடல் கடந்து சென்று கீழ்த் திசையில் உள்ள சீயம் முதலிய நாடுகளை யெல்லாம் வென்று அங்கு சைவ சமயத்தையும் தமிழர் நாகரிகத்தையும் பரப்பிற்று.

1. திருப்பல்லாண்டு, 12.

சீயம் மன்னர் முடிசூட்டும் விழாவில் பல்லாண்டு பாடும் வழக்கம் அப்போது ஏற்பட்டது. 'மன்னுக தில்லை' என்ற தொடக்க முடைய சேந்தனுர் பல்லாண்டை அங்குப் பாடி வந்தார்கள். சீயத்தாருக்குத் தமிழ் அன்னிய மொழியாதலால் சொல்லின் வடிவம் சிதைந்து, பல்லாண்டு பாடுதல் என்பது 'லாண்டுபாடுதல்' என்ற பெயரில் இன்னும் வழக்கில் உள்ளது என்று அறிகிறோம். இந்த லாண்டும், 'மன்னுக தில்லை' என்றே தொடங்குகிறது.[1]

திருப்பல்லாண்டில் இரண்டாம் பாடல், சிவபெருமான் பெயரையும் சொல்லவில்லை, அவருக்குரிய நீலகண்டம் திருநீறு முதலிய அடையாளம் எதையும் சொல்லவில்லை, ஈசன் என்று மட்டுமே குறிப்பிடுகிறது என்று பொது நோக்கு அறிந்து மகிழத் தக்கது :

மிண்டு மனத்தவர் போமின்கள், மெய்யடி
    யார்கள் விரைந்து வம்மின்,
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்குஆட்
    செய்ம்மின், குழாம்பு குந்து,
அண்டங் கடந்த பொருள், அளவில்லதோர்
    ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும்என்றும் உள்ளபொருள் என்றே
    பல்லாண்டு கூறுதுமே.[2]

## கண்டராதித்தர் பாடல்

இவர் பாடிய பதிகம் திருவிசைப்பாத் தொகுதியில் 20-ஆம் பதிகமாக உள்ளது ; பஞ்சமப் பண்ணில் அமைந்தது. (ஓர் ஏட்டுப் பிரதியில் சாளரபாணம் என்று எழுதப்பட்டுள்ளது.) எல்லாப் பாடல்களிலும், 'தில்லை மல்கு செம்பொன் அம்பலத்துள் ஒளி வான் சுடரே உன்னை நாயேன் உறுவதும் என்றுகொலோ ?' என்று கேட்பது போலவே பாடுகிருர். சிவஞான கண்டராதித்தர் என்று சாசனம் கூறுவது இக் கருத்துக்குப் பொருத்தமாக உள்ளது. ஆரும் பாடலில் 'கார்மிடற்றெம் கண்டனுரைக் காண்பதும் என்று கொலோ ?' என்று இவர் இரங்குமிடத்து, தொனியால் தம் பெயராகிய கண்டர் ஆதித்தர் என்பதைப் புலப்படுத்துவது போல் உள்ளது. இறுதிப் பாடல் பல சுருதி. தம்மைச் 'சோழவேந்தன், தஞ்சையர்கோன், கண்டராதித்தன் என்றும், தம் பாடலை, 'ஆரா இன்சொல் அருந்தமிழ் மாலை' என்றும் சொல்கிருர்.

---

1. சைவ இலக்கிய வரலாறு, ஔவை - துரைசாமிப் பிள்ளை.

2. திருப்பல்லாண்டு, 2.

நடராசப் பெருமானை, 'அம்பலத்தாடி' என்கிறார். வண்டு தென்னாவென்றும் தெத்தே என்றும் பாடும். தில்லை அந்தணாளர் மூவாயிரவர். அம்பலத்தின் முன்னே, 'கங்கை காதலனே அருள்' என்று மால் வரங்கிடக்கிறான். பதஞ்சலிக்கு ஆட்சி தந்தான், மலையொத்த இலங்கை வேந்தன் இருபது தோளும் இறச் செய்து அவனுக்கே வாளோடு நாள் கொடுத்தான்—என்பன இவர் கூறும் செய்திகள் சில. தம் தந்தையாகிய பராந்தக சோழன் தில்லையம் பலத்தைப் பொன் வேய்ந்த செய்தியை விளக்கமாகக் குறிப்பிடு கிறார்.

வெங்கோல் வேந்தன் தென்னன் நாடும்
ஈழமுங் கொண்டதிறல்
செங்கோற் சோழன் கோழி வேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடும்
அணிதில்லை அம்பலத்துள்
எங்கோன் ஈசன் எம்மிறையை
என்றுகொல் எய்துவதே ?[1]

முதற் பராந்தக பாண்டிய மன்னனையும், ஈழ நாட்டு மன்னனையும் வெற்றி கொண்ட பெரு வீரம் படைத்தவர். தில்லை யம்பலத்தைப் பொன்னணிந்தது, வீரத்தோடு இணைந்திருந்த அவரது பக்திச் சிறப்பையும் காட்டுகிறது. இவற்றாலேயே புதல்வ ரான கண்டராதித்தரும் சிவபக்திச் செல்வராய்த் திருவிசைப்பாப் பாடும் பக்குவம் பெற்றார். முன் வரலாற்றில் குறிப்பிட்டபடி ஒரு கால் இவர் தந்தை பொன் வேய்ந்த காலத்துத் தில்லையிலேயே தங்கி நடராசப்பெருமானிடத்தில் ஈடுபட்டிருந்து, பின்னால் முடி சூடிக்கொண்ட பிறகு, தில்லைக்குச் சென்று பெருமானிடத்து இப் பதிகத்தை விண்ணப்பித்தார் போலும். பின் வருவது இப் பதிகப் பாடல்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும் :

'களிவானுலகிற் கங்கை நங்கை
காதலனே, அருள்' என்று
ஒளிமால் முன்னே வரங்கிடக்க,
உன்னடியார்க் கருளும்
தெளிவாரமுதே! தில்லைமல்கு
செம்பொனின் அம்பலத்துள்
ஒளிவான் சுடரே! உன்னைநாயேன்
உறுவதும் என்றுகொலோ ?[2]

1. திருவிசைப்பா, பதிகம் 20, 8.
2. திருவிசைப்பா, பதிகம் 5.

எனினும் இங்கு ஒரு கருத்தைச் சொல்வது பொருத்தமாயிருக்கும். இவர் பாடிய பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் முடிபும் தொகுப்பாய் இங்குக் கருதத் தக்கது. 'தில்லையம்பலத்தின் என்னுரமுதை எங்கள் கோவை என்றுகொல் எய்துவதே'; உன்றன் கூத்துக் காணக் கூடுவதென்றுகொலோ; உன்றன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ; கூடுவது என்றுகொலோ; உன்னை நாயேன் உறுவதும் என்றுகொலோ; கண்டனுரைக் காண்பதும் என்றுகொலோ; மறிபொற் கையினுனைக் காண்பதும் என்றுகொலோ; எம்மிறையை என்றுகொல் எய்துவதே; கொன்றை மாலையானைக் காண்பதும் என்றுகொலோ; கண்டராதித்தன் அருந்தமிழ் மாலை வல்லார் பேராவுலகிற் பேரின்பம் எய்துவரே— என்பன, பத்தும் பாடல்களின் முடிவுகளும். என்று உன்னைக் காண்பேன், எய்துவேன், உன் கூத்தை என்று காண்பேன் என்று ஏங்குகிருர். ஏன்? இவர் அம்பலம் பொன் வேய்ந்த திருப்பணியை மேற்பார்வை செய்துகொண்டு தினமும் கூத்துத் தரிசனம் செய்தவராயிற்றே ?

இதற்கு ஒரே விடைதான் உண்டு. தில்லைத் திருப்பணியை மேற்பார்வை செய்த காலத்தில் பிறரை நடராசப் பெருமானிடத்தில் ஆற்றுப்படுத்திப் பதிகம் பாடச்செய்தார். தாம் பாடவில்லை. தாம் சிவபக்திச் செல்வராய் மட்டும் வாழ்ந்தார். பின்னர் தமையன் இறக்கவும், தாம் இளவரசராகித் தஞ்சையில் தந்தையாகிய அரசரோடு வாழும் நிலை ஏற்பட்டது; மூன்று ஆண்டுகளில் (953) தந்தையும் இறந்தார். தாம் தஞ்சை சென்று முடி சூடிக்கொண்டார். சோழ ஆட்சியை விட்டு முன்போல் தில்லையிலேயே வந்து தங்கி எந்த நேரமும் பெருமானைத் துதித்துக் கொண்டிருக்க முடியவில்லை. காரணம் அரசின் நிலைமை. சோழ அரசில் அப்போது போரும் குழப்பங்களும் மிகுந்திருந்தபடியால் மன்னர் தலைநகரைவிட்டு வெளியே போய்த் தங்குவது இயல்வதொன்றன்று. ஆகவேதான், கண்டராதித்தர் தம் மனத்திலெழுந்த ஏக்கம் முழுவதையும் கொட்டி இவ்வாறு, 'தில்லைச் செம்பொன் அம்பலத்து ஆடுகின்ற காரார் மிடற்று எம் கண்டனுரைக் காண்பதும் என்றுகொலோ?' என்று பாடுகிருர். அவர் ஆட்சியிலிருந்த நான்கு ஆண்டுக் காலமும் அவர் தில்லை சென்று கூத்தப் பெருமானைத் தரிசிக்கும் வாய்ப்பே கிடைக்கவில்லை என்று கருத வேண்டும்.

இதுகாறும் நாம் கூறியவற்றைத் தொகுத்துச் சொல்வோம். கண்டராதித்தர் தம் தந்தை பராந்தக சோழர் தில்லையைப் பொன் வேய்ந்த காலத்து ஆங்குத் தங்கி மேற்பார்வை செய்தார். இதனுல் பக்தி உணர்வு பெருகி அங்கு வந்த அடியார் பலரை

நடராசப்பெருமான் மீது இசைப் பாடச் செய்தார். திருமாளிகைத் தேவர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார் இவ்வாறு பாடினார்கள். இவரே வழக்கமாய்த் தாம் கேட்கும் நடராசப் பெருமானுடைய திருச்சிலம்போசை கிடைக்காதபோது வருந்தி சேந்தனாரையும் அவரது களி நிவேதனத்தையும் காணப்பெற்றார். அச் சமயம் பல்லாண்டும் சேந்தனாரால் பாடப்பெற்றது. பின்னர், தந்தை இறக்கவே இவர் அரசராகி, தினமும் பெருமான் நடனத்தைக் காணும்பேறு இழந்தமை குறித்து வருந்தி மீண்டும் காண்பதெப்போது என்று ஒரு திருவிசைப்பாப் பாடினார். இவர் சிவபதம் அடைந்தபின் இவரது மனைவியாரான செம்பியன் மாதேவியார் கணவன் வழி நின்று கருவூர்த்தேவர் பூந்துருத்தி நம்பி, புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகியோரையும் தில்லையில் ஆற்றுப்படுத்தித் திருவிசைப்பாப் பாடச்செய்தார். திருவிசைப்பாத் திருப்பல்லாண்டு ஆகிய ஒன்பதாம் திருமுறையானது கண்டராதித்தர், அவர் மனைவி செம்பியன் மாதேவியார் ஆகிய இருவர் தூண்டுகோலால்தான் தோன்றிற்று; தோன்றிய காலம் 940—1040 ஆகிய நூறு ஆண்டுக் காலமே என்ற பொருள்கள் இதுவரை சொல்லப்பட்டன.

## வேணாட்டடிகள் பாடல்

இவர் பாடியது திருவிசைப்பா 21-ஆம் பதிகம் ஒன்றே. இது தில்லைக்குரியது இப் பதிகம் புறநீர்மைப் பண்ணில் அமைந்தது. எல்லாப் பாடல்களும் 'திருத்தில்லை நடம் பயிலும் நம்பானே' என்பதை மகுடமாக உடையன. இறைவனிடத்து நேர்முகமாக உரையாடுவது போலப் பாடல்களைப் பாடியிருக்கிறார். 'நடம் பயிலும் பெருமானே, புதியவர்களுடைய பணியை உகந்து பழைய அடியவனாகிய என்னைக் கைவிடுகின்றாய். எனக்கு எந்த விதச் சார்வும் இல்லை. என்னை மிகவும் நீ சோதிக்கின்றாய். ஒருவருக்குக் கருணையும் மற்றவருக்கு மறமும் காட்டுகின்றாய். உன் திருவடியை நான் வந்து பொருந்தும் நாள் என்று?' என்பதே இவர் பாடிய பாடல்களின் தொகுப்பான கருத்தாகும்.

மூன்றாம் பாடலில் சிவபிரானது அருட் சக்தியை, 'எனையுடையாள்' என்று குறிப்பிட்டு, 'சிவபெருமான் அருள்பாலிக்க இசையானாயினும் எனையுடையாளும் உரையாடாள் (கருணைசெய்யாள்)' என்று இவர் கூறுவது புதுமையாக உள்ளது.

இவருடைய பாடல்களில் பழமொழிகள் அதிகம் பயில்கின்றன 'தம்பானை சாய்ப்பற்றார் என்னும் முதுசொல்' (பழமொழி) என்றே இவரும் குறிப்பிடுகிறார். பின் வருவன சில பழமொழிகள்: ஆளுகப்பார் துச்சான செய்திடினும் பொறுப்பார்; சிறு கதலி

இலை வேம்பும் கைச் சாலும் கறி கொள்வர்; தம்பானை சாய்ப் பற்ருர்; பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளம்; கன்று பிரி கற்ருப் போல் கதறுவித்தி; இடுவது புல் ஓர் எருதுக்கு ஒன்றி னுக்கு வை இடுதல் நடு இதுவோ—என்பன காண்க. இவர் பாடல்களில் அருஞ்சொற்கள் பல வழங்குகின்றன. துச்சு (தாழ்வு), கைச்சாலும், பேழ்கணித்தல் (அலமருதல்), என்பித் தாய் (என்று சொல்வித்தாய்), மிடவயிறு என்ற சொற்கள் காண்க. பேழ்கணித்தல் என்ற சொல் தேவார திருவாசகங்களில் அருகி வழங்குகின்றது. மிடா என்ற சொல் சிந்தாமணியில் வருகிறது; மிடவயிறு—மிடா போன்ற வயிறு. தமிழ் நாட்டின் ஒரு மூலையில் ஒதுங்கின பகுதிக்கு உரியவர் ஆதலால் இவர் பாடலில் அருஞ் சொற்கள் வந்துள்ளன போலும். இவை இவர் பகுதிக்குமட்டும் உரியனவா என்பது கருதத்தக்கது.

விநாயகரைப் ‘படு மதமும் மிடவயிறும் உடைய களிறு’ என்பார். அகத்தியனுக்கு ஓத்துரைத்தது, மால் அயன் காணுமை என்ற வரலாறுகள் கூறுகின்ருர்.

வாளாமால் அயன்வீழ்ந்து காண்பரிய மாண்பிதனைத்
தோளாரக் கையாரத் துணையாரத் தொழுதாலும்,
ஆளாநீ உடையதுவும், அடியேன் உனதாள் சேரும்
நாளேதோ? திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே![1]

இறுதிப் பாடலில் இவர் வேண்டுவது குறிப்பிடத் தக்கது. ‘தில்லைக் கூத்தனே, நீ அருளிலையாளுல் இவ்வுடல் நீங்கியேனும் உனது திருவடியை அடைவேன், உன்னுல் தடுக்க இயலாது’ என்று கூறுகிருர்:

பாவார்ந்த தமிழ்மாலை பத்தரடித் தொண்டன் எடுத்து
ஓவாதே அழைக்கின்ருன் என்றருளின் நன்றுமிக;
தேவே, தென் திருத்தில்லைக் கூத்தாட, நாயடியேன்
சாவாயும் நினைக்காண்டல் இனியுனக்குத் தடுப்பரிதே.[2]

இது அப்பர் தேவாரத்திலிருந்து எடுத்தது என்பது வெளிப்படை.

சிவனெனும் நாமந் தனக்கே யுடையசெம் மேனிஎம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகில் அவன்றனையான்
பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்துபன் னுளழைத்தால்
இவனெனைப் பன்னுள் அழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே.[3]

---

1. திருவிசைப்பா, 21, 9.
2. திருவிசைப்பா, 10.
3. அப்பர் தேவாரம், 4, 112, 9.

## திருவாலி அமுதனார் பாடல்

இவர் பாடியவை நான்கு பதிகங்கள் : 22—25. முதல் பதிகம் தில்லையம்பலத்தானைப் பாதாதிகேசமாகத் துதிப்பது. மூன்றும் பதிகம், பெருமான் ஆடும் நடனத்தை வருணிப்பது. மற்ற இரண்டும் அந்தாதியாய் அகத்துறையில் அமைந்தவை; இவை முறையே நட்டராகப் பண்ணிலும், இந்தளப் பண்ணிலும் உள்ளன, மற்ற இரண்டும் பஞ்சமப் பண். முதல் பதிகம் பாதாதி கேசம். பாதம், கழல், சிலம்பு, கிண்கிணி, பொன் நூல், கச்சு, திருவயிறு, உந்திவான் சுழி, விடங்கொள் கண்டம், காதும் தோடும், திருமுகமும் நெற்றி நாட்டமும், பிறையுடைய சென்னி ஆகிய உறுப்புக்களைத் துதிக்கின்றார்; இதுவும் அகத்துறை என்றே சொல்லத்தக்கது. இவற்றுள் முதல் பதிகம் 1, 2, 3, 5, 6 ஆகிய பாடல்கள் 'சிந்தை உள்ளிடம் கொண்டனவே' என்ற தொடரை மகுடமாக உடையன. இப் பதிகமும் அகத்துறைப் பதிகம் என்று கருதத்தக்கது. உமாதேவி காணக் கூத்து ஆடுதல், யானையை உரித்து உமையை அஞ்சுவித்தல், பாம்பணையானும் பிரமனும் அருள் என்று தொழுதல், புரம் எரித்தல் ஆகிய செய்திகள் இங்குச் சொல்லப்பட்டுள்ளன. பத்தாம் பாடலில் சிவபெருமான் சென்னியில் அகத்தி மொட்டொடு மத்தமும் சூடி யிருக்கிறார் என்று இவர் சொல்லுகிறார்; அகத்தி சூடிய செய்தி சம்பந்தர் திருத்துருத்தித் தேவாரத்தில், 'அடுத்தடுத்து அகத்தி யோடு வன்னி கொன்றை கூவிளம் தொடுத்து உடன் சடைப் பெய் தாய்' என்று[1] அருமையாய்க் காணப்படுகிறது. வேறிடத்தில் இதைக் காணுதல் அரிது. முதல் பதிகத்தின் யாப்பமைதி விளக்கமாயில்லை. இதன் பாடல்களில் முதலடியும் மூன்றுமடியும் எழு சீராயும், இரண்டாமடியும் நான்காமடியும் ஐஞ்சீராயும் இருப்பன போலும்.

இரண்டாம் பதிகம்[2] தில்லைத் திருநடம் கண்டு பெருமானிடம் மனத்தைச் செலுத்திய தலைவி கூற்றாக அமைந்துள்ளது. மன்மத னால் தான்படும் துன்பமும் தன் உடலில் விளைந்துள்ள மெய்ப்பாடு களும் அவள் விளக்கி உரைக்கிறாள். சிலந்திக்கு அரசு ஈந்தது, மார்க்கண்டனுக்காகக் காலனை உதைத்தது ஆகிய வரலாறுகள்

---

1. சம்பந்தர் திருத்துருத்திப் பதிகம், 2, 98, 2.

2. இதன் இறுதிப் பாடலில், 'காதலித்து இளையவள் மொழியாக' என்றே பலரும் பாடங்கொண்டுள்ளனர். நாலாம் பதிகத்தின் இறுதிப் பாடலில், 'இளையாள்மொழி' என்றே இருப்பதால், இங்கும் 'இளையவள் மொழியாக' என்றே இருத்தற்குரியது.

சொல்லப்பட்டுள்ளன. பெரும்பற்றப் புலியூர் என்ற தலப்பெயரும் இங்குச் சொல்லப்படுகிறது.

மூன்ரும் பதிகம் பெருமானுடைய நடனத்தைச் சிறப்பித்துப் பாடுவது. இப் பதிகம் காரைக்கால் அம்மையார் திருவாலங் காட்டில் பாடிய இரண்டாம் பதிகத்தை ஒத்தது. அப் பதிகமானது பேய்கள் சூழ இறைவன் மயானத்தில் ஆடும் ஆடலை விரித்துப் பாடியதாகும். ஆனல் அமுதனர் பாடிய பதிகம் அவ்வாறு இன்றித் தில்லையில் மறையோரும் வானேரும் ஏத்த ஆடுகின்ற ஆட்டத்தை வருணிக்கிறது. தில்லையில் வழிபடும் அந்தணரைப் 'பல்லாயிரம் பதஞ்சலிகள்' என்று கூறுகிருர். சிற்றம்பலத்தில் தென்னன் தமிழும் இசையும் கலந்துள்ளது. பெருமான் வலக்கை கவித்து நின்று ஆடுகின்ருன், வெள்ளாறு ஆகிய நிவா நதியின் கரையில் தில்லை உள்ளது; மாலோடு அயனும் வணங்கி நிற்கி ருர்கள். சமணும் சாக்கியரும் அடையாத சிற்றம்பலம்—என்பன இவர் கூறும் சில கருத்துக்கள். 'அடிகள் அவரை ஆரூர் நம்பி அவர்கள் இசைபாட' என்கிருர். ஆரூர் நம்பி அவர்கள் என்ற தொடரை நம்பியாரூரர் முதலாயினேர் என்று பொருள் செய்ய வேண்டும் போலும்; இல்லையாயின் இவரை மட்டும் குறிப்பிடு வதில் பொருள் இல்லை. இப் பதிகத்தின் இறுதி நான்கு பாடல் களில் சம்பந்தர் பதிக அமைப்புப் போல, இராவணனை அடர்த்தது, மாலும் அயனும் தேடியது, சமணும் சாக்கியரும் வழி படாதது, தம் பாடல் பாடுவதன் பயன் ஆகியவற்றைச் சொல்லிப் பாடுவது குறிப்பிடத் தக்கது.

நான்காம் பதிகம், 'இறைவனை ஏத்துகின்ற இளையாள் மொழி இன்தமிழ்' என்று இறுதிப் பாடலில் குறிப்பிடுவதாலும் முதற் பாடலில் 'கொவ்வை வாய்க்கொடி யேரிடையீர்' என்று தோழி யரை விளித்துச் சொல்வதாலும், எட்டாம் பாடலில், 'சேர்வன் கொலோ அன்னைமீர் திகழும் மலர்ப் பாதங்களை ஆர்வங்களாகத் தழுவி அணி நீறு என் முலைக்கு அணிய' என்று சொல்வதாலும், இதுவும் அகத்துறைப் பதிகம் என்றே கருதவேண்டும். பிற பாடல்கள் இறைவனுடைய அருளை வேண்டுகின்ற அடியவருடைய கூற்ருகவே உள்ளன. பெண்ணின் கூற்ருகக் கொள்வதும் பொருந்தும். சிற்றம்பலத்து இறையைக் காணவேண்டும், அவனடியைச் சேரவேண்டும் என்பதே பாடலின் கருத்து.

இவர் பாடல்களுக்கு எடுத்துக் காட்டாகப் பின்வரும் பாடல் காண்க :

காண்பதுயான் என்றுகொல் கதிர்மாமணி யைக்கனலை
ஆண்பெண் அருவுருவென் றறிதற்கரி தாயவனைச்
சேண்பணை மாளிகைசூழ் தில்லைமாநகர்ச் சிற்றம்பலம்
மாண்புடை மாநடஞ்செய் மறையோன்மலர்ப் பாதங்களே.

## பூந்துருத்தி நம்பி காடநம்பி பாடல்

இவர் பாடிய பதிகங்கள் இரண்டு—18, 19; திருவாரூர், தில்லை. திருவாரூர்த் திருவிசைப்பாவின் பாடல்கள் இரண்டே. இரண்டு பாடல்களிலும் பெருமான், 'ஆரூர் ஆதியாய், வீதி விடங்கராய், நடம் குலாவினரே' என்று பாடுகிறார். ஆரூர்த் தியாகருடைய இருந்தாடும் நடனம் என்னும் அசபா நடனத்தை இது குறிப்பிடுகின்றது.

இரண்டாம் பதிகத்தில் நடராசப் பெருமானுடைய திருக் கூத்தையே போற்றுகின்றார். 'ஆடகத்தால் மேய்ந்து அமைந்த அம்பலம்' என்று[1] முதற் பராந்தக சோழன் தில்லையைப் பொன் வேய்ந்த வரலாற்றைக் குறிப்பிடுகின்றார். கணம்புல்லர், கண்ணப்பர் என்ற இருவரையும் ஆட்கொண்ட செய்தியை இரண்டாம் பாடல் கூறுகின்றது. திருநாவுக்கரசர் திருவாமூரில் பிறந்தவர் என்பதையும், அவரைச் சைவ நெறியில் சிவபெருமான் சார்வித்தார் என்பதையும் (ஆமூர் நாவுக்கரசைச் செல்ல நெறி வகுத்த சேவகனே) கூறுகின்றார். அடுத்து 'எம் பந்த வல்வினைநோய் தீர்த்திட்டு எமையாளும்—சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட்கொண்டருளி' என்று[2] இவர் குறிப்பிடுவதை, தாயுமான சுவாமிகள் எந்நாட் கண்ணியில் எடுத்து வைத்திருக்கிறார்:

> வெம்பந்தம் தீர்த்துலகாள் வேந்தன் திருஞான
> சம்பந்தனை அருளால் சாரும்நாள் எந்நாளோ![3]

சேரமானும், ஆரூரனும் கயிலாய உடலோடு கைலாயம் சென்றதையும், ஆரூரர் வெள்ளானை மேல்கொண்டு சென்றதையும் அடுத்த பாடலில் கூறுகின்றார். இங்கு இவர் கணம்புல்லர், கண்ணப்பர், நாவுக்கரசு, சம்பந்தர், சேரமான், ஆரூரர் ஆகியோரை முறையாகக் குறிப்பிடுவது கால முறைப்படி அமைந்திருக்கிறது. 'அடியவர்கள் தற்சூழ' என்ற இவர் பாடலில் வரும் தொடர் குலசேகர ஆழ்வார் பாடலிலும் வருகிறது. இறுதிப் பாடலில் இவருடைய தமிழ் மாலை பத்தையும் கருத்தறிந்து பாடுவது பற்றிச் சொல்வது மிக்க நயமுடையது.

---

1. திருவிசைப்பா, 19, 8.
2. திருவிசைப்பா, 4.
3. தாயுமானவர் பாடல், 44, 25.

சேடர் உறைதில்லைச் சிற்றம் பலத்தான்தன்
ஆடல் அதிசயத்தை ஆங்கறிந்து பூந்துருத்திக்
காடன் தமிழ்மாலை பத்தும் கருத்தறிந்து
பாடும் இவைவல்லார் பற்றுநிலை பற்றுவரே.[1]

இவ்வாறு இவர் தம் இரு பதிகங்களிலும் பெருமானுடைய ஆடல் அதிசயத்தில் ஈடுபட்டு அறிந்து சொல்வது இவருடைய பக்திச் சிறப்பை நன்குணர்த்துகிறது. இப் பாடல்கள் தேவாரம் பாடுவோரிடையே இன்னும் அதிக ஆட்சி பெறுதற்குரியன.

## புருடோத்தம நம்பி பாடல்

இவர் பாடியவை 26, 27 ஆகிய இரு பதிகங்கள். இரண்டும் அகத்துறையில் அமைந்தன ; அந்தாதித் தொடையாக உள்ளன. முதல் பதிகம் தலைவி கூற்றாகவும், மற்றது வளை இழந்த தலைவி இரங்கலாகவும் உள்ளது. முதல் பதிகம், பாடலின் இறுதியடியில் பாதி (நான்கு சீர்) அடுத்த பாடலின் தொடக்கமாக வருகிறது. பஞ்சமம் என்ற பண்ணை முதல் பாடலிலேயே குறிப்பிடுகிறார். அப்பர் கூறும் தொடராகிய எடுத்த பொற்பாதம், 'ஆசையை அளவறுத்தார் இங்காரே' என்ற பழமொழித் தொடர் ஆகியன இவர் பாடல்களில் பயில்கின்றன. முப்புரம், மார்க்கண்டேயன், யமன், இராவணன், மாலுக்கு ஆழி ஈந்தது ஆகிய வரலாறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இரண்டு பாடல்களில் தில்லையைத் திருச்சிற்றம்பல மென்றே பாடுகிறார். எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் குறிப்பிடலாம். 'திருச்சிற்றம்பலத் தெங்கள் செல்வனே, நீ தாயினும் மிக நல்லை என்று அடைந்தேன். என் தனிமையைக் கருதி நீ அருள் புரியவில்லை' என்று தன்னைத் தன்மையிடத்திலும், ஆடுகின்ற செல்வனை முன்னிலையிலும் வைத்துப் பாடுகின்ற தலைவி, உணர்ச்சி வேகத்தினாலே, தன்னை மறந்து பாடலைத் தொடர்ந்து படர்க்கையில் வைத்துப் பாடுவது, உள்ளத்தைப் பிழிந்து காட்டுவதுபோல் உள்ளது :

சேயிழை யார்க்கினி வாழ்வரிது,
    திருச்சிற் றம்பலத் தெங்கள் செல்வனே! நீ
தாயினும் மிகநல்லை என்ற டைந்தேன் ;
    தனிமையை நினைகிலை ; சங்கரா! உன்

1. திருவிசைப்பா, 19, 10.

பாயிரும் புலியத ளின்னுடையும்
பையமே லெடுத்தபொற் பாதமுங்கண்டு,
ஏயிவள் இழந்தது சங்கம், ஆஆ!
எங்களை ஆளுடைய ஈசனேயோ![1]

இவ்வாறே இவர் பாடலில் அப்பர் கூறும் தொடர்கள் இரண்டை எடுத்து அமைத்திருப்பது, அவருடைய தேவாரத்தில் இவருக்கு இருந்த ஈடுபாட்டை நன்கு உணர்த்துகிறது. 'தாயினும் மிக நல்ல சங்கரா'—தாயினும் நல்ல சங்கரன்: அப்பர்; எடுத்த பொற்பாதம்—இனித்தம் உடைய எடுத்த பொற்பாதம் 4941; ஆட எடுத்திட்ட பாதமன்றே 4948. ஆவியின் பரமன்று என் ஆதரவே (முதல் பதிகம் பாடல் 1, 2) என்ற தொடரின் கருத்து, பெருமானிடத்து யான் கொண்ட காதல் என் ஆவி தாங்கக்கூடிய அளவினதன்று என்பதாகும்; 'சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கு, இவள் உயிர் தவச்சிறிது, காமமோ பெரிதே' என்ற குறுந்தொகைப் பாடலை[2] ஒப்பு நோக்குக. முதல் பதிகத்தில் 'எழுந்தருளாய் எங்கள் வீதியூடே' என்று வேண்டுகிற தலைவி, அடுத்த பதிகத்தில், 'என்னையும் பலியேற்க வந்து கை வளைகள் கொண்டாரோ?' என்று பாடுகிறாள். 'தாயிவரே எல்லார்க்கும் தந்தையும் ஆம் என்பாரால்' என்ற பொருள் இங்கும் வரக் காண்கிறோம். தில்லைச் சிற்றம்பலவர் என்றே பாடல் தோறும் குறிப்பிடுகிறார்.

## சேதிராயர் பாடல்

இவர் பாடிய ஒரே திருப்பதிகம் கோயில் பதிகம். அகத் துறையில் அந்தாதியாக உள்ளது. இதுவே திருவிசைப்பாவில் இறுதிப் பதிகம் (28). இது நற்றாய் கூற்றாக உள்ளது. இதன் பத்துப் பாடல்களுள் யானையுரித்த செய்தி இருமுறை கூறுகிறார். வேறு இவர் கூறுவன: பன்றிப் பின் சென்றது, நான்முகன் சிரம் கிள்ளியது, அருக்கன் பல் இறுத்தது, புரம் எரித்தது, விடம் உண்டது, காலனைக் கோளிழைத்தது என்பன.

ஏயு மாறுஎழிற் சேதிபர் கோன்தில்லை
நாய னுரை நயந்துரை செய்தன
தூய வாறுரைப் பார்துறக் கத்திடை
ஆய இன்பம் எய்தி இருப்பரே.

என்பது பதிகத்தின் இறுதிப் பாடல், தம்மைச் சேதிபர்கோன் என்று குறிப்பிடுவது அன்றி, வேறு இவர் வரலாறு அறிவதற்கான குறிப்புக்கள் எவையும் நூலகத்து இல்லை.

1. திருவிசைப்பா, 26, 8.

2. குறுந்தொகை, 18.

ஒரு தாய், தன் பெண் தில்லை நடராசப் பெருமானைக் காதலித்து அவனது அருள் பெருமையால் அவனை நினைத்து விம்மி அழுவதையும், அவனது அருளைப் பெற விரும்பி இரத்தலையும், திருவாசகத்துத் தசாங்கத்தில் கிளியை விளித்துக் கூறியது போல, அவனது பெயரைக் கூறுமாறு கிளியைக் கேட்டலையும், கூறுவ தாகப் பதிகம் அமைந்துள்ளது. பாடலில் தேவாரத் தொடர்கள் பயில்கின்றன. இவர் பதிகமே திருவிசைப்பாவில் இறுதியானமை யால், 'சேதிராயர் திருக்கடைக்காப்பு' என்று சொல்லப்பெற்றது.

## கருவூர்த் தேவர் பாடல்

இவர் பத்துத் தலங்களுக்குப் பத்துப் பதிகங்கள் பாடினர். (பதிகம் 8—17). ஐந்து பதிகங்கள் 11 பாடலும், நான்கு 10 பாடலும், ஒன்று 8 பாடலும் கொண்டவை. இவர் பாடிய பண்கள் புறநீர்மை, காந்தாரம், பஞ்சமம்; காந்தாரப் பண், திரை லோக்கிய சுந்தரப் பதிகம்மட்டும். இதன் இறுதிப் பாடலில் காந்தாரம் என்று பெயர் குறிப்பிடுகிறார். இவ்வொரு பதிகம் மட்டும் அகத்துறையில் அமைந்துள்ளது; இது நான்கு சீர் கொண்ட கொச்சகக் கலிப்பா; ஏனைய ஒன்பதும் ஒரே யாப்பு—எழு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்; ஆதலால் இவை ஒன்பதும், ஒரே பண்ணுக்கு உரியனவா யிருந்திருக்கலாம்; அப் பண் பஞ்சமமே; புற நீர்மை என்று முதல் இரு பண்களுக்கு அமைத்த தலைப்பு ஒருகால் ஏடு எழுதினோரால் விளைந்த பிழை என்ற கருத் துக்கள் மேலும் ஆராய்ச்சிக்குரியன. பண்ணடைவு சொல்லு கின்ற தனிப்பாடல், கருவூர்த் தேவர் பதிகங்களில் இரண்டு புற நீர்மை என்று கூறுவது உண்மை எனினும், இப் பதிகங்களுடைய யாப்பிலேயே அமைந்த கருவூர்த் தேவருடைய பிற பதிகங்களில் ஏழும், திருமாளிகைத் தேவர் பதிகங்களில் முதல் மூன்றும் பஞ்சமமே; இவற்றின் யாப்பும் மேற்கூறிய எழுசீர் விருத்தமே; இவ் விருத்தங்கள் விளம் மா விளம் மா-விளம் விளம் மா என்ற வாய்பாடுடையன. பஞ்சமப் பண்ணிலுள்ள 21 பதிகங்களில், இந்த யாப்புடைய பதிகங்கள் 15. (ஒரே யாப்புடைய பதிகங் களுக்கு வேறுவேறு பண்கள் அமைந்திருத்தல் கூடாது என்று விதியில்லை.)

தலப் பெயரையும், கோயில் பெயரையும் இவர் இணைத்தே அழகாகப் பாடுகின்றார். பெரும்பற்றப் புலியூர்த் திருச்சிற்றம் பலம்; களந்தை ஆதித்தேச்சுரம்; கீழ்க்கோட்டூர் மணியம்பலம்; கோடை—திரைலோக்கிய சுந்தரம்; சாட்டியக்குடி ஏழிருக்கை; (ஆவண வீதிப் பூவணம் என்றே எங்கும் சொல்வார்;) தஞ்சை இராசராசேச்சுரம்.

இவர் பத்துப் பதிகங்களிலும் மிகவும் அழகான செப்பமான தொடர்களை அமைத்து, மீண்டும் மீண்டும் அவற்றை எடுத்து ஆளுவார். என் மனம் புகுந்த எளிமை என்றும் நான் மறக்கேன், தேவர் பன்னெடுங்காலம் நிற்காண்பான் ஏம்பலித்திருப்பார், தமியனேன் தனிமை நீங்குவதற்கு, ஒழிவற நிறைந்த ஒண்சுடரே என்பன முதலான தொடர்கள் பலமுறை பயில்கின்றன. ஒவ்வொரு தலத்துக்கும் இவர் அடை கொடுத்துப் பெயரைச் சொல்வது அருமையாக உள்ளது. அரும்பும் பெரும்பற்றப் புலியூர் திருவளர் திருச்சிற்றம்பலம், அவரிடம் களந்தை அணி திகழ் ஆதித்தேச்சுரம், கெழுவு கம்பலைசெய் கீழ்க்கோட்டூர்...... மணியம்பலத்துள் நின்றாடும் மைந்தன், பவளவாய் மணியே பன்னகா பரணா, ஆவண வீதிப் பூவணம், இஞ்சி சூழ் தஞ்சை இராசராசேச்சுரம் என்பன சில எடுத்துக்காட்டுக்கள்.

இறைவனுடைய உருவத் திருமேனியில் மிகவும் திளைத்து நின்று பதிகந்தோறும் சுவைத்துப் பாடுகிறார்; பாடும்போதும், அடுக்குச் சொற்களையும் தொடர்களையும் அதிகமாகப் பெய்து பாடுவதில் இவருக்கு விருப்பம் மிகுதி.

பவளமே மகுடம், பவளமே திருவாய்,
பவளமே திருவுடம்பு, அதனில்
தவளமே களபம், தவளமே புரிநூல்,
தவளமே முறுவல் ஆடரவம்
துவளுமே.

துண்ட வெண்பிறையும், படர்சடை மொழுப்பும்,
சுழியமும், சூலமும், நீல
கண்டமும், குழையும், பவளவாய் இதழும்,
கண்ணுதல் திலகமும், காட்டி—.

ஐயபொட் டிட்ட அழகுவாள் நுதலும்,
அழகிய விழியும், வெண்ணீறும்,
சைவம் விட்டிட்ட சடைகளும், சடைமேல்
தரங்கமும், சதங்கையும், சிலம்பும்,
மொய்கொள் எண்திக்குங் கண்ட நின்தொண்டர்
முகமலர்ந் திருகணீர் அரும்பக்
கைகள் மொட்டிக்கும்.

குமுதமே திருவாய், குவளையே களமும்,
குழையதே இருசெவி ஒருபால்,
விமலமே கலையும் உடையரே, சடைமேல்
மிளிருமே பொறிவரி நாகம்,

கமலமே வதனம், கமலமே நயனம்,
கனகமே திருவடிநிலை நீறு
அமலமே,

அனலமே, புனலே, அனிலமே, புவனி
அம்பரா, அம்பரத்தளிக்கும்
கனகமே, வெள்ளிக் குன்றமே, என்றன்
களைகணே.

பாந்தள் பூணாரம், பரிகலம் கபாலம்,
பட்டவர்த்தனம் எருது, அன்பர்
வார்ந்த கண்அருவி மஞ்சன சாலை,
மலைமகள் மகிழ்பெரும் தேவி,
சாந்தமும் திருநீறு, அருமறை கீதம்,
சடைமுடி சாட்டியக் குடியார்
ஏந்தெழில் இதயம் கோயில் மாளிகை,ஏழ்
இருக்கையுள் இருந்த ஈசனுக்கே.

அடுத்து இவர் தமது நிலையைக் குறிப்பிடுவதும் மிக்க சுவையுடையது.

புலன்களின் செயலைக்கண்டு இவருக்கும் அச்சம்தான். ஏழையேற்கு என்னுடன் பிறந்த ஐவரும் பகையே (81); ஐவரோடென்னோடும் விளைந்த இக்கலாம் முழுதும் ஒழிய வந்து (116); கடுவினைப் பாசக்கடல் கடந்து ஐவர் கள்ளரை மெள்ளவே துறந்து அடைந்தேன் (145) என்கிறார்.

இவ்வாறு தம், நிலையைத் தாழ்த்தி இவர் கூறியது வேறு இல்லை. எனவே, இவர் இறைவன் திருவருளில் பூரணமாய்த் தோய்ந்து சீவன் முத்தி நிலையில் நின்றவர் என்று கருத இடமுண்டு. தமக்கு இறைவன் அருள்புரிந்த கருணைத் திறத்தைப் பலவாறாக அனுபவித்துக் கூறுகிறார்.

உண்ணெகிழ்ந் துடலம் நெக்கு, முக்கண்ணா
ஓலமென் றோலமிட் டொருநாள்
மண்ணினின் றலறேன், வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேல்
பண்ணினின் றுருகேன், பணிசெய்யேன்.

கலைகள்தம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகள் தந்தருளுந் தாயினும் நல்ல
முக்கணன் உறைவிடம் போலும்.

புழுங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து
புணர்பொருள் உணர்வுநூல் வகையால்
வழங்குதேன் மொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே.

பெருமானது அருளை நாடி நிற்கின்ற அன்பர்கள் நிலையையும் சுவை ததும்புமாறு உரைக்கிருர்.

கண்பனி அரும்பக் கைகள் மொட்டித்து என்
கஊகணே ஓலம்என்று ஓலிட்டு
என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டமே. (64)

பழையராம் தொண்டர்க்கு எளியரே மிண்டர்க்கு அரியரே (94); திக்கடாம் நினைந்து நெஞ்சிடிந்து உருகும் திறத்தவர் (97); செம்மனக் கிழவோர் அன்புதா என்றுன் சேவடி பார்த்திருந்து அலச (149).

இவர் உலகத் தொடர்பையெல்லாம் விட்டு நீங்கி, இறைவனை நோக்கித் திருவருள் பெறத் தவம்கிடந்த காலத்தில், நள்ளிரவில் இறைவன் காட்சி தந்து அருள் புரிந்தான் என்ற ஒரு நிலையைத் திருவிடைமருதூர்ப் பதிகத்தில் ஐந்திடங்களில் குறிப்பிடுகிருர். 'மலைமகள் உடனுய்த் தூங்கிருள் நடுநல் யாமத்து என் மனனிடை அணுகி நுணுகியுள் கலந்தோன்' (175) என்கிருர். 'நெஞ்சம் இடர்ப்படா வண்ணம் தூங்கிருள் நடுநல்யாமத்தோர் மழலையாழ் சிலம்ப வந்து அகம் புகுந்தோன்' (179). 'புன்மாக்கள் உறங்கிருள் நடுநல்யாமத்தோர் கருங்கண் நின்றிமைக்கும் செழுஞ்சுடர் விளக்கம் கலந்தெனக் கலந்து' (182).

திருவிடைமருதூர்ப் பதிகம், இத் திருமுறையில் இவருடைய பதிகங்களில் இறுதிப் பதிகமாக அமைக்கப்பெற்றிருக்கிறது. வரலாற்று முறையில் ஆராய்ந்து, கருவூர்த் தேவர் பாடிய ஒன்பதாம் பதிகம் இப் பதிகம் என்றும், இதன்பின் அவர் இறுதியாகப் பாடிய பதிகம் கங்கைகொண்ட சோழேச்சுரப் பதிகம் என்றும் குறிப்பிட்டோம். அப் பதிகத்தில் இவர் தாம் திருவருள் தோய்விஞல் பெற்ற பதியனுபவம் ஆகிய சிவபோகத்தைக் குறிப்பிடுகிருரென்று கருதலாம். இதனேடு தாம் பெற்ற அவ்வனுபவத்தின் எளிமையையும், அருமையையும் உலகுக்கு உணர்த்துவதாகவும் அதைக் கருதலாம். களந்தைப் பகுதியிலிருந்து கங்கைகொண்ட சோழபுரம் நோக்கி வரும் வழியில் இவர் திருவிடைமருதூரில் தங்கி, அங்கு ஒரு திருவிசைப்பாப் பதிகம் பாடினர். எனவே, இது காலத்தால் கங்கைகொண்ட சோழேச்சுரத்துக்கு முன் பாடப்பட்டது. அவர் பாடிய வரிசையில் ஒன்பதாம் பதிகம் என்று கருதத்தக்கது.

திருவிடைமருதூரில்தான் இவர் சிவபெருமான் அருளைப் பெற்றார்போலும். இங்குப் பாடிய பத்துப் பாடல்களில் ஐந்தில், தமக்குப் பெருமான் 'தூங்கிருள் நடுநல் யாமத்துத் தம்முள் புகுந்து அருள் செய்தான்' என்று பாடுகிறார் :

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென் றிங்ஙன்
விணைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல கொழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிருள் நடுநல் யாமத்தென்
மனனிடை அணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே.

உலகமக்கள் விழித்திருக்கும் நேரம் ஞானிக்கு இரவு என்றும், உலகமக்கள் உறங்கும் நேரம் ஞானிக்குப் பகல் என்றும் சொல்வதுண்டு.[1] கருவூர்த் தேவரும் இத்தகையதொரு நிலையை இங்குக் குறிப்பிடுகிறார் என்றே சொல்லவேண்டும். தமக்கு இறைவன் நடுயாமத்து எழுந்து வந்து அருள்செய்தான் என்பது பொருளன்று. இருள் நடுநல்யாமம் என்பது, கால நிலையைக் குறிப்பதன்று; மனநிலையைக் குறிப்பது. இது 'புறச் சமயத்தவர்க்கு இருளாய் அகச்சமயத் தொளியாய்' என்பதையும் போல்வது. பிறர் உள்ளத்தில் அஞ்ஞான இருள் சூழ்ந்திருக்க, தாம் மட்டும் ஞான ஒளி வேண்டி நின்ற நிலையில் இறைவன் தமக்கு அருள் செய்தான் என்பதையே இவர் இப் பதிகத்தில் உணர்த்துகிறார். இவ்வாறு அருள்பெற்ற நிலையில், பூரணமாய் அருளில் தோய்ந்து நின்று பாடுகிறார்: என்னையாள் விரும்பி மற்றொரு பிறவியிற் பிறந்து பொய்க்கடாவண்ணம் காத் தெனக்கு அருளே புரியவும் வல்லரே (97).

இலக்கியம் என்ற அளவில் பார்க்கும்போது, 'என்செய்கோம் தோழி—தோழி நீ துணையாம் இரவு போம்' என்ற இவர் பாடல் (106) பண்டை இலக்கண உரை மேற்கோளாக வருகின்ற 'ஆழி யிழைப்பப் பகல்போம் இரவெல்லாம், தோழி துணையாய்த் துயர் தீரும்'[2] என்ற திரையனைப் பற்றிய வெண்பாவின் சொல்லையும் தொடரையும் கொண்டிருப்பது தெரியும்.

---

1. வடமொழிப் பகவத்கீதை, 2-சாங்கிய யோகம் என்னும் அத்தி யாயம் சுலோகம் 69 ; யா நிசா சர்வ பூதானும் தஸ்யாம் ஜாகர்தி சம்யமி, யஸ்யாமி ஜாக்ரதி பூதாநி ஸா நிசா பச்யதோ முனே:

2. பெருந்தொகை, 689, 979.

உலகத்தாருக்கு இவர் செய்யும் உபதேசம் பலவாயினும், ஒன்றைமட்டும் காட்டலாம். உலகப்பற்றில் நூருயிரத்தில் ஒரு கூறு இறைவனிடத்தில் வைத்தால் அவன் அமருலகு அளிக்கிருன் என்கிருர் :

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
 தயாவைநூ ருயிரங் கூறிட்டு
அத்திலங் கொருகூறு உன்கண் வைத்தவருக்கு
 அமருல களிக்கும் நின்பெருமை.

திருமுகத்தலைப் பதிகம் மிகவும் சிறப்புடையதொன்று. அதிலேயே இறைவன் திருநாமம் அக்னீசுவரர் என்பதை மனத்தில் கொண்டு அவ் அக்கினி வடிவத்தையே பாடுகிருர்.

இவர் பாடியுள்ள பதிகங்கள் எல்லாமே சிறப்புடையன என்ருலும், அவற்றுள் கங்கைகொண்ட சோழேச்சுரப் பதிகம் பெருஞ் சிறப்புடையது. இதன் சிறப்புக்களை விரித்தெழுத இடம் போதாது. 'பெரிய நீ சிறிய என்னை யாள் விரும்பி என் மனம் புகுந்த எளிமையை' என்று சொல்வது நுட்பப் பொருளாய் இருந்தும் கூட, நேரே அத்தலத்தில் உள்ள சிவலிங்கமூர்த்தியின் மிகப் பெரும் உருவைக் கண்ணுல் பார்த்தவர்களுக்குப் பருப் பொருளாகவே விளங்கும். இவர் பாடிய பாடல்களில் இதுவே கடைசியாகப் பாடியது போலும். சொல்தோறும் அவனுடைய பெருமையைச் சொல்லமுடியாத நிலையில் வியந்து பாடுகிருர். 'அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டே?' என்கிருர். அவனது விசுவரூபம், 'அண்டமோரணுவாம் பெருமை கொண்டு அணு வோர் அண்டமாம் சிறுமை கொண்டு உள்ளது. மிகவும் பிற்காலத்தில் பரஞ்சோதி முனிவர், அண்டங்களெல்லாம் அணுக்களாக அணுக்களெல்லாம், அண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாயினுன்' என்று பாடவும் காண்கிருேம்.

பாடிய தலங்கள்

கருவூர்த் தேவர் பாடிய பத்துத் தலங்களையும் நாம் ஒரு சேர நோக்கும்போது சில கருத்துக்கள் தெரிகின்றன. இவற்றுள் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் மூன்றே ; தில்லை, இடைமருது, பூவணம். தில்லைத் தலமாகிய கோயில் அனைவரும் பாடுவது. அடுத்து இடைமருது. இதன் அருகே யுள்ளது, திரைலோக்கிய சுந்தரம். கோடைத் திரைலோக்கிய சுந்தரம் என்று சொல்லப் பெறுகிறது. கோடை-கோட்டூர் ; இது ஊர்ப்பெயர் ; திரைலோக்கிய சுந்தரம் கோயிற் பெயர். இக் கோயிலானது இராாச

ராசன் மூன்றும் மனைவியாகிய திரைலோக்கிய மாதேவியால் கற்றளியாக அமைக்கப் பெற்றது. அவள் பெயரைக்கொண்டு இது திரைலோக்கிய மாதேவீச்சுரம் என்று வழங்கப்பெற்றது. சுவாமி திரைலோக்கிய சுந்தரர். இது மண்ணிநாட்டு ஏமநல்லூராகிய திரைலோக்கிய மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்று இங்குள்ள சாசனம் சொல்லுகிறது. மண்ணியாறு அருகே ஓடுகின்றமையால் இது மண்ணிநாடு. ஏமநல்லூர் என்பது அப்பர் குறிப்பிடுகின்ற வைப்புத் தலங்களுள் ஒன்று. அரசு இங்கு கற்றளி காட்டியதற்குக் காரணங்களுள் இது ஒன்று. மேலும் ஒரு காரணம் உண்டு என்று ஊகிக்கமுடிகிறது.

பாண்டியன் வரகுணனுக்கும் அப்போதிருந்த சோழ மன்னனுக்கும் பெரும் போர் நிகழ்ந்து, அதில் பாண்டியன் வெற்றி பெற்றுத் தங்கிய இடம், நில அமைப்பைக்கொண்டு இடைமருதுக்கும் (திருவிடைமருதூருக்கும்) இத் திரைலோக்கிய சுந்தரத்துக்கும் இடையிலுள்ள பகுதியில் முற்காலத்தில் இருந்த இடவை என்ற நகர் என்று ஆராய்ச்சியாளர் பலர் எழுதியிருக்கின்றனர். இவ் விடவை அவ் வரகுணன் காலத்தில் சிறப்பாக இருந்தது போலும். மாணிக்கவாசகர் கூட, திருவாசகத்தில் இடவை மட நல்லாளுக்கு அருள்செய்தமை குறிப்பிடுகிறார். இந்தப் பிரதேசத்தில் இன்று எச்சிறப்புமில்லாத இடையாற்று நல்லூர் (இடையானூர்) என்ற ஊர் உள்ளது. ஒருகால் வரகுணன் காலத்தில், இவ்விடையானூரையும், திரைலோக்கிய சுந்தரத்தையும், அருகிலுள்ள கோட்டூரையும் தன்னகத்தே கொண்டதாய், இடவை (இடைவை) என்ற பெருநகர் இருந்தது போலும். இது தனியே பலதுறை ஆராய்ச்சிக்குரிய பொருளாகும்.

இவ்வாறு கூறியவற்றால் 11–ஆம் நூற்றாண்டில் பெருஞ் சிறப்புடைய அடியவராக விளங்கிய கருவூர்த் தேவர் திரைலோக்கிய சுந்தரம் பாடிய தொடர்பு விளங்கும். தமக்கு நெருங்கிய காலத்து விளங்கிய ஒரு நகரத்தின் பகுதியாதலாலும், எல்லாச் சிறப்புடைய திருவிடைமருதூருக்கு அருகிலிருப்பதாலும் தம் அன்புக்குப் பாத்திரமான மன்னது தேவியால் எழுப்பப் பெற்றமையாலும், இவர் அதைப் பாடியிருக்கிறார்.

திரைலோக்கிய மாதேவி கட்டிய கோயிலையன்றி, இதற்குக் கிழக்கில் ஒரு பர்லாங் தூரத்தில் பழைய கைலாயநாதர் கோயிலொன்று உள்ளது. இக் கோயில் பல கல்வெட்டுகளைக் கொண்ட பெருங்கோயிலா யிருந்து இப்போது சிலமாகிவிட்டது ; இருப்பினும், கருவறையும் மூர்த்தியும் நல்ல நிலையில் இருக்கின்றன. முன்னமே இது வரகுணன் காலத்தில் சிறப்புடையதாக இருந்திருக்

கலாம் ; இச் சிறப்பே இராசராசன் தேவி இங்கு வேறு பெரிய கற்றளி எடுக்கத் தூண்டியிருக்கும், ஒருகால் அப்பர் கூறும் ஏம நல்லூராகவும் மற்றது திரைலோக்கிய சுந்தரமாகவும் ஆகலாம்.

அடுத்து, சோழர் தலைநகரங்களும் பேரூர்களுமான தஞ்சையையும், கங்கைகொண்ட சோழேச்சுரத்தையும் பாடியிருக்கிறார். இவ்விரண்டில் இராசராசேச்சுரம் எழுந்த தஞ்சை நகரம் அன்று முதல் எவ்வித அழிவும் இல்லாமல், மராத்தியருக்குத் தலைநகராய் இருந்து, ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டு வந்து, இன்றுவரை ஜில்லா தலைநகராய் இருந்து வருகிறது. கங்கைகொண்ட சோழேச்சுரமோ இராசராசனுக்குப் பின் சோழ மன்னருக்குத் தலைநகரமாய் விளங்கி, பின்னர் நாட்டின் அரசியல் சீர்கெட்ட காலத்தில், முகமதியராலும், பின்னர் ஆங்கிலேயராலும், இடிக்கப் பெற்றது. கோயில் ஒன்றுமட்டும் சிறுபகுதி இடிக்கப்படாமல் இருக்கும் நிலையைப் பார்த்தால் யாரும் மனம் வருந்திக் கண்ணீர் விடுவர்.

இவை போக இவர் பாடிய தலங்கள் ஐந்து. அவற்றுள் களந்தை ஆதித்தேச்சுரம், கோட்டூர் மணியம்பலம், திருச்சாட்டியக்குடி, திருமுகத்தலை ஆகிய நான்கும், மன்னார்குடி, திருத்தருப்பூண்டி ஆகிய பிரதேச எல்லைகளுக்குள் அமைந்துள்ளன. ஒருகால் கருவூர்த் தேவர் இங்கு வந்து தமக்கு அன்பராயிருந்தார் வேண்டுகோளுக்கு இணங்கி இத் தலங்களைப் பாடியிருக்கலாம் அல்லது களந்தை நீங்கலாகப் பிற மூன்று தலங்களும் கருவூர்த் தேவர் காலத்திலேயே புதிதாகக் கட்டப்பெற்று இவருடைய பாடலை ஒருகால் உடனே பெற்றும் இருக்கும். கீழ்க்கோட்டூர் மணியம்பலம் என்பது, தேவாரப் பாடலுடைய திருக்கோட்டூர் என்ற தலத்தில் அக் கோயிலுக்குக் கிழக்கே தனிச் சிறு கோயிலாய் உள்ளது. திருமுகத்தலை என்பது திருத்தருப்பூண்டிக்கு நான்கு மைல் வடகிழக்கே உள்ளது. பன்னகத்தரு என்பது பன்னகாபரணர். கருவூர்த் தேவர் திருவிசைப்பாவில் இப்பெயரை நான்கு முறை குறிப்பிடுகிறார். கோயிலில் திருமுகத்தலை ஈசர் என்ற தனியான ஒரு சிவலிங்கமூர்த்தியும் உள்ளார். மற்றச் சாட்டியக்குடி என்பது தேவூருக்கும் தெற்கே உள்ளது. சாட்டியம்—சுரம்; சுவாமி இங்கு அக்கினி வடிவமானவர்.

நான்காவது தலமாகிய களந்தை ஆதித்தேச்சுரம் என்பதும் தஞ்சை இராசராசேச்சுரம், கங்கைகொண்ட சோளேச்சுரம் என்பன போல, கட்டிய அரசனால் பெயர் பெற்றதாகும். ஆதித்த சோழன் கி.பி. 871—907-இல் ஆண்ட சோழ மன்னன். இவன் கட்டிய கோயில் ஆதித்தேச்சுரம். முத்தரையர் முதலானவர்களை

வென்று முதன் முதலாக ஒன்பதாம் நூற்றுண்டில் சோழ மரபைத் தஞ்சையில் நிலைநாட்டிய விசயாலய சோழனுடைய மகன் இந்த ஆதித்தன். திருவிசைப்பாப் பாடிய கண்டராதித்தருக்கு இவன் பாட்டன். இக் களந்தையில்தான் நாயன்மார்களுள் ஒருவர் ஆகிய கூற்றுவ நாயனுர் பிறந்தார். அவர் பெயரால் இன்று இங்குக் கூற்றுவ நாயனுர் திடல், கூற்றுவ நாயனுர் குளம் என்பன உள்ளன. கோயிலிலும் கூற்றுவ நாயனுருடைய பழமையான செப்புச்சிலை உள்ளது. மற்றப்படி செங்கற்பட்டு ஜில்லா பொன் விளைந்த களத்தூரிலுள்ள கோயில்தான் களந்தை ஆதித்தேச்சுரம் என்றும், பொள்ளாச்சி தாலுக்காவிலுள்ள பெரிய களந்தைதான் களந்தை ஆதித்தேச்சுரம் என்றும் சொல்வோர் கூற்றுக்கள். கருவூர்த் தேவருடைய பாடல் தொடர்பு நோக்கி ஏற்றுக்கொள்ளத் தக்கன அல்ல.

தொல்லாப்பியப் பொருளதிகார உரைசெய்த பேராசிரியர், 'சொற்கள் திரிந்து வழங்குவதற்கு களந்தையை எடுத்துக் காட்டாகச் சொல்லுகிருர். குடவாயில் என்பதனைக் குடந்தை என்றும், உறையூர் என்பதனை உறந்தை என்றும் மேலையார் திரித்த வகையானே இக்காலத்தும் திரித்துக் கொள்ளப்படுவன உள. அவை களந்தை என்ற ற்ருடக்கத்தக்கன.'[1] எனவே குடந்தை, உறந்தை, களந்தை என்று அவர் சேர்த்துக் கூறுவதால் இவ்வூரும் முதல் இரண்டைப் போல சோழ நாட்டில் உள்ளது என்று நாம் கருதுதல் பொருத்தம்.

இவர் கொங்குக் கருவூரில் பிறந்தாலும் கூட, வாழ்ந்ததும், வழிபட்டதும், புகழ்பெற்றதும், பாடியதும் சோழ நாடே. கொங்கு நாட்டுத் தலமெதுவும் இவர் பாடவில்லை ; தம் கருவூரையே பாடவில்லை. கருவூரில் இவர் முத்தி அடைந்தார் என்று கதை சொன்ன போதிலும் கூட, தஞ்சை இராசராசேச்சுரத்தில்தான் இவருடைய சமாதி குறிப்பிடப் பெறுகிறது. ஆகவே, சோழ மன்னர்களால் பெரிதும் போற்றப் பெற்றிருந்து சோழ நாட்டுத் தலங்கள் பலவற்றுக்கும் பாடல் பாடிய இவ்வனுபூதிமான், சோழ நாட்டிலேயே முடிவெய்தினுர் என்று கருதுவதுதான் இவ் வரலாற்றுக்குப் பொருத்தமாக இருக்கும்.

இவர் பாடிய தலங்களுள் சோழ நாட்டுக்கு வெளியில் உள்ளது திருப்பூவணம் ஒன்றே. இது பாண்டி நாட்டுப் பதிகம் பெற்ற பதினுன்கு தலங்களுள் ஒன்று. இதற்குரிய பதிகத்தின் முதல்

---

1. செய்யுளியல் சூத்திரம் 80, பேராசிரியர் உரை.

பாடலில் வைகை சொல்லப்பட்டுள்ளமையால், இது பாண்டி நாட்டுத் தலம் என்று கொள்ளவேண்டும். இவ்வூருக்குக் கருவூர்த் தேவர் சென்று பாடியிருப்பாரா என்று ஆராயும்போது, ஒரு குறிப்பு தெரிகிறது. பூவணத்தில் புகழ்வாய்ந்த நிகழ்ச்சி, ஆலவாய்ப் பெருமான் அங்குப் பொன்னனையாளுக்காக இரசவாதம் செய்த திருவிளையாடல். இதுபற்றிய சாமானிய மக்கள் நிலையைக் கடந்து மேம்பட்ட நிலைக்குச் சென்று சிவ போதத்தில் திளைத் திருந்த கருவூர்த் தேவர், சிவபெருமான் பொன்னனையாளுக்காக எளிவந்த கருணையை எண்ணி அத் தலத்திற்கே சென்று வழிபட்டார் என்று கருதத் தோன்றுகிறது; பாண்டி நாட்டுக்குச் சென்றவர் பிரசித்தமான மதுரையைப் பாடவில்லை. எனினும், இவரது திருப்பூவணப் பதிகத்தில் பொன்னனையாள் வரலாற்றை இவர் குறிப்பிடவில்லை.

# 4. சமய தத்துவம்

திருவிசைப்பாப் பாடல்கள் சிவபெருமானுடைய பெருமையை இசையில் பாடுவன. பாடுகின்ற அடியார் சில சமயம், பெருமானுடைய அருளை வேண்டிப் பாடுகின்றனர். சில சமயம் பெருமானுடைய அருளுக்கு ஏங்கி நிற்கின்ற ஒரு பெண்ணின் நிலையில் தங்களை நிறுத்திக் காதல் பொருள் அமையப் பாடுகின்றனர். அவனுடைய அழகைப் பாதாதி கேசமாகப் பாடி மகிழ்கின்றனர். அவனுடைய திரு நடனத்தைப் பார்த்துத் துதிக்கின்றனர். அவனுடைய திருவருளை நிரம்ப அனுபவிக்கின்ற பெருமிதத்திலிருந்து பாடுகின்றனர். தங்களுடைய சிறுமையை எண்ணி அவன் தங்களுக்கு எளிவந்த பெருங் கருணைத்திறத்தை வியந்து போற்றுகின்றனர். பெருமானிடத்து அன்பில்லாத கயவரிடத்து இணங்கலாகாது என்று எச்சரிக்கின்றனர். அவன் திருவடியைப் பற்றுவதே பேரின்பம் தருவது என்று உலகுக்கு உணர்த்துகின்றனர்.

இவ்வாறு பாடுகின்ற அடியவர் அனைவரும், சமயாசாரியர் நால்வருக்கும் காலத்தால் பின் வந்தவர்கள். அவர்கள் சென்ற வழியில் சென்று திருவருளில் தோய வேண்டும் என்றே பாடுபவர்கள். சமய தத்துவங்களைச் சொல்ல இவர்கள் நினைக்கவில்லை; எனினும் இவர்கள் வாய்மொழியில் பல சமய நுட்பங்கள் வெளிப்படுகின்றன. சிலவற்றை இங்குத் தொகுத்துக் கூறுவோம்.

திருவிசைப்பாக் காலம் முடிந்து சிறிது பிற்காலத்தில், மெய்கண்டார் தமது சிவஞான போதம் பாடி, ஒரு சைவ சந்தான பரம்பரையைத் தொடக்கி வைத்தார். அவர் பாடிய சிவஞான போதமே சைவ சித்தாந்த சமயத்துக்கு முதல் நூல் ஆகும். அவர் குழந்தைப் பருவத்தில் கயிலாய பரம்பரையில் உபதேசம் பெற்றார் என்பதும், திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் அருளும் பெற்றார் என்பதும், வரலாறுகள் இவற்றோடு, தமக்குமுன் எழுந்திருந்த அரும் பாசுரங்களான திருமுறைகளையும் நன்கு பயின்று அவற்றின் சாரத்தையும், சிறப்புக் கருத்துக்களையும் எடுத்தமைத்தே அவர் தம் நூல் செய்தார். ஆகவே, திருமுறைகளில் காணப்படும் சைவ நூல் கருத்துக்கள் யாவை என அறிதல்

பயனுடையது. இந்த உணர்வோடுதான் திருவிசைப்பாவில் காணும் சமய தத்துவங்களைக் குறிப்பிட முயல்கிறோம்.

திருவிசைப்பாப் பாடிய அடியவர்கள் பரம்பொருள் ஒன்றே என்று கொண்டு வழிபடுவோர். சிறு தெய்வ வழிபாடு கூடாது என்று வலியுறுத்திச் சொல்பவர்கள்.[1] 'சில தெய்வ நெறிக்கே திகைக்கின்றேன் தனைத் திகையாமே......சேவடிக் கீழ் நிகழ்வித்த மணியே' என்பார் திருமாளிகைத் தேவர்; 'சில்லாண்டில் சிதையும் சில தேவர் சிறு நெறி சேராமே......விடைப் பாகனுக்குப் பல்லாண்டு கூறுதும்;' 'இத் தெய்வ நெறி நன்றென்று இருள் மாயப் பிறப்பறு இந்திரசாலப் பொய்த் தெய்வ நெறி நான் புகா வகை புரிந்த புராண சிந்தாமணி' என்பர் சேந்தனர். சிவபிரான் அட்ட உருவானவன் (அட்டமூர்த்தம் உடையவன்) என்பார் திருமாளிகைத் தேவர். கற்பமாய் உலகாய் ஆனவன்—காலமும் அவனே பிரபஞ்சமும் அவனே என்கிறார்.

சிவ சின்னங்களிடத்தில் மிக்க ஈடுபாட்டைப் புலப்படுத்துகிறார்கள்: 'திரு நீறிடா உருத்தீண்டேன் என்னும்;' 'அஞ்செழுத்தும் பிதற்றிப் பிணிதீர் வெண்ணீறிடப் பெற்றேன் என்னும்.' ஒரு பாடலில் திருமாளிகைத் தேவர் மிக்க கோபமாக, 'தீய நசிக்க வெண்ணீறதாடும் நமர்களை அணுகா நாய்கள்' என்கிறார். வெண்ணீறணிந்தால் தீவினை நசிக்கும் என்பது அவர் கருத்து.

சிவபெருமான் திருமேனியில் காணும் திருநீறு பக்தர்களுக்கு எவ்வாறு இன்பம் செய்யும் என்பதைச் சேந்தனர் அகத்துறையில் ஓர் உவமை எடுத்துக்காட்டிக் கூறுகிறார். சிவஞான போதச் சிற்றுரையில் இப் பாடலை எடுத்துத் தந்து, சிவஞான சுவாமி பின் வருமாறு விளக்கம் தருகிறார்:

"காமக் கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை, சாந்து, அணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறு போல, மெய்யுணர்வுடையாரைக் காட்சி மாத்திரையின் வசீகரித்து இன்பஞ் செய்தல் பற்றித் 'திருவேடத்தையும் சிவாலயத்தையும்' என்று உபசரித்தார். அது 'சேலுங் கயலுந் திளைக்கும் கண்ணார் இளங் கொங்கையிற் செங்குங்குமம், போலும் பொடியணி மார்பிலங்கு மென்று புண்ணியர் போற்றிசைப்ப' என்னுந் திருவாக்

---

1. 'சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்'—அப்பர்; 'செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று பத்திசெய் மனப் பாறைகட் கேறுமோ'—திருமூலர்; 'எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோஎன் சித்தத்தார் உய்ந்தவாறு'—மாணிக்கவாசகர்.

கானுமறிக"[1] என அவர் கூறும் விளக்கம் இங்குக் கருதற்குரியதாகும். முழுப் பாடலும் பின் வருவது:

சேலுங்கயலுந் திளைக்குங் கண்ணார் இளங்
 கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு மென்று
 புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறிதந்து
 வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே.[2]

ஒரு பதிகம் முழுமையும் திருமாளிகைத் தேவர் தில்லை வாணன் அடிக்கு அன்பு செய்யாதோரை, 'கண்காணா, வாய் பேசாது அப் பேய்களோடே' என்று[3] பாடுகிறார். பாடும் பதிகம் முழுமையிலும் வசவுக்கான சொல் அத்தனையும் சொல்லித் தீர்த்து விடுகிறார். அவ்வளவு கோபமாக இவர் சொல்லுவதற்குக் காரணம், அவர்கள் 'இறப்பொடு பிறப்பினுக்கே இனியராய் மீண்டும் மீண்டும் பிறப்பர்.' ஆகவே அவர்களுடைய உறவு துறக்கத்தக்கது. இத்தகைய கருத்துக்களே சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரத்துக்கு வித்தாகும். இவர்களுடைய சேர்க்கை மலங்களில் வீழ்க்கும்; ஆனால் பக்தரைச் சேர்ந்தால் வினைமேவா என்ற சிவஞான போத உதாரண வெண்பா இங்குக் கருதத்தக்கது:

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்கும்
சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை—அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரனுணர்வி னாலுணரும்
மெய்த்தவரை மேவா வினை.[4]

இக் கருத்தையே சேந்தனார், 'மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்' என்று கடுமை இல்லாது சொல்கிறார். மாணிக்கவாசகர் பாடிய அச்சப்பத்து முழுமையும் இதே தன்மை பொருந்தியது. ஈசனுக்கு அன்பில்லாதவர்களைக் கண்டு அவர் அஞ்சுகிறார்; இங்கு இவர் சுடுமொழி சொல்கிறார்.

---

1. சிவஞான சுவாமி, சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞானபோத மாபாடியம் சூத்திரம் 12, அதிகரணம் 3.
2. திருப்பல்லாண்டு, 8.
3. பதிகம், 4.
4. சிவஞானபோதம் வெண்பா, 75.

தீயினச் சேர்க்கை கூடாது என்று வலியுறுத்துவதுபோல, நல்லினச் சேர்க்கையும் முக்கியமானது என்று இவர் கூறவும் காண்கிறோம் :

கண்பனி அரும்பக் கைகள் மொட்டித்தென்
கணகணே ஓலமென்று ஓலிட்டு
என்பெலாம் உருக்கும் அன்பர்தம் கூட்டத்து
என்னையும் புணர்ப்பவன் கோயில் :
பண்பல தெளிதேன் பாடி நின்றாடப்
பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற் றம்பலமே.[1]

திருமாளிகைத் தேவர் பாடிய முதல் பதிகத்திலுள்ள பாடல்கள் யாவும், விளம்புமா விளம்பே, பணியுமா பணியே, கருதுமா கருதே, நினையுமா நினையே—என்பன போன்ற தொடர்களைக் கொண்டு முடிவன. இம் முடிவுகள் சிறந்த சைவ சித்தாந்த முடிவான கருத்தை விளக்குவன. அதாவது, இறைவனது தன்மையை ஆன்மா அறியமாட்டாது, அறிவித்தாலும் பூரணமாய் அறியமாட்டாது ஆதலால், இறைவன் உயிரோடு ஒன்றி நின்று உயிர் அறியும் பொருட்டுத் தான் அறிகிறான். இந்த நிலையைத் தான் இப் பதிகத்தில் உள்ள ஒவ்வொரு பாடலும் சொல்லுகிறது. சிவஞான சுவாமிகள் சிவஞான போதச் சிற்றுரையில் இத் தொடர்களை மேற்கோள் காட்டி இப் பொருளை நன்கு விளக்கு கிறார் : 'உயிர் ஒன்றனையறிதல் முதல்வன் உடனின்றறிதலை யின்றி அறிவித்தல் மாத்திரையான் அமையாது என்பது, தொண்ட னேன் நினையுமா நினையே, விரும்புமா விரும்பே, தொடருமா தொடரே, நுகருமா நுகரே என்றிவ்வாறு முத்தி நிலைபற்றி யோதிய திருவாக்குக்களானும் அறிக' என்பது அவர் கூற்று.[2] இக் கூற்றின் விளக்கம் போலப் பாடல்கள் அமைந்துள்ளன. மூன்றும் பாடலில்,

நற்பெரும் பொருளாய் உரைகலந் துன்னை
என்னுடை நாவினுல் நவில்வான்
அற்பனென் உள்ளத்து அளவிலா உன்னைத்
தந்த பொன்னம் பலத்தாடீ[3]

---

1. திருவிசைப்பா, 8, 5.

2. சிவஞானபோதச் சிற்றுரை, சூத்திரம் 11.

3. திருவிசைப்பா பதிகம், 1, 3.

என்று இவர் கூறுவது, முற்கூறிய கருத்தை ஆசிரியரே விளக்கி உரைப்பதாகும். ' நன் முறையில் உன்னை நான் துதிக்கும் பொருட்டு அற்பனாகிய எனது உள்ளத்தில் மகத்தான நீ உன்னை எழுந்தருளி யிருக்கச்செய்த அம்பலவனே ' என்கிறார். அதாவது, நான் நவிலவில்லை, என்னுடைய நாவிலே நீ இருந்து நவில்கின்றாய் என்பது கருத்து. இதையே ஒன்பதாம் பாடலில், ' எவர்க்கும் தொடர் வரியாயைத் தொண்டனேன் தொடருமா தொடரே ' என்றும் உணர்த்துகிறார்.

சிவபெருமான் தனக்கு ஒரு முதல் இல்லாதவன். ' தான் தோன்றி நம்பி ;' அவன் ஒருவன்; ஆயினும் பலவற்றிலும் புகுந்து நிற்கிறான் ; ' ஒருமையிற் பலபுக்கு உருவி நின்றாயைத் தொண்டனேன் உணருமா றுணரே ' என்கின்றார். பெரியவை அனைத்தினும் பெரியவன், அணுவுக்கும் சிறியவனாயுள்ளவன் :

அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணுவோர்
அண்டமாம் சிறுமை கொண்டடியேன்
உண்டவூண் உனக்காம் வகைஎன துள்ளம்
உள்கலந் தெழுபரஞ் சோதி ![1]

அப் பெருமான் தங்களுக்கு எளிவந்த கருணையை எல்லோரும் பெரிதும் வியந்து பாராட்டுகிறார்கள், ' அற்பன் என் உள்ளத்து அளவிலா உன்னைத் தந்த பொன்னம்பலத்தாடி.'

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்.[2]

கன்னெகா உள்ளக் கள்வனேன் நின்கட்
கசிவிலேன் கண்ணில் நீர் சொரியேன்
முன்னகா ஒழியேன் ஆயினும் செழுநீர்
முகத்தலை அகத்தமர்ந் துறையும்
பன்னகா பரணா, பவளவாய் மணியே,
பாவியேன் ஆவியுள் புகுந்தது
என்னகா ரணம்நீ ஏழைநா யடியேற்கு
எளிமையோ பெருமையா வதுவே ?[3]

---

1. திருவிசைப்பா, 13. 6.
2. திருவிசைப்பா, 13. 1.
3. திருவிசைப்பா, 11. 3.

பன்னெடுங் காலம் பணிசெய்து, பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க,
என்நெடுங் கோயில் நெஞ்சு வீற்றிருந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்.[1]

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்ப என்னுயி ராண்ட கோவினுக்
கென்செய வல்லம்.[2]

என்னையுன் பாத பங்கயம் பணிவித்து
என்பெலாம் உருகநீ எளிவந்து
உன்னையென் பால்வைத் தெங்கும் எஞ்ஞான்றும்
ஒழிவற நிறைந்த ஒண்சுடரே.[3]

யாதுநீ நினைவது, எவரையும் உடையது,
எவர்களும் யாவையும் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென்
பனிமலர்க் கண்ணுள்நின் றகலான்.[4]

திருவிசைப்பா ஆசிரியர்கள் சமயாசாரியர்களைப் போல, பக்தி முதிர்வினால் திருவருளிடத்தே சரண்புகுந்தவர்கள். ஆதலால், திருவருள் வருவதும் வராதிருப்பதும் இறைவனுடைய சித்தம் என்று தெளிந்து, நீ அருள் செய்யவேண்டும் என்றுகூட இவர்கள் சில சமயம் வேண்டுவதில்லை. ஒரே பதிகம் பாடிய வேணாட்டடிகள் பதிகத்தின் இறுதிப் பாடலில், ‘திருத்தில்லைக் கூத்தாடீ, நான் ஓவாதே அழைக்கின்றேன் என்ற காரணத்தினால் நீ அருளினால் நல்லது. அப்படி அருளாவிட்டால், இந்த உடல் நீங்கியேனும் நான் உன் திருவடியை அடைவது உறுதி: உன்னால் தடுக்க இயலாது’ என்று மிக்க உறுதியோடு கூறுகிறார். என்னைத் தடுக்க இறைவனால் முடியாது என்று இவர் கூறுகின்ற உறுதிப்பாடு எவ்வளவு பொருளுடையது என்று சிந்திக்க வேண்டும். இது நடைமுறையிலுள்ள பேச்சு வழக்கோடும் ஒட்டியிருக்கிறது. இனி, இதே கருத்தைக் கருவூர்த் தேவரும் திருப்பூவணப் பதிகத்தில் கூறுகிறார்: ‘நான் ஐம்புலன்களாகிய

1. திருவிசைப்பா, 16. 8.
2. திருப்பல்லாண்டு, 5.
3. திருவிசைப்பா, 11. 8.
4. திருவிசைப்பா, 10. 9.

கள்வரை விட்டு நீங்கி உனது திருவடியை அடையும் முறையில் அடைந்துவிட்டேன். நீ அருள் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி' என்கிறார்.

கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன்
அடியிணை இரண்டும் அடையுமா றடைந்தேன்,
அருள் செய்வாய், அருள்செயா தொழிவாய்.[1]

இதன் பொருளாவது, இறைவன் திருவருள் செய்வது உறுதி என்பதாகும்.

திருவாலியமுதனார் திருவிசைப்பாப் பதிகம் பவளமால்வரை என்பது தில்லைக்குரியது; அகத்துறையில் அமைந்தது. ஒரு பாடலில் தலைவி தன்னை ஏற்றுக்கொள்ளும்படி தலைவனை வேண்டுவது, ஒரு மணப்பெண்ணின் நிலையைச் சுட்டிச் சொல்வது போல் காணப்படுகிறது; ஆயினும், இது ஓர் ஆன்மா பற்றுகளனைத்தையும் துறந்து தன்னை ஏற்றுக்கொள்ளும்படி பதியை வேண்டுவது பொருளாக உடையது. பாடலின் சொல்லமைப்பு மிகுந்த கனிவையும் நிராதரவான நிலையையும் சொல்லால் பிரதிபலிப்பது போலவே உள்ளது:

அறிவும் மிக்கநல் நாணமும்
நிறைமையும் ஆசையும் இங்குள்ள
உறவும் பெற்றநற் றாயொடு
தந்தையும் உடன்பிறந் தவரோடும்
பிறிய விட்டுனை அடைந்தனன்,
ஏன்றுகொள், பெரும்பற்றப் புலியூரின்
மறைகள் நான்குங்கொண் டந்தணர்
ஏத்தநன் மாநடம் மகிழ்வானே.[2]

பூந்துருத்தி நம்பி, சிவபிரானுடைய நடனத்தைத் தரிசிக்கும் போது, கண்முன் நடக்கும் நடனத்தைமாத்திரம் தரிசிக்கவில்லை. உலகத்தையும் பிரபஞ்சத்தையும் கடந்து, விசுவகாரணனாய், அனைத்தையும் இயக்குகின்ற ஒரு முழுமுதற் பொருளையே காணுகின்றார். பத்தியோடு உணர்பவருக்கெல்லாம் அது அண்டங்கடந்த பொருள், ஆனந்தவெள்ளப் பொருள் என்ற உணர்வோடு, பேரானந்தத்தோடு அப்பொருளை அனுபவிக்கிறார். அனுபவிக்கிற

1. திருவிசைப்பா, 14, 5.
2. திருவிசைப்பா பதிகம், 23, 8.

நேரம் குழந்தை போலாகி விடுகிருர் : குழந்தை தான் காணும் காட்சியை எல்லோருக்கும் காட்டி மகிழ்வது போல, இவர் தாமும் காட்டி மகிழ்கிருர் :

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோறு அமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும், தேவர்காள், இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய், உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய், அதற்கோர்
வித்துமாய், ஆரூர் ஆதியாய், வீதி
விடங்கராய், நடம்குலா வினரே.[1]

அவர் காட்டுவது, பூவுலகத்தாருக்கல்ல, தேவர்களுக்கு.

301 பாடல்கள் உடைய இத் திருமுறையில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமான (103) பாடல்களைப் பாடியவர் கருவூர்த் தேவர். இவருடைய பாடல்களில் கருத்துக்களின் பொலிவு மிகவும் அதிகமாயிருத்தலை எங்கும் காண்கிருேம். இவர் பாடியவற்றுள் கடைசியாகப் பாடிய பதிகம் கங்கைகொண்ட சோழேச்சுரப் பதிகம். இதன் பாடல்களில் அமைந்துள்ள பக்திச் சிறப்பும், பொருள் விளக்கமும் வேறு எந்தப் பாடல்களிலும் காண முடியாது. இதன் ஒவ்வொரு பாடலும் இத் திருமுறையுள் ஒரு மணியெனத் திகழ்கிறது, பத்தியிலும், சிவயோகத்திலும் திளைத்து வயதினுலும் முதிர்ந்த நிலையில் இவர் இதைப் பாடினுர், ஆதலால் முதிர்வால் வருகின்ற பக்குவம் இதன்கண் நன்கு மலர்ந்து காணப் படுகிறது. அஞ்செழுத்தை நெஞ்சத்தில் அழுத்தி உள்ளத்திலே இன்புறுகின்ற தொண்டனுக்கு என்னதான் கிடைக்காது.

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டே ?
அன்பொடு தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம் அள்ளூறும்
தொண்டருக்கு, எண்திசைக் கனகம்,
பற்பதக் குவையும், பைம்பொன் மாளிகையும்,
பவளவா யவர்பணை முலையும்,
கற்பகப் பொழிலும், முழுதுமாம் கங்கை
கொண்டசோ ழேச்சுரத் தானே.[2]

---

1. திருவிசைப்பா, 18, 2.

2. திருவிசைப்பா, 18, 3.

கருவூர்த் தேவர் யோகநிலையில் நின்றவர். எடுத்த பொது வான ஒரு கருத்திற்கேற்ப அவர் பல இடங்களில் யோக நிலையைச் சுட்டிப் பாடுகிறார். நீர் அளாவிய பால் தழலில் காய்ச்சப்படும் போது, நீர் முழுமையும் சுண்டிப் பாலானது முன்னிலும் சுவை பெறுதல் போல, யோகநிலை நிற்பார்க்கு, நீரையொத்த தீவினைகள் ஓட, பாலையொத்த நல்வினையாகிய ஞானம் முறுகிப் பதி ஞான மாகி விளங்கவே, அந்த யோக நிலையில் சிவ பரம்பொருள் நுட்ப மாகத் தன்னை அந்த ஞானத்தின் பொருளாக உணர்த்துகிறது என்று இத் தன்மையைப் பாலாகிய எடுத்துக்காட்டால் நன்கு உணர்த்துகிறார் :

பண்ணிய தழல்காய் பாலளாம் நீர்போல்
பாவமுன் பறைந்துபால் அனைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்ததோர் யோகினில் பொலிந்து,
நுண்ணியை எனினும், நம்ப,நின் பெருமை
நுண்ணிடை ஒடுங்கநீ வந்தென்
கண்ணினுள் மணியிற் கலந்தனை, கங்கை
கொண்டசோ ழேச்சுரத் தானே.[1]

திருவிடைமருதூர்ப் பதிகத்திலுள்ள 'பந்தமும் பிரிவும்' என்ற பாடல், நுட்பமான சிவானந்தானுபவத்தையும் அதன் குழூஉக் குறியாகிய பஞ்சாக்கரத்தையும் விளக்குவதாகும். ஞான நூல் களைக் கற்று அவற்றின் வழி குருவருளால் ஒழுகவல்ல ஆன்மா வானது சோபான முறையிலே உலகபந்தங்களை யுணர்ந்து அவற்றினின்றும் நீங்குகிறது; நீங்கிச் சிவானுபவம் பெறுகிறது : இந்தச் சிவானுபவம் பெறுகிறோம் என்ற உணர்வும் இல்லாமல் அனுபவிக்கிறது.

இன்றெனக் கருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்[2]

என்று மாணிக்கவாசகர் குறிப்பிடும் நிலையும் இதுவே. இவ்வாறு இறைவன் தான் செய்யும் அருளைப் புறத்தே உயிர் உணராதபடி பலகாலம் உள்ளிருந்து உணர்த்துகிறான். அப்போது அவனும் திருவருளும் ஆன்மாவும் தனியே கலந்து நிற்கின்றன. உணர் கிறோம் உணர்த்துகிறான் என்ற நினைப்பு இல்லை :

---

1. திருவிசைப்பா, 13, 9.
2. திருவாசகம், கோயில் திருப்பதிகம், 7.

பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவல்
படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானும் கலந்ததோர் கலவி
தெரியினும் தெரிவுரு வண்ணம்
எந்தையுந் தாயும் யானும்என் றிங்ஙன்
எண்ணில்பல் லூழிகள் உடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே.[1]

'சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி' என்ற கருத்தை இதே ஆசிரியர் கீழ்க்கோட்டூர் மணியம்பலத்துப் பதிகத்தில் 'சிந்தையால் நினையிற் சிந்தையும் காணேன்' என்று குறிப்பிடுவதும் இங்குக் காணத்தகும்: இதுவே நினைப்பற நினைந்த நிலை. சிந்தையும் தானும் இரண்டறக் கலந்துவிட்டமையினாலே அந்தக் கலவியைச் சிந்தை உணரவில்லை; அதுவாகவே நிற்கிறது என்பது கருத்து. இந்த நிலை பஞ்சாக்கரக் குறியீட்டில் வைத்துப் பேசும் போது, அதிசூக்கும பஞ்சாக்கரம் எனப்படும். சி என்பது பரம்பொருள்; வ என்பது திருவருள்; ய என்பது ஆன்மா. நமசிவாய என்பது ஸ்தூல பஞ்சாக்கரம்; அனைவரும் நன்கறிந்தது; நமசிவாய வாழ்க என்று திருவாசகம் தொடங்குவது நாம் அறிவோம். சிவாயநம என்பது சூக்கும பஞ்சாக்கரம். அருளை நாடுபவர்கள் சி முதலாக ஓதவேண்டும் என்பது சாத்திரம்; இதைக் குறியீடாகக் குறிப்பிடும் சூக்கும பஞ்சாக்கரம். 'நானேயோதவம் செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்' என்று திருவாசகத்தில் இதைக் காணலாம். இந்த ஐந்து எழுத்துக்களில் நம என்ற திரோதான சத்தியையும் மலத்தையும் கழன்று நிற்கிற நிலையில், ஆன்மா தானும் அருளும் பரம்பொருளுமாக நிற்கும். இதைச் 'சிவாய' என்ற குறியீட்டால் சாத்திரம் உணர்த்தும். 'சிவாய என்றெண்ணினார்க்கிடம் பாலைத்துறை' என்று அப்பர் தேவாரமும், 'நண்பாற் சிவாயவெனா நாலூர் மயானத்தே இன்பா யிருந்தான்' என்று சம்பந்தர் தேவாரமும் இந்த நிலையைக் குறிப்பிடும். 'எந்தையும் தாயும் யானும்' என்ற திருவிசைப்பாத் தொடரும் இந்த 'சிவாய' (சிவய) என்ற அதி சூக்கும பஞ்சாக்கர நிலையைச் சுட்டுவது அறியத்தக்கது.

சைவத்தினுடைய ஒரு சிறப்பு அதனுடைய விரிந்த கொள்கை. யார் எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் அத்தனையும் சிவபெருமான் ஏற்று அவரவருக்குத் தக்க பலனை அளிக்கிறான் என்று

---

1. திருவிசைப்பா, 17, 7.

தோத்திரங்களும் கூறும் ; சாத்திரங்களும் வலியுறுத்தும். ‘விரிவிலா அறிவினுர்கள் வேறெரு சமயம் செய்தே—எரிவினுல் சொன்னுரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்’ என்பது அப்பர் தோத்திரம். ‘அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்’ என்றும், ‘யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகி அங்கே மாதொரு பாகனுர் தாம் வருவர்’ என்றும் அருணந்தியின் சாத்திரமும் சொல்லும். ‘நானழிய வல்லதனுல், ஆரேனும் அன்பு செய்யின் அங்கே தலைப்படுங்காண், ஆரேனும் காணு அரன்’ என்று ‘திருக்களிற்றுப்படியார்’ கூறுகிறது. இதையே கருவூர்த் தேவர் மிகவும் அலங்காரமாக எடுத்துச் சொல்வது நன்கு சிந்தித்துப் போற்றத் தகுந்தது ; இறைவன் உருவம் யாது ?’—

சுருதிவா னவனும்; திருநெடு மாலாம்;
சுந்தர விசும்பின் இந்திரனும் ;
பருதிவா னவனும்; படர்சடை முக்கட்
பகவனும்; அகவுயிர்க் கமுதாம்;
எருதுவா கனனும்; எயில்கள்மூன் றெரித்த
ஏறுசே வகனுமாம்; பின்னும்,
கருதுவார் கருதும் உருவமாம்—கங்கை
கொண்டசோ ழேச்சுரத் தானே.

இறைவன் அண்டங்கடந்த பொருள். அந்தத் தன்மையில் சைவ வைணவ சமயங்கள் இறைவனை விசுவாதீதன் என்று சொல்லும் ; அந்த வடிவமே விசுவரூபம். இதைத் திருமால் மகாபலியின் முன்பு காட்டிய திருவிக்கிரம வடிவத்திலும், தேர்த் தட்டின்மீது போர்க்களத்தில் பார்த்தனுக்குக் காட்டிய பெரு வடிவத்திலும், தூதனுய் வந்த கண்ணனைத் துரியோதனன் கொல்ல எண்ணிய போது அவன் காட்டிய பெருவடிவத்திலும், சூரபதுமனுக்கு முருகன் காட்டிய விசுவரூபத்திலும் நாம் காணலாம். பின் வந்த சாத்திரமாகிய திருக்களிற்றுப்படியார், ‘அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப் பெரு வடிவை யார் அறிவார் பேசு’ என்று துதிக்கிறது. இப்படி எல்லோரும் ஏத்துகின்ற அந்த விசுவரூபத்தைத் திருவிசைப்பாவும் சொற்களால் சொல்லித் துதிக்கிறது !

எண்ணில்பல் கோடி சேவடி முடிகள்,
எண்ணில்பல் கோடிதிண் தோள்கள்,
எண்ணில்பல் கோடி திருவுரு நாமம்,
ஏர்கொள்முக் கண்முகம் இயல்பும்
எண்ணில்பல் கோடி, எல்லைக்கப் பாலாய்
நின்றைஞ்ஞூற் றந்தணர் ஏத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தர்,ஏர் வீழி
இவர்நம்மை ஆளுடை யாரே.

## 5. திருவிசைப்பா பாடப்பெற்ற காலம்

திருவிசைப்பா தொகுக்கப்பட்ட காலத்தை முன்பு ஆராய்ந் தோம். இங்கு எழுதப்பெற்ற காலத்தை ஆய்ந்து வரையறை செய்வோம். பாடிய ஆசிரியர் ஒன்பதின்மர் என்று கண்டோம். இவர்களுடைய காலம் என்று பேசும்போது, எந்தக் கால எல்லைக் குள் இவர்கள் வாழ்ந்து பாடல் பாடினூர்கள் என்பதே கருத் தாகும். இந்த ஒன்பதின்மருள்ளும் இருவர் காலம் மிகவும் திட்ட மாய், சோழர் வரலாற்றினுல் வரையறுக்கப் பெறுகின்றது. அவர்களாவார், கண்டராதித்தரும், கருவூர்த் தேவரும். கண்ட ராதித்தர் சோழ சக்கரவர்த்தியாய் தஞ்சை அரியணையில் 953—957 ஆகிய காலத்தில் வீற்றிருந்து ஆட்சி புரிந்தவர். கருவூர்த் தேவர் இராசராச சோழன் தஞ்சைப் பெருங்கோயில் எடுத்த காலத்தில் உடன் இருந்தார் என்பது வழக்கு. அதுபோல, அச் சோழ மன்னனுடைய மகனுன முதலாம் இராசேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலை எடுத்தபின் இத் தலத்துக்கும் ஒரு திருவிசைப்பாப் பாடியிருக்கிருர். இக் கோயில் கட்டிய காலம் 1085; இராசேந்திரன் காலம் 1012—1044. ஆகவே கருவூர்த் தேவர் 1040 வரை இருந்திருக்கிருர் என்று கொள்வது பொருத்த மாகும். இதுவே திருவிசைப்பாக் காலத்துக்கு மேலெல்லையாகும். இனி பிறவற்றையும் ஆராய்வோம். இந்த வரலாற்ருராய்ச்சியில் நமக்குத் துணைபுரிவன, கல்வெட்டுச் சான்றுகள், சம்பிரதாயக் கதைகள், திருவிசைப்பாப் பாடல்கள் என்ற மூன்றுமாகும். இம் மூன்றையும் ஒற்றுமைப்படுத்திக் காணும்போது, விளக்கம் பெரும லிருந்த ஆசிரியர்களின் காலம் நன்கு விளக்கமுறக் காண்கிருேம்.

இத் திருமுறையில் பதிகம் பாடிய எல்லா ஆசிரியர்களும் இசைப் பாடல்களே பாடியிருக்கிருர்கள்; நோக்கம் இசையோடு பாடவேண்டும் என்பது. எனவே, இசையோடு பாடுவதற்கு வாய்ப்பு இருந்தது என்பதும் தெளிவு. இவர்கள் காலத்துக்குமுன் இரட்டை மணிமாலை, மும்மணிக் கோவை, உலா, அந்தாதி போன்ற பிரபந்த வகைகள் இருந்தன. இவர்கள் ஒன்பது ஆசிரியர் அவ்வகை இயல் நூல் எதுவும் பாடாமல், இசைப் பாடலே பாடியிருக்கிருர்கள்; அன்றி எல்லோரும் தில்லைக்குப் பதிகம் பாடியிருக்கிருர்கள்.

மிகக் குறைந்த பாடல்களை உடைய இத் திருமுறையை நன்கு நோக்கும்போது, இப் பாடல்கள் யாவும் ஒரே காலத்தில் ஒரே சூழ்நிலையில் ஒரே ஆதரவில் தோன்றியன என்று கருதும்படி உள்ளன. எனவே, இந்த நிலை பற்றிய சில பொதுவான கருத்துக் துக்களை இங்கு சிறிது விளக்கிச் சொல்லலாம்.

தேவாரம் பாடிய ஆசிரியர் காலத்துக்குப் பின் சைவ மக்கள் தலந்தோறும் தங்கள் தலத்துக்குரிய தேவாரப் பதிகங்களைப் பாடி அங்கு எழுந்தருளிய சிவபெருமானை வழிபட்டு வந்தார்கள். நாடெங்கும் ஒரு பக்தி வெள்ளம் கரைபுரண்டு பொங்கித் ததும்பிப் பெருக்கெடுத்து ஓடிற்று. இந்த வெள்ளமானது சிவபக்தி உடைய வர்களாய் வாழ்ந்த சோழ மன்னரை, சங்க காலத்துக்குச் சுமார் 600 ஆண்டுகளுக்குப் பின், மீண்டும் அரியணையில் ஏற்றி நெடு நாள் அங்கேயே வைத்துக் காப்பாற்றிற்று என்றால் மிகையாகாது. இது வரலாற்று உண்மை. கி.பி. 845-இல் விசயாலயன் என்ற பெயரையுடைய சோழ மன்னன் தஞ்சையிலிருந்து ஆட்சிபுரிந்த முத்தரையர் என்ற குறுநில மன்னரை வென்று அங்கிருந்து வெருட்டி மீண்டும் அங்குச் சோழர் ஆதிக்கத்தை நிலைநாட்டினான். 'இவன் தொண்ணூற்றாறு புண் சுமந்தவன்'[1] என்று பிற்காலத்து உலாப் பிரபந்தங்கள் இவனைச் சிறப்பிப்பது, இவனது வீரம் எத்தகையது, எத்துணைப் போர்கள் இவன் செய்திருக்கிறான் என்பதை நன்கு புலப்படுத்தும். இவன் காலம் முதல், சோழர் ஆட்சி வளர்ந்தது. அதன் ஆதரவில் சைவமும் தமிழும் தழைத் தோங்கின. இந்த வளர்ச்சியே பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் பேரரசனாகிய இராசராச மன்னன் நம்பியாண்டார் நம்பியைத் துணைகொண்டு, தொகுக்கப் பெறாமலும், கிடைக்காமலும் இருந்த தேவாரப் பதிகங்களைத் தேடித் தொகுத்து வெளிப்படுத்தும்படி செய்தது. இக் காலம் சைவத்துக்கு மட்டுமல்லாமல், தமிழுக்கும் ஒப்பற்றதொரு பொற் காலம். இராசராச மன்னனும் அவன் பின்வந்த கங்கைகொண்ட சோழனாகிய இராசேந்திர சோழனும் தமிழ் வழங்கிய நிலமெல்லாம் ஒரு குடையின்கீழ்க் கொண்டுவந்தனர்.

சேரர் பாண்டியர் அனைவரும் ஒடுங்கிவிட்டனர். சோழர் படை கங்கை நதிவரையில் சென்றது. கடல் கடந்துசென்று ஈழம் நக்கவாரம், நாகநாடு, ஸ்ரீவிஜயம் (சுமாத்ரா), கடாரம் (இன்றைய மலேஷியா, இந்தோனேஷியா) முதலான எல்லா நாடுகளையும் சோழர் குடையின்கீழ்க் கொண்டுவந்து, அங்கெல்லாம் தமிழர் நாகரிகத்தையும், சைவ சமயத்தையும் பரப்பியது. இந்தப் பொற்

1. கலிங்கத்துப்பரணி 192: விக்கிரம சோழன் உலா 15; குலோத் துங்கன் உலா 21; இராசராசன் உலா 19: சங்கரசோழன் உலா 15.

காலத்தில் தமிழ் நாட்டில் ஊற்றெடுத்த புதிய தேனே திரு விசைப்பா என்ற தெய்வ இசைத்தேன்.

சோழர் பரம்பரையில் கண்டராதித்தர் என்ற ஒரு சிவஞானி தோன்றினர். இவர் வரலாறு முன்னே விரிவாகக் கூறப்பட்டது. இவர் காலமே திருவிசைப்பாத் தொடக்ககாலம் என்று கருது கிறோம். விசயாலய சோழனது புதல்வனுகிய ஆதித்த சோழன் பல சிவாலயங்களைக் கட்டியவன். அவன் 'காவிரியின் இரு கரையும் கோயிலாகவே எழுப்பிவிட்டான்' என்று வடமொழியில் அமைந்த அவனுடைய பிரசஸ்தி ஒன்று[1] கூறுகிறது. அவன் தன் பெயரால் கட்டிய களந்தை ஆதித்தேச்சுரத்துக்கு அடுத்த நூற்றுண்டில் கருவூர்த் தேவர் திருவிசைப்பாப் பாடினுர் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. அவன் புதல்வனுகிய முதல் பராந்தக சோழன் தில்லையம்பலத்தைப் பொன் வேய்ந்த பெருஞ் சிறப்புடையவன். இப் பராந்தகன் புதல்வரே சிவஞானியாகிய கண்ட ராதித்தர்.

பராந்தகனுடைய மூத்த புதல்வன் இராசாதித்தன் என்பவன், இளவரசாக இருந்தான். அவனுடைய இளவலாக அரச பதவிக்கு வரும் வாய்ப்பே இல்லாது வாழ்ந்த கண்டராதித்தர், தந்தையினுடைய சிவாலயத் திருப்பணியில் பெரும் பங்குகொண்டார் என்று கருதவேண்டும். போர்கள் மிகுந்திருந்த காலத்தில் சக்கர வர்த்தியான பராந்தக மன்னன் தன் தலைநகரான தஞ்சையை விட்டுத் தில்லையில் தொடர்ந்து நெடுநாள் தங்கியிருக்க முடியாது. தில்லையம்பலம் பொன் வேய்ந்த காலத்தில் தந்தையின் சார்பில் இவர் தில்லையில் தங்கி அத் திருப்பணியை மேற்பார்வை செய்து வந்தார் என்று நாம் யூகிக்கலாம். இளவரசனுகிய இராசாதித்தன் தன் தலை நகராகிய தஞ்சையில் இருந்து அரசியல் துறையில் பழகி வந்தான். நடராசப் பெருமானிடத்துப் பக்தியும், திருமுறை களில் தோய்வும் கொண்டு, அரசபரம்பரையில் தோன்றி, தில்லை

1. அன்பில் செப்பேடு, சுலோகம் 18: சோமசுந்தர தேசிகர் பின் வருமாறு இதன் மொழிபெயர்ப்பைத் தருகிருர்:

கண்மூடாக் கடலின் திரை நுனியிலிருந்து
தவழ வாங்கே களிறு சிந்துங்
கன்னமத மூற்றெடுத்துத் காலொடு சென்று
கலக்குங் காவிரிப் புறமெல்லாம்
வண்ணமுற ஆலயம்பல பதாகையென
மணிகண்டற் கமைத்தனன், கல்லாற்
புண்ணியமே யுருவாய வொளிமகுடன்
வென்றிபுனை பூர்வா தித்தனே.

யில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த இவர் பிற்காலத்தில் தான் அரசரானபின் தாமே பெருமானுக்கு இசைப்பாப் பாடினர். அக் காலத்தில் நாட்டில் சிவபக்திச் செல்வர்களாக விளங்கிய அனை வரும் இவரை விரும்பிக் காணவந்தது இயல்பே. போரில் இராசா தித்தன் இறந்துபோகவே, இவர் இளவரசாகி, பின் அடுத்த மூன்று ஆண்டுகளில் தந்தையும் காலமாகவே, அரச பதவி ஏற்ருர். பட்டமேற்றதற்கு முற்பட்ட காலத்தில் திருமாளிகைத் தேவர், சேந்தனர், வேணாட்டடிகள், திருவாலியமுதனர் ஆகிய அடி யார்கள் இவரால் போற்றப் பெற்ருர்கள். வேணாட்டுக் குறுநில மன்னராய்த் தில்லையில் ஈடுபாடு கொண்டிருந்த வேணாட்டடிகள் இவரிடம் நட்புப் பூண்டு தில்லையில் சிலகாலம் வாழ்ந்திருத்தல் இயல்பே.

இனி, சேந்தனர் வரலாற்றில் ஒரு சோழ மன்னன் பெருமா னுடைய நடனத் திருச் சிலம்போசையைக் கேட்டுவந்தான் என்ற செய்தி சொல்லப்படுகின்றது. அச் சோழ மன்னன் இக் கண்டராதித்தரே என்று முடிவு செய்யலாம். பின்னும் ‘நீறணி பவளக் குன்றம்’ என்ற திருமாளிகைத் தேவர் பாடல் தொடரை அடிப்படையாக வைத்து அவரும் இக் காலத்துக்கு உரியவராவார் என்பதை அடுத்துக் காட்டியிருக்கிருேம். ஆதலால் இங்குக் குறிப்பிட்ட சில திருவிசைப்பாக்காரர் கண்டராதித்தரால் போற்றப் பெற்று வாழ்ந்தவர்கள் என்று கொள்வதில் எந்தப் பொருத்தக் குறைவும் இல்லை.

கண்டராதித்தர் நான்கு ஆண்டுகளே அரியணையில் வீற்றிருந் தார். அவர் தொடக்கிவைத்த நற்பணிகளெல்லாம் அவருடைய தேவியாகிய செம்பியன் மாதேவியாரால் தொடர்ந்து நிறை வேற்றப்பட்டன. இவர் கண்டராதித்தர் பட்டத்துக்கு வருமுன்பே பராந்தக சோழன் ஆட்சிபுரிந்த காலத்தில் திருக்கற்குடிக் கோயி லுக்கு விளக்கெரிக்க நிபந்தமொன்றளித்தார். அப்போது இவருக்கு வயது குறைந்த அளவு இருபது இருக்கலாம். இராச ராசனுடைய பதினுரும் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1001) இவர் காலமானுர் என்று தெரிகிறது. ஆகவே எண்பது ஆண்டுகளுக்கு மேலும் இவர் வாழ்ந்து பல சோழ மன்னர்களை அரியணைமேல் இருத்தி மகிழ்ந்திருக்கிருர். இவர் காலத்தில் ஆட்சிபுரிந்த சோழர் முதல் பராந்தகன், அவருடைய புதல்வரும் இவருடைய கணவரு மாகிய கண்டராதித்தர், இவருடைய தம்பியாகிய அரிஞ்சய சோழன், அவனுடைய புதல்வனகிய இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தர சோழன், பின்னர் செம்பியன் மாதேவியாரது புதல்வனன மதுரந்தக உத்தம சோழன், பின்னர் சுந்தர சோழன் புதல்வனன பெருங் கீர்த்திவாய்ந்த முதலாம் இராசராச சோழன் ஆகிய சோழ மன்னர் அறுவர் காலங்களில் இவர் வாழ்ந்து தம்

கணவருடைய சிவப் பணியையும், சிவபக்திச் செல்வத்தையும் வளர்த்திருக்கிறார். அவற்றை விரித்தால் அது தனி நூலாகவே ஆகும். அன்றியும், இராசராசன் புதல்வனாகிய முதலாம் இராசேந்திரன் 1012-இல் பட்டம் ஏற்றான். அவனைக் குழந்தைப் பருவத்தில் வளர்த்துப் பக்தியும் வீரமும் ஒருங்கே அமைந்த இளைஞனாக்கிய பெருமை செம்பியன் மாதேவியாருக்கு உண்டு. அவன் கட்டிய கங்கைகொண்ட சோழேச்சுரத்துக்குச் சாந்தி விழா நடைபெற்றது 1035-இல். அப்போது கருவூர்த் தேவர் இருந்து அத் தலத்துக்குத் திருவிசைப்பா பாடினார். இதுவே திருவிசைப்பாக்களின் காலத்துள் கடைசி ஆகும்.

இதற்குத் தொடக்க காலம் கண்டராதித்தருடைய இளமைப் பருவம் உத்தேசம் 940 என்று கொள்ளலாம். ஆகவே 940 முதல் 1040 வரை உள்ள காலத்தைத் திருவிசைப்பாக் காலம் என்று கூறுகிறோம். இதன் தொடக்கக் காலத்தில் கண்டராதித்தர் இறந்துவிட்டார் (957). செம்பியன் மாதேவியார் 1001இல் இறந்தார். ஆனால் 1040 வரையில் ஆட்சிபுரிந்த இராசராசனும் இராசேந்திரனும் இம் மாதேவியார் வளர்த்து எடுத்த பிள்ளைகள் என்று காட்டினோம். ஆதலால் இந்த நூறு ஆண்டுக் காலத்தைச் செம்பியன் மாதேவியாரின் செல்வாக்குக் காலம் அல்லது சிவப் பணிக் காலம் என்றும், திருவிசைப்பாக் காலம் என்பது செம்பியன் மாதேவியார் காலமே[1] என்றும் கூறுவது பிழையாகாது. திருவிசைப்பா ஆசிரியர்களுடைய கால எல்லையும் இதற்கேற்ப இக் காலத்துக்குப் பொருந்தவே உள்ளது.

| | | |
|---|---|---|
| 1. கண்டராதித்தர் காலம் | ... 940—957[2] | திருமாளிகைத் தேவர், சேந்தனார், கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார் ஆகிய ஐவர். |
| செம்பியன் மாதேவியார் காலம் | ... 940—1001 | |
| 2. இராசராசன் காலம் | ... 985—1014 | பூந்துருத்தி நம்பி காடநம்பி, புருடோத்தம நம்பி, சேதிராயர், கருவூர்த் தேவர் ஆகிய நால்வர். |
| இராசேந்திரன் காலம் | ... 1012—1044 | |

திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி காலமும் பின் கூறிய இரு மன்னர்களின் காலமாகிய 1000—1040 ஆகும்.

---

1. செம்பியன் மாதேவியார் என்ற எமது ஆங்கிலக் கட்டுரை காண்க ; ஆங்கில சைவ சித்தாந்தம் தொகுதி 5, இதழ் 1, 1970—ஜனவரி-மார்ச்சு.

2. இங்குக் குறிப்பிட்ட கால எல்லை ஆயுட் காலமன்று, ஆட்சி அல்லது வியாபக காலம்.

ஆசிரியர்களுள் திருமாளிகைத் தேவர், சேந்தனூர், கண்டராதித்தர், கருவூர்த் தேவர் நீங்கலாக ஏனையோர் வரலாற்றினால் விளங்காதவர்கள். ஒருகால் இவர்களில் பலர் வேணாட்டடிகள், திருவாலி அமுதனார் போன்றவர்கள் கண்டராதித்தர் காலத்தில் வாழ்ந்து அவர் சென்ற நெறியிலே தாங்களும் சென்று பதிகம் பாடியிருக்கலாம். அல்லது அவருடைய மனைவியும், சிவபக்திச் செல்வத்தால் சிறந்தவரும், நீண்டகால ஆயுளோடு இருந்து சிவபெருமான் பணியிலே தம் காலத்தைச் செலவிட்டவருமாகிய செம்பியன் மாதேவியாரால் தூண்டப்பெற்று இத் திருவிசைப் பாக்கள் பாடியிருக்கலாம். இவர்களைப் பற்றிய விளக்கம் நமக்குக் கிடைக்கவில்லை. எல்லாக் கல்வெட்டுகளும் படியெடுத்தாகவில்லை; படியெடுத்தவை வெளியிட்டாகவும் இல்லை. ஆகவே எல்லாம் படியெடுத்து எல்லாம் வெளியிட்டாகின்ற நிலையில் இத்துறையில் இன்னும் விளக்கம் கிடைத்தல் கூடும்.

மற்றொரு பொதுவான கருத்தையும் நினைவில் கொள்ளுதல் தகும். ஓராசிரியர் பாடிய தலத்தை மற்றோர் ஆசிரியர் பாடவில்லை. தில்லையை ஒன்பது பேரும் பாடியிருக்கிறார்கள். மற்றத் தலங்கள் இங்குள்ளவை பதின்மூன்று. இவற்றுள் எந்தத் தலத்துக்கும் இரு பதிகங்கள் இல்லை. இருவர் பாடல் இல்லை. எதனால் இந்த நிலைமை என்று சிந்திக்கலாம். இப் பதிகங்கள் எழுவதற்கு ஒரு தூண்டுகோல் இருந்தது. அதுவே கண்டராதித்தர் காட்டிய ஊக்கம். அவர் காலத்தின் பின் அவர் தேவியார் செம்பியன் மாதேவியார் காட்டிய ஊக்கம். வெவ்வேறு தலங்களுக்கு இவர்கள் இவ்வடியார்களை அனுப்பித் தரிசிக்கச் செய்தார்கள் போலும். அது காரணமாகவே சேந்தனார் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகியவற்றுக்கும், பூந்துருத்தி நம்பி திருவாரூருக்கும் பதிகம் பாடினர். அதிகமான பதிகம் பாடிய கருவூர்த் தேவர், களந்தை ஆதித்தேச்சுரத்துக்கும், திரைலோக்கிய சுந்தரத்துக்கும் செம்பியன்மாதேவியார் உயிரோடிருந்த காலத்தில் பாடினார் என்று சொல்லலாம். இவையன்றி இராசராசேச்சுரம், கங்கைகொண்ட சோழேச்சுரம் ஆகியவற்றுக்குக் குடமுழுக்கு நிகழ்ந்தபோது உடன் இருந்து பாடினார் என்பதும் இயல்பு. இவையும் தில்லையும் போக அவர் பாடிய வேறு தலங்கள் ஐந்து: திருக் கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, திரு இடைமருதூர் என்பன. திருக்கோட்டூர் சம்பந்தர் பதிகமுடைய தலம். கருவூர்த் தேவர் இத் தலத்துக்குப் பதிகம் பாடாமல், இதற்குக் கிழக்கேயுள்ள மணியம்பலம் என்ற பதிகம் பெறாத சிறு கோயிலுக்குப் பாடிய கருத்து என்ன? பதிகம் பெறாத தலங்களுக்கும் சிறப்பு ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்

தால், சிவபக்திச் செல்வியாகிய செம்பியன் மாதேவியார் ஆற்றுப் படுத்தியதே என்று நாம் கருதுகிறோம். அவர் இறந்து போய் விட்டார் (1001) என்பது உண்மை. அவருடைய நோக்கத்தை இவர் கடைப்பிடித்துப் பின்னரும் பாடினார். இந்த ஒற்றுமை யாலும் திருவிசைப்பாக் காலம், கண்டராதித்தரும், செம்பியன் மாதேவியாரும் விளங்கிய காலம் என்பது உறுதி பெறுகிறது.

## சேந்தனாரும் கண்டராதித்தரும்

சேந்தனாருடைய காலம் நன்கு உறுதி செய்யப்படவில்லை. நாங்கூர்ச் சேந்தரும், திருவிசைப்பாச் சேந்தரும் ஒருவரே என்ற கருத்து முன்னமே நிலவியதால் சேந்தனார் காலம் பட்டினத்தடிகள் காலமே என்றும், இரண்டாம் வரகுணனைத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் பாடிய பட்டினத்தடிகள் காலம் வரகுணன் காலமாகிய 9-ஆம் நூற்றுண்டுக்கு அடுத்த 10-ஆம் நூற்றுண் டாகுமென்றும் இதுவே சேந்தனார் காலமுமாகுமென்றும் ஆராய்ச்சி யாளர் கூறியிருக்கிறார்கள். ஆனால் இருவேறு பட்டினத்தார் இருவேறு காலங்களில் வாழ்ந்தார்களென்றும், திருவிசைப்பாப் பாடிய சேந்தனார் பட்டினத்தார் வாழ்க்கையில் தொடர்பு கொள்ள வில்லையென்றும் நாம் நிறுவி இருக்கின்றமையால், அக் கருத்துக் களைக் கொள்ள முடியவில்லை. சேந்தனார் காலத்தை மீண்டும் தனியே ஆராய்ந்து வரையறை செய்வது அவசியமாகிறது.

கண்டராதித்தர் காலத்திலும் பின்னர் அவருடைய தேவி செம்பியன் மாதேவியார் காலத்திலும் ஒரு பெரிய பத்தி வெள்ளம் தோன்றிச் சோழ அரசர் பரம்பரையிலும், சோழ நாட்டு மக்களிடையேயும் நெடிது பரவிற்று என்று தொடக்கத்தில் விளக்க மாகக் கூறியிருக்கிறோம். இப்பொழுது இச் சேந்தனார் பற்றி நம்பியாண்டார் நம்பியும், உய்யவந்த தேவரும் கூறும் சொற்களை வைத்துச் சேந்தனார் வரலாற்றை ஏற்றுக்கொள்வோமாயின் அவர் களி நிவேதனம் செய்ததையும், பல்லாண்டு பாடியதையும் உண்மைச் சம்பவங்களாகக் கொள்ளவேண்டும். அக் காலத்தில் ஒரு சோழ மன்னன் இருந்து நடராசப் பெருமானை வழிபாடுசெய்த காலத்துத் திருச்சிலம்பொலியைக் கேட்டான் என்று வரலாறு கூறுகிறது. திருச்சிலம்போசை ஒலி வழியே சென்று நிருத்தனைக் கும்பிடுகின்ற நிலையை, திரு உந்தியாரில் திருவியலூர் உய்யவந்த தேவரும், திருக்களிற்றுப்படியாரில் திருக்கடவூர் உய்யவந்த தேவரும் பாடியிருக்கிறார்கள்.

திருச்சிலம் போசை ஒலிவழி யேசென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற.[1]

ஓசையெலாம் அற்றால் ஒலிக்குந் திருச்சிலம்பின்
ஓசை வழியேசென் றெத்தொடுங்கின்—ஓசையினின்
அந்தத்தா னத்தான் அரிவையுடன் அம்பலத்தே
வந்தொத்தான் அத்தான் மகிழ்ந்து.[2]

வரலாற்றிலும் நடராசப் பெருமானுடைய திருச்சிலம்பொலி யையோ, அருள் உள்ளத்தையோ கேட்கின்ற சந்தர்ப்பங்கள் இரண்டு வருகின்றன. ஒன்று, சேரமான்பெருமாள் நாயனார் வரலாறு. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்து ஆட்சி புரிந்த சேரமான் பெருமாள் திருச்சிற்றம்பலத்துள் ஆடும் கழலைத் தொழுவதே அரசின் பயன் என்று கருதி, ஈசனை முறையாக அருச் சித்து வந்தார். இவருடைய அருச்சனைக்கு மகிழ்ந்த கூத்தப் பெருமானும் தமது திருச்சிலம்பின் நடன ஒலி கேட்குமாறு அருள் புரிந்தார்.

"நீடும் உரிமைப் பேரரசால் நிகழும் பயனும் நிறைதவமும்
தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைத் திருச்சிற் றம்பலத்துள்
ஆடுங் கழலே" எனத்தெளிந்த அறிவா லெடுத்த திருப்பாதம்
கூடும் அன்பில் அர்ச்சனைமேற் கொண்டார் சேரர் குலப்பெருமாள்.

வாசத் திருமஞ் சனம்பள்ளித் தாமஞ் சாந்தம் மணித்தூபம்
தேசிற் பெருகுஞ் செழுந்தீபம் முதலாயினவுந் திருஅமுதும்
ஈசற் கேற்ற பரிசினால் அருச்சித் தருள எந்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பின் ஒலிஅளித்தார்.[3]

இவ்வாறு பூசித்து வரும்போது ஒருநாள் சேரமான் தம் பூசை முடிவில் திருச்சிலம்பின் ஒலியைக் கேட்கவில்லை. அப்போது அவர் மிகவும் மனம் வருந்தி, யான் ஏதோ பிழைசெய்தேன். அதனால் ஒலி கேட்கவில்லை. இனி இவ்வுடம்பினால் அடையும் பயன் யாது? என்று துணிந்து தம்முடைய உடைவாளை உருவி மார்பில் நாட்டினார். அப்போது ஈசர் விரைந்து திருச்சிலம்பின் ஓசையை இசைப்பித்தார் :

---

1. திரு உந்தியார், 17.

2. திருக்களிற்றுப்படியார், 33.

3. பெரியபுராணம், 3775-6.

வானக் கங்கை நதிபொழிந்த மல்கு சடையார் வழிபாட்டுத்
தூநற் சிறப்பின் அர்ச்சனையாந் தொண்டு புரிவார் தமக்கொருநாள்
தேனக் கலர்ந்த கொன்றையினார் ஆடற் சிலம்பின் ஒலிமுன்போல்
மானப் பூசை முடிவின்கண் கேளா தொழிய மதிமயங்கி.

பூசை கடிதுமுடித் தடியேன் என்னே பிழைத்த தெனப்பொருமி
"ஆசை உடம்பால் மற்றினிவே றடையு மின்பம் யா"தென்று
தேசின் விளங்கும் உடைவாளை உருவித் திருமார்பில் நாட்ட
ஈசர் விரைந்து திருச்சிலம்பி னோசை மிகவு மிசைப்பித்தார்.[1]

ஒலியைக் கேட்டுச் சேரமான் தொழுதெழுந்து, இறைவனைத் திருச்சிலம்பு ஒலிப்பதற்குத் தாழ்த்துதல் என்ன காரணம் என்று கேட்டலும், இறைவன் 'அன்பனே, நாம் இன்று, சிற்றம்பலத்தில் திருக்கூத்தை வணங்கி வன்தொண்டன் பாடிய பதிகத்தைக் கேட்க நின்றமையால் வரத் தாழ்த்தது' என்று சொல்லி, சுந்தரரைப்பற்றி அறிவித்து, அவரோடு இவரை நட்புப்பூணச் செய்தார். இது சேக்கிழார் கூறும் பெரியபுராண வரலாறு. இங்கு முறையாக சிலம்பொலியைக் கேட்டுவந்த சேரமானுக்கு ஒருநாள் சிலம்பொலியை நிறுத்தி, அதன் மூலமாகச் சுந்தரமூர்த்தியை இறைவனே அறிமுகப் படுத்திவைத்தார் என்பது முக்கியமான பொருள்.

மற்றொரு நாயனார் வரலாறும் இதே பொருளைக் கூறுவது. பூசலார் நாயனார் திருநின்றவூரில்[2] வாழ்ந்த சிவபக்தி மிக்க அந்தணர். அவர் பொருள் இல்லாமையால் மனத்தால் இறைவன் ஆலயம் எடுப்பதற்கு வேண்டிய பொருள் எல்லாம் சிந்தையால் திரட்டிக்கொண்டார். மனத்தாலேயே கோயிலைக் கட்டினார். கும்பாபிடேகத்துக்கு நாள் வகுத்து முடித்தார். இதற்கிடையில் கச்சியில் ஆட்சிபுரிந்த காடவர் கோமான் பெரும் செல்வம் செலவிட்டுச் சிறப்பான கற்றளி எடுத்தான். சிவலிங்கப் பிரதிட்டைக்காக அவன் நாள் வகுத்தபோது, பெருமான் அந்த நாளுக்கு முதல்நாள் இரவு அவன் கனவில் தோன்றி, 'அன்பனே, பூசல் அன்பன் செய்த கோயிலில் நாளை நாம் புகுவோம். நீ உனது கும்பாபிடேகத்தை நாளை நடத்தாமல் பின்னொருநாள் செய்வாயாக' என்று அருள்செய்தார்.

---

1. பெரியபுராணம், 3793-4.

2. இதுவே சென்னைக்கு அருகில் இன்று திண்ணனூர் என்று வழங்கும் ஊர்.

மனத்தினுற் கருதி எங்கும் மாநிதி வருந்தித் தேடி
எனைத்துமோர் பொருட்பே றின்றி என்செய்கே னென்று நைவார்
நினைப்பின லெடுக்க நேர்ந்து நிகழ்வுறு நிதிய மெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார்.[1]

அடிமுத லுபான மாதி யாகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினல் வகுத்து மான
முடிவுறு சிகரந் தானும் முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயில் நிரம்பிட நினைவாற் செய்தார்.

தூபியும் நட்டு மிக்க சுதையும்நல் வினையுஞ் செய்து
கூவலு மமைத்து மாடு கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியுந் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னுந்
தாபரஞ் சிவனுக் கேற்ப விதித்தநாள் சாரு நாளில்.

காடவர் கோமான் கச்சிக் கற்றளி எடுத்து முற்ற
மாடெலாஞ் சிவனுக் காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமா லறியா தாரைத் தாபிக்கு மந்நாள் முன்னுள்
ஏடலர் கொன்றை வேய்ந்தா ரிரவிடைக் கனவி லெய்தி.

"நின்றவூர்ப் பூச லன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து நாளைநாம் புகுவோம் நீஇங்
கொன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வா" யென்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்கொண் டருளப்
[போந்தார்.

அதன்மேல் அரசன் தான் செய்ய நினைத்த கும்பாபிடேகத்தை நிறுத்தி, பூசலாரைத் தேடிக் கண்டு அவருடைய பக்திச் சிறப்பை அறிந்து அவருக்குப் பெருஞ்சிறப்புச் செய்தான்.

இங்கும் சிவபெருமான் சிலம்பின் ஒலி இல்லாவிட்டாலும், அவருடைய திருவுள்ளத்தை அரசனுக்குப் புலப்படுத்தி மற்றோர் அடியவரை அறிமுகப்படுத்துகின்ற நிலையைக் காண்கிறோம். இங்கு, அரசன் ஆவான் காஞ்சியில் 666—705 ஆகிய ஆண்டுகளில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னனாகிய இராசசிம்மன் என்பவன். இவன் கட்டிய கோயில் இன்றுள்ள மிகவும் பிரசித்தி பெற்ற கோயிலாகிய காஞ்சிக் கயிலாயநாதர் கோயில். இது வெறும் கதை அல்ல; புராணம் அல்ல; ஒரு வகையில் உண்மைச் சம்பவமே. இராசசிம்மனுடைய கல்வெட்டில் இச் செய்தி சொல்லப்பட்டுள்ளது. ஒன்று, இவன் கயிலாயத்தை ஒத்த கயிலாச நாதர் கோயில் என்னும் சந்திரசேகரர் கோயிலைக் கட்டினான் என்று

1. பெரியபுராணம், 4180, 4182-5.

கூறுகிறது. மற்றென்று, இவன் சைவநெறியில் நடந்து மலத்தை எல்லாம் ஒழித்தவன்; இந்தக் காலத்தில் தேவரைக் கண்டவன்; துஷ்யந்தன் முதலானோர் அசரீரி கேட்டதில் வியப்பில்லை; நற்குணம் பறந்தோடிப்போன இக்காலத்தில் அவ்வசரீரியை ஸ்ரீபரன் (இராசசிம்மன்) கேட்டான்; இவன் கலி என்னும் மகரம் குடிகளை விழுங்கியபோது அவர்களைக் காத்தான். பரந்துகிடக்கும் இச் சிவாலயத்தை இவன் கட்டினான்.[1] இங்கு இராசசிம்மன் அசரீரி கேட்டான் என்று சொல்லப்பட்டது, பூசலார் நாயனார் வரலாற்றைக் குறித்த செய்தியாகும். உடன் காலத்திலேயே கல்லில் பொறிக்கப்பட்ட இச் செய்தி கற்பனைச் சம்பவம் என்று சொல்ல முடியாது.

மேற்காட்டிய இரண்டு நிகழ்ச்சிகளிலும் ஒரு பொதுவான தன்மையைப் பார்க்கிறோம். முதல் நிகழ்ச்சியில் இறைவன் திருச்சிலம்பின் ஒலியை நிறுத்திச் சுந்தரரைச் சேரமானுக்கு அறிமுகப் படுத்துகிறான். இரண்டாம் நிகழ்ச்சியில் இறைவன் கும்பாபிடேகத்தை நிறுத்தச்செய்து பூசலாரை இராசசிம்மனுக்கு அறிமுகப் படுத்துகிறான். இவ்விரண்டின் காலமும் முறையே கி.பி. 700—710, 690—700 ஆகும்.

இவ்விரண்டை ஒத்ததே நாம் கருதுகின்ற சேந்தனர் வரலாற்றில் வரும் நிகழ்ச்சி. இங்கு நடராசப் பெருமான் சேந்தனாரைத் தில்லையிலிருந்த சோழ மன்னனுக்கு அறிமுகப்படுத்த எண்ணினார். அதன் பொருட்டு, தாம் வழக்கமாய் கேட்பித்த திருச்சிலம்போசையை நிறுத்தி, பிறகு மன்னன் வருந்தவும், தாம் சேந்தனாரிடத்தில் களியமுது உண்ணச் சென்றதாக அறிவித்ததோடு அல்லாமல், அக் களியமுது தம்மீது வழிந்திருக்கவும், சிந்தியிருக்கவும் செய்து, சேந்தனாரைக் கொண்டு பல்லாண்டும் பாடுவித்தார். இத்தகைய வரலாறுகள் முழுமையும புனைந்துரை அல்ல என்பதை, இராசசிம்மன் அசரீரி கேட்ட செய்தியை இராசசிம்மனுடைய உடன் காலத்துக் கல்வெட்டு உரைப்பதால் அறிகிறோம். இங்ஙனமாக, பலர் பல சந்தர்ப்பங்களில் இறைவன் திருவுள்ளத்தைப் பல வேறு வழிகளில் உணர்ந்திருக்கிறார்கள். அவ்வாறு உணர்ந்தவர்களுள் சேந்தனார் காலத்துச் சோழ மன்னனும் ஒருவன். இவன் யார் என்பது கேள்வி.

கண்டராதித்தர் வரலாற்றில் ஒரு செய்தியைக் குறிப்பிட்டோம். பராந்தக மன்னன் தில்லையைப் பொன் வேய்ந்தான். பொன்

---

1. தென்னிந்தியக் கல்வெட்டறிக்கை தொகுதி 1, பக்கம் 20, வடமொழிக் கல்வெட்டு.

வேய்தல் என்பது மிகவும் சிறப்புடைய ஒரு திருப்பணி. இது அரசனே நேரிலிருந்து பார்வையிடத்தக்க பெருஞ்சிறப்பு வாய்ந்தது. ஆனுல் பராந்தகன் காலத்துப் போர்கள் மிகுதியால் அவன் தலைநகரை விட்டு நீங்கமுடியாத அரசியல் சூழ்நிலை அப்போது இருந்தது. அம் மன்னனுக்குப் புதல்வர் மூவர். சிறந்த வீரரான இராசாதித்தன் மூத்த புதல்வன். அவன் பல காலம் சாளுக்கியர் படையைத் தடுத்து நிறுத்துவதற்காக ஒரு பெரும் படையோடு திருக்கோவலூரில் தங்கி அப் பகுதியை நிர்வகித்து வந்தான். அதனுலும் அரச காரியங்களில் பயிற்சி பெறவேண்டிய நிலைமை உடையவன் ஆதலாலும், அவன் நீண்ட நாள் தில்லையில் வந்து தங்கி திருப்பணி வேலையை மேற்பார்வை செய்திருக்க முடியாது. இரண்டாம் புதல்வர் கண்டராதித்தர். இவருக்கு ஆட்சிப் பொறுப்பு அப்போது இல்லை. இவர் அரசராக வருவதற்கு அப்போது தமையன் இருந்தமையால் வாய்ப்பில்லை. ஆதலால் தில்லையில் பொன் வேய்தலாகிய பெரும்பணி இவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது என்று கருதப் போதிய ஆதாரம் உண்டு. இவர் சிறந்த சிவபத்திச் செல்வர். தில்லைக்கு ஒரு திருவிசைப்பாப் பதிகம் பாடியிருக்கிருர் என்று அறிவோம். ஆதலால் அரசர் சார்பில் இவர் தில்லையில் தங்கித் திருப்பணியை நிர்வகித்து வந்தார் என்பது எல்லாவிதத்திலும் பொருத்தமே. இவ்வாறு தங்கிய காலம் 940—949-ஆக இருக்கலாம். இவருடைய தம்பி பராந்தகனுடைய மூன்ருவது மகன் அரிஞ்சயன். அவன் வயதில் குறைந்தவனுக இருந்திருத்தல் கூடும். அன்றியும், மூத்தவனுக்கு உதவியாகத் திருக்கோவலூரில் ஒரு படையோடு தங்கியிருந்தான் என்று சாசனங்களால் அறிகிருேம். ஆதலால் அவன் தில்லையில் இருந்திருக்க முடியாது என்பது தெளிவு.

தில்லையில் தங்கிய கண்டராதித்தர் தாம் பொன் வேயும் பணி செய்த காலத்தில் தம்மை நாடிவந்த அடியவர்களைத் தில்லையைக் குறித்துப் பதிகம் பாடுமாறு ஊக்குவித்தார் என்று கருதுகிருேம். இவ்வாறு ஊக்குவிக்கப் பட்டோர் திருமாளிகைத் தேவர், வேணுட்டடிகள், திருவாலி அமுதனுர் என்ற மூவர். இவர்கள் பாடிய பதிகங்கள் யாவும் தில்லைக்கே உரியவை. சேந்தனுரும் இவர் காலத்தே வாழ்ந்தார். சோழ மன்னன் திருச்சிலம்போசை கேட்டான் என்று வரலாறு சொல்லுகிறது. அவ்வாறு கேட்கத் தக்க பக்திப் பெருக்கு இவர் ஒருவருக்கே இருந்தது. கதையைச் சொல்லும்போது இளவரசரை மன்னர் என்று சொன்னுல் பிழையாகாது. ஆகவே திருச்சிலம்போசை முதலில் கேளாமல், பின்னர் பெருமானுடைய அருள்கொண்டு கேட்டு, சேந்தனுரையும் கண்டறிந்து, திருப்பல்லாண்டு பாடியபோது உடன் இருந்தவர் இவரே என்பது சூழ்நிலையால் நன்கு தெளிவாகின்றது.

இராசாதித்தன் போரில் இறந்த காலம் 949. அதுவரையில் கண்டராதித்தர் தில்லையில் இருந்திருக்கிறார். அடுத்த ஆண்டு இவர் இளவரசு பட்டம் சூட்டப்பெற்றுத் தஞ்சைக்குச் சென்று விடுகிறார். பராந்தகன் இறக்கவே 953-இல் இவர் மகுடம் சூடுகிறார். ஆதலால் முற்கூறிய மூவர் பதிகங்களும் சேந்தனார் வரலாறு, களி நிவேதனம், பல்லாண்டு பாடுதல் ஆகிய எல்லா நிகழ்ச்சிகளும் இந்தக் கால எல்லைக்குள் (சுமார் 940—950) நிகழ்ந்திருக்க வேண்டும்.

இது மட்டுமல்ல, செம்பியன் மாதேவியார் சுமார் 935-இல் கண்டராதித்தரை மணந்தார்; 1001-இல் இராசராசன் காலத்தில் இறந்தார். அரச குமாரரான கண்டராதித்தர் தில்லையில் திருப்பணி செய்த காலத்தும், பின்னால் மகுடம் சூடி ஆட்சிப் புரிந்த நான் காண்டு காலத்தும், இவர் கணவருடன் இருந்திருக்கிறார். அவர் செய்த திருப்பணியிலும், சிவபக்திச் செயல்களிலும் பங்குகொண் டிருக்கிறார். சைவப் புலவர்களுக்கு அவர் கொடுத்த ஆதரவையும் அவர்களுக்கிருந்த ஈடுபாட்டையும் உடனிருந்து கண்டிருக்கிறார். அது காரணமாக, தம் கணவர் இறந்துபோன பிறகு தாமும் அந்த நெறியில் சென்று புலவர்களுக்கு ஆதரவு கொடுத்திருக்கிறார். இவ்வாறு போற்றப் பெற்றவர்கள் பூந்துருத்தி நம்பி, புருடோத்தம நம்பி, சேதிராயர், கருவூர்த் தேவர் ஆகியோர். இவர்கள் அனைவ ருடைய காலமும் இராசராசன் காலமாகும். இவர்கள் சுமார் 1000—1040-க்குள் வாழ்ந்து நூல்செய்தார்கள் என்று கருதுகிறோம். தேவியார் இறந்தது 1001-இல் எனினும், அவர் உயிரோடு இருந்த காலத்தில் அவர் அளித்த ஆதரவே இவ்வடியவர்களைப் பிற் காலத்தில் பாடச்செய்தது என்று கருதுகிறோம். இதற்குக் கருவூர்த் தேவரே சான்றாவார். 1035-இல் குடமுழுக்குப் பெற்ற கங்கை கொண்ட சோழேச்சுரத்துக்கு அவர் பதிகம் பாடியது இங்கு நினைவு கூரத்தக்கது.

இதுகாறும் கூறியவற்றால் சேந்தனார் வரலாற்றில் வருகின்ற சோழ மன்னர் கண்டராதித்தரே என்பதும், அவர் தில்லையில் வாழ்ந்தபோதுதான் அடியவர்களுக்கு ஆதரவு தந்து பதிகம் பாடச்செய்தார் என்பதும் விளக்கமாகும். கண்டராதித்தர் தாம் அரசகுமாரராய்ப் பொன் வேய்தலை நிர்வாகம் செய்தபோது தமது திருவிசைப்பாப் பாடவில்லை. பின்னால் அரசராய் இருந்த காலத்தில் (953—57) தஞ்சையில் இருந்துகொண்டே பாடினார். இதை அவர் பாடலைக்குறித்த ஆராய்ச்சியில் நன்கு விளக்கி யிருக்கிறோம்.

சேந்தனார் திருவாவடுதுறைத் திருவிசைப்பாவை அந்தாதி யாகவும், அகத்துறையாகவும் பாடியிருக்கிறார். இதன் மூன்றும்

பாடல் ‘தனக்கு இன்பன் ஆவடு தண்துறைத் தருணேந்து சேகரன் என்னுமே’ என்று முடிந்து, அடுத்த பாடல் ‘தருணேந்து சேகரனே என்னும்’ என்று தொடங்குகிறது. ‘தருணேந்து சேகரன்’ என்ற தொடரைக் குறிப்பிட்டு ஆராய்ச்சியாளர் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். கண்டராதித்தர் கல்வெட்டொன்றில், ‘கலிவிசயன் தருணேந்து சேகரனேன்’ என்ற தொடர் வருகிறது. இது ஒருவன் பெயராக இங்கு வந்துள்ளது. தருணேந்து சேகர பட்டர், தருணேந்து சேகர பண்டிதர் என்ற பெயர்களும் சாசனங் களில் காணப்படுகின்றன. இவை கொண்டு சாசனமானது சேந்தனார் திருவிசைப்பாவில் கூறும் தொடரை, கண்டராதித்தர் காலத்தில் மக்கள் பெயராக அமைத்துக் கொண்டுள்ளமையால், சேந்தனார் கண்டராதித்தருக்கு முற்பட்டவர் என்றும் எழுதியுள்ளனர்.[1] ‘திருவாவடுதுறை இறைவனைப் பாடிய திருப்பதிகத்தில் நம்பியாரூரர், ‘இந்து சேகரனே’ என்றார். நம் சேந்தனார் அதனைத் தருணம் (இளமை) என்ற ஓர் அடை கொடுத்து இளம்பிறை சூடி என்று பொருள் படுமாறு ஆவடு தண்துறைத் தருணேந்து சேகரன் என்னும் என்று பாடினார். என்று முந்தையோர் குறிப்பிட்டுள்ளனர்.[2] இத் தொடருக்கு இவ்வளவு விளக்கம் வேண்டியதில்லை. சேந்தனார் இதைத் தாமாகப் படைக்கவில்லை. இது அப்படியே அப்பர் தேவாரத்தில் வருகிறது. (திருவாரூர்த் திருத்தாண்டகம், 6, 30, 6):

சங்கரன்காண் சக்கரம்மாற் கருள்செய் தான்காண்
தருணேந்து சேகரன்காண் தலைவன் தான்காண்
அங்கமலத் தயன்சிரங்கள் ஐந்தி லொன்றை
அறுத்தவன்காண் அணிபொழில்சூழ் ஐயாற் றான்காண்
எங்கள்பெரு மான்காண் என்னிடர்கள் போக
அருள்செய்யும் இறைவன்காண் இமையோ ரேத்துஞ்
செங்கமல வயல்புடைசூழ் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெம் செல்வன் தானே.

ஆகவே, சேந்தனார் இத் தொடரை நம்பியாரூரர் வாக்கிலிருந்து எடுத்துப் புதிதாகப் படைக்கவில்லை என்பதும் அப்பர் வாக்கிலிருந்து எடுத்துக்கொண்டார் என்பதும் தெளிவாகும். அப்படியே

1. பன்னிரு திருமுறை யாசிரியர் வரலாறு, க. வெள்ளைவாரணனார், இரண்டாம் பாகம் 1969, பக்கம் 363-4.

2. ஔவை. துரைசாமிப் பிள்ளை, சைவ இலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1958, பக்கம் 390.

இப்பெயர் சேந்தனூரிலிருந்து வரவில்லை. அப்பரிலிருந்தே வந்தது என்பது தெளிவு. ஆதலால் சேந்தனூர் கண்டராதித்தருக்கு முற்பட்டவர் என்று கூறுவதற்கு இது ஆதாரமாகாது. கண்டராதித்தர் சேந்தனூர் போன்றோருக்கு ஆதரவு கொடுத்தார் என்பது பொருந்துவதே.

## திருமாளிகைத் தேவர்

முதலாம் இராசராச மன்னன் காலத்தில் தஞ்சைப் பெருங் கோயிலுக்குத் தொண்டு செய்வதற்காக வீடு கட்டிக் கொடுத்துக் குடியேற்றிய தளிச்சேரிப் பெண்டுகளில் ஒருத்தி பெயர் 'நீறணி பவளக்குன்றம்' என்பது.[1] இப் பெயர் திருமாளிகைத் தேவர் திருவிசைப்பாவிலிருந்து எடுத்ததாகும். இவரது முதற் பதிகத்தின் ஆறும் பாடல், 'நீறணி பவளக் குன்றமே' என்று தொடங்குவது. ஆதலால் இவர் பாடல் இராசராசன் காலத்துக்கு முற்பட்டது என்பது தெளிவு. தொடக்கத்தில் கூறியபடி கண்டராதித்த மன்னரால் தில்லைக் கூத்தப் பெருமானிடம் ஆற்றுப்படுத்தப்பட்டு அப் பெருமான்மீது பதிகம்பாடிய சைவப் புலவர் பலருள் திருமாளிகைத் தேவரும் ஒருவர் என்ற கருத்து இராசராசன் சாசனப்படியும் பொருந்துவதாகும். மேலும் இவர் தம் பதிகங்களின் பொருளமைப்பு, அகத்துறை, பேய்கள் என்று கடிதல், குலாத்தில்லை, மகேந்திரம் முதலான சொற்களின் குறிப்பு போன்றவற்றை ஆராயும்போது, இவர் காலம் ஒன்பதாம் நூற்ருண்டின் பின்னரே ஆகும் என்பது நன்கு தெரிகின்றது. ஆதலால் இவர் காலம் கண்டராதித்தர் காலமாகிய கி.பி. 950—57 ஆகவோ அதற்குச் சற்று முன்னதாகவோ இருக்கலாம் என்று கருதுகிறோம். பலர் பல்வேறு விதமாய்க் குறிப்பிட்டிருந்த போதிலும், திருவிசைப்பா முழுமையும் ஒரு தொகுப்பாய்க் காலத்தோடு பொருந்தி நோக்கும் போது இவர் காலம் 940—950 ஆகவே பொருந்துவது என்பது நன்கு விளங்கும்.

## வேணாட்டடிகள்

சேர அரச பரம்பரையில் வந்த இவர் தில்லைப் பெருமானைப் பாடியதற்கு ஒரு பக்தி வெள்ளத் தொடர்பு உண்டு. அதுவே கண்டராதித்தருடைய தொடர்பு. கி.பி. 940—1040 என்ற கால எல்லைக்குள் திருவிசைப்பாப் பதிகங்கள் அனைத்தும் பாடப் பெற்றன என்ற குறிப்பு தொடக்கத்தில் சொல்லப்பட்டது. இந்தப் பாடல்களுக்குத் தோற்றுவாயாக இருந்தோர் கண்டராதித்தரும்

1. 49ஆம் வீடு பெற்றவள் பெயர் நீறணிபவளக் குன்றம் என்பது.

அவருடைய தேவியாகிய செம்பியன் மாதேவியரும் ஆவர். இவ் விருவருடைய தொடர்பினுல் தில்லைக் கூத்தப் பெருமானிடத்து ஆற்றுப்படுத்தப் பெற்று இசைப்பாப் பாடிய ஆசிரியர்களுள் இவரும் ஒருவர் என்று கருதுகிறேம். அத் தொடர்புபற்றி இவர் காலம் பத்தாம் நூற்ருண்டின் பிற்பகுதி ஆகும்.

## திருவாலி அமுதனுர்

தொடக்கத்தில் பொதுவாகக் கூறிய கால அமைதி இவருக்கும் பொருந்தும். அதாவது, 10ஆம் நூற்ருண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த சிவஞானியான கண்டராதித்தர் காலத்தில் அவரால் போற்றப்பெற்று வாழ்ந்து நூல் செய்த பலருள் இவரும் ஒருவர். தில்லை நடராசப் பெருமானிடத்துப் பெரிதும் ஈடுபட்டு வாழ்ந்த அவ்வரசர் புலமை வாய்ந்த அடியவர் அனைவரையும் அப்பெருமா னிடத்தே ஆற்றுப்படுத்திப் பதிகம் பாடச் செய்தார். இவரும் அவ்வாறே பதிகம் பாடினுர்.

இக் கால அமைதிக்கு மற்றெரு சான்றும் இவர் பாடலிலிருந்து கிடைக்கிறது. மூன்ரும் பதிகத்தின் ஐந்தாம் பாடல் இங்குக் கருதத் தக்கது :

ஓமப் புகையும் அகிலின் புகையும் உயர்ந்து முகில்தோயத்
தீமெய்த் தொழிலார் மறையோர் மல்குசிற் றம்பலந் தன்னுள்
வாமத் தொழிலார் எடுத்த பாதம் மழலைச் சிலம்பார்க்கத்
தீமெய்ச் சடைமேல் திங்கள் சூடித் தேவன் ஆடுமே.

தூக்கிய திருவடியை ‘எடுத்தபாதம்’ என்றும், அதன்கண் அணிந்த சிலம்பை ‘மழலைச் சிலம்பு’ என்றும் இவர் இங்குப் பாடுகிருர். சைவ சமயத்தில் குஞ்சித்த சேவடியே முத்தியின்ப மாகிய பேரானந்தப் பெருவாழ்வு தருவது என்பது சாத்திரக் கருத்து. ‘இனித்த முடைய எடுத்த பொற்பாதம்’ என்றும், ‘ஆட எடுத்திட்ட பாதமன்றே நம்மை ஆட்கொண்டதே’ என்றும் அப்பர் சுவாமிகள் பாடியிருப்பது காணத்தக்கது. பின்னே பதினெராந் திருமுறையில், பட்டினத்தார் பாடிய கோயில் நான் மணி மாலை (பாடல் 12, அடி 38) ‘எடுத்த பாதமும் தடுத்த செங்கையும்’ என்று கூறுவதும் நோக்கத் தக்கது. இங்கு அமுதனுர் அப்பர் நெறியைப் பின்பற்றி, எடுத்த பாதம் என்று சொன்னுர். முதலாம் இராசராச மன்னனுடைய 29-ஆம் ஆட்சி யாண்டில் (1014) எழுந்த சாசனம், திருப்பதிகம் விண்ணப்பம் செய்வோருள் எடுத்த பாதமான ஈசுவர சிவன், எடுத்த பாதப் பிச்சனுன உருத்திர சிவன், மழலைச் சிலம்பான பூர்வ சிவன்,

எடுத்த பாதமான தர்ம சிவன் என்ற பெயர்களும், தளிச்சேரிப் பெண்டுகளில் எடுத்த பாதம், மழலைச் சிலம்பு என்ற பெயர்களும் பலமுறை காணப்படுகின்றன.[1] இத் தொடர்கள் திருவாலியமுதனார் பாடலிலிருந்து எடுத்துச் சூட்டப் பெற்றமை நன்கு தெரிகிறது. 1014-இல் திருப்பதிகம் பாடியவரும் தளிப்பெண்டும் குறைந்தது 15—20 வயதுடையவராயிருந்தனர் என்று கொள்ளலாம். அங்ஙனமாயின் இவர்கள் பிறந்தது கி.பி. 1000-க்கு முந்தியிருக்கும். திருவிசைப்பாப் பலகால் பாடப்பெற்று அதில் தோய்ந்தவர்களே தம் மக்களுக்கு இப் பெயர்களை எடுத்து இடுதல் இயல்பு. இதற்கு ஓர் ஐம்பது ஆண்டுக் காலமாகும் என்றாலும் கூட பாடல் தோன்றிய காலம் 950 என்றாகும். எனவே, திருவாலி அமுதனார் காலம் இக்காலம்; அதாவது கண்டராதித்தர் இளவரசாகவும், அரசராகவும் விளங்கிய காலம் என்று சொல்வது நன்கு பொருந்தும்.

## பூந்துருத்தி நம்பி காட நம்பி

திருமுறையுள் இவர் பாடல்கள் கண்டராதித்தர் பாடலுக்கு முன்னே காணப்படுகின்றன. ஆனால் இத் திருமுறையுள் பாடல்கள் கால முறைப்படி தொகுக்கப் பெறாமையால், இது கொண்டு காலம் முடிவுசெய்தல் இயலாது. காலத்தை வரையறை செய்ய இருவேறு கருத்துக்களை ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர். ஒன்று காடவர் என்று பெயர் உணர்த்தும் குறிப்பு. திருவிசைப்பாப் பாடினோரைக் குறிப்பிடும் பழைய பாடல்கள் இவரை நம்பி காடவர் கோன், வீறிற் சிறந்தவர் என்று குறிப்பிடுகின்றன. காடவர், பல்லவர் மரபினர். ஐயடிகள் காடவர்கோன் என்ற பதினொராந் திருமுறை ஆசிரியர் ஒருவர் பல்லவ மரபில் வந்த அரசர். இத் தொடர்பு பற்றி இவரும் பல்லவ மரபினர் என்றும், ஆகவே காலத்தால் பல்லவர் ஆட்சி இறுதிக் காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டினர் என்று கருதுவோரும் உளர். இங்கு அறிய வேண்டியது ஒன்று. முன் குறித்த பாடல்கள் மிகவும் பிற்காலத்தில் பாடப்பட்டவை. இப் பாடல்களைப் பாடியவர் ஒருகால் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் நினைவினாலே காட நம்பியையும், காடவர்கோன் என்று பாடிவிட்டாரோ என்று கருதத் தோன்றுகிறது. ஆதலால் இதுகொண்டு நம்பியின் காலத்தை வரையறை செய்ய முடியாது. இவர் தம்மைப் பூந்துருத்திக் காடன் என்று மட்டுமே குறிப்பிடுகிறார்.

---

1. தெற்கு தென்சிறகு வீடு 14, வடசிறகு 14, 99, வடக்கு வடசிறகு 67, 71, அடுத்த சிறகு 6 என்ற வீடுகள் பெற்றார் பெயர் பார்க்க.

மற்றொன்று கல்வெட்டுக் குறிப்பு: முதல் இராசாதிராசனுடைய முப்பத்திரண்டாம் ஆட்சி யாண்டில் பொறிக்கப்பட்ட திருவையாற்றுக் கல்வெட்டு ஒரு குறிப்புத் தருகிறது. "லோக மாதேவீச்சுரத்து ஸ்தானமுடைய க்ஷேத்திர சிவப் பண்டிதருக்காக திருவாராதனை செய்யும் ஆத்திரேயன் நம்பி காடன் நம்பி" என்ற தொடர் இங்கு வருகிறது. திருவையாறு, பூந்துருத்தி நம்பியின் ஊருக்கு அருகிலுள்ள பெரிய தலம். அன்றியும் இவ்வரசன் ஆட்சி யாண்டுகள் 1018—1054. ஆகவே சாசனத்தின் காலம் 1018+32=கி.பி. 1050. கங்கைகொண்ட மன்னனுடைய புதல்வன் இவ்வரசன். அவன் கட்டிய கங்கைகொண்ட சோழேச்சுரத்திற்குக் கருவூர்த் தேவர் திருவிசைப்பாப் பாடினார். காலம் சுமார் 1085. ஆதலால் கருவூர்த் தேவர் திருவிசைப்பாவையும் நம்பியாண்டார் நம்பி உடன் காலத்தில் இருந்து தொகுத்திருக்கிறார். எனவே, இத் தொடர்பினாலும், கால அமைதியினாலும், இந் நம்பி இந்தப் பதினோராம் நூற்றாண்டு முதற் பாதியில் ஆட்சி புரிந்த சோழ மன்னர் இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன் ஆகிய மூவர் காலத்திலும் வாழ்ந்திருந்தார் என்று கருதுகிறோம். சாசனத்தில் குறிப்பிடப்பட்ட நம்பி இவரே. நம்பி காட நம்பி என்ற தொடரால் இதை நன்கு உணரலாம். ஆராதனை செய்கின்றவர் என்றமையினாலே இவர் சிவாசாரியர் போலும். கி.பி. 1030-இல் இவர் திருவிசைப்பாப் பாடியிருக்கலாம். சாசனம் கூறுகின்றபடி 1050-இல் இவர் உயிர் வாழ்ந்திருத்தல் நிகழக் கூடியதே.

சேக்கிழார் தம் புராணத்தில் சுந்தரர் வெள்ளானை மீது இவர்ந்து கைலை செல்ல, சேரமான் தம் குதிரை ஏறிக் கைலாயம் சென்றார் என்று பாடியிருக்கிறார். இதை நம் நம்பி, பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார் :

> களையா உடலோடு சேரமான் ஆரூரன்
> விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
> முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
> அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.

இதுகொண்டு இந் நம்பி, காலத்தால் சேக்கிழாருக்குப் பிற்பட்டவர் என்று கருதுபவர் சிலர். இக் கருத்துச் சரியன்று. நாயன்மார் கதைகள் பல ஆங்காங்கு நாட்டின் பல பகுதிகளிலும் வழங்கி வந்தன. அவற்றை நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் கேட்டறிந்து முறையே திருத்தொண்டர் திருவந்தாதியிலும், பெரியபுராணத்திலும் அமைத்துக் கொண்டார்கள். இவர்களைப் போலவே பூந்துருத்தி நம்பியும் தமக்குமுன் வழங்கிய செய்திகளைக்

கேட்டறிந்து பாடினுர் என்று கருதவேண்டும். வெள்ளானை மேற் சென்ற செய்தி குறிப்பிட்டதால் இவர் சேக்கிழாருக்குப் பிற்பட்டவ ராகார். ஆதலால், பூந்துருத்தி நம்பி காட நம்பி 1030-க்கு முன் தம் திருவிசைப் பாக்களைப் பாடினுர். பின்னும் நெடுங்காலம் வாழ்ந்திருந்து, கல்வெட்டிலும் குறிப்பிட்டுள்ளார் என்று கருதுவது பொருத்தமுடையது.

## புருடோத்தம நம்பி

இவருடைய காலத்தை அறிவதற்குச் சான்றுகள் இல்லை. எனினும், நம்பியாண்டார் நம்பியால் திருவிசைப்பாத் தொகுக்கப் பெற்றது என்பதைக் கொண்டு முடிவு செய்தல் பொருந்தும். நம்பி முதலாம் இராசேந்திரன் காலத்திலும் வாழ்ந்திருந்து அவன் கட்டிய கங்கைகொண்ட சோழேச்சுரம் பற்றிக் கருவூர்த் தேவர் பாடிய பதிகத்தைத் தொகுத்திருக்கிருர். ஆதலால் இராசேந்திரன் காலத்துக்குச் சற்று முன்னதாக இவர் தம் பதிகங்களைப் பாடினுர் என்று நாம் கருதலாம். அதாவது 11-ஆம் நூற்ருண்டின் தொடக்க ஆண்டுகள் என்பது பொருத்தமாகும்.

## சேதிராயர்

உத்தம சோழன் (970—985) காலத்தே, சேதி நாட்டு அரச ஞெருவன் திருக்கோவலூரிலிருந்து அரசு செய்துகொண்டு, அச் சோழனுக்குத் திறை செலுத்தி வந்தான். அவன் நரசிங்கவர்மன் என்ற அபிடேகப் பெயருடையவன். இதனுல் இவன் சுந்தர மூர்த்தியை ஆதரித்த நரசிங்க முனையரையர் வழியினன் என்று கருத இடமுண்டு; அவன் பெயர் 'சித்தவடத்தடிகள்'. பிற் காலத்தில், முதற் குலோத்துங்கன் (1070—1120) காலத்திலும் இராசராசச் சேதிராயன், இராசேந்திர மலையமான் என்று பட்டம் தரித்தவர்கள், திருக்கோவலூர், கிளியூர் ஆகிய நகரங்களைத் தலை நகரங்களாய்க் கொண்டு வாழ்ந்திருந்தார்கள். இதனுல் 11—12 நூற்ருண்டுகளில் சேதிராயர் குறுநில மன்னராய்ச் சோழரின் கீழ் வாழ்ந்தமை தெளியப்படும். இவர்களுள் திருவிசைப்பாப் பாடிய வரும் ஒருவர். முதற் பராந்தக சோழன் சேதிராயன் மகள் சித்தி ரையை மணந்தான் என்றும், அவன் இறந்தபோது அவளும் சககமனம் செய்தாள் என்றும் கொங்குதேச ராசாக்கள் வரலாறு கூறும் (பக்கம் 11). சேதிராயர் என்ற குலப்பெயர் மட்டும் தெரி கிறதே ஒழிய, இயற்பெயர் தெரியவில்லை. எனினும், திருவிசைப்பாப் பாடினேர் பலரும், நம்பியாண்டார் நம்பிக்குக் காலத்தால் முற்பட் டிருத்தல் வேண்டுமென்பது உறுதி. மேலும் இவர்கள், இராசராசன் தஞ்சைக் கோயில் கட்டிய காலத்தில் சிவாலய வழிபாட்டிலும்

சைவ சமயத்திலும் ஏற்பட்ட பேர் எழுச்சியினல் உந்தப்பட்டு, ஆங்காங்கு அருள் வசத்தால் திருப்பதிகம் பாடியவர்கள் பலர் பல பதிகங்கள் பாடியிருத்தலும் கூடும்; சிலவே நம்பிக்குக் கிடைத்துத் தொகுக்கப் பெற்றன என்று நாம் கருத இடமுண்டு. அவ்வாறு பாடியவர்களுள் சேதிராயரும் ஒருவராவார். எனவே, இவர் காலம், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி காட நம்பி, புருடோத்தம நம்பி முதலியோரைப் போல, கி.பி. 1010—1030க்கு உட்பட்ட காலமாகும்.

## கருவூர்த் தேவர்

கருவூர்த் தேவர் காலம், ஏனை ஆசிரியர் காலம் போலன்றி, மிகவும் திட்டமாய்த் தெரிகிறது. (முதல் ஆதித்த சோழன் எடுத்த களந்தை ஆதித்தேச்சுரத்தையும்) இராசராசன் காலத்தில் திரைலோக்கிய மாதேவி கட்டிய திரைலோக்கிய சுந்தரத்தையும், இராசராசன் எடுத்த தஞ்சைப் பெருங்கோயிலையும், முதல் இராசேந்திர சோழன் எடுத்த கங்கைகொண்ட சோழேச்சுரத்தையும் இவர் நான்கு பதிகங்களால் பாடியிருக்கிருர். பிந்திய மூன்று கோயில்கள் எழுப்பிய காலத்தில் இவர் உடன் இருந்தார். கட்டிய அரசர்களின் காலம் முறையே 985—1014, 1012—1044. எனவே, இந்தக் காலங்களில் இவர் வாழ்ந்திருந்தமை தெளிவு. கங்கைகொண்ட சோழேச்சுரம் எடுத்த காலம் உத்தேசம் கி.பி. 1035. ஆதலால் அதைப் பாடிய நம் கருவூர்த் தேவர் சிறப்பாக வாழ்ந்த காலம் கி.பி. 1000—1040 என்று கொள்ளுவது பொருத்தமுடையதே.

## திருவிசைப்பாப் பதிப்புக்கள்

அச்சின் தொடக்க காலத்தில் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு தனி நூலாகப் பதிப்பிக்கப் பெறவில்லை. முதலில் அகத்தியர் தேவாரத் திரட்டு, திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுள் திரட்டு ஆகிய நூல்கள் யாவும் அருட்பா என்ற பெயரால் ஒரு தொகுப்பாகப் பதிப்பிக்கப் பெற்றன. அவற்றுள் காணப்படுவதே ஒன்பதாம் திருமுறைப் பதிப்பு. 1864 காஞ்சி சபாபதி முதலியார் பதிப்பு. திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது நாயன்மார் அருளிச்செய்த ஒன்பதாவது திருமுறையாகிய திருவிசைப்பா—திருப்பல்லாண்டு. பால்குரிகி குமாரையரவர்களது கலாநிதி அச்சுக்கூடம். பிற பதிப்புக்கள் அனைத்திலும் திருப்பல்லாண்டு திருமுறையின் இறுதியில் 29-ஆம் பதிகமாக அச்சிடப்பட்டிருக்க இங்கு திருப்பல்லாண்டு சேந்தனாரின் முதல் பதிகமாக (பதிகம் 5) அச்சிடப்பட்டுள்ளது. முக்கியமான பதிப்புக்கள் பின் வருவன :

1. அருட்பா நூல் புஷ்பரதம் செட்டியாருடைய கலா ரத்நாகர அச்சுக்கூடம், 1872.
2. மேற்படி, ஆறுமுக நாவலர் பதிப்புக்கள் 1873, 1880 முதலிய பல.
3. மேற்படி, சுந்தர சுவாமிகள் பதிப்பு, மனோன்மணி விலாச அச்சுக்கூடம், 1874.
4. மேற்படி, சுப்பராய ஞானியார் பதிப்பு, 1878.
5. மேற்படி, சொக்கலிங்கம்பிள்ளை பதிப்பு, 1878.
6. மேற்படி, அ. இராமசாமி புதிதாகப் பிரதிகளைக் கொண்டு பரிசோதித்துப் பதிப்பித்தது, 1888.
7. பன்னிரு திருமுறையும் அச்சிட்ட பலர் அவற்றின் அங்கமாக இத் திருமுறையையும் சேர்த்து அச்சிட்டுள்ளனர்.
8. திருவிசைப்பா திருப்பல்லாண்டு, காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு உரை, ரிப்பன் அச்சுக்கூடம் 1909.
9. அருட்பா, நா. கதிர்வேல் பிள்ளை பதிப்பு, சில சொற்பொருள் உடையது, 1915.
10. திருவிசைப்பா திருப்பல்லாண்டு, சிவ. அருணகிரி முதலியார் குறிப்புரை உடையது, பன்னிரு திருமுறைத் திரட்டில் முழுமையும் அடங்கியது, 1927 (இரண்டாம் பதிப்பு).

11. மேற்படி, சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பு 1932, 1944.

12. மேற்படி, சோமசுந்தரம் செட்டியார் குறிப்புரையுடன், 1939.

13. திருவிசைப்பா திருப்பல்லாண்டு தெளிவுரை, பட்டுச்சாமி ஓதுவார், காசிமடம், 1964.

14. சைவ சித்தாந்த மகா சமாஜம், நாராயணசாமி முதலியார் மணி விழா, 1968.

15. திருவிசைப்பா திருப்பல்லாண்டு குறிப்புரை, அருணை வடிவேல் முதலியார், தருமபுரம், 1969.

16. வ. சு. செங்கல்வராய பிள்ளை, ஒளிநெறி, 1978.

## ஆதார நூல்கள்


ஒன்பதாம் திருமுறை, இராமசாமி நாயுடு உரை, 1909.

ஒன்பதாம் திருமுறை, பட்டுச்சாமி ஓதுவார் உரை, 1964.

ஒன்பதாம் திருமுறை, ஏட்டுச் சுவடிகள், 4.

கருவூர்ப் புராணம்.

சமாஜப் பொன் விழா மலர், 1965.

சாசனத் தமிழ்க்கவி சரிதம், மு. இராகவையங்கார், 1937.

சிவஞானபோத மாபாடியம், சமாஜப் பதிப்பு, 1936.

சைவ இலக்கிய வரலாறு, ஔவை. துரைசாமிப் பிள்ளை, 1958.

சைவசிகாமணிகள் இருவர், சோமசுந்தர தேசிகர், 1930.

சோழர் வரலாறு I, சதாசிவ பண்டாரத்தார், 1958.

தமிழ் இலக்கிய வரலாறு, 11-ஆம் நூற்றுண்டு, மு. அருணுசலம், 1971.

திருமுறைகண்ட புராணம், சமாஜப் பெரியபுராணப் பதிப்பு, 1950.

திருவெண்காட்டுப் புராணம், துரைசாமிப் பிள்ளை பதிப்பு, 1905.

துறைசைப் புராணம், சாமிநாத முனிவர், ஏட்டுச்சுவடி.

தென்னிந்தியக் கல்வெட்டறிக்கைகள்.

பல்லவர் வரலாறு, மா. இராசமாணிக்கம் பிள்ளை, 1968.

பன்னிருதிருமுறை வரலாறு, முதல் பகுதி, க. வெள்ளைவாரணன், 1962.

பன்னிருதிருமுறை வரலாறு, இரண்டாம் பகுதி, க. வெள்ளைவாரணன், 1969.

பெரியபுராணம், சைவசித்தாந்த மகா சமாஜப் பதிப்பு, 1950.

# மேற்கோள் செய்யுள் அகராதி


| | பக்கம் |
|---|---|
| அடிமுதல் | 117 |
| அடைவுறு | 17 |
| அண்டமோர் | 101 |
| அவிழ்ந்ததுணி | 42 |
| அற்புத | 104 |
| அறிவும் | 103 |
| அன்னமாய் | 101 |
| அனலமே | 89 |
| ஆகவளர் | 3 |
| ஆரார்வந்தார் | 76 |
| இன்றெனக்கு | 105 |
| உண்டதே உண்டு | 27 |
| உண்ணெகிழ்ந்து | 89 |
| உவரிமாகட | 65 |
| உற்ருய் எனினும் | 70 |
| எண்ணில் பல்கோடி | 108 |
| எந்தை எந்தாய் | 75 |
| என்னையுன் | 102 |
| ஏயுமாறு | 86 |
| ஐந்துடன் | 19 |
| ஐய பொட்டிட்ட | 88 |
| ஒளிவளர் | 70 |
| ஓசையெலாம் | 115 |
| ஓமப்புகையும் | 123 |
| கடுவினை | 103 |
| கண்பனி | 90, 100 |
| கண்மூடா | 110 |
| கமலமே வதனம் | 89 |
| கலந்தருள் | 34 |
| கலைகள்தம் | 89 |
| களிவானுல | 78 |
| களையா உடல் | 125 |
| கண்ணெகா | 101 |
| காடவர் | 117 |
| காண்பது யான் | 83 |
| குடங்கர்விசும் | 32 |
| குமுதமேதிரு | 88 |
| குருசரணர் | 53 |
| கைவரும் பழன | 63 |
| கோங்கிணர் | 65 |
| கோடியமனத் | 27 |
| சங்கரன்காண் | 121 |
| சரிந்ததுகில் | 61 |
| சித்தரே அரு | 62 |
| சிந்தித்து | 87 |
| சிவனெனும் | 81 |
| சீரார் மாளிகை | 28 |
| சுருதிவான | 107 |
| செங்கணு | 61 |
| செம்பொன்மணி | 17 |
| சேடர் உறை | 85 |
| சேயிழையார் | 85 |
| சேலும் கயலும் | 99 |
| சொல்லாண்ட | 75 |
| தத்தையங்கு | 92 |
| தம்மகத்திற் | 29 |
| தழலாய நம் | 74 |
| தாதையைத் | 76 |
| திருச்சிலம்பு | 115 |
| துண்டவெண் | 88 |
| தூபியும் | 117 |
| தெள்ளுநீற | 61 |
| தொல்லைமால் | 16 |
| நற்பெரும் | 100 |
| நின்றவூர் | 117 |
| நீடும் உரிமை | 115 |
| பண்ணிய | 105 |
| பண்புற்ற | 2 |
| பத்தியாய் | 104 |
| பந்தமும் | 106 |
| பவளமே | 86 |
| பன்னெடும் | 102 |

| | பக்கம் |
|---|---|
| பனிபடு மதியம் | 91 |
| பாந்தள் பூணு | 89 |
| பாவார்ந்த | 81 |
| புரந்தரன் | 102 |
| புழுங்குதீ | 90 |
| புன்னைதேன் | 64 |
| பூசைகடிது | 116 |
| பூந்தண்பொழில் | 42 |
| பேசுபுகழ் | 35 |
| பொருவிலதாம் | 34 |
| மங்கையோ | 58 |
| மணம் விரிதரு | 68 |
| மத்தளை தயிர் | 39 |
| மதுரகவி | 37 |
| மந்திரங்கள் | 4 |
| மறப்பித்து | 99 |
| மன்னுதமிழ் | 6 |
| மனத்தினுல் | 117 |
| மாளிகைத் தேவர் | 37 |
| மிண்டு மனத் | 77 |
| மூவரோது | 3 |
| யாதுநீநினை | 102 |
| வரந்தருந் | 81 |
| வரையேல்தவிட் | 43 |
| வாசத்திரு | 115 |
| வாயினேர் அரும் | 68 |
| வாளாமால் | 81 |
| வானக்கங்கை | 116 |
| வெங்கோல்வேந் | 78 |
| வெம் பந்தம் | 84 |

# பொருள் அகராதி

[எண் : பக்க எண்]


அக்கினீசுவரர் 92
அகத்திமொட்டு சிவபிரானுக்கு 63, 82
அகத்தியர் 5
அகத்துறை அந்தாதி 72, 82, 120
அகத்துறைப் பதிகம் 20, 60
அகோர சித்தர் 34
அகோர முனிவர் 30
அசபா நடனம் 84
அசரீரி கேட்டவன் 117
அடங்கன்முறை 13, 14
அடியார்க்கு நல்லார் 19, 20
அதிராவடிகள் 29
அந்தாதி 19, 51, 59, 60
அந்துவநல்லூர் 8
அப்பர் 3, 20, 49, 57, 59, 60, 71, 74, 76, 81, 85-6, 93-4, 98, 106-7, 121-3
அபயகுலசேகரன் 7
அம்பர்கிழான் அருவந்தைச் சேந்தன் 38
அமலனுதிபிரான் 25
அமுதன் 48-9
அமுதன்—பெயர்விளக்கம் 49
அரிசிலின்கரை 71
அரிஞ்சயன் 44, 111, 119
அருஞ்சொற்கள் 66, 81
அருணகிரி 10
அருள்நந்தி 107
அருளாளப்பெருமாள் 11
அல்லூர் 8
அழகிய தொடர்கள் 65, 71, 88
அன்பில் செப்பேடு 110
அனபாயசோழன் 11
ஆசிரியரும் பாடல்தொகையும் 17
ஆத்திச்சூடி 63
ஆத்திரேயகோத்திரம் 50
ஆத்திரேயன் நம்பி காட நம்பி
ஆதிசைவப் பிரிவுகள் 31
ஆதித்த கரிகாலன் 45
ஆதித்த சோழன் 7-8, 45, 94-5, 110, 127
ஆதித்தேச்சுரம் 94
ஆராவமுதன் 1, 7
ஆராவமுது 49
ஆரியங்கள் ஓதும் ஆதர் 68
ஆலிநாடு 48
ஆழியிழைத்தல் 91
ஆறுமுக நாவலர் 27
இசைப்பாமொழி என்றது 16
இசையும் இயலும் 11-16
இடவை 93
இடையாற்று நல்லூர் 93
இந்தளப் பண் 19, 82
இயற்கை வர்ணனை 62
இயற்பா 16
இராகவையங்கார், மு. 35
இராசசிம்ம பல்லவன் 117-8
இராசராச அபயகுலசேகரன் 7
இராசராசச் சேதிராயன் 126
இராசராசன்-I 1, 7, 8, 10, 14, 47, 52, 54-5, 57-8, 64-5, 67, 76, 93, 108-9, 111-2, 120, 125
இராசராசன்-II 45
இராசராசன் உலா 109
இராசராசன் தேவி 94
இராசராசேச்சுரப் பதிகம் 44
இராசராசேச்சுரம் 10, 55, 113
இராசாதித்தன் 44-5, 110-1, 119-20
இராசாதிராசன் 125
இராசேந்திரசோழன் 10, 14, 54-5, 64, 67, 76, 108-9, 112, 125-7
இராசேந்திரமலையமான் 16
இராமானுச நூற்றந்தாதி 9
இராமானுசர் 2, 9
இளங்கோவடிகள் 47
இளம்பெருமானடிகள் 29, 48

இறைவன் அடியெடுத்துக் கொடுத்தமை 16
உடையார்குடிக் கல்வெட்டு 46
உத்தமசோழன் 8, 47, 111, 126
உபமன்னியு 76
உமாபதிசிவம் 24-5
உய்யவந்த தேவர் 114
உருத்திராக்க விசிட்டம் 37
உருவவர்ணனை 62
உறந்தை 95
எட்டுத்தொகை 5, 6
எடுத்தபாதம் 123-4
எருக்கத்தம்புலியூர் 18
எனையுடையாள் உரையாடாள் 80
ஏமநல்லூர் 93-4
ஐயடிகள் காடவர்கோன் 15, 26, 48, 124
ஐயாறு சப்தஸ்தானம் 49
ஒன்பதாம் திருமுறை 6, 14
கங்கைகொண்ட சோழபுரம் 54, 90, 108
— சோழன் 9, 10, 58, 125
— சோழேச்சுரப் பதிகச் சிறப்பு 104
— சோழேச்சுரப் பதிகம் 8, 64
— சோழேச்சுரம் 14, 16, 21, 55-7, 67, 90, 92, 94, 113, 126-7
— சோழேச்சுரம் இடிக்கப்பட்டது 94
கடல்கடந்த நாடுகளை வென்றது 109
கண்டர் 45
கண்டராதித்தச் சதுர்வேதி மங்கலம் 45-6
— பெரும்பள்ளி 46
— பேரேரி 45
கண்டராதித்தர் 17, 25, 30, 60, 66-7, 108, 111-120, 122-4
கண்டராதித்தர்-II 47
— காலம் 121-2
— பாடல் 77
— வரலாறு 44-7
— விண்ணகரம் 46
— சிவபக்தி 45
கண்ணப்பர் 84
கண்ணிநுண் சிறுத்தாம்பு 2
கணம்புல்லர் 84
கமலை ஞானப்பிரகாசர் 51
கயிலாயநாதர் கோயில் 93, 117
கருடன் செருக்கடக்கியது 71
கருவூரானிலை 51-2
கருவூர்த் தலபுராணம் 51, 54
கருவூர்த்தேவர் 8, 9, 10, 14, 17-21, 27, 30-1, 57-8, 60-7, 80, 89-96, 102, 104-5, 107-8, 110-3, 120, 125-7
கருவூர்த்தேவர் கருவூரைப் பாடாமை 95
— காலம் 127
— தம் பெயரைக் குறிப்பிடுதல் 56
— பதிகம் பாடிய காலமுறை 64
— பாடல் 87-8
— பிணி 57
— வரலாறு 51-6
கருவூர்த்தேவரும் சித்தரும் 54
கருவூரார்—சித்தர் 51
— ஞானம் 54
— பூஜாவிதி 54
கல்லாடர் 29
கல்வெட்டுக்கள் 113
கலிங்கத்துப்பரணி 109
களந்தை 90, 95
— ஆதித்தேச்சுரம் 14, 21, 55, 57, 64, 88, 94-5, 110, 113, 127
களி நிவேதனம் 24-5, 41, 80, 114, 120
காஞ்சி 117
காட்டுமன்னார்கோயில் 1
காடவர்கோன் 116, 124
காடவன் பல்லவ வம்சம் 49, 125
காந்தாரப்பண் 19, 20, 67, 87
காயகற்ப மருந்து 57
காரைக்காலம்மையார் 9, 13, 15-6, 83
— பிரபந்தங்கள் 64
காலாங்கர் 34
கிளியூர் 126
கீழ்க்கோட்டூர் மணியம்பலம் 14, 21, 61, 64, 106, 113
— பதிகம் 20
குடந்தை 1, 7, 95
குடமுழுக்கு 120

கும்பாபிடேகம் 116-8
குராப்பள்ளி 21
குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன் 21, 73
— பெருமாவளவன் 73
குராமரம் 72-3
குருகூர்ச்சடகோபன் 1
குருபரம்பரை ஆருயிரப்படி 9
குலசேகரர் 9, 25, 84
குலோத்துங்கன்-III 37
குலோத்துங்கன் உலா 109
குறுந்திரட்டு 6
குறுந்தொகை 86
கூரத்தாழ்வார் 9
கூற்றுவநாயனர் 95
கேசாதிபாதம் 60
கொங்கணசித்தர் 33
கொங்குதேச ராசாக்கள் வரலாறு 125
கோங்கிணர் 65
கோட்டூர் 93
கோட்டூர் மணியம்பலம் 94
கோடைத் திரைலோக்கிய சுந்தரம் 92
கோயில் 14, 63-4
கோயில்திருப்பண்ணியர் விருத்தம் 42-3
கோனேரி ராசபுரம் 8
சங்கரசோழன் உலா 109
சங்கரநாராயணத்திரட்டு 6
சங்கற்ப நிராகரணம் 37
சத்தியஞான பண்டாரம் 51
சதாசிவ பண்டாரத்தார் 45
சதுர்வேதிமங்கலங்கள் 57
சப்தகாதை 11
சம்பந்தர் 1, 3, 9, 13, 16, 20, 51, 56, 57, 63, 71, 76, 84, 113
சமணர் புத்தர் 68, 83
சமயாசாரியர் 97-103
சமஸ்கிருதமுரணர் 68
சரபமூர்த்தி 68
சாசன தமிழ்க்கவி சரிதம் 35
சாட்டியம்-சுரம் 94
சாந்தை 74
சாமிநாத முனிவர் 54
சாளரபாணம் 77
சாளரபாணிப் பண் 19, 24, 49, 50
சாளுக்கியர் 44
சித்தர் இருவர் 27
சித்தவடத்தடிகள் 126
சித்தாந்த சாத்திரம் 10
சிதம்பரமுனிவர் 53
சிந்தாமணி 81
சிலப்பதிகார உரை 19
சிலம்பொலி 41
சிவசின்னங்கள் 98
சிவஞான கண்டராதித்தர் 46, 77
சிவஞான சுவாமி 42, 54, 98, 99
சிவஞானபாடியம் 99
சிவஞானபோதச் சிற்றுரை 98-100
சிவஞானபோதம் 97, 99
சிவபாதசேகரன் 2
சிவபுராணுதி தோத்திரமஞ்சரி 6
சிவபெருமான் திருமும்மணிக் கோவை 48
சிவலிங்கப் பிரதிட்டை 116
சிவாசாரியர் 49, 50, 56, 125
— சோழர் குரு 57
சிறுதெய்வவழிபாடுகூடாது 98
சீகாழிநூற்றுவர் 71
சீயம் 76
சீயமன்னர் முடிசூட்டு 77
சீவன் முத்திநிலை 89
சுந்தரசோழன் 111
சுந்தரமூர்த்தி 1, 3, 12-3, 16, 59, 116, 126
— வெள்ளானை மீது சென்றது 125
சுப்பிரமணியன் 43
செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் 47
செப்புறை 42, 73
— ஆனந்தச் சேந்தன் 75
— சேந்தன் 39, 40, 71
செம்பியன் மாதேவியார் 46, 66-7, 80, 111-4, 120, 123
செவ்வழிப்பண் 20
சேக்கிழார் 9, 11, 13, 16, 34, 116, 125-6
— புராணம் 4
சேதிராயர் 17, 20, 50-1, 67, 80, 112, 120
— காலம் 126-7
— திருக்கடைக்காப்பு 87
— பாடல் 86-7
— மகள் சித்திரை 126
— வரலாறு 50
சேந்தனென்ற பெயர் 38

சேந்தனுர் 17, 20-1, 24, 30, 35-6, 38-44, 54-5, 66, 98-9, 111, 113-22
— குலம் 25
— காலம் 114
— பாடல் 70-2
— வரலாறு 38
சேரமான்பெருமாள் 15, 26, 29, 47-8, 73, 84, 115-6
— குதிரைமீது கயிலாயம் சென்றது 125
சேவையர் குலாதிபதி 4
சைவ எல்லப்ப நாவலர் 27
சைவசமய ஆசாரியர் 1
சைவ சமயநெறி 27, 37
சைவசித்தாந்த மகாசமாஜம் 24, 42
சைவமஞ்சரி 6
சோபானமுறை 105
சோமசுந்தர தேசிகர் 31, 110
சோழநாட்டுத் தலங்கள் 21
சோழர் எழுப்பிய கோயில்கள் 21
சோழர் வரலாறு 45
தக்கயாகப்பரணி 63
தஞ்சை 44, 63, 120
— இராசராசேச்சுரம் 14, 21, 64-5, 88, 94
தஞ்சைப் பெருங்கோயில் 1, 108, 122, 126-7
தத்துவப்பிரகாசர் 10
தத்துவப்பிரகாசிகை 56
தத்துவராயர் 6, 74
— பாடுதுறை 74
தருணேந்து சேகரன் 72, 121
தலப்பெயரும் கோயிற்பெயரும் 66, 87
தவிட்டமுதம் 43
தளிச்சேரிப் பெண்டுகள் 123
தனிச்செய்யுட் சிந்தாமணி 5
தனிப்பதிகங்களின் தொகுப்பு 5
தனிப்பாடல் 6
தனிப்பாடல் திரட்டு 5
தாயுமானவர் 84
— பாடல் 10
தான்தோன்றி நம்பி 10, 11
திக்கெலாம்புகழும்திருஆரூர் 71
— திருநெல்வேலி 71
— திருவீழிமிழலை 71
திரு ஆரூர் 14, 16, 21, 49, 67, 74-5, 84, 113
— — திருத்தாண்டகம் 121
திரு ஆரூர்ப் பதிகம் 18
— — மும்மணிக் கோவை 26, 29
— ஆருருக்குப் பட்டினத்தார் மும்மணிக்கோவை 29
— ஆலங்காடு 16, 83
— ஆவடுதுறை 8, 14, 20-1, 31, 40-1, 54-5, 113, 120-1
— — பதிகம் 72
— — புராணம் 54
— — மடம் 35
— இடைமருது 14, 21, 64, 90-2, 113
— — பதிகம் 90, 105
— — மும்மணிக்கோவை 29
திருவுந்தியார் 114-5
— நெம்பியூர் 7
— ஐயாறு 125
— கடவூர் உய்யவந்தார் 42
— கடைக்காப்பு 1, 13
— கயிலாய ஞானஉலா 26, 73
— கழுமல மும்மணிக்கோவை 29
— களிற்றுப்படியார் 42, 107, 114-5
— கற்குடி 111
— காளத்தி 55
— குராநீழற்கீழ் நின்ற முருகன் 21
— குருகூர் 2, 51
— குறுந்தொகை 13
— கோட்டூர் 113
— கோவலூர் 44, 119, 126
— கோவையார் 13
திருச்சாட்டியக்குடி 14, 21, 94, 113
— சாட்டியக்குடி ஏழிருக்கை 89
— சிலம்போசை 111, 114-9
— தருப்பூண்டி 94
— தவத்துறை 8
— தாண்டகம் 13
— தொண்டத்தொகை 16
— தொண்டர் திருவந்தாதி 125
— தொண்டர் புராணம் 2-4, 11, 13
— நல்லம் 8, 46
— நாரையூர் 2
— நாஊர் மயானம் 106

திருநாவுக்கரசு 1, 3, 13, 84
— நின்றவூர் 116
— நீலகண்ட யாழ்ப்பாணர் 18
திருப்பதிகம் 1, 13
திருப்பல்லாண்டு 11, 24-5, 40-1, 59, 70, 72-7, 114, 118 20
— பாணாழ்வார் 25
— பாதிரிப்புலியூர் 42
— பாலைத்துறை 106
— பிடவூர் 72-3
— புகழ் 10
— புடைமருதூர் 52
— புலியூர்த் திருமாளிகைத் தேவர் 30
— பூவணப்பதிகம் 18, 102
— பூவணம் 14, 21, 54, 63-4, 92, 95-6, 113
— மங்கையாழ்வார் 9, 16, 48
— மந்திரம் 3, 8, 11-3, 31
— மழபாடி 45
திருமாளிகைத்தேவர் 17, 20, 27, 30-8, 54, 56, 60, 66, 80, 87, 98, 100, 111-2, 119
— — கதைகள் 32
— — காலம் 122
— — சமாதி 35
— — பாடல் 67
— — வரலாறு 30
திருமுகத்தலை 14, 31, 64, 94, 113
— — பதிகம் 92
— முகப்பாசுரம் 3, 12, 15
— முறை 3, 97
— — கண்டபுராணம் 2-4, 7-9, 16, 18-9, 25
— — பாடிய வேந்தர் 26
— — வகுத்த காலம் 7
திருமுறை வகுப்பு 6
திருமூலர் 3, 12-3, 31, 34, 98
திருவரங்கத்தமுதனார் 9
திருவாங்கூர் 47
திருவாசகத்தில் அந்தாதி 59
திருவாசகம் 8, 11, 13, 24, 69, 81, 87, 93, 105
— திருப்பூவல்லி 75
திருவாசிரியம் 16
திருவாதவூரர் 76
திருவாதிரை விழா 41, 76
திருவாரூர் 84
திருவாய்மொழி 2, 12, 16
திருவாலியமுதனார் 17, 20, 27, 48, 61-6, 71, 80, 103, 111-3, 119
— காலம் 123-4
— பாடல் 82
— வரலாறு 48
திருவாலி திருநகரி 48
திருவிசைப்பா ஆசிரியர் பிரபந்தம் பாடவில்லை 108
திருவிசைப்பா-கவிதை 59
— சிறப்பு 24-5
— சேந்தர் 114
— தலங்கள் 14, 20
— பாடல்கள் 18
— பதிப்புக்கள் 128
— பாடல்தொகை 18
— பொருள் 17
திருவிசைப்பா மாலை 3, 6, 8, 11-3, 15, 25, 53-4
திருவிசைப்பாவின் காலம் 59
திருவிசைப்பாவுடையார் துவாதச மாலை 58
திருவிடைக்கழி 14, 21, 40-1, 72-3, 113
திருவிருத்தம் 16
திருவீழிமிழலை 14, 20-1, 35, 40-1, 75, 113, 55, 71
திருவுலா வருதல் 61
திருவெண்காட்டுப் புராணம் 27, 29
திருவெண்காட்டுத் திருவிசைப்பா 27, 29
திருவெண்காடர் 29
திருவெண்ணெய்நல்லூர் பொல்லாப்பிள்ளையார் 97
திருவேதிகுடி 49
திருவையாற்றுக் கல்வெட்டு 125
திரையனைப்பற்றிய வெண்பா 91
திரைலோக்கியசுந்தரப் பதிகம் 20, 87
திரைலோக்கிய சுந்தரம் 14, 21, 55, 93-4, 113
திரைலோக்கியமாதேவி 14, 93
தில்லை 4, 21, 30, 35, 44, 49, 50, 62-3, 66-7, 73, 78-9, 81-6, 92, 102, 108, 113, 118, 120, 122-23

தில்லைத் திருப்பணி கண்டரா தித்தர் மேற்பார்வை 79
தில்லைத் திருமுறை 79
— நடராசர் 2
— பதிகங்கள் 20
— மூவாயிரவர் 71
தில்லையம்பலம் பொன் வேய்ந்தது 110, 118-9
தில்லையில் தேர் நிகழ்ச்சி 42
திவாகரம் 38
துடிசைகிழார் 31
துரைசாமிப்பிள்ளை, ஔவை 77, 121
துரைசாமிப்பிள்ளை, பெருந்தோட்டம் 27
தெய்வசிகாமணிக்கவுண்டர் 19
தேவார காலம் 59
தேவாரத் தலங்கள் 14
தேவாரம் 1, 3. 12, 13, 24
தேவாரம்பெற்ற தலங்கள் 21
தேவூர் 94
தொகைநூல் 5
தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் 31-3, 37-8
தொண்ணூற்றுறு புண் சுமந்தவன் 109
தோத்திர பஞ்சகம் 31
நட்டராகம் 19, 82
நடுநல்யாமத்து இறைவன் அருளியது 90-1
நந்தனர் 25
நந்தனர் குலம் 40-2
நந்தி அரசர் படிமம் 46
நம்பாண்டார் 49
நம்பியாண்டார் நம்பி 2-8, 10, 12-4, 18, 25, 42-3, 49, 59, 109, 112, 114, 125-6
நம்பியாரூரர் 75-6, 121
நம்மாழ்வார் 2, 9, 16
நமசிவாயமூர்த்தி 37
நரசிங்கமுனையரையர் 51, 126
நரசிங்கவர்மன் 126
நவகோடி சித்தபுரம் 31, 33, 72
நாங்கூர்ச் சேந்தர் 39, 40, 114
நாதமுனிகள் 12
நாதாந்தசித்தர் 34
நாரசிங்கன்பேட்டை 33
நாலடி 5
நாலாயிரப்பிரபந்தம் 2, 6, 11-2, 60
நாலாயிரமென்றதொகை 9
நித்தியானுசந்தானம் 25
நிராமயத்தோர் மூவர் 34-5
நிவா நதி 63, 83
நீறணிபவளக்குன்றம் 122
பகவத்கீதை 92
பஞ்சப்பிரம மந்திரம் 4
பஞ்சபுராண விளக்கம் 24
பஞ்சமப்பண் 19, 20, 49, 50, 67, 77, 82, 85, 87
பஞ்சமரபு 19
பஞ்சாக்கரம் 105
பஞ்சாக்கர விளக்கம் 106
பட்டவர்த்தனம் 89
பட்டினத்தார் 39, 40, 44, 114, 123
— அடங்கல் முறை 28
பட்டினத்துப்பிள்ளையார் புராணம் 29
— திருவிசைப்பா 27
படிக்காசு 71
பண்கள் 18
பண்ணின்பெயர் பாடலில் 20
பத்தர்சித்தர் 55
பத்துப்பாட்டு 5
பதிகம் 15
பதிகம் விண்ணப்பம்செய்தல் 8
பதிபசுபாசப்பனுவல் 37
பதினெண் கீழ்க்கணக்கு 5
பதினொராந்திருமுறை 3, 6, 9, 13, 15-6, 27, 72, 123-4
பரஞ்சோதிமுனிவர் 92
பரமானந்த முனிவர் 34
பராங்குசதாசர் 2
பராந்தகசோழன் 7, 44-5, 110-1, 118-20
பராந்தகசோழன் தில்லையைப் பொன் வேய்ந்தது 75, 78, 84
பழமொழிகள் 80
பழிப்பானபாடல் 70
பழுவூர் 7
பறைச்சேந்தர் 43
பன்னகத்தெரு 94
பன்னகாபரணர் 94
பன்னிரு திருறை வரலாறு 8, 9 34, 58, 121
பன்னிருபடலம் 5
பன்னிருபாட்டியல் 5
பன்னூற்றிரட்டு 5
பாண்டிநாட்டுத்தலம் 25
பாண்டியன் சேந்தன் 35

பாதாதிகேசம் 20, 60, 69, 82
பிடையூர் 73
பிரபந்தமாலை 6, 8, 11-3, 15-6
பிரமேயசாரம் 11
பின்பழகிய பெருமாள்ஜீயர் 9
புராண சிந்தாமணி 98
புருடோத்தம நம்பி 17-8, 20, 27, 50-1, 60, 67, 80, 112, 120, 127
— காலம் 126
— பாடல் 85-6
— வரலாறு 50
புறத்திரட்டு 5, 6
புறநானூறு 73
புறநீர்மைப்பண் 19, 80, 87
பூசலார் 116-8
பூந்துருத்திக்காடன் 49
பூந்துருத்தி நம்பி காடநம்பி 17-9, 21, 60, 67, 80, 103, 112-3, 120, 127
— காலம் 124-6
— பாடல் 84-5
— வரலாறு 49-50
பெரிய களந்தை 95
பெரிய திருமொழி 12
பெரிய திருவந்தாதி 16
பெரியபுராணம் 3, 13, 24, 31, 34, 73, 115-7, 125
பெரியாழ்வார் 25
பெரியாழ்வார் திருமொழி 60
— பல்லாண்டு 74
பெருந்திரட்டு 5
பெருந்துறை முந்நூற்றுவர் 71
பெருந்தொகை 5, 38-9, 43, 91
பெரும்பற்றப்புலியூர் 63-4, 69, 82, 88
— நம்பி 31, 37, 49
பெருமாள் திருமொழி 26
பெருமானடிகள் 47
பேராசிரியர் 95
பொல்லாப்பிள்ளையார் 2
பொன்பற்றிகாவலன் சேந்தன் 39
பொன்வண்ணத்தந்தாதி 26
பொன்விளைந்தகளத்தூர் 95
பொன்னனையாள் 96
போகநாதசித்தர் 34, 52
போற்றி என்ற பாடல் 61
போஜ தேவர் 66
மக்கீச்சுரம் 47
மகேந்திரம் 23, 122
மகேந்திரமலை 69
மண்ணிநாட்டு ஏமநல்லூர் 93
மணப்பெண்ணின் நிலை 103
மணவாளநம்பி 72
மதுரகவி 37-8
மதுரகவியாழ்வார் 2
மதுராந்தகக் கண்டராதித்தர் 47
மதுரை 96
மந்திரங்கள் எழுகோடி 4
மயிலை 78
மலையமான் நாடு, மலாடு 51
மழலைச் சிலம்பு 123-4
மறைஞானசம்பந்தர் 3, 7, 8
மன்னார்குடி 94
மாணிக்கவாசகர் 1, 13, 47, 49, 69, 73, 75, 93, 98-9, 105
மாயூரம் 48
மாலை 6
மாளிகை மடம் 30, 37-8
மீனாட்சிசுந்தரம் பிள்ளை 35, 37
முத்தரையர் 94, 109
முத்துத் தாண்டவராய பிள்ளை 58
மும்முடிச்சோழர் 46
முருகன் துதி 27
முருகன் பெயர்கள் 72
மூத்த திருப்பதிகம் 16
மெய்கண்டார் 97
மெய்ப்பொருள் 51
மேற்கெழுந்தருளிய தேவர் 46
யாப்பருங்கலவிருத்தி 38-9
யானைமேல் துஞ்சின தேவர் 45
யோகநிலை 105
லாண்டு பாடுதல் 77
வசவுமிகுந்த பாடல் 99
வடமொழிப் பயிற்சி 67
வண்டுவிடு தூது 61
வரகுணபாண்டியன் 93
வன்தொண்டர் 2, 116
வாசுகியம்மை 33
விக்கிரமசோழன் உலா 109
விசயாலயன் 95, 109-10
விசுவரூபம் 107
விஞ்ஞானசாரம் 11
விநாயக முனிவர் 31
விளாஞ்சோலைப்பிள்ளை 11
வீதிவிடங்கர் 84
வீரசோழியம் 39
வீரநாராயண புரம் 1, 7

வீரநாராயணி 47
வெண்காடமுனி 31
வெள்ளாறு 63, 83
வெள்ளைவாரணனுர் 58, 78 121
வேணுட்டடிகள் 17, 25, 47-8, 60, 66, 111-3, 119
வேணுட்டடிகள் காலம் 122-3
— பாடல் 80-1
— வரலாறு 47
வேணுடு 47
வேதாந்த தேசிகர் 11
வேதாந்த மனன சிந்தாமணி 6
வேதாரணிய புராணம் 30
வைணவ பாசுரத்தொகுப்பு 12
வைணவ நித்தியானுசந்தானம் 74
வைணவப் பெயருடைய ஆசிரியர் 27
வையாபுரிப்பிள்ளை 5
வையை ஆறு 5
ஜயந்தன் 35-6
ஷடங்க மந்திரம் 4
க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழ் 53
க்ஷேத்திரத் திருவெண்பா 26